# M.A. HISTORY I YEAR

## *DKH13* : HISTORY OF EUROPE 1789 – 1914

### SYLLABUS

**Unit – I**

Europe on the eve of the French Revolution – French Revolution – Causes, Courses of the Revolution – Work of the National Assembly – The Reign of Terror – The Directory Rule Coalition against France, Napoleanic wars' work of Napolean – Continental System and its Failure.

**Unit – II**

The Congress of Vienna, Mettermich Era – Holy Alliance, Concert of Europe – Louise XVIII Charles X of France – 1830 July Revolution and its Effects Louis Philippe 1848 – Revolution and its effects – Comparison of the 1830 and 1848 Revolutions.

**Unit – III**

Napolean III of France : Domestic and Foreign Policies – Unification of Italy – Policy of Kaiser Willaim II – Unification of Germany – Bismark – Foreign policy of Bismark – garibaldi – Young Italy Cavour, Mazzini, Victor Immanuvel

**Unit IV**

Eastern Question : Crimean War, Berlin Congress – Greek war of Independence – First Balkan War – Second Balkan War – Young Turk Movement – Mustafa Kamal Basha – Formation of Balkan League – Pansalv Movement – Italo – Turkish War.

**Unit – V**

First World War : Cuseses, Courses and Results. Russian Revolution of 1917 – League of Nations.

**Books for Reference:**

| | | |
|---|---|---|
| Anderson | - | Modern Europe in World Perspective |
| Fisher.G.A. | - | History of Modern Europe |
| David Thomson | - | Europe Since Napolean |
| Fisher.H.A.L. | - | History of Europe |
| Grant and Temporley | - | Europe in the Nineteenth and Twentieth Centuries |
| Haley.H | - | World Crisis, 1914 – 1919 |
| Hayes and Gole | - | History of Europe since 1500 |
| Hayes. C.I.H. | | Modern Europe upto 1870 |
| Lipson.B<br>Philips.A | | Europe in the 19th and 20th Centuries<br>Modern Europe, 1815 – 1899 |
| South Gate | | A Text Book of Modern European History from 1789 – 1870, Vol.II. |
| South Gate | | A Text Book of Modern European History from 1870 to the Present Day. |

# ஐரோப்பிய வரலாறு – 1789 முமுல் 1919 வரை
## பொருளடக்கம்


**Unit I :**

1. பிரெஞ்சுப் புரட்சிக்கு முன் ஐரோப்பாவின் நிலை.
2. பிரஞ்சுப் புரட்சி – காரணங்கள் – புரட்சியின் போக்கு – தேசியப் பேரவையின் செயல்பாடுகள் – பயங்கர ஆட்சி இயக்குநர் ஆட்சி – புரட்சியின் விளைவுகள்.
3. நெப்போலியன் – நெப்போலியனின் போர்கள் – கண்டதிட்டக்கொள்கை – தோல்விக்கான காரணங்கள் – நெப்போலியனின் உள்நாட்டுக்கொள்கை.

**Unit II :**

4. வீயன்னா மாநாடு – நோக்கம் – சாதனைகள் – தோல்விக்கான காரணங்கள்.
5. ஐரோப்பிய பொதுச் சங்கம் – மாநாடுகள்.
6. மெட்டர்னிக்கின் காலம் – தோல்விக்கான காரணங்கள்.
7. புனிதக்கூட்டு.
8. பதினெட்டாம் லூயி – 10ஆம் சார்லஸ்.
9. 1830 சூலைப்புரட்சி சி 1848–ஆம் ஆண்டு பிப்ரவரி புரட்சி – 1830–1848ஆம் ஆண்டு புரட்சிகளின் ஒற்றுமை வேற்றுமைகள்.

**Unit III :**

10. பிரான்சின் 3ஆம் நெப்போலியன் – உள்நாட்டு வெளிநாட்டுக் கொள்கைகள்.
11. இத்தாலிய இணைவு.
12. ஜெர்மானிய இணைவு.
13. பிஸ்மார்கின் வெளியுறவுக் கொள்கை.

**Unit IV :**

14. கீழைச்சிக்கல் – கிரிமியப் போர் – பெர்லின் மாநாடு – கிரேக்கச் சுதந்திரப்போர் – முதல் பால்கன் போர் – இரண்டாம் பால்கன் போர் – இளம் துருக்கியர் இயக்கம் – முஸ்தபா கமால் பாச்சா – பால்கன் நாடுகளின் கூட்டு இத்தாலிய துருக்கியப்போர்.

**Unit V :**

15. முதல் உலகப் போர் – காரணங்கள் – போரின் போக்கு – விளைவுகள்.

    ரஸ்ஸிய புரட்சி 1917.

## 1. பிரெஞ்சுப் புரட்சிக்கு முன் ஐரோப்பிய நிலை

## (Europe on the eve of French Revolution)

பிரெஞ்சுப் புரட்சிக்கு முன்புள்ள காலம் மன்னராட்சிக்காலம் என்றும், புரட்சிக்குப் பின் உள்ள காலம் மக்களாட்சிக்காலம் என்றும் கூறப்படுகிறது. இந்த இரண்டு காலங்களையும் பிரித்துவைக்கும் எல்லைக் கோடாக பிரெஞ்சுப் புரட்சி விளங்குகிறது. French Revolution is the dividing linebetween the age of kings and the age the people. புரட்சிக்கு முன்பு ஐரோப்பிய நாடுகள் எல்லாமே மன்னர்களால் ஆளப்பட்டு வந்தது. அவர்கள் 'அரசர்களின் தெய்வீக உரிமைக் கொள்கை'ப்படி ஆட்சி செய்தார்கள். மக்களுக்கு அரசாங்கத்தில் எந்தப் பங்கும்கிடையாது. எந்த உரிமைகளும் கிடையாது. ஆனால், பிரெஞ்சுப் புரட்சியின் விளைவாக ஐரோப்பாவில் பல நாடுகளில் அரசர்களின் ஆட்சி தூக்கி எறியப்பட்டு மக்களாட்சி முறை ஏற்பட்டது. ஜனநாயகக் கருத்துக்களும் தேசியக் கருத்துக்களும் வேககாகப் பரவின. ஒரு சில நாடுகளில் பழைய அரசர்களே ஆட்சிக் கட்டிலில் அமர்ந்தாலும் அவர்கள் மக்களின் விருப்பப்படியே ஆட்சிபுரிய வேண்டிய நிலை ஏற்பட்டது.

பதினைந்தாம் நூற்றாண்டில் ஏற்பட்ட மறுமலர்ச்சி, மதசீர்திருத்தம், ஆகியவைகளின் விளைவாக ஐரோப்பிய அரசியலில் மாபெரும் மாற்றங்கள் ஏற்பட்டன. இடைக்கால ஐரோப்பாவில் காணப்பட்ட போப்பாண்டவரின் செல்வாக்கும், திருச்சபையின் அதிகாரங்களும் குறைக்கப்பட்டன. இதன் விளைவாக மன்னர்களின் அதிகாரம் உயர்ந்தது. மன்னர்கள் அரசாங்கத்தின் தலைவர்களாகவும், சமயத்தின் தலைவர்களாகவும் மாறினர். தெய்வீக உரிமைக் கோட்பாடும், வல்லாட்சி முறையும் சிறது சிறிதாக மறைய ஆரம்பித்தது. பதினெட்டாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஐரோப்பாவில் பல நாடுகளில் 'ஒளியூட்டும் வல்லாட்சி முறை' (Englightened Despotism) என்ற முடியாட்சி முறை தோன்றியது.

இங்கிலாந்தில் எட்டாம் ஹென்றி, முதலாம் எலிசபெத், பிரான்சில் **14–**ஆம் லூயி, ரஷ்யாவில் மகாபீட்டர், இரண்டாம் காதரீன், பிரஷ்யாவில் மகாபிரடரிக், ஆஸ்திரியாவில் மரியதரசா, இரண்டாம் ஜோசப் ஆகியோர்கள் ஒளியூட்டும் வல்லாட்சியாளர்கள் வரிசையில் குறிப்பிடத்தக்கவர்கள். நல்லெண்ணம் கொண்ட இந்த அரசர்களிடம் எல்லா

அதிகாரங்களும் சேர்ந்ததனால் நன்மைதரும வகையில் பல மாறுதல் ஏற்பட்டன. பிரெஞ்சுப் புரட்சிக்கு முன்பு இந்த ஐரோப்பிய நாடுகளில் காணப்பட்ட பொதுவான நிலைப் பற்றி இனி காணலாம்.

**பிரஷ்யா (Prussia) :**

பிரெஞ்சுப் புரட்சிக்கு முன்பு பிரஷ்யாவின் மகாபிரடரிக் (1740 – 1786) சிறந்த ஆட்சியை நடத்தி வந்தார். இவருடைய ஆட்சி வல்லாட்சியாக விளங்கிய போதிலும், நாட்டு நலனிற்கும், மக்களின் வாழ்க்கைக்கும் ஒத்த வகையில் ஆட்சியை அமைத்துக் கொண்டார். எங்கு ஆடம்பரங்களும், சடங்குகளும் இல்லை. அரசாங்கத்தில் மன்னர் கடுமையாக உழைக்கும் வேலைக்காரராக இருந்தார். மன்னர் கடினமான வேலைகளைத் தான் மேற்கொண்டதோடு, தன் நாட்டிலுள்ள மக்களையும் கடுமையான வேலைகளைச் செய்ய ஏவினார். நாட்டின் பொது நலத்தையே எல்லோரும் ஒரே நோக்கமாகக் கொள்ளவேண்டியதிருந்தது.

மகாபிரடரிக் ‘அறிவு வளர்ச்சி இயக்கத்தின்’ அடிப்படையில் முற்போக்குக் கொள்கைகளை பிரஷ்யாவில் செயல்படுத்தினார். இவர் காலத்தில் பிரஷ்யப்படை ஐரோப்பாவிலேயே தலைசிறந்த படையாக இருந்தது மட்டுமின்றி, ஐரோப்பிய நாடுகளுக்கே ஒரு எடுத்துக்ககாட்டாகவும் விளங்கியது. ஆஸ்திரிய நாடுகளுக்கே ஒரு எடுத்துக்காட்டாகவும் விளங்கியது. ஆஸ்திரிய வாரிசுரிமைப் போர் (1740 – 58) ஏழாண்டுப் போர் (1756 – 63), போலந்துப் பிரிவினை (1772) ஆகியவற்றின் மூலமாக பிரஷ்யாவின் பரப்பு ஐரோப்பாவில் இரு மடங்காக விரிவடைந்தது. இந்த பிரஷ்யாவின் தலைமையில்தான் பின்னர் ஜெர்மானிய இணைவு ஏற்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. பிரெஞ்சுப் புரட்சிக்கு முன்பு பிரஷ்யா ஐரோப்பாவில் ஒரு வல்லரசு என்று கருதப்படும் நிலையை அடைந்திருந்தது.

**இங்கிலாந்து (England) :**

பிரெஞ்சுப் புரட்சிக்கு முன்பு இங்கிலாந்து ஒரு பெரிய குடியேற்றப் பேரரசிற்குச் சொந்தமாக இருந்தது. அப்போது மூன்றாம் ஜார்ஜ் (1760 – 1820) இங்கிலாந்தின் மன்னராக இருந்தார். இங்கிலாந்து தனது குடியேற்ற நாடுகளிடம் ‘பழைய குடியேற்றக் கொள்கை’களையே (old colonial policy) பின்பற்றி வந்தது. இக்கொள்கையின்படி

‘குடியேறிய நாடுகள் தாய்நாட்டின் உடமைகளே. தாய் நாட்டின் நலன்களைக் கருத்தில் கொண்டே குடியேற்ற நாடுகளில் ஆட்சி செய்தல் வேண்டும்’ என்ற முறை இருந்தது. இங்கிலாந்து இக்கொள்கையை தனது குடியேற்ற நாடுகளில் ஒன்றான அமெரிக்காவிலும் பின்பற்றியது.

இதன் விளைவாக அமெரிக்காவிலுள்ள பதிமூன்று காலனிகள் இங்கிலலந்தை எதிர்த்து 1774–ல் சுதந்திரப் போரை ஆரம்பித்தன. இந்தப் போரில் பிரான்ஸ் பதிமூன்று காலனிகளை ஆதரித்தது. போரின் இறுதியில் இங்கிலாந்து தோற்கடிக்கப்பட்டு, அமெரிக்க ஐக்கிய நாடுகள் சுதந்திரமடைந்தன. வல்லாட்சி முறையையும், அடக்கு முறையையும், எதிர்த்து அமெரிக்க மக்கள் பெற்ற வெற்றி, ஐரோப்பிய மக்களின் சிந்தனையில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியது. தேசிய உணர்வு, மக்களாட்சி முறை, அடிப்படை உரிமைகள் ஆகிய கருத்துக்கள் ஐரோப்பிய நாடுகளில் பரவின. இக்கருத்துக்களே பிரெஞ்சுப் புரட்சி ஏற்படவும் ஒரு காரணமாக அமைந்தது.

**ரஷ்யா (Russia) :**

ரஷ்யப் பேரரசி இரண்டாம் காதரீன் (1762 – 1796) சிறந்த வல்லரசியாக விளங்கினார். பீட்டரின் கொள்கைகளை அப்படியே பின்பற்றி ரஷ்யாவைச் சிறந்த வலிமைமிக்க நாடாக்க அயராது உழைத்தார். அவரது ஆட்சியில் ரஷ்யா ஒவ்வொரு துறையிலும் பீடு நடைபோட்டது. இவர் தன்னுடைய குறிக்கோளை அடைய அறநெறி ஒழுக்கங்களைக் காற்றில் பறக்கவிட்டார். 1772, 1793, 1795–ஆம் வருடங்களில் நடைபெற்ற போலந்துப் பிரிவினையே இதற்குச் சான்று. போலந்து பங்கு போடப்பட்டதன் விளைவாக ரஷ்யாவின் எல்லை, பிரஷ்ய, ஆஸ்திரிய நாடுகளின் எல்லைகட்கு அருகே வந்துவிட்டது. இதனால் ரஷ்யா நிலவியல் ரீதியாக ஐரோப்பிய நாடுகளில் ஒன்றாகக் கருதப்படுவதற்கான தகுதியைப் பெற்றது. ரஷ்யாவின் இந்த பெரும் வளளாச்சி, ஸ்வீடன், போலந்து, துருக்கி, ஆகிய நாடுகளின் வளர்ச்சியை மிகவும் பாதித்துவிட்டது. பிரெஞ்சுப் புரட்சிக்கு முன்பு ரஷ்யா ஐரோப்பிய அரசியலில் முக்கியப் பங்கை ஆற்றும் அந்தஸ்தை அடைந்திருந்தது.

**ஆஸ்திரியா (Austria) :**

பிரெஞ்சுப் புரட்சிக்கு முன்பு ஆஸ்திரியா ஹாப்ஸ்பர்க் வம்ச அரசரான இரண்டாம் ஜோசப் (1740 – 1790) என்பவரால் ஆளப்பட்டு வந்தது. ஜோசப் புதுமையில் அளவு கடந்த மோகமும், பற்றும் கொண்டவர். பகுத்தறிவு, முற்போக்குச் சீர்திருத்தங்கள் ஆகியவற்றில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டவர். ஐரோப்பாவில் அப்போது நிலவிய முற்போக்குக் கருத்துக்களால் கவரப்பட்டவர். சம்பிரதாயம் சிறப்புரிமைகள் ஆகியவற்றின் அடிப்படையில் இயங்கி வந்த நிறுவனங்கள், சட்டங்கள், பழக்கவழக்கங்கள், ஆகியவற்றை அடியோடு ஒழித்து பகுத்தறிவுக்கு ஒத்த அமைப்புகளை நிறுவ வேண்டுமென விரும்பினர். ஆனால், நாட்டிலிருந்த பிரபுக்களும், சமயவாதிகளும் வணிகக் கோமான்களும் இவரது கொள்கைகளையும் சீர்திருத்தங்களையும் எதிர்த்தனர். எனவே இவரது திட்டங்கள் தோல்வியடைந்தன. பிரெஞ்சுப் புரட்சியின் போது ஆஸ்திரியப் போரரசு அதிகமான கிளர்ச்சிகளாலும், குழப்பங்களாலும் புளித்துப் பொங்கும் நிலையினைப் போன்றிருந்தது.

**இத்தாலி (Italy) :**

பிரெஞ்சுப் புரட்சியின்போது இத்தாலி ஒரு வெறும் ‘‘நிலவியல் சொல்லாகவே’’ (Geographical expression) இருந்தது. அது, பல நாடுகளாகப் பிளவுபட்டு வலிமை குன்றியிருந்தது. முதலில் ஸ்பானிய நாட்டின் ஆதிக்கம் இருந்தாலும், ஸ்பானிய வாரிசுரிமைப் போருக்குப் பின் (1702 – 1713) இத்தாலியில் ஸ்பானிய ஆதிக்கம் ஒழிந்து ஆஸ்திரியாவின் ஆதிக்கம் மலர்ந்தது. இத்தாலியில் தனது செல்வாக்கை நிலைநாட்டும் வகையில் முனைந்து நின்றது. வருங்காலத்தில் இத்தாலியைத் தனது தலைமையின் கீழ் இணைப்பதற்குத் தேவையான வலுவினைப் பெற்றுத் திகழ அது தன்னைப் பலவகையிலும் பக்குவப்படுத்தி வந்தது.

**பிரான்ஸ் (France) :**

14–ஆம் லூயி மன்னர் (1643 – 1715) காலத்தில் பிரான்ஸ் ஐரோப்பாவில் புகழிலும், வலிமையிலும், உச்சநிலையிலிருந்தது. ஐரோப்பிய நாகரிகத்தின் தலைவியாக விளங்கியது. ஆனால், 14–ஆம் லுயி செய்த இடைவிடாத, பொருளற்ற போர்களால் சுமார் இருபதுஆண்டுகள் ஐரோப்பாவே ரத்தக்காடானது. போர்களினால் பொருளாதாரச்

சிக்கல் தோன்றின. படைச் செலவைச் சரிக்கட்ட மக்கள் மீது தாங்க முடியாத வரி விதிக்கப்பட்டது. மன்னரின் ஆடம்பரச் செலவுகளால் இந்த வரிப்பளு மேலும் அதிகமானது. **1715–ல்** அவர் இறந்த போது, தேசக்கடன், தேசவருமானத்தைவிட பதினாறு மடங்கு அதிகமாக இருந்தது. இந்தப் பொருளாதாரச் சீர்கேட்டை அவருக்குப் பின் பதவிக்கு வந்த **15–ஆம்** லூயி மன்னரால் தீர்க்கப்பட முடியவில்லை.

## பதினைந்தாம் லுயி (Louis XV, 1715 – 1774)

பதினான்காம் லூயிக்குப் பிறகு பதினைந்தாம் லூயி **1715–ல்** பிரெஞ்சு அரியணை ஏறினார். இவர், பதினான்காம் லூயியின் மகன் டாபின் (Dauphin) என்பவரின் மகனான பர்கண்டி கோமகனின் (Duke of Burgundy) மகன் ஆவார். அதாவது பதினான்காம் லுயியின் கொள்ளுப் பேரன். இவர் அரியணை ஏறியபோது வயது ஐந்து. எனவே, இவரது மாமன் ஆர்லியன்ஸ் கோமகன் பிலிப் பதிலாட்சி புரிந்தார். **1743–ல்** அதிகாரத்தை நேரடியாக ஏற்றுக் கொண்டார் பதினைந்தாம் லூயி. இவர் ஒரு திறமையற்ற மன்னர். சுகபோக இன்ப வாழ்க்கையிலேயே காலத்தைக் கழித்தார். இவரது ஒழுங்கங்கெட்ட வாழ்க்கையாலும், திறமையின்மையாலும், மக்களுக்கு மன்னரிடத்திலிருந்த மதிப்பும், மரியாதையும் குலைந்தன. இவருடைய ஆட்சிக்காலத்தில் பிரான்ஸ் நாட்டின் பெருமையும், புகழும் மங்கியது.

### ஆர்லியன்ஸ் கோமகன் ஆட்சி (1715 – 1723) :

பதினைந்தாம் லூயி பதவியேற்றபோது அவருக்கு வயது ஐந்து. எனவே, அவருடைய மாமா ஆர்லியன்ஸ் கோமகன் பிலிப் என்பவர் **1715** முதல் **1723** வரை காப்பாளராக பதவியேற்ற ஆட்சி நடத்தினார். பதினான்காம் லூயியின் ஆடம்பரச் செலவுகளும் ஐரோப்பியப் போர்களும் நாட்டின் நிதி நெருக்கடியை ஏற்படுத்தின. எனவே, பொருளாதார நிதித்துறைகளைச் செப்பனிட்டு அமைக்க வேண்டியது, உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கையாகும். இவருடைய ஆட்சியில் பதினான்காம் லூயியின் கொள்கைகள் கைவிடப்பட்டு நிர்வாக முறையில் பல மாற்றங்கள் செய்யப்பட்டன. பதினான்காம் லூயி காலத்தில் அதிகாரங்களை இழந்த பார்லிமெண்டுகள் இழந்த அதிகாரத்தை மீண்டும் பெற்றுக் கொண்டன. சமயத்தில்

இவர் பொறையுடைமைக் கொள்கையைப் பின்பற்றினார். எனவேதான் ஜேன்சனிசம் என்ற சமயப்பிவினருக்கு ஆதரவு அளித்தார்.

**ஜாண்லா (John Law) :**

ஆர்லியன் கோமகன் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது, பிரான்சின் நிதிநிலை மிக மோகமாக இருந்தது. நாட்டின் கடன் சுமை வளர்ந்துகொண்டே போனது. செலவுக்கேற்ற வருவாய் கிடையாது. எனவே, நிதி நிலையைச் சீர்படுத்த ஜாண்லா என்ற ஸ்காட்லாந்துக்காரர் ஆர்லியன்ஸ் கோமகனிடம் இரண்டு திட்டங்களைச் சமர்ப்பித்தார்.

a. இங்கிலாந்தைப் போல பிரான்சிலும் ஒரு தேசிய வங்கியை நிறுவி, அதன் மூலம் காகித நாணயத்தை அச்சிட்டு வெளியிட வேண்டுமென்பது இவரது முதலாவது திட்டம். இதன் மூலம் நாட்டின் வியாபாரத்தை ஊக்குவிக்க முடியும் என்று இவர் கருதினார்.
b. அரசின் கட்டுப்பாட்டிற்குட்பட்ட வர்த்தகக் கம்பெனி ஒன்றை நிறுவி பிரான்சின் வியாபாரம் முழுவதும் ஏகபோக உரிமையாக அதனிடம் ஒப்படைக்க வேண்டும் என்பது இவரது இரண்டாவது திட்டம்.

ஜாண்லாவின் திட்டத்தின்படி 1716–ல் ஒரு வங்கி நிறுவப்பட்டது. அது நல்ல முறையில் செழித்து ஓங்கவே 1718–ல் ஆர்லியன்ஸ் பிரபு அதையே மத்திய அரசாங்க வங்கியாக ஆக்கினார். ஜாண்லாவின் மற்றொரு திட்டத்தின்படி 1717–ல் ‘மேற்கத்திய கம்பெனி’ என்ற வியாபாரக் கம்பெனி நிறுவப்பட்டது. அரசின் கட்டுப்பாட்டில் இயங்கி வந்த இக்கம்பெனி, நன்கு செயல்பட்டு வந்தது. 1720–ல் ஜாண்லாவின் தலைமையில் வங்கி நிர்வாகமும், கம்பெனி நிர்வாகமும் ஒன்றாக இணைக்கப்பட்டது. நிதித்துறையின் தலைமை அதிகாரியாக அவர் நியமிக்கப்பட்டார்.

**டூபாய் (Dubois) :**

ஆர்லியன்ஸ் கோமகன் ஆட்சியில் அயல் நாட்டு விவகாரங்களை டூபாய் என்ற அமைச்சர் கவனித்து வந்தார். பதினான்காம் லூயியின் அயல்நாட்டுக் கொள்கைகள் மாற்றியமைக்கப்பட்டன. ஸ்பெயினுடனான சகோதர உறவைவிட்டு, இங்கிலாந்துடன் ஒரு நட்புறவு உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டட. 1717–ல் பிரான்ஸ், இங்கிலாந்து,

ஹாலந்து, ஆகியவை ஒரு முக்கூட்டு ஒப்பந்தம் செய்து கொண்டு தேவையில்லாமல் ல்பெயினுடன் ஒரு போர் ஏற்பட்டது. இதற்கிடையில், **1723–**ல் லூயி ஆட்சிப் பொறுப்பை ஏற்கக்கூடிய பதினைந்து வயதையடைந்து விட்டார் என்று அறிவிக்கப்பட்டது. அத்துடன் ஆர்லியன்ஸ் கோமகன் ஆட்சி முடிவடைந்துவிட்டது. அதேயாண்டில் அவர் காலமானார்.

**கார்டினல் புளூரி (Cardinal Fleury – 1726 - 1743)**

பதினைந்தாம் லூயியின் நேரடி ஆட்சி துவங்கினாலும் அரசர் சிறுவர் என்ற காரணத்தினால் பூர்பான் கோமகன் (Duke Bourbon) முதலமைச்சராகப் பதவியேற்று அரச காரியங்களை கவனித்து வந்தார். ஆனால், கார்டினல் புளூரி என்பவருக்கு மன்னரிடத்தில் அதிக செல்வாக்கு இருந்தது. இவர் பூர்பான் கோமகனை பதவியிலிருந்து விலக்கி, தானே **1726–**ல் முதலமைச்சரானார். நாட்டில் போரைத் தவிர்த்து, அமைதியை நிலைநாட்டி, சுபிட்சத்தை ஏற்படுத்த வேண்டுமென்பது இவருடைய நோக்கம். இவரது ஆட்சியில் பிரான்சின் வர்த்தகம் பெரும் வளர்ச்சியடைந்தது. இங்கிலாந்தின் முதலமைச்சர் வால்போலுடன் புளூரியை ஒப்பிடுகிறார்கள். சில வரலாற்றாசிரியர்கள் இவருடைய காலத்தில் நிதி நெருக்கடிக்கு அடிப்படையான காரணங்களான ஆடம்பரச் செலவுகள், பிரபுக்கள், மத குருமார்களின் சிறப்புரிமைகள் ஆகியவற்றை நீக்க எந்த முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை. இவருடைய பதவிக்காலத்தில் பொதுவாக அமைதிக் கொள்கையே கடைப்பிடிக்கப்பட்டு வந்தாலும், பிரான்சு போலந்து வாரிசுரிமைப் போரில் ஈடுபட வேண்டியதாயிற்று. **1473–**ல் கார்டினர் பளூரி மரணமடைந்தார்.

**பதினைந்தாம் லூயியின் நேரடி ஆட்சி (1743 – 1774) :**

கார்டினல் புளூரியின் மரணத்திற்குப் பிறகு தானே நேரடியாக நிர்வாகத்தை நடத்த முடிவு செய்தார் லூயி. ஆயினும் இதுவரை சுமார் **23** ஆண்டுகள் ஆட்சிப் பொறுப்பை பிறரிடம் ஒப்படைத்துவிட்டு, சுகபோக வாழ்க்கையிலேயே ஈடுபட்ட பதினைந்தாம் லூயி காலத்தில் சுமார் இருபது ஆண்டுகள் இவரது துசை நாயகியான மேடம் டி பாம்படூர் (Madam de Pompadour) என்ற பெண்மணி இவரை ஆட்டிப்படைத்தார். உள்நாட்டு, வெளிநாட்டு விவகாரங்கள் அனைத்தையும் நிர்வகித்து வந்தவர் இவரே. பிரபுக்களும், குருமார்களும் மக்களை சுரண்டி வாழ்ந்தனர்.

கொடுமைப்படுத்தினர். மக்கள் மீது ஏராளமான வரி விதிக்கப்பட்டது. எனவே நாட்டின் பல பாகங்களில் மக்கள் கிளர்ச்சி செய்தனர். ஆனால் அவைகள் கொடுமையான முறையில் ஒடுக்கப்பட்டன. ஆஸ்திரிய வாரிசுரிமைப் போரிலும், ஏழாண்டுப் போரிலும், பிரான்ஸ் தோல்வியடைந்து ஐரோப்பாவில் தன் பெருமையை இழந்து நின்றது. அரச சபையில் மேடம் டு பாரி (Madam du Barri) என்ற அம்மையாரின் ஆதிக்கமே ஓங்கியிருந்தது.

இவ்வாறு பதினைந்தாம் லூயியின் ஆட்சியில் நிர்வாகம் சீர்கேடடைந்தது. மக்களுக்கும் மன்னருக்கும் இடைவெளி அதிகமானது. நாட்டின் கடன் சுமை அதிகரித்தது. நிதிநிலை மோசமாகிக் கொண்டே வந்தது. மன்னரின் ஆட்சியில் குறைபாடுகளும், சீர்கேடுகளும் சுட்டிக்காட்டப்பட்டு கண்டிக்கப்பட்டன. ஆனால், அரசரோ அவைகளைக் கண்டுகொள்ளவேயில்லை. வருங்காலத்தைப் பற்றி அவர் கவலைப்படவேயில்லை. தன்னுடைய ஆட்சிக்காலத்திற்குப் பிறகு பிரான்சின் வீழ்ச்சி ஏற்படப்போகிறது என்பதை ஓரளவு உணர்ந்திருந்த பதினைந்தாம் லூயி,

‘‘என்னுடைய இறப்பு வரை நிலைமை ஓரளவு சரியாக இருக்கும். எனக்குப் பிறகு பிரளயம்’’ என்றார்.

Things will hold together till my death; after me the deluge’ (Apros moi, le deluge) என்றார். இவரது கூற்று பதினாறாம் லூயி காலத்தில் மெய்ப்பிக்கப்பட்டு விட்டது.

**பதினாறாம் லூயி (Louis XVI – 1774 – 1792)**

தனது இருபதாம் வயதில் பதவியேற்ற பதினாறாம் லூயி, தன் தாத்தா பதினைந்தாம் லூயி விட்டுச் சென்ற எல்லாப் பிரச்சனைகளையும் சுமக்க வேண்டியதாயிற்று. இவர் பல நல்ல குணங்களையும், எண்ணங்களையும் கொண்டிருந்த போதிலும் அரசனாக ஆவதற்குச் சிறிதும் தகுதியில்லாதவர். வேட்டையாடுவதிலும், சாப்பிடுவதிலுமே நேரத்தைக் கழித்தார். சுயமாகச் சிந்தித்துச் செயலாற்றாமல், தனது அழகிய மனைவி மேரி அண்டாய்னட்டின் சொற்கேட்டு ஆட்சி நடத்தினார்.

இவர் காலத்தில் ஆட்சி முறையில் சீர்கேடுகளும், ஊழல்களும் உச்சகட்டத்தை அடைந்தன. நிர்வாகத்தில் சாதாரண மக்களுக்குச் சிறிதளவு பங்கும் இல்லை. பிரெஞ்சு

சமுதாயத்தில் ‘பூர்ஷ்வா’ (Bourgeoisie) என்றழைக்கப்பட்ட நடுத்தர வகுப்பினரும், சமுதாயத்தின் அடித்தளத்திலிருந்த குடியானவர்கள், தொழிலாளர்கள் போன்றவர்களும் ஒடுக்கப்பட்டு, உரிமைகள் ஏதுமின்றி அடிமைகளாக வாழ்ந்தனர். ஏற்றத்தாழ்வு எங்கும் தலைவிரித்தாடி சமுதாய அமைப்பையே ஆட்டங் கொள்ளச் செய்தது.

நாட்டின் வரித்துறையில் குறைபாடுகள் மலிந்து காணப்பட்டன. பிரபுக்களும், மத குருமார்களும் பெருமளவில் வரிவிலக்கு பெற்று சுகபோக வாழ்க்கை வாழ்ந்தனர். வரிச்சுமை முழுவதுமே வசதியும், சலுகையுமற்ற பாமரமக்கள் மீது விழுந்தது. நாட்டில் சட்டமும் நீதியும் நிலைகுலைந்து கிடந்தன. குழப்பமான சட்டங்களைப் பின்பற்றிய நேர்மையற்ற நீதிமன்றங்களே இயங்கிவந்தன.

இவ்வாறு பிரான்சில், அரசியல், நிதி, நீதி, படை, திருச்சபை, ஆகிய துறைகள் அனைத்தும் செயலிழந்து குழப்பத்தை ஏற்படுத்தின. மோதல்கள் எங்கும் காணப்பட்டது. நாட்டுப் புறத்தவர்கட்கும், நகர் மக்களுக்குமிடையே மோதல், ஏழைகளுக்கும் பணக்காரர்களுக்குமிடையே பகைமை, நடுத்தர மக்களுக்கும் பிரபுக்களுமிடையே சச்சரவு, மன்னருக்கும் நீதிமன்றங்களுக்குமிடையே பகைமை போராட்டம். இவ்வாறு 15–ஆம் லூயி மன்னர்களின் காலங்களில் பிரான்சில் நிலவிய அரசியல், சமூக, பொருளாதார நிலை பிரெஞ்சுப் புரட்சி ஏற்பட ஒரு சாதககான சூழ்நிலையை உருவாக்கியது.

## பிரெஞ்சுப் புரட்சி

**முன்னுரை :**

19–ம் நூற்றாண்டின் ஐரோப்பிய வரலாறு என்பது ‘‘ஒரு தேசத்தைப் பற்றியதாக இருந்தது. ஒரு நிகழ்ச்சியைப் பற்றியதாக இருந்தது. ஒரு மனிதனைப் பற்றியதாக இருந்தது. அந்த நாடு பிரான்ஸ், அந்த நிகழ்ச்சி பிரஞ்சுப் புரட்சி, அந்த மனிதன் என்பவன் நெப்போலியன்’’. இந்த அளவிற்கு பிரான்சு நாடும் அங்கு நடந்த வரலாற்று நிகழ்வுகளும் ஒரு கண்டம் முழுவதும் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.

பிரஞ்சுப் புரட்சியையோ அல்லது நெப்போலியனையோ பிடித்தால் போதும், ஐரோப்பிய கண்டத்திலுள்ள அனைத்து நாடுகளின் வரலாற்றைப் படிப்பதற்குச் சமம். பிரஞ்சுப் புரட்சி, பிரான்சின் மக்களுக்கு மட்டுமன்றி மனித சகாப்தத்திற்கே மாபெரும் மாற்றங்களை கொண்டு வந்தது. 1789–ல் ஏற்பட்ட புரட்சி, உலக வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியாகும். மன்னர்களின் ஏதேச்சதிகார ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்து மக்களாட்சிக்கு அடித்தளம் அமைத்துத் தந்தது என்றால் அது மிகையாகாது. அரசியல் புரட்சியாக ஆரம்பித்து, பின்னர் ஒரு சமுதாயப் புரட்சியாக உருவெடுத்தது. ஐரோப்பிய வாழ்க்கை முறையில் புதிய குறிப்பிடத்தக்க விளைவுகளை ஏற்படுத்தியது. **சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்,** என்ற மூன்று கொள்கைகளை உலகிற்கு அளித்தது. இப்புரட்சியின் இறுதியில், பிரான்சில் நெப்போலியனின் வல்லாட்சி ஏற்பட்ட போதிலும், முடிவாக புரட்சிக் கருத்துக்களே வெற்றி அடைந்தன. இந்தப் புரட்சி, மன்னராட்சிக்கு எதிரானது என்பதைவிட சமுதாய சமத்துவமின்மைக்கு எதிரான புரட்சியாகும்.

### காரணங்கள்

**சமுதாயக் காரணங்கள்** :

பிரஞ்சு சமுதாயம் உள்ளவன் இல்லாதவன் என்ற இரண்டு பிரிவாகப் பிரிந்தது. மதக் குருமார்களும், நிலச்சுவான்தாரர்களும் முதல் பிரிவிலும், இவர்கள் சலுகை பெற்றச் சமுதாயமாக வலம் வந்தனர். 2–வது வகை, சலுகை அற்றவர்கள். அவர்களுக்கு எந்த விதச் சலுகையோ அல்லது அரசு பதவியோ கிடையாது. பல்வேறு வகையான வரிகளை கொடுத்துக் கொடுத்துக் கெட்டுப்போன சமுதாயம். சுருக்கமாகச் சொன்னால், ‘‘பிரபுக்கள் போரிட, மதக்குருக்கள் மண்டியிட, பொதுமக்கள் கொடுக்க

Nobles to fight to pray commons to pay"என்ற நிலைதான் மிகப் பெரிய சமுதாயப் புரட்சிக்கு வித்திட்டது.

**மதக் குருமார்கள்:**

மதக் குருமார்களிலும் இரண்டு வகையாக இருந்தனர். திருச்சபையின் உயர் அதிகாரிகளான பிரபுக்கள், ஆர்ச் பிஷப்புக்கள், மடாதிபதிகள், கார்டினல்கள், உயர் மட்டத்தலும் கீழ் நிலைக் குருமார்கள் சலுகை அற்ற பிரிவிலும் இருந்தனர்.

திருச்சபை ''நாட்டுக்குள் ஒரு நாடு'' என்ற நிலையில் அபரிமிதமான செல்வத்தில் மிதந்தது. அறவாழ்வையும், அறப்பணியையும் மறந்த உலக வாழ்க்கையால் திளைத்தனர். ஆடம்பர மாளிகைகளிலே பிரபுக்கள் வாழ்ந்தனர். திருச்சபையார் உயரதிகாரிகளோ அமைச்சர்களாக வலம் வந்தனர். இவர்களுக்கென்று தனிச் சட்டம், தனி வருவாய், தனி நீதிமன்றம் என்று தனியான அரசாகச் செயல்பட்டனர். இதைக் கண்ட பொதுமக்கள், புரட்சியில் ஈடுபட்டதில் வியப்பொன்றுமில்லை.

**பிரபுக்கள் :**

நிலமானியம் என்ற திட்டத்தின் மூலம் அரசனுக்கு அடுத்த நிலையில் செல்வாக்குப் பெற்றவர்களாக இவர்கள் இருந்தனர். நாட்டின் மொத்த செல்வத்தில் நான்கில் ஒரு பங்கை வைத்திருந்தனர். சிலர் வெர்சேல்ஸ் மாளிகையில் மன்னரோடு அவரது ஆடம்பர களியாட்டங்களில் பங்குதாரர்களாக இருந்தனர். தங்கள் பண்ணைகளைக் குத்தகைக்கு விட்டுவிட்டு, அதில் வரும் வருவாயைக் கொண்டு சுகமாக வாழ்ந்து வந்தனர். மக்களிடமிருந்து பல கட்டாய இலவச உழைப்புடன் மறைமுக வரிகளையும் பெற்றனர். பொதுமக்கள் வரிச்சுமையால் நசுக்கப்பட்டனர், ஒடுக்கப்பட்டனர். அந்த ஒடுக்கப்பட்ட சமுதாயம் ஒன்று திரண்டு நின்றதுதான் பிரஞ்சுப் புரட்சி.

**பொதுமக்கள் :**

இவர்கள் சலுகையற்ற பிரிவினர். மக்கள் தொகையில் 90 சதவிகிதம் கொண்ட இவர்கள், நாட்டின் செல்வத்தில் 60 சதவிகிதத்திற்குள் குறைவாகவே இவர்கள் கையில் இருந்தது. அரசு மற்றும் திருச்சபையின் உயர் பதவிகள் இவர்களுக்கு

எட்டாக்கனியாக இருந்தது. வரி என்ற பெயரிலும் இன்னும் பல்வேறு வகைகளிலும் சுரண்டப்பட்டனர். நிலச் சுவான்தாரர்களின் மாவு அரைக்கும் ஆலை, ஒயின் பிழியும் ஆலைகளை இவர்கள் கண்டிப்பாக பயன்படுத்தவேண்டும். அதற்கு இருமடங்கு பணம் கட்ட வேண்டும்.

‘‘டைத்’’ என்ற வரி திருச்சபைக்கும், ‘‘கார்வி’’ என்ற சாலை வரி அரசுக்கும் ‘‘டெய்லி’’ என்ற வருமான வரி, உப்பு வரி என வரிச்சுமை முழுவதும் பொதுமக்கள் மீது சுமத்தப்பட்டது. உப்பின் மீது விதிக்கப்பட்ட வரி, அதன் உண்மை மதிப்பை விட 10 மடங்கு அதிகமாக ‘‘உணவு சமைக்க கடல் நீரைக் கூட பயன்படுத்தக்கூடாது’’ என்றும் இருந்தது.

பொதுமக்களில் 85 விழுக்காடு பிரிவினர் விவசாயத்தில் ஈடுபட்டு உரிமைகள் இன்றி கடுமையாக உழைக்க வேண்டியவர்களாயிருந்தனர். ஆண்டுதோறும் உழைத்தனர்; ஆனால் உழைப்பின் பலனை பெறமுடியவில்லை.

இடைப்பட்ட மத்தியதர வர்க்கத்தினர் கற்றறிந்தவர்களாய் பொதுப்பணிகள் மருத்துவம், சட்டத்துறை, வாணிபம், கைத்தொழில் ஆகியவற்றில் ஈடுபட்டிருந்தனர்.

‘‘பிரபுக்கள் சண்டையிடுவர், மதகுருமார்கள் மண்டியிடுவர், மக்கள் தண்டமிடுவர்’’ என்பதே அப்போதைய சமுதாயநிலை.

அரசியல் உரிமைகள் இல்லாதபோதும் ஏராளமான வரிகளைப் பொதுமக்கள் செலுத்தினர்.

சிறு தவறுகளும் கடுமையான தண்டனைகளுக்கும் உட்படுத்தப்பட்டனர். எனவே, சமுதாய ஏற்றத்தாழ்வுகள், உரிமையின்மை, பொருளியல் பின்னடைவு போன்ற காரணங்கள் பிரெஞ்சுப்புரட்சிக்கு வழிவகுத்தன.

**தத்துவ அறிஞர்களின் பங்கு:**

1. மாண்டெஸ்க்யூ, வால்டேர், ரூசோ போன்ற தத்துவ அறிஞர்கள் தமது படைப்புகள் மூலம் சமத்துவ உணர்வுடன் விடுதலை வேட்கையைத் தட்டியெழுப்பினர்.

மாண்டெஸ்க்யூ **(1689 – 1755)** என்பவர் கட்டுப்படுத்தப்பட்ட மன்னராட்சியில் நம்பிக்கை உடையவராயிருந்தார்.

சட்டத்துறை, நிராவாகத்துறை, நீதித்துறை ஆகியன தனித்தனியே செயல்படவேண்டும் என்பதைத் தமது சட்டங்களின் **கருப்பொருள்** என்ற நூலின் மூலம் விளக்கினார்.

அ) வரம்பற்ற வல்லாட்சியைச் சாடினார்.

ஆ) முடியாட்சியின் எல்லையற்ற அதிகாரங்களைத் தகர்க்க மக்களைத் தயார் செய்தார்.

இ) ஆட்சியானது சட்டங்களுக்கு உட்பட்டதாய்த் திகழ வேண்டுமென்பதை வலியுறுத்தினார்.

2. அ) **வால்ட்டேர் (1694 – 1778)** மக்களின் சமயக் கோட்பாடுகள், மூடநம்பிக்கைகள் ஆகியவற்றை எள்ளி நகையாடினார்.

ஆ) சமயப் பொறையுடைமைக் கோட்பாட்டில் பற்றுடைய அவர் பிரான்சு நாட்டின் தேவாலயக் கருத்துக்களைக் கடுமையாகச் சாடினார்.

இ) ''நூறு எலிகளால் ஆளப்படுவதை விட ஒரு சிங்கத்தால் ஆளப்படுதலை விரும்புவதாகக் கூறி'', அரசியல் குறைகளை எடுத்தியம்பினார். பாமர மக்களின் உரிமைகள் அவரால் போற்றப்பட்டன.

3. அ) **ரூஸோ (1712 – 1781)** என்பவர் தமது **சமுதாய ஒப்பந்தம்** என்ற நூலின் மூலம் புரட்சிக் கருத்துக்களை வெளியிட்டார்.

ஆ) மனிதன் சுதந்திரமாகப் பிறந்தான்; ஆனால் அவன் அடிமைத்தனம் என்ற சங்கிலியால் பிணைக்கப்பட்டுள்ளான் **–** என்ற உண்மையைச் சுட்டிக்காட்டினார்.

இ) கடந்த காலம் பற்றிக் கவலைப்படாமல் எதிர்கால நலன் பற்றி எண்ண வேண்டுமென்றார்.

ஈ) கட்டுப்பாடு என்ற பெயரில் அழைக்கப்படும் ஒடுக்குதல்கள், முறைகேடான அறிவு ஆகியவற்றைத் தகர்த்தெறியுங்கள் என அறைகூவல் விடுத்தார்.

உ) சமத்துவம், சுதந்திரம், சகோதரத்துவம், மக்கள் இறைமை ஆகியவற்றை வலியுறுத்தினார்.

ஊ) மக்கள் எளிமையுடன் தம்மைத்தாமே ஆண்டு கொள்ளவேண்டும் என்றார்.

எ) ஆள்வோர், ஆளப்படுவோர் என்ற பிரிவினரிடையே ஒப்பந்தம் மூலம் உறவு ஏற்படவேண்டும். இத்தகைய கருத்துக்கள் மூலம் அன்றைய பிரெஞ்சு மக்களின் தேவைகளைச் சுட்டிக்காட்டி புரட்சிக்குத் தயார் செய்தார்.

டெட்ராய்ட் மற்றும் டி–ஆலம்பர்ட் ஆகியோர் கலைக்களஞ்சியத்தை வெளியிட்டு சமுதாயக் குறைகளை சுட்டிக்காட்டினர்.

க்விஸ்னே, டர்காட், **ஹால்பர்க்** போன்றோர், அறிவியல் நோக்கில் தமது கருத்துக்களை எடுத்தியம்பி பொருளாதாரச் சரிவினின்றும் பிரான்சை மீட்க வேண்டாமென்றனர்.

**ஹேசன்** என்ற வரலாற்றறிஞர் கூறியபடி, தத்துவவாதிகள் புரட்சியை உண்டாக்கவில்லை. ஆனால், புரட்சிக்கான தேவைகளை மக்கள் மனதில் பதியும்படி உணர்த்தினார்கள். சுருங்கக் கூறின், மக்களிடையே விழிப்புணர்வை தோற்றுவித்து, அறிவுப் புரட்சியை உருவாக்கி, அரசியல் புரட்சிக்கு வித்திட்டனர். எனவே, இத்தத்துவ வாதிகளை பிரெஞ்சுப் புரட்சிக்கு இன்றியமையாதவர்கள் எனக் குறிப்பிடுவது மிகப் பொருத்தமாகும்.

**<u>7. அரசியல் காரணங்கள்:</u>**

1. பிரான்சு நாட்டை ஆண்டு வந்த அரச வம்சம் பூர்போன் வம்சம். முழுமை பெற்ற வல்லாட்சி கோட்பாட்டில் நம்பிக்கை கொண்டவர்கள். அம்மரபின் 14, 15, 16–ஆம் லூயி மன்னர்கள் வல்லாட்சியாளர்களாகவும், கொடுங்கோலர்களாகவும் விளங்கினர். 14–ஆம் லூயி, 'நானே அரசு என்றார்', 'இறைமை சட்டமியற்றும் அதிகாரம், தேசீய உரிமைகள், ஆகியன என் கையில் அடங்கியுள்ளன', என 16–ஆம் லூயி மமதையுடன் முழங்கினார்.
2. ஆதிக்க வெறி கொண்டலைந்த அவர்கள் திறமையற்றவர்கள், மக்களின் உண்மை நிலையை அறியாத பொறுப்பற்றவர்கள். 'கண்டதே காட்சி கொண்டதே கோலம்' என்று தான்தோறித்தனமாய் வாழ்ந்தவர்கள்.
3. அரசியலமைப்பு அடிப்படையில் பிரான்சு நாடு பல உட்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஆனால், அவற்றின் பணிகள் சீராக வரையறுக்கப்படவில்லை; குழப்பங்கள் மிகுந்து ஆக்கப்பணிகள் நடைபெறவில்லை.

4. 15–ஆம் லூயி தமது மனைவி மேடம் – டி பாம்டா என்பவரிடமும், **16–ஆம் லூயி மேரி அன்டாய்னெட்** என்ற தனது மனைவியிடமும் மயங்கி அதிகாரத்தை அவர்களிடம் ஒப்படைத்தனர். அவர்கள் ஆடம்பரம், கேளிக்கைகளில் ஈடுபட்டதால் அரசியலில் சீர்குலைவு காணப்பட்டது.
5. அரசன், அரசியார் ஆகியோரின் உறவினர் மற்றும் நண்பர்களுக்குப் பதவிகளும், உரிமைகளும் தரப்பட்டது. அவர்கள் அவற்றை முறைகேடான வழிகளில் பயன்படுத்தினர்.
6. பணம் கொடுத்துப் பதவிகளைப் பெற்றவர்கள், பதவிகளை சுயநலனுக்குப் பயன்படுத்தக் கொண்டனர்.
7. கையூட்டு, ஊழல் ஆகியன மலிந்தபோது மன்னராட்சி சிறப்படையவில்லை.
8. 1614 முதல் ஸ்டேட்ஸ் ஜெனரல் என்ற சபை கூட்டப்படவில்லை. அதனால், மக்கள் ஆத்திரமடைந்தனர்.
9. செல்வாக்குப் பெற்ற பிரபுக்கள் தம்மை எதிர்த்தவர்களை முத்திரையிடப்பட்ட பிடிப்பாணை (லெட்டர்–டி–கேஷே) மூலம் எவ்வித விசாரணையுமின்றி சிறையிலிட்டனர். தமது உடமைக்கும் உயிருக்கும் பாதுகாப்பில்லாத மக்கள் அதனை எதிர்க்கத் தலைப்பட்டார்கள். இவ்வாறான அரசியல் குறைபாடுகள் புரட்சிக்கு வித்திட்டன.

**8. மேரி அண்டாய்னட்:**

ஆஸ்திரிய நாட்டைச் சேர்ந்தவரும் 16–ஆம் லுயுவின் மனைவியுமான மேரி அண்டாய் னட் ஒரு பேரழகி ஆடம்பர வாழ்க்கை வாழ அரசு பணத்தை வீணாக செலவு செய்தார். ஏழை மக்களின் நிலை என்னவென்பதை புரிந்து கொள்ள முடியவில்லை. மக்கள் சாப்பிட ரொட்டி கிடைக்கவில்லை என்று கூறியபோது ‘‘ரொட்டி கிடைக்காவிட்டால் என்ன – கேக் வாங்கி சாப்பிடுங்கள் என்று கூறியவர்’’, இவர். இவர் மக்களால் பற்றாக்குறை அரசி என்று அழைக்கப்பட்டார். அரண்மனை விவகாரங்களில் தன்னை ஆதரித்தவர்களுக்கு உயர் பதவிகளையும் தன்னை எதிர்த்தவர்களுக்கு சிறைத்தண்டனையும் வழங்கினார். இதனால், பிரான்ஸ் நிர்வாகம் சீர்கேடடைந்தது. பிரான்ஸை இழிநிலைக்குக் கொண்டு வந்த இவளை மக்கள்

மட்டுமல்லாதது அரச விசுவாசிகளும் வெறுத்தனர். எனவே, புரட்சி ஏற்பட முக்கிய காரணங்களில் ஒன்றாக மேரி அண்டாய் னட் விளங்கினார்.

**9. நீதிமுறை:**

1) நீதித்துறை ஒழுங்கைமைப்புடன் கூடியதாயில்லை.
2) குறைபாடுகள், முரண்பாடுகள் மலிந்த குழப்பமான பல சட்டங்கள் பிரான்சில் நிலவின.
3) ரோமானிய மற்றும் ஜெர்மானியச் சட்டமுறைகள் நடைமுறையிலிருந்தன. லத்தீன் மொழியில் எழுதப்பட்டிருந்த இச்சட்டங்களை மக்கள் புரிந்துகொள்ள முடியவில்லை.
4) அரசு நீதிமன்றம் படைத்துறை நீதிமன்றம், தேவாலய நீதிமன்றங்கள் என பல வகைப்பட்ட நீதிமன்றங்கள் செயல்பட்டன. இது மக்களின் குழப்பத்தை அதிகரித்தன.
5) பிரபுக்கள், மத குருமார் முதலானோர், குற்றங்கள் செய்தாலும் தமது செல்வாக்கினால் தண்டனை பெறாமல் தப்பித்துக்கொண்டனர்.
6) இன்டெண்டுகள் என்ற மத்திய அரசுப்பிரதிநிதிகள் தமது அதிகாரங்களை முறைகேடாகப் பயன்படுத்தினர்.
7) சட்டங்கள் கடுமையானவை. கொடூரமானவை; அவற்றால் மக்கள் துயருற்றனர். சட்டமும், நீதியும், மாநிலத்தற்கு மாநிலம், மாவட்டத்தற்கு மாவட்டம் மாறுபட்டிருந்தது. ஒரே சீரற்ற தன்மையினால், குழப்பங்களும் குற்றங்களும் மலிந்தன; எனவே ஒழுங்கற்ற நீதிமுறை மக்களைப் புரட்சிக்குத் தூண்டியதில வியப்பில்லை.

**10. அமெரிக்க சுதந்திரப்போர்:**

தாய் நாட்டிற்கு எதிராகப் போராடி விடுதலை பெற்ற அமெரிக்கர்கள் பிரான்சு நாட்டிற்கு ஓர் தூண்டுகோலாய் அமைந்தனர். அமெரிக்க விடுதலைப்போரில் அமெரிக்கர்களுக்கு உதவிய பிரெஞ்சுப் படையினர் தாய் நாட்டிற்கு திரும்பியபின் சுதந்திர நோக்குடன் வாழ விரும்பினர். இக்காரணங்களால், 1789–ல் பிரெஞ்சுப் புரட்சி ஏற்பட்டது.

**பொருளாதாரக் காரணம்**

- பிரான்சு நாட்டின் பொருளாதார நிலை பிரெஞ்சுப் புரட்சிக்கு முக்கிய காரணமாயிருந்தது.
- இடையறாத போர்களால், பிரான்சின் கருவூலம் காலியாகிவிட்டது.
- மன்னர்களின் மனைவியர், ஆசை நாயகிகள் ஆகியோரின் ஆடம்பரச் செலவுகளால் மக்கள் பணம் வீணாயிற்று.
- அரசாங்கத்தின் கடன்சுமையும் பெருகிக் காணப்பட்டது.

அ) 'டெய்லி' என்ற சொத்துவரி, 'கேபிள்' என்ற உப்பு வரி, 'கார்வி' என்ற சாலைவரி, 'டைத்' என்னும் சுங்க வரி போன்ற ஏராளமான வரிகள் விதிக்கப்பட்டபோது மக்கள் வரிச்சுமையால் வாடினர்.

ஆ) வரிவசூல் சரிவர மேற்கொள்ளப்படவில்லை.

இ) வரிவிலக்குகளும் சிலருக்குத் தரப்பட்டன.

ஈ) நாட்டின் செலவினங்களும் அதிகரித்தன.

உ) டர்காட், நெக்கர் போன்ற அமைச்சர்கள், நிதிநிலையைச் சீராக்க எவ்விதப் பாகுபாடுகளுமின்றி அனைவர் மீதும் வரி விதிக்கப்பட வேண்டுமென்றனர். எனவே, மக்கள் ஆதரவு பெற்ற அவர்களை உயர்குடிப் பிரிவினர் வெறுத்தனர். மன்னர் அவர்களைப் பதவி நீக்கம் செய்தார்.

ஊ) ப்ளூரி என்பவராலும் நிதிநிலையைச் சீராக்க முடியவில்லை.

எ) கலோன் என்பவர் அதிக வட்டிக்குக் கடன் வாங்கிக் கடனை அடைக்க முற்பட்டபோது, பொருளாதாரச் சிக்கல்கள் அதிகரித்தன. இவ்வாறு பூர்போன் அரசின் முட்டாள்தனமான பொருளாதாரக் கொள்கை, முறையற்ற வரி விதிப்பு, அரசின் ஊதாரித்தனம், போர்கள் விளைவித்த பொருளாதார முடக்கம், பொருளாதாரச் சிக்கல்களை உருவாக்கின. 'பொருளாதாரச் சிக்கல்கள் புரட்சிக்கு வித்திட்டன'.

மேற்கூறப்பட்ட பொருளாதாரச் சரிவைச் சரிகட்டப் பணம் தேவைப்பட்டபோது பதினாறாம் லூயி ஸ்டேட்ஸ் ஜெனரல் என்ற முப்பேராய அவையைக் கூட்டியபோது புரட்சி வெடித்து.

**11. உடனடிக் காரணம்:**

1788–ல் மழை இல்லாத காரணத்தால் பஞ்சமும் வறட்சியும் நிலவியது. நூாட்டின் மொத்த வருவாய் வட்டி செலுத்தக் கூட போதவில்லை. இந் நிலையில், மன்னர் கடன் திரட்டி காரியத்தைச் சமாளிக்க நினைத்தார். ஆனால், கடன் திரட்டுவதை பாரீஸ் நீதிமன்றங்கள் எதிர்த்தன. வேறு வழியின்றி மன்னர் நெக்கர் என்பவரை மீண்டும் நிதி அமைச்சராக நியமித்தார். அவர் ஆலோசனையின் பேரில் 175 ஆண்டுகளாக கூட்டப்படாமல் இருந்த எஸ்டேட் ஜெனரல் என்ற அவை கூட்டப்பட்டது. **புரட்சி வெடித்தது.**

**12. புரட்சியின் போக்கு :**

கி.பி.1789–ஆம் ஆண்டு, மே மாதம், பிரான்சின் வரலாற்றில் திருப்புமுனை நிறைந்த நாடகள். நிதி நெருக்கடி அபாயக்கட்டத்தை நெருங்கிக் கொண்டிருந்தது. இப்பயங்கர நிதி நெருக்கடியைச் சமாளிக்க, இதுவரை (175 ஆண்டுகளாக) கூட்டப்படாத ஸ்டேட்ஸ் ஜெனரல் எனப்பட்ட முப்பேராயத்தை கூட்டுவதற்கு மன்னர் லூயி ஆணை பிறப்பித்தார். இந்த முப்பேராயம் பிரஞ்சு சமூகத்தின் மூன்று பிரிவினருக்கும் பிரதிநிதித்துவம் அளிக்கும் வகையில் மூன்று சபைககாக இயங்கியது. அவை சமயக்குருமார்களின் பிரதிநிதிகள் சபை, பிரபுக்கள் பிரதிநிதிகள் சபை, பொதுமக்கள் பிரதிநிதிகள் சபை, பிரபுக்கள் பிரதிநிதிகள் சபை, பொதுமக்கள் பிரதிநிதிகள் சபை ஆகியவைகளாகும். இச்சபைகள் மூன்றும் ஏறத்தாழ சம எண்ணிக்கையான உறுப்பினர்களைக் கொண்டிருந்தது. இப்போது பிரான்சில் இரண்டரைக் கோடி மக்களின் பிரதிநிதியான பொதுமக்கள் சபை அதிக அளவு பிரதிநிதிததுவம் கோரியது. முதலில் தயங்கிய மன்னர், பின்னர் சம்மதம் தெரிவித்தார். அதன்படி, பொதுமக்கள் சபை உறுப்பினாகளின் எண்ணிக்கை பிற இரு சபைகளின் மொத்த உறுப்பினர் எண்ணிக்கை அளவிற்கு உயர்த்தப்பட்டது. பிரபுக்களும் சமயகுருமார்களும் தத்தம் சபைகளுக்கு முறையே 300 பேர்களைத் தேர்ந்தெடுத்த போது, பொது மக்கள் 600 பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அனுப்பினர்.

இதற்குமுன் அச்சபைகள் தனித்தனியே கூடி தீர்மானங்கள் இயற்றின. மூன்று சபைகளாலும் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களே மன்னர் இசைவு பெற்று

சட்டங்கயாயின. இதன்மூலம் பொதுமக்களால் ஏகமனதாக நிறைவேற்றிய தீர்மாங்களைக் கூட பிரபுக்கள் சபையோ, குருமார்கள் சபையோ நிராகரித்துவிடும் அபாயமிருந்தது. எனவே, பொதுமக்கள் பிரதிநிதிகள், மூன்று சபைகளும் ஒன்றாக வாக்கெடுப்பு நடத்த வேண்டும் எனக்கோரினர். அப்பொழுதுதான் தங்கள் எண்ணிக்கை அதிகரித்ததற்கு அர்த்தம் இருக்கும் என எண்ணினர். இதனை மன்னர் ஏற்க மறுத்துவிட்டார்.

**தேசிய சட்டமன்றம் உருவாதல் :** பொதுமக்கள் சபைக் கோரிக்கைகளுக்குப் பாரீஸ் மக்கள் ஆதரவு இருந்தது. விரைவில் ஒரு சில முற்போக்கு பிரபுக்ககளும், குருமார்களும் அக்கோரிக்கைக்கு ஆதரவளித்து பொதுமக்கள் சபையில் வந்து அமர்ந்தனர். 1789, ஜூன் 10–ஆம் நாள் கூடிய பொதுமக்கள் சபையானது தன் பெயரைத்தான் தேசிய சட்டமன்றம் என்று மாற்றிக்கொண்டது. பிற இருசபை உறுப்பினர்களையும் மறைமுகமாக இணைய வருமாறு அழைப்பு விடுத்தது.

**டென்னிஸ் மைதான உறுதிமொழி :** ஆனால் மன்னரோ பொது மக்கள் சபையின் நடவடிக்கைகளை ஏற்றுக்கொள்ள மறுத்து, வன்முறை மூலம் அதனை ஒடுக்க எண்ணினார். ஜூன் 2–ஆம் நாள் பொதுமக்கள் சபை உறுப்பினர்கள் தாங்கள் வழக்கமாய் கூடும் மாளிகைக்கு வந்தபோது, அது பூட்டப்பட்டு ஆயுதந்தாங்கிய வீரர்களால் சூழப்பட்டிருப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்தனர். உடனே அருகிலிருந்த டென்னிஸ் மைதானத்தில் மிரபோ என்பவர் தலைமையில் கூடினர். பிரான்ஸ்க்குப் புதிய அரசியலமைப்பு ஒன்றினை உருவாக்காமல் நாங்கள் கலையமாட்டோம் என்ற உறுதிமொழியை எடுத்தனர். உறுப்பினர்களின் உறுதியைக் கண்டு அஞ்சிய மமனனர், இறுதியில் விட்டுக் கொடுத்தார். அதே சமயத்தில் மக்கள் ஆதரவைப் பெற்ற நிதி அமைச்சர் நெக்கரை பதவி நீக்கம் செய்து, தம் ஆத்திரத்தை வெளிக்காட்டிக் கொண்டார்.

இவ்வாறு ஒவ்வொரு விஷயங்களிலும், தொடக்கத்தில் மூர்க்கத்தனமான பிடிவாதம் காட்டி, சமாளிக்க முடியாதநிலை ஏற்படும்போது, அச்சத்தின் காரணமாக விட்டுக்கொடுக்க முன்வருவது பதினாறாம் லூயியின் பலவீனங்களில் ஒன்று. முதலில் இணங்கிவிட்டு தமக்குச் சாதகமான சூழ்நிலை ஏற்படும் வரை காத்திருந்து, பின் தம்

வல்லலாட்சிச் சுயரூபத்தைக் காட்டுவது, அவரது ராஜதந்திரமாயிருந்தது. அவரது இந்த பண்புதான் அவர் அழிவிற்குக் காரணமாயிருந்தது என்று கூறுவர்.

**பாஸ்டில் சிறைச்சாலையத் தாக்குதல் :** மன்னரின் அந்தரங்க எண்ணங்களை பொது மக்கள் ஒருவாறு உணர்ந்திருந்தனர். அவர் பொது மக்கள் சபை உறுப்பினர்களை ஒடுக்குவதற்கு படைகளையும் படைக்கலன்களையும் பாஸ்டில் சிறைக்கோட்டயினுள் குவித்து வைத்திருப்பதாக ஒரு வதந்தி பரவியது. உடனே, பாரிஸ் நகரக் கும்பல் பாஸ்டிலை நோக்கிப் படையெடுத்தது. அதனைத் தாக்கித் தரைமட்டமாக்கியது. பாஸ்டில் சிறை நொறுக்கப்பட்ட செய்தி பிரான்சில் மட்டுமின்றி, ஐரோப்பா முழுவதிலும் மினனதிர்ச்சி போன்ற உணர்வினை ஏற்படுத்தியது. சீர்போன் மரபு மன்னர்களின் கொடுங்கோல் ஆட்சியின் சின்னமாக பாஸ்டிலை அவர்கள் கருதியிருந்ததால், அதன் வீழ்ச்சியை பூர்போன், வல்லாட்சியின் வீழ்ச்சியாகவே எண்ணி மகிழ்ந்தனர். அச்சிறைச்சாலை நொறுக்கப்பட்ட ஜூலை **14**–ஆம் நாள் இன்று வரை பிரஞ்சு தேசியத் தினமாகக் கொண்டாடப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

**பாரீஸ் நகராட்சி** (Commune) **உருவாதல் :** பாஸ்டில் சிறைச்சாலை அழிந்த பின் பாரிஸ் நகரின் சட்டம் ஒழுங்கு சீர்கெட்டது. இந்நிலையில் பாரிஸ் நகராட்சி, சட்டம் ஒழுங்கை நிலைநாட்டும் பொறுப்பைத் தானே எடுத்துக்கொண்டது. ஆனால், நகராட்சியோ தீவிரவாதிகளின் ஆதிக்கத்தில இயங்கியது. லஃபராயட் என்பார் தலைமையில் தேசியக் காவற்படை (National Guard) ஒன்றை உருவாக்கியது. அது பாரிஸ் நகராட்சியுடன் இணைந்து தேசிய சட்டமன்ற நடவடிக்கைகளுக்குப் பக்கபலமாக நின்றது. அவற்றின் ஆத்திரமிகு செயல்களைக் கண்ட மன்னர் நெக்கரை மீண்டும் அமைச்சராக்கியதுடன், புதிய மூவண்ணக் கொடியை தேசியக் கொடியாக்குவதற்கும் இணங்கினார். அதே சமயத்தில் வன்முறையாளர்களை ஒடுக்க பிளாண்டர்சிலிருந்து படைகளை வரவழைத்தார்.

**வெர்சேல்ஸ் நோக்கி பெண்கள் பேரணி :** இச்சமயத்தில் நாட்டில் உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டது. ரொட்டி கிடைக்காது பாரிஸ் நகர மக்கள் அவதியுற்றனர். ஆனால், மன்னர் இதனைச் சிறிதும் கவனிக்காது, வெர்சேல்ஸ் மமளிகையில் வழக்கமான ஆடம்பரங்களுடன் வாழ்ந்து வந்தது மக்களின் ஆத்திரத்தை துதுண்டியது.

முன்னர் தலைநகரில் இருந்தால்தான் தங்கள் பிரச்சனைகளைக் கவனிப்பார் என்று எண்ணினர். எனவே, அக்டோபர் 5–ஆம் நாள் பாரிஸ் நகரப் பெண்கள் அணி திரண்டு தேசியக் காவற்படை புடைசூழ வெல்சேல்ஸ் மாளிகை நோக்கிச் சென்றனர். அங்கு மன்னரைக் கட்டாயப்படுத்தி பாரிசிற்கு ஊர்வலமாக அழைத்து வந்தனர். 'இதோ ரொட்டி சுடுவபவனும் அவனது மனைவியும் மகனும் வருகின்றனர். இனி ரொட்டி கிடைக்கும்' என்று கூறினர். பாரிசில் உள்ள துய்லிரிஸ் (Tuileries) மாளிகையில் மன்னர் தம் குடும்பத்தினருடன் தங்கினார். தேசிய சட்டமன்றமும் பாரிசிற்கு மாற்றப்பட்டது.

**வன்முறை அதிகரிப்பு** : பாரிஸ் நகரில் வன்முறைக் கும்பல்களின் ஆதிக்கமே இருந்ததால் மன்னரால சுதந்திரமாக இயங்க முடியவில்லை. உண்மையில் அவர் பாரிஸ் கும்பலின் கைதியாகவே இருந்தார். அரசு நிர்வாகச் சக்கரம் ஸ்தம்பித்துப் போய்விட்டது போல் தோன்றியது. சட்டம் ஒழுங்கு சீர்கெட்டது மக்கள் கும்பல் கும்பலாய் வன்முறையில் ஈடுபட்டனர். பிரபுக்கள் மற்றும் குருமார்களின் சொத்துக்கள் சூறையாடப்பட்டன. அவர்கள் ஏளனம் செய்யப்பட்டனர். அவர்களுள் பலர் உயிரைக் காக்க நாடடை விட்டு தப்பியோடினர்.

## <u>தேசியப் பேரவையின் செயல்படுகள்</u>

**தேசிய சட்டமன்றத்தின் நடவடிக்கைகள்** : இத்தகைய சூழ்நிலையில் தேசிய சட்டமன்றம் பழைய ஆட்சி முறைகளை (Ancient Regime) அடியோடி மாற்றியமைக்கும் புரடசிகரமான சீர்திருத்தங்களை அடுக்கடுக்காக நிறைவேற்றியது.

அ) பழைய நிலமானிய முறைகள் அனைத்தும் ஒழிக்கப்பட்டன. பிரபுக்களும் சமயக் குருக்களும் அனுபவித்து வந்த சலுகைகள் உரிமைகள் அனைத்தும் அகற்றப்பட்டன. அனைவருக்கும் ஒரே வரிவிதிப்புமுறை, ஒரே சட்டம் என்ற நிலை ஏற்பட்டது.

ஆ) பழைய ஆட்சிமுறையில் இடம்பெற்ற இன்டெண்டுகள், ஆளுநர்கள் ஆகிய பதவிகள் படிப்படியாக ஒழிக்கப்பட்டன. பார்லிமெண்டுகள் எனப்பட்ட நீதிமன்றங்களும் ஒழிக்கப்பட்டன. நாடானது சம அளவிலான பெரு நிலப்பிரிவுகளாகப் (Departments) பிரிக்கப்பட்டு அவை **கான்டன், கம்யூன்கள்** என்ற குறுநிலங்களாக உட்பிரிவுகள்

செய்ப்பட்டன. தல ஆட்சி நிறுவனங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட ம.கள் பிரதிநிதிகள் வசம் ஒப்படைக்கப்பட்டது. நீதிபதிகள் கூட தேர்ந்தெடுக்கப்பட வகை செய்யப்பட்டது.

இ) திருச்சபை, அரசு நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டது. அதன் சொத்துக்கள் தேசியமயமாக்கப்பட்டன. குருக்கள், அரசு அலுவ்லர்களாகக் கருதப்பட்டு ஊதியமளிக்கப்பட்டனர். திருச்சபை சம்பந்தப்பட்ட இந்த புதிய அரசியலமைப்பினை ஏற்றுக் கொள்வதாக குருக்கள் உறுதிமொழி எடுத்துக்கொள்ள வேண்டும். அப்படி எடுத்துக் கொள்ளாதவர்கள், திருச்சபை பதவிகளில் இருந்து நீக்கப்பட்டனர். ஆனால், பெரும்பாலான குருக்கள் உறுதிமொழி எடுத்துக் கொள்ளவில்லை. அவர்கள் உறுதிமொழி ஏற்க மறுத்தவர்கள் (Non-juring) எனவும், உறுதிமொழி எடுத்துக் கொண்டவர்கள் ஏற்பவர்கள் (Juring) என அழைக்கப்பட்டனர். இதனால் திருச்சபை பிளவுபட்டது. போப், திருச்சபை சம்பந்தப்பட்ட இந்த ஏற்பாடுகளை அங்கீகரிக்கவில்லை. எனவே, திருச்சபைக்கும் புரட்சியாளருக்குமிடையில் கடுமையான மோதல் ஏற்பட்டது.

**ஈ) மனித உரிமைப் பிரகடனம் :** ஒன்று தயாரிக்கப்பட்டு ஆகஸ்ட் 27–ல் வெளியிடப்பட்டது. மக்கள் உரிமைகளின் மகாசாசனமாகக் கருதப்பட்ட அப்பிரகடனத்தில் சொதந்துரிமை, சமத்துவ உரிமை , சுதந்திர உரிமைகள் வலியுறுத்தப்பட்டன. காரணங்காட்டாமல் யாரையும் கைது செய்தல் கூடாது, விசாரணையின்றி எவரையும் சிறையிலடைத்தல் கூடாது எனவும் கூறப்பட்டது.

**உ)** நாட்டின் நிதி நெருக்கடியைத் தீர்க்க துணிகரமான புதிய முயற்சி ஒன்று மேற்கொள்ளப்பட்டது. தேசியமயமாக்கப்பட்ட திருச்சபைச் சொத்துக்களை வைப்பு நிதயாகக் கொண்டு அதன் மதிப்பின் பேரில் அஸிக்நாட் (Assignats) எனப்பட்ட காகித பணம் வெளியிடப்ப.டது. இது நாடடின் நிதிநிலையைச் சீரமைக்க உதவியது.

**ஊ)** டென்னிஸ் மைதான உறுதிமொழிப்படி நாட்டிற்கு ஒரு புதிய அரசியலமைப்பை வகுத்துக் கொடுத்தது. பிரான்சின் முதல் எழுதப்பட்ட அரசியலமைப்பான அது, வரம்பிற்குட்பட்ட முடியாட்சியை ஏற்படுத்தியது.

புதிய அரசியலமைப்பிற்கு மன்னர் முழுமனதுடன் அங்கீகாரமளிக்கவில்லை. வரயறுக்கப்பட்ட அதிகாாங்களைக் கொண்ட முடிமன்னரரக நீடிக்க வல்லாட்சிப் பரம்பரையில் ஊறிய அவரது மனம் ஒப்பவில்லை. திருச்சபை சம்பந்தமான புதிய ஏற்பாடுகளை ஏற்றுக் கொள்ளவில்லை. பாரிஸ் கலகக் கும்பல்களுக்கு மத்தியில் இருந்து கொண்டு சுதந்திரமாக அவரால் செயல்பட முடியவில்லை. எனவே 1791

ஜூனில் அவர் குடும்பத்துடன் தப்பியோட முயன்றார். அவ்வாறு தப்பியோடும்போது வெரனைஸ் என்ற இடத்தில் கைது செய்யப்பட்டு மீண்டும் துய்லரிஸ் மாளிகைக்கு கொண்டு வரப்பட்டார். அதன் பின் மன்னரது அந்தரங்க எண்ணத்தை மக்கள் சந்தேகிக்கத் தொடங்கினர். புதிய அரசியலமைப்பை மன்னர் மனப்பூர்வமாக விரும்பவில்லை என்பதையும் கண்டு கொண்டனர்.

**தேசியப் பேரவையின் சாதனைகள் பற்றிய மதிப்பீடு :** 1789, மே 4–ஆம் நாள் கூடிய தேசியப் பேரவை (முப்பேராயம்) 1791 செப்டம்பர் 25–ஆம் நாள் கலைந்தது. 123 வாரங்கள் செயல்பட்ட அப்பேரவை, நிலமானிய நிறுவனங்களுக்கும் சலுகைகளுக்கும் சாவுமணி அடித்தது. பழைய வல்லாட்சி முறையைத் தாங்கி நின்ற வலிய தூண்களை இடித்துத் தள்ளியது. மானிட உரிமைப் பிரகடனம் வெளியிடப்பட்ட்து. திருச்சபை தேசியமயமாக்கப்பட்டது. வரம்பிற்குட்பட்ட முடியாட்சி முறையிலான அரசியலமைப்பை உருவாக்கியது. இத்தகைய மாபெரும் மாறுதல்களை வன்முறைகளும், படுகொலைகளும் இன்றி செய்து முடித்தது. இம்மாறுதல்களை 2500 சட்டங்களை நிறைவேற்றியதன் மூலம் ஏற்படுத்தியது. பெரும்பாலும் நடுத்தர மக்களால் நடத்திச் செல்லப்பட்ட இப்பேரவை மக்களின் சமத்து உரிமையை நிலைநாட்டியது. இத்துடன் புரட்சி நின்றிருந்தால் பிரான்சிலும் இங்கிலந்தைப் போல் வரம்பிற்குட்பட்ட பாராளுமன்ற ஆட்சி நிலைநாட்டப்பட்டிருக்கும், அநாயவசியப் படுகொலைகளோ, அயல்நாட்டுப் படையெடுப்புகளோ நடைபெற்றிருக்காது. துரதிருஷ்டவசமாகத் தீவிரவாதியக்கம் பாரிஸ் மாநகராட்சியும் புரட்சியைத் தொடர்ந்து நடத்த முனைந்தனர். மன்னரின் ஐயுறத்தக்க நடவடிக்கைகளும், அவரது தப்பியோடும் முயற்சியும் அயலவர் படையெடுப்பும், தப்பியோடிய பிரபுக்களின் நடவடிக்கைகளும் தேசியப் பேரவையின் கரங்களையே வலுப்படுத்தியது.

## பயங்கர ஆட்சி (Reign of Terror)

## 1793 ஜனவரி முதல் 1794 ஜூலை வரை

பிரான்சில் 1793 மற்றும் 1794–ம் வருடங்களில் தேசிய கன்வென்ஷன் சபை மேற்கொண்ட நடவடிக்கைகளுக்குப் பயங்கர ஆட்சி என்று பெயர்.

**பயங்கர ஆட்சி ஏற்படக் காரணங்கள் :**

அ) 16–ம் லூயிவின் படுகொலை ஐரோப்பிய அரசுகளை பெரும் அதிர்ச்சிக்குள்ளாகியது. புரட்சியை எப்பபயாவது ஒடுக்கிவிடவேண்டுமென்று ஐரோப்பிய அரசுகள் தீர்மானித்தன. புரட்சிக் கருத்துக்கள் ஐரோப்பாவில் பரவி விடாமல் தடுக்கவும், பிரான்சில் மீண்டும் முடியாட்சியை ஏற்படுத்தவும், பிரான்சுக்கு எதிராக ஆஸ்திராயா, இங்கிலாந்து, பிரஷ்யா, ஸ்பெயின், ஹாலாந்து, சார்டீனியா ஆகிய நாடுகள் சேர்ந்து முதல் கூட்டணியை ஏற்படுத்தின.

ஆ) பிரான்சின் தென்கரையிலுள்ள டூலன் நகரை ஆங்கிலேயர் கைப்பற்றி அங்கு போட்டி அரசை நிறுவினர். பிரான்சின் பகைவர்கள் அதிகமாகிக் கொண்டே வந்தார்கள். பிரரெஞ்சுப்படைகள் தோற்கடிக்கப்பட்டன. பிரான்சின் வீழ்ச்சி உடனடியாக ஏற்படும் போல் தோன்றியது.

இ) உள்நாட்டிலும் அரசியலமைப்புக்கு எதிராகவும், மீண்டும் முடியாட்சியைக் கொண்டுவரவும் அரசரின் ஆதரவாளர்கள் பல இடங்களில் கலவரம் செய்தனர்.

ஈ) மேலும், தேசியக் கன்வென்சனில் தீவிரவாதிகளான ஜேக்கோபியர்களின் கை ஓங்கி இருந்தது. அவர்களின் தலைவரான டாண்டன், அரசியல் சட்ட முறைகளைக் கையாள இயலாததால், தீவிர முறைகளைக் கையாண்டு, உள்நாட்டு வெளிநாட்டு அபாயங்களைச் சமாளிக்க விரும்பினார். இவரால் ஆரம்பிக்கப்பட்ட ஆட்சியே பயங்கர ஆட்சியாகும்.

### பொதுப் பாதுகாப்புக் குழு (Committee of Public Safety) :

ஜேக்கோப்பியர்களால் ஆரம்பிக்கப்பட்ட பயங்கர ஆட்சி 1793 ஜனவரி முதல் 1794 ஜூலை வரை நீடித்தது. இந்த ஆட்சியின்போது நிர்வாகப் பொறுப்புகளை ஏற்றுச் செயல்படுத்த 12 உறுப்பினர்களைக் கொண்ட பொதுப்பாதுகாப்பு குழு ஒன்று ஏப்ரல் மாதம் அமைக்கப்பட்டது. இக்குழுவில் முதலில் டாண்டனும் பின்னர் ரோபஸ்பியரும் செல்வாக்குடையவர்களாக இருந்தனர். உள்நாட்டு வெளிநாட்டு அபாயங்களைச்

சமாளிக்க, கடும் நடவடிக்கைகளை எடுக்க இச்சபைக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. குறிப்பாக படைகளைத் திரட்டுவதிலும், போரை இயக்குவதிலும் அதிகக் கவனம் செலுத்தியது. இறுதியில் பிரான்சிற்குப் புகழைத் தரவல்ல வெற்றிகளை ஒன்றன்பின் ஒன்றாகப் பெற்றுத்தந்தது.

**புரட்சி நீதிமன்றம்** (Revolutionary Tribunal):

பொதுப் பாதுகாப்புக் குழுவிற்கு உதவி செய்வதற்காக பொது மக்கள் பாதுகாப்புக் குழு (Committee of General Security) ஒன்றும், புரட்சி நீதிமன்றம் ஒன்றும் நிறுவப்பட்டன. அமைதியைப் பாதுகாத்து ஒழுங்கை நிலைநாட்ட வேண்டியது பாதுகாப்புக் குழுவின் பொறுப்பு. உள்நாட்டுக் கலகங்களை இரும்புக்கரம் கொண்டு நசுக்குவதும், ஜேக்கோப்பியர்களின் ஆதிக்கத்தை நிலைநாட்டுவவம், குடியரசின் விரோதிகள் என்று சந்தேகப்பட்டவர்களை விசாரித்துத் தண்டிப்பதும் புரட்சி நீதிமன்றத்தின் பொறுப்பாகும். எதிரிகளைக் கைது செய்யவும், விசாரிக்கவும் அதிகாரம் வழங்கும் சட்டம் ஒன்றும் பிறப்பிக்கப்பட்டது.

இதன்படி, பிரபுக்கள், புரட்சிக்குமுன் அரசு பதவி வகித்தவர்கள், கலகம் செய்வதர்கள், அரசு விசுவாசிகள், சந்தேகத்திற்குரியவர்கள் ஆகியோர் இந்த நீதிமன்றத்தினால் விசாரிக்கப்பட்டு கில்லட்டின் மூலம் கொல்லப்பட்டனர். விசாரணை ஒருதலைப்பட்சமாகவும், மிகவும் சுருக்கமாகவும் இருந்தது. கில்லட்டினிற்குப் பலியானவர்களில் முக்கியமானவர்கள் கேரி அண்டாய்னட், மேடம்–டு–பாரி, மேடம் எலிசெபத், மேடம் ரோலண்டு ஆகியோர். ஒரே வருடத்தில் 16 ஆயிரம் பேர் படுகொலை செய்யப்பட்டனர். ஜேக்கோப்பியர்களின் அரசியல் எதிரிகளான கிராண்டியர்களும் துரோகிகளாகக் கருதப்பட்டு கொல்லப்பட்டனர். ஜேக்கோப்பியர்களை விட தீவிரவாதிகளாக இருந்த ஹுபர்ட்டு (Hebert), சாமெட்டு (Chaumette) என்பவர்களின் தலைமையில் ஒரு கட்சி இயங்கி வந்தது. இது மிகவும் புரட்சிகரமான சமூக மாற்றங்களை வற்புறுத்தியது. இக்கட்சியினரும் நசுக்கப்பட்டனர்.

**ரோபஸ்பியரின் வல்லாட்சி :** இதற்கிடையில் பிரான்சின் மீது படையெடுத்த ஆஸ்திரியப் படைகள் தோற்கடிக்கப்பட்டன. பிரஷ்யாவும், ஸ்பெயினும், பிரான்சுடன் சமாதானம் செய்து கொண்டன. நெப்போலியன் போனபார்ட்டின் திறமையால் டூலன்

நகரம் ஆங்கிலேயரிடமிருந்து மீட்கப்பட்டது. இவ்வாறு ரோபஸ்பியரின் திறமையான நடவடிக்கைகளால் அந்நிய ஆபத்து ஒழிந்தது. எனவே, இனிமேலும் அடாத செயல்கள் தேவையில்லை யென்றும், கொடுமைகள் தணிக்கப்பட வேண்டும் என்றும் டான்டன் கூறினார். எனவே, ரோபஸ்பியர் அவரை பிற்போக்காளர் என்று குற்றம்சாட்டி, அவரையும் அவரது கூட்டாளிகள் பலரையும் கொன்று குவித்தார்.

டாண்டனின் மறைவிற்குப் பிறகு, ரோபஸ்பியர் பிரான்சின் வலிமைபெற்ற தலைவரானார். எதிரிகளே இல்லாத சூழ்நிலையில் திறமையான முறையான அரசாங்கத்தை ஏற்படுத்த முயற்சித்தார். ரோபஸ்பியர் உறுதியான எண்ணமுடையவர். கொள்கை வெறிகொண்டவர். இப்போது பாரிசு புரட்சிக் கம்யூனும், பொதுப் பாதுகாப்பு சபையும் இவர் கட்டுப்பாட்டின் கீழ்வந்தது. நாட்டில் அமைதி ஏற்பட்டாலும் தனது வல்லாட்சியைத் தொடர்ந்து நடத்த விரும்பினார். ரூசோவின் போதனைகளை ஏற்றுக்கொண்டு, அதனை செயல்படுத்த முயன்றார். பகுத்தறிவு வழிபாட்டிற்குப் பதிலாக ஒப்புயவர்வற்ற சக்தி வழிபாட்டை (Worship of Supreme being) புகுத்தினார். நேர்மையின் அடிப்படையில் புதிய சமுதாய அமை.பை நிறுவ நினைத்தார். ஆனால், இவரது சித்தாந்தங்கள் நடைமுறைக்கு ஏற்புடையதாக இல்லை. தம்மைப் பகைவர்கள் சூழ்ந்திருத்ததை உணர்ந்த ரோபஸ்பியர், தன்னை எதிர்த்தவர்களையெல்லாம் கொன்றார். கன்வென்சன் உறுப்பினர்களையும் கூட விட்டு வைக்கவில்லை. ஒருவிதச் சர்வாதிகாரத்தை ஏற்படுத்துவதற்கு வெளிப்படையாக முயற்சித்தார். இவரது கொடுமைகளைச் சகிக்க முடியாத எதிரிகள், சூழ்ச்சி செய்து, இவரைக் கைது செய்தனர். **1794** ஜூலை **28–**ல் விசாரணையின்றி ரோபஸ்பியர் படுகொலை செய்யப்பட்டார். ரோபஸ்பியரின் வீழ்ச்சியோடு பிரான்சில் பயங்கர ஆட்சியும் முடிவடைந்தது.

**பயங்கர ஆட்சியைப் பற்றிய மதிப்பீடு : 1793–**ஆம் ஆண்டு பிரான்ஸ் எதிர்நோக்கிய சிக்கலான பிரச்சனைகளைத் தீர்க்க ஒரு அவசரகால வல்லாட்சி தேவைப்பட்டது. இந்தப் பயங்கர ஆட்சியின் மூலம் புரட்சியாளர்களுக்குப் பல நன்மைகள் கிடைத்தன என்பது முற்றிலும் உண்மை.

முதலாவதாக, உள்நாட்டில் நிலவிய குழப்பங்களும், உறுதியற்ற நிலையும் மாற்றப்பட்டு அமைதி ஏற்படுத்தப்பட்டது. புரட்சி எதிாப்பு இயக்கம் அடக்கப்பட்டது.

இரண்டாவதாக, வெளிநாட்டவர் படையெடுப்பும், ஆக்கிரமிப்புச் செயலம் வெற்றிகரமாகச் சமாளிக்கப்பட்டு பிரான்சின் ஒற்றுமை நிலைநாட்டப்பட்டது.

**இ. விளைவுகள்**

- பிரான்சில் கொடுங்கோன்மை மிக்க பூர்போன் வம்ச மன்னராட்சி ஒழிந்தது.
- சமத்துவம், சுதந்திரம், சகோதரத்துவம் போன்ற கோட்பாடுகள் நடைமுறைக்கு வந்தன.
- மக்களின் இறைமை காக்கப்பட்டது.
- மனிதர்களின் உரிமைகள் காக்கப்பட் வழியேற்பட்டது.
- சமுதாய ஏற்றத் தாழ்வுகள், நிலமானிய முறை ஒழிந்தன.
- சட்டத்தன் முன் அனைவரும் சமம் என்ற நிலை எழுந்தது.
- தேசீய உணர்வு, நாட்டுப்பற்று ஆகியன பெருகி வளரலாயின.
- தனி மனித உரிமைகள் வரையறுக்கப்பட்டன.
- ரோமானிய திருச்சபைக் கருத்துக்கள் வலுப்பெற்றன.
- சமயச் சார்பற்ற தனிநபர் வளர்ச்சிக்குத் தகுந்த கல்வி முறை கொண்டு வரப்பட்டது.
- மனிதத் தன்மைக்கு மதிப்பளிக்கும் பல இலக்கியங்கள் தோன்றின.
- மக்கள் நலனுக்கான பொது நலச் சட்டங்கள் பல எழுந்தன.
- அடிமை முறை மறையலாயிற்று.
- தேசீய உணர்வுகள், சமதர்மக்கோட்பாடு முதலியன வளர்ந்தன.
- இப்புரட்சி பிரெஞ்சு சமுதாயத்திலும், ஐரோப்பிய நாடுகளிலும், ஏன் உலக நாடுகளிலேயும் பெரும் விழிப்புணர்வைத் தட்டி எழுப்பியது.

எனவேதான், பிரெஞ்சுப் புரட்சி அனைத்து உலகப் புரட்சிகளுக்கும் முன்னோடி எனவும், யுகப்புரட்சி எனவும் போற்றப்படுகிறது. ‘யாமறிந்த புரட்சிகளில், இப்புரட்சியைப் போல் எங்கும் காணோம்’ என்று அனைவரும் ஒப்புக் கொள்ளுகின்ற அளவிற்கு, அனைத்து உலகப் புரட்சிகளிலும் பிரெஞ்சுப் புரட்சி தலையாயப் புரட்சியாகத் திகழ்கிறது.

## நெப்போலியன்

### முன்னுரை:

18–ம் நூற்றாண்டில் உல்கம் உருவாக்கிய வீரர்களுள் மாபெரும் வீரர் நெப்போலியன். 1769 ஆகஸ்ட் 15–ல் இத்தாலிக்கு அருகில் உள்ள கார்சிகா என்ற தீவில் ஒரு சாதாரண குடும்பத்தில் கார்லே போனபார்ட் – லெட்டிஸியா ஆகியோருக்கு 2–வது மகனாகப் பிறந்தார்.

ரூஸோ இத்தீவை ஒருமுறை ‘‘இந்த சிறிய தீவு இந்த உலகத்தை அதிசயத்தில் ஆழ்த்தும்‘‘ என்ற வாக்கை மெய்ப்பிக்கப் பிறந்தவர்தான் இந்த நெப்போலியன். பிரைன் என்ற இராணுவப் பள்ளியில் நெப்போலியனைப் பார்த்து அவரின் வகுப்பாசிரியர், ‘‘இந்த இளம் உள்ளத்தல் ஒரு எரிமலை குமுரிக்கொண்டிருக்கிறது’’ என்று சொன்னார். அந்த எரிமலைதான் சரியாக தனது 20–வது வயதில் பிரான்ஸ் நாட்டின் படையில் சேர்ந்தபோது வெடித்து சிதறி ஐரோப்பா கண்டம் முழுவதையும் ஆட்டிப்படைத்தது. ஒரு போர் வீரனாக 1789–ல் படையில் சேர்ந்த நெப்போலியன், படிப்படியாக தன் திறமையால் உயர்ந்து, தனது 35–வது வயதில் பிரான்ஸ் நாட்டின் மன்னனாகவும், பின் ஐரோப்பாவின் பல நாடுகளை வென்று, பேரரசராகவும் பட்டம் சூட்டிக்கொண்டு, 1821–ல் புனித ஹெலினா தீவில் தன் இறுதி வாழ்வை முடித்துக்கொண்டார்.

### நெப்போலியனின் போர்கள வெற்றிகள்

உலக வரலாற்றில் புகழ்பெற்ற படைத்தலைவர்களுள் ஒருவர் நெப்போலியன். ஆலெக்சாண்டர், ஜுலியஸ் சீசரைப் போல ஆற்றல் மிகு போர்க்கள வெற்றிகளால் அழியாப் புகழ் பெற்றவர். வீரம், விவேகம், வீறார்ந்த தலைமை, துணிச்சல், தன்னம்பிக்கை, திடச்சித்தம் ஆகிய பண்புகள் அவரைத் தளபதிகளுக்கெல்லாம் தளபதியாக உயர்த்தியது. அவர் பதவி ஏற்ற நாளிலிருந்து பதவி இழந்த நாள் வரை பதினாறு போர்க்களங்களைச் சந்தித்துள்ளார். ஒவ்வொன்றும் அவரது ஒப்பற்ற போர்த்திறனுக்குச் சான்று பகர்கின்றன. அவரது படைகள், பெர்லின், ரோம், வியன்னா, மாட்ரிட், மாஸ்கோ போன்ற தலைநகர்களில் வெற்றிப் பவனி வந்தன. ஐரோப்பாக் கண்டத்தில் அவர் வெற்றி முத்திரை பதிக்காத நாடுகளே இல்லை. ஆப்பிரிக்காவிலும்

ஆசியாவிலும்கூட அவர் வீறுநடை போட்டார். தொலைதூரத்தில் உள்ள இந்தியா கூட அவரது படையெடுப்பு பற்றிய அச்ச உணர்வு கொண்டிருந்தது.

**<u>தொடக்கால வெற்றிகள்:</u>**

**1769** ஆகஸ்ட் **15–**ல் கார்சிகாவில் பிறந்த அவர், பிரைனி, பாரிஸ் ஆகிய இடங்களில் உள்ள இராணுவப் பள்ளிகளில் பயிற்சி பெற்றார். பதினாறு வயதிலேயே புரட்சி அரசில் பீரங்கிப்படைத் தளபதியானார். அவ்வரசு அவருக்கு இரு பொறுப்புகளை அளித்தது. முதலில் **1793–**ல் கலோன் நகரை பிரிட்டிஷ் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கும் பொறுப்பை அளித்தது. தமது பீரங்கிப்படைகளைச் சிறந்த முறையில் அமைத்து தாக்குதல் தொடுத்து ஒரே நாள் இரவில் அந்நகரை மீட்டார். அதன் காரணமாக **"பிரிகேடியர்''** என்ற பதவி உயர்வு பெற்றார்.

இரண்டாவதாக, **1795–**ல் அரசியலமைப்புப் பேரவைக்கு எதிராகத் திரண்ட பாரிஸ் கலகக் கும்பலைக் கலைக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. அப்போது குறைந்த அளவு வன்முறையைப் பயன்படுத்தி கலகக்காரர்களை விரட்டியடித்தார்.

**<u>முதல் இத்தாலி படையெடுப்பு (1796–97):</u>**

பிரெஞ்சுக் குடியரசுக்கு எதிராக ஒன்றுபட்ட முதல் கூட்டுறவு நாடுகளுள் பிரிட்டன், ஆஸ்திரியா, சார்டினியா ஆகிய நாடுகள் இன்னமும் போர் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தன. அவற்றுள் பின்னர் குறிப்பிட்ட இரு நாடுகளையும் தோற்கடிக்கும் பொறுப்பு நெப்போலியனிடம் ஒப்படைக்கப்பட்டது. இத்தாலியப் படையெடுப்பின் தலைமைத் தளபதியாக நியமிக்கப்பட்டார். இத்தாலியப் படையெடுப்பு அவரது படைமாண் நுண்திறத்தை நன்கு வெளிப்படுத்தியது.

முதல் ஆஸ்திரிய சாா்டீனியப் படைகளினூடே சென்று தாக்கி ஆஸ்திரியப் படைகளை கிழக்கே விரட்டினார். பின் சார்டீனியர்களைத் தோற்கடித்து சவாய், நீஸ் என்ற இடங்களைப் பெற்றார்.

பின் ஆஸ்திரியர்கள் மீது தாக்குதல் தொடுத்தார். லோடி என்ற பாலத்தை துணிகரமாகக் கடந்து மாண்டுவா கோட்டையை முற்றுகையிட்டார். அவரது துரித பயணங்கள் எதிரிகளைத் திகைப்படையச் செய்தன. அர்க்கோலா, ரிவோலி ஆகிய

இடங்களில் ஆஸ்திரியர்களைத் தோற்கடித்தார். தொடர்ந்து பிளாரன்ஸ், நேப்பின்ஸ் நாடுகள் பணிந்தன. போப்பும் அமைதி உடன்படிக்கை செய்து கொள்ள முன்வந்தார்.

**காம்போ ஃபோமியோ உடன்படிக்கை (1797):**

தொடர்ந்து முன்னேறிய பிரெஞ்சுப்படை வியன்னாவிற்கு 100 மைல் அருகில் உள்ள **லியோபென்** என்ற இடத்தை அடைந்தது. உடனே ஆதிரியா அமைதிப் பேச்சுவார்த்தையைத் தொடங்க விரும்பியது. அதன் பயனாக 1797–ல் **காம்போ ஃபோர்மியோ** என்ற உடன்படிக்கை கையெழுத்தானது. அதன்படி,

1) பிரான்சு, ஆஸ்திரிய நெதர்லாந்தைப் (பெல்ஜியம்) பெற்றது.
2) ஆயோனியன் தீவுகளும் பிரான்சின் ஆதிக்கத்தின் கீழ் வந்தன.
3) பிரான்சின் கிழக்கு எல்லையாக ரைன் நதி ஏற்றுக்கொள்ளப்பட்டது.
4) வட இத்தாலியில் சிஸால்பைன், லிக்குரியன் குடியரசுகள் உருவாக்கப்பட்டன.

**எகிப்தியப் படையெடுப்பு (1799):**

தனித்து விடப்பட்ட இங்கிலாந்தைப் பணியவைக்கும் பொறுப்பை, இயக்குநர் அவை, நெப்போலியனிடமே ஒப்படைத்தது. **‘இங்கிலீஷ் கால்வாய்’** என்ற இயற்கை அகழியால் பாதுகாக்கப்பட்டிருந்த இங்கிலாந்து நாட்டின் கடற்படை வலிமையை நன்கு அறிந்திருந்த நெப்போலியன் அதனை நேரடியாகத் தாக்கி வெல்வது அரிது என்று அறிந்தார். ஆனால், உலகளாவிய பேரரசையும், வாணிப ஆதிக்கத்தையும் கொண்ட இங்கிலாந்தைப் பணியவைக்க வேறொரு அரிய திட்டத்தைத் தயாரித்தார். அதன்படி முதலில் எகிப்தைத் தாக்கிக் கைப்பற்றிக் கொள்ளவேண்டும் எனத் திட்டமிட்டார்.

டூலோனிலிருந்து பெருங்கப்பற்படையுடன் எகிப்து நோக்கி புறப்பட்ட நெப்போலியன் வழியில் மால்டாத் தீவைக் கைப்பற்றினார். அதன்பின் எகிப்தில் உள்ள அலெக்சாண்டிரியாத் துறைமுகம் கைப்பற்றப்பட்டது. அங்கிருந்து கெய்ரோ நோக்கிப் புறப்பட்ட பிரெஞ்சுப்படை பிரமிட் போர்க்களத்தில் எகிப்தியப் படைகளைத் தோற்கடித்தது. அதன்மூலம் அங்கு ஆதிக்கம் செலுத்திய மம்லுக் சுல்தான்களின் ஆட்சி ஒழிக்கப்பட்டது.

**நைல்நதிப் போர் (1799):**

இதற்கிடையில் ஆங்கில கடற்படைத் தளபதி நெல்சன் நைல்நதி முகத்துவாரத்திற்கருகில் உள்ள **அபௌகீர்** என்ற இடத்தில் தங்கியிருந்த பிரெஞ்சுக் கப்பற் படையைத் தாக்கி அழித்தார். நெல்சனின் இந்த மாபெரும் வெற்றி, நெப்போலியனின் படையெடுப்பு நோக்கத்தைப் பாழடித்துவிட்டது. நெப்போலியன் பிரான்சோடு தொடர்புகொள்வது துண்டிக்கப்பட்டது. நெப்போலியனும் அவரது படைகளும் தாய்நாடு திரும்ப இயலாதவாறு எகிப்தில் தவிக்க நேரிட்டது. இவ்வமயம் துருக்கியும் நெப்போலியன்மீது போர் தொடுத்தது.

இந்த இக்கட்டான சூழநிலையிலும் நெப்போலியன் சிரியா மீது படையெடுத்தார். வழியில் உள்ள ஏக்கர் கோட்டையை முற்றுகையிட்டார். கொடிய பாலைவன வெயிலும், கொள்ளை நோயும், பிரெஞ்சுப் படைவீரர்களைப் பலி கொண்டன. வேறு வழியின்றி, நெப்போலியன் எகிப்து திரும்பினார். அங்கிருந்து சில வீரர்களுடன் இரகசியமாகப் புறப்பட்டு பிரான்ஸ் வந்தடைந்தார்.

**புருமேயர் மாதத்து எட்டாம் நாள் புரட்சி:**

இந்த இக்கட்டான சூழ்நிலையிலிருந்து பிரான்சை மீட்க ஒரே வழி கையாலாகாத இயக்குநர் குழுவை ஒழிப்பதே என்ற முடிவிற்கு நெப்போலியன் வந்தார். எனவே, அவர் படைவலு கொண்டு இயக்குநர் குழு ஆட்சியை ஒரு முடிவிற்கு கொண்டு வந்தார். இந்த இரத்தம சிந்தாப் புரட்சி புதிய காலண்டர்படி புருமேயர் மாதத்தில் எட்டாம் நாள் நடைபெற்றது.

**முதல் கான்சல் ஆக நெப்போலியன் (1799 – 1804):**

அதன்பின் புதிய அரசியலமைப்பு வகுக்கப்பட்டது. அதன்படி நாட்டின் தலைமை நிர்வாகம் மூவர் கொண்ட ''கான்சுலேட்'' என்ற குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது. அதில் நெப்போலியன் முதல் கான்சல் ஆக நியமனம் பெற்றார்.

## நெப்போலியனின் இரண்டாவது இத்தாலியப் படையெடுப்பு (1800 – 1801):

இரண்டாவது கூட்டிணைவின் முதுகெலும்பாக விளங்கிய ஆஸ்திரியாவைத் தண்டிக்கும் பொருட்டு இரண்டாவது இத்தாலியப் படையெடுப்பை மேற்கொண்டார். ஆல்ப்ஸ் மலையை மிக விரைவாகத் தாண்டி வந்து எதிர்பாரா வகையில் ஆஸ்திரியப் படைகளை மாரங்கோ என்ற இடத்தில் தாக்கித் தோற்கடித்து பெரும் வெற்றி பெற்றார். இவ்வெற்றியின் பயனாக ஆஸ்திரியா மட்டுமின்றி ரஷியாவும் கூட்டிலிருந்து விலகியது.

## அமீன்ஸ் சமாதான ஒப்பந்தம் (1802):

இடைவிடாத போரினால் களைப்புற்ற பிரான்சும் இங்கிலாந்தும் அமைதியை நாடின. அதன் பயனாக அமீன்ஸ் என்ற இடத்தில் அமைதி உடன்பாடு கையெழுத்தாயிற்று. அதன்படி,

1) பிரிட்டன், தான் கைப்பற்றிய இடங்களில் சிலோன் டிரினிடாட் நீங்கலாகப் பிற இடங்களிலிருந்து மூன்று மாதங்களுக்குள் வெளியே சம்மதித்தது.
2) மால்டா அதன் முந்தைய ஆட்சியாளர்களிடம் மீண்டும் ஒப்படைக்கப்படவேண்டும்.
3) பிரான்ஸ், போப்பின் நாடுகளிலிருந்தும், நேப்பிள்சு, சிசிலியிலிருந்தும் வெளியேற வேண்டும்.

இவ்வொப்பந்தம் நெப்போலியனுக்கு போர் அரங்கிலிருந்து நிர்வாக அரங்கிற்குத் திரும்ப வாய்ப்பளித்தது. இக்காலக்கட்டத்தில்தான் நெப்போலியன் உள்நாட்டுச் சீர்திருத்தங்களை நிறைவேற்றி நிர்வாகத் திறனை வெளிப்படுத்தினார்.

## பேரரசர் நெப்போலியன்:

போர்க்கள வெற்றிகளாலும் நிர்வாகத்திறன் மிகு இராஜதந்திர நடவடிக்கை மற்றும் சீர்திருத்தங்களினாலும், நெப்போலியனின் செல்வாக்கு கொடிகட்டிப் பறந்தது. எனவே, 1802–ல் அவர் ஆயுள்கால கான்சலாக ஆக்கப்பட்டார். அவரது வாரிசை நிர்ணயிக்கும் உரிமையும் அவருக்களிக்கப்பட்டது. 1804, செனட் சபையானது அவரைப் பேரரசராக்க விருப்பம் தெரிவித்தது. ஐந்து மில்லியனுக்கு மேற்பட்ட மக்கள் தங்கள் வாக்குகள் மூலம் இதனை அங்கீகரித்தனர். எதிர்த்து இரண்டாயிரம் வாக்குகளே விழுந்தன.

எனவே, **1804–ல்** நெப்போலியன் பேரரசர் என முடிசூட்டிக் கொண்டார். போப் ஏழாம் பயஸ் இந்த முடிசூட்டு விழாச் சடங்குகளை நிகழ்த்தி வைத்தார். **“பிரெஞ்சு மணிமுடி மண்ணில் கிடந்தது ; என் வாளினால் அதனை எடுத்துக்கொண்டேன்’’** என நெப்போலியன் கூறினார்.

**டிரபால்கர் போர் (1805):**

அமீன்ஸ் உடன்படிக்கை நிபந்தனைகள் நிறைவேற்றுவதில் இருதரப்பினரும் ஆர்வம் காட்டவில்லை. **1803–ல்** மீண்டும் இருநாடுகளுக்கிடையில் போர் மூண்டது. பின் பிரிட்டன்மீது படையெடுக்க ஐந்து இலட்சம் வீரர்களைக் கொண்ட மாபெரும் படையொன்றைத் தயாரித்தார். அவ்வீரர்களை இங்கிலாந்தில் இறக்குவதற்கு ஏராளமான படகுகளையும் கட்ட ஏற்பாடு செய்தார். படகுகள் படைவீரர்களை இறக்கும்போது அவற்றிற்கு பாதுகாப்பளிக்க பெரும் போர்க் கப்பல்களையும் கட்டினார். இந்த விரிவான போர் ஏற்பாடுகளைக் கண்ட ஆங்கிலேயர் அதிர்ச்சியடைந்தனர். புகழ் பெற்ற **“ஆர்மேடா’’** படையெடுப்பிற்குப்பின் இங்கிலாந்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. பிரெஞ்சுக் கப்பற்படை நெல்சனை மேற்கு இந்தியத் தீவுகளுக்குப் போக்குகாட்டிவிட்டு, இங்கிலாந்துப் படையெடுப்பை மேற்கொள்ளத் திட்டமிட்டது. ஆனால், நெல்சன் விரைவில் திரும்பிவிட்டதால் பிரெஞ்சுக்காரர் எண்ணம் நிறைவேறவில்லை. தொடர்ந்து நெல்சன் பிரெஞ்சு கப்பற்படை எங்கிருக்கின்றது எனத் தேடித்திரிந்தபோது அவை ஸ்பெயினின் தென்கோடிப் பகுதியில் உள்ள **டிரபால்கர்** என்ற இடத்தில் இருப்பதை அறிந்தார். உடனே நெல்சன் அதனைத் தாக்கி முற்றிலும் அழித்துவிட்டார். அப்பணியில் அவர் உயிரிழந்தாலும், பிரெஞ்சு கப்பற்படையை முற்றிலும் முடமாக்குவதில் வெற்றி பெற்றார். டிரபால்கர் அழிவிற்குப் பின் பிரெஞ்சுக் கப்பற் படை மீண்டும் தலைதூக்கவே இல்லை.

**மூன்றாவது கூட்டிணைவு:**

டிரபால்கர் தோல்வி நெப்போலியனின் எதிரிகளுக்கு சற்று தெம்பூட்டியது. பிரிட்டிஷ் பிரதமர் இளைய பிட் பிரான்சிற்கு எதிராக மூன்றாவது கூட்டிணைவை உருவாக்குவதில் வெற்றி பெற்றார். அதில் பிரிட்டன், ஆஸ்திரியா, ரஷியா ஆகிய

நாடுகள் சேர்ந்தன. பின்னர், பிரஷியாவும் சேர்ந்தது. பிட் தம் ஐரோப்பியக் கூட்டாளிகளுக்கு படைக்கலன்களும் பணமும் கொடுத்து உற்சாகப்படுத்தினார்.

**மூன்றாவது கூட்டிணைவு நாடுகளுடன் போர் (1805–1807):**

நெப்போலியன் பிரான்சின் வடகரையோரப் பகுதிகளில் நிறுத்தி வைத்திருந்த தன் மாபெரும் படைகளை மிக விரைவாக தென் ஜெர்மனிக்கு நடத்தி வந்தார். அவரது விரைவு எதிரிகளைத் திணறடித்தது. ஆஸ்திரியப் படைகளை **உல்ம்** என்ற இடத்தில் தோற்கடித்து பெரும் பெற்றி பெற்றார். அங்கு 60,000 ஆஸ்திரிய வீரர்களும் 120 பீரங்கிகளும் கைப்பற்றப்பட்டன.

தொடர்ந்து முன்னேறிய பிரெஞ்சுப் படைகளை ஆஸ்திரியப் படைகளும் ரஷியப் படைகளும் ஆஸ்டர்லிட்ஸ் என்ற இடத்தில் தடுத்து நிறுத்தினர். அங்கு நடைபெற்ற கடும் போரில் பிரெஞ்சுப் படைகள் மாபெரும் வெற்றி பெற்றன. இவ்வெற்றி மூன்றாவது கூட்டிணைவின் காரண கர்த்தாவிற்கு (இளையபிட்) பயங்கர அதிர்ச்சியை அளித்தது.

**“ஐரோப்பிய தேசப் படத்தைச் சுருட்டி வையுங்கள், இன்னும் பத்தாண்டுகளுக்கு அது தேவைப்படாது**’’ என்று கூறிச் சாய்ந்தார். அதன்பின் அவர் எழுந்திருக்கவேயில்லை. ஆஸ்திரியர்கள் பிரஸ்பர்க் என்ற இடத்தில் ஒரு இழிவான உடன்படிக்கையில் கையெழுத்திட நேர்ந்தது; அதன்மூலம் வெனிஷியா உட்பட அனைத்து இத்தாலிய மாநிலங்களையும் தாரை வார்த்தது.

இச்சமயத்தில் நெப்போலியன் ஜெர்மனியில் செய்த சில அரசியல் ஏற்பாடுகள் பிரஷியாவிற்கு பிடிக்காததால், அந்நாடு போரிலிறங்கியது. பிரெஞ்சுப் படைகள் பெர்லினை நோக்கி முன்னேறி ஜினா என்ற இடத்தில் பிரஷியப் படைகளைப் படுதோல்வியுறச் செய்தன. 1807–ல் பெர்லின் நகரினுள் நெப்போலியன் வெற்றிப் பவனி வந்தார்.

**டில்சிட் உடன்படிக்கை (1807)**

தொடர்ந்து முன்னேறிய பிரெஞ்சுப்படை ரஷியப்படைகளை ஃபிரிட்லாந்து என்ற இடத்தில் தோற்கடித்தது. அதனைத் தொடர்ந்து ரஷிய ஸார் முதலாம் அலெக்சாண்டர்

நெப்போலியனுடன் டில்சிட் என்ற இடத்தில் அமைதி உடன்படிக்கை செய்து கொண்டார். அதன்படி ஸார் பிரிட்டிஷ் பொருட்களை விலக்கவும் பிரிட்டனுக்கு எதிராக பிரான்சுக்கு ஆதரவளிக்கவும் சம்மதித்தார். பிரஷியா மீது கடுமையான நிபந்தனைகள் விதிக்கப்பட்டன.

டில்சிட் உடன்படிக்கை நெப்போலியன் புகழின் உச்சக்கட்டத்தைச் சுட்டிக்காட்டுகிறது. இப்போது ஐரோப்பாக் கண்டத்தில் நெப்போலியனை எதிர்ப்பவர் இல்லை. பிரஷியா சிதைக்கப்பட்டது. ஆஸ்திரியா பணியவைக்கப்பட்டது. ரஷியா நட்பு நாடாக்கப்பட்டது. மூன்றாவது கூட்டிணைவு தானாக மடிந்தது.

ஐரோப்பிய தேசப்படம் நெப்போலியன் விருப்பப்படி மாற்றி அமைக்கப்பட்டது. பழைய எல்லைகள் மறைந்தன; புதிய நாடுகளும் அரசுகளும் உருவாக்கப்பட்டன. ஐரோப்பியச் சிற்றரசுகள் போனபார்ட் குடும்பச் சொத்தாக்கப்பட்டன. ஜெர்மனியில் புனித ரோமானியப் பேரரசு ஒழிக்கப்பட்டது. ஜெர்மன் சிற்றரசுகள் **39** அரசுகளாக சுருக்கப்பட்டு அவை **“ரைன் கூட்டமைப்பு’’** என்ற ஏற்பாட்டில் ஒருங்கிணைக்கப்பட்டன. நெப்போலியன் அதன் தலைவரானார்.

**உள்நாட்டுச் சீர்திருத்தங்கள்:**

‘‘நெப்போலியனின் வெற்றிகள் நிலையற்றவை. உள்நாட்டுச் சீர்திருத்தங்கள் கருங்கற்பாறையின்மேல் கட்டப்பட்டவை’’ (If the conquests of Napoleon were ephemeral his civilian work was built upon granite – A.A.L.Fisher) என்று கூறப்படுவதுண்டு. இதில் பெரியதொரு வரலாற்று உண்மை அடங்கியிருக்கிறது.

நெப்போலியன் என்றாலே ஒரு மாபெரும் போர்வீரர். படைத்தளபதி என்பதுதான் நினைவுக்கு வரும். ஏனென்றால் அவரது போர்க்கள வெற்றிகள் அவ்வாறு பிரமிப்படையச் செய்கின்றன.

அவரது முதல் இத்தாலியப் படையெடுப்பு இரண்டாம் பியூனிக் போரின் இணையற்ற தளபதி ஹனிபாலின் சாதனைகளை நினைவூட்டுகிறது. இத்தாலியின்

ஆஸ்திரிய ஆதிக்கதிற்கு முடிவு கட்டி காம்போபோர்மியோ ஒப்பந்தம் செய்து திரும்பினார்.

அவரது **எகிப்தியப் படையெடுப்பு** மகா அலெக்சாண்டரின் வீரசாகசத்தை நினைவூட்டுகிறது.

இரண்டாம் **இத்தாலியப் படையெடுப்பின் மொராங்கோ வெற்றி** மால்பரோ கோமகனின் பிளென்ஹூம் போர்க்கள வெற்றியை நினைவூட்டுகிது.

**மூன்றாம் கூட்டிணைவு நாடுகளின் மீது பெற்ற வெற்றிகள்** பிரமாதமானவை. அவரது ஆஸ்டர்லிட்ஸ் வெற்றி, மூன்றாம் கூட்டிணைவின் காரணகர்த்தா இளைய பிட்டிற்கு மரண அதிர்ச்சியை அளித்தது. **ஜெனாவில்** பிரஷியர்களைத் தோற்கடித்துப் பெற்ற பெரு வெற்றி மகா பிரடரிக் **ராஸ்பேக்** போர்க்களத்தில் பிரெஞ்சுக்காரர்களைத் தோற்கடித்து பெற்ற வெற்றியின் பெருமையை மங்கச் செய்துவிடுகிறது. பொரோடினோ வெற்றியும் மாஸ்கோ வெற்றியும் புகழ்மிக்கவைதான்.

**நெப்போலியன் போர்க்களத்தில் இறங்கிவிட்டால் நாற்பதினாயிரம் போர்வீரர்கள் தோன்றிவிட்டார்கள் என்று அர்த்தம்** என ஆர்தர் வெல்லஸ்லி அவரது பேராற்றலுக்கு சான்று பகர்கின்றார். ஸ்வீடன் மன்னர், பெர்னடாட் **“நெப்போலியனைக் கண்டால் பின்வாங்குங்கள், அவரது தளபதிகளைக் கண்டால் முன்னேறி தாக்குங்கள்’’** என்று கூறியுள்ளதும் நினைவு கூறத்தக்கது.

இத்தகைய வெற்றிகளால் ஐரோப்பாவில் பிரெஞ்சு எல்லைகளை ரைன்நதி வரை விஸ்தரிதிதார். ஆஸ்திரிய நெதர்லாந்தை இணைத்தார். போலந்து நாட்டை வார்சா கோமகன் நாடு என்ற பெயரின் மீண்டும் உருவாக்கினார். வெஸ்ட்ஃபேலியா என்ற நாட்டை உருவாக்கினார். இத்தாலியில் ஆஸ்திரிய செல்வாக்கை ஒழித்தார். ஜெர்மனியில் ரைன் கூட்டமைப்பை உருவாக்கினார். தன் சகோதரர்களை பல்வேறு நாடுகளின் மன்னர்களாக நியமித்தார்.

ஆனால், ‘புகழ் பெற்ற போர்க்கள வெற்றிகளின் பயனாக உருவாக்கிய அரசியல் ஏற்பாடுகிள் அனைத்தும் **1815–**க்குப் பின் சுவடு தெரியாமல் மறைந்து போயின.

பிரெஞ்சு எல்லைகள், மீண்டும் சுருக்கப்பட்டன. போலந்தை ரஷியா விழுங்கிய போது இத்தாலியில் ஆஸ்திரிய ஆதிக்கம் மீண்டும் நிலைநாட்டப்பட்டுவிட்டது. எனவே, போர்க்கள வெற்றிகள் தோன்றி மறைந்துவிட்டன.

அதே சமயத்தில் அவர் இயற்றிய உள்நாட்டு சீர்திருத்தங்கள் உடனே அழிந்துவிடவில்லை. நின்று, நீடித்து நிலைத்த பயனை அளித்தன.

## <u>உள்நாட்டுச் சீர்திருத்தங்கள்:</u>

<u>முன்னுரை</u>

**1) தல ஆட்சியை ஒருங்கமைத்தல்: 1800–**ல் அனைத்து தல ஆட்சி நிறுவனங்களையும் தனது நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தார்.

டிபார்ட்மென்ட் மற்றும் அரோன்டைஸ்மென்ட் எனப்பட்ட உள்ளாட்சி பிரிவுகளின் அதிகாரங்கள் பிரிபெக்ட் (prefect) சப்பிரிபெக்ட் என்ற அரசு அலுவலர்களிடம் ஒப்படைக்கப்பட்டன. அவர்கள் மைய அரசினால் நியமிக்கப்பட்டனர். அங்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இருந்தாலும் அவர்கள் ஆண்டிற்கு 15 நாட்கள் மட்டும் கூட்டம் கூடி வரிவிதிப்பை நிர்ணயிக்கவேண்டும். ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட கம்யூன்களின் தலைவரான மேயரை பிரிபெக்டுகள் நியமித்தனர்.

பாரிஸ் போன்ற பெரிய நகரங்களின் காவல் அதிகாரிகளையும் அரசே நியமித்தது. இதன் மூலம் உள்ளாட்சி நிறுவனங்களில் ஒரே மாதிரியான திறமையான நிர்வாகம் நடைபெற ஏதுவானது.

**2) நிதிச் சீர்திருத்தங்கள்:** புரட்சி காலத்தில் வெளியிடப்பட்ட அசிக்னாட்ஸ் எனப்பட்ட காகித நாணயப் புழக்கத்தை நிறுத்தினார். பிரான்சில நிதிநிலையை ஒழுங்குபடுத்த “**கடன் கழிவு நிதி**’’ (sinking fund) ஒன்றை ஏற்படுத்தி தேசியக் கடனை படிப்படியாகக் குறைக்க வகை செய்தார். அரசிற்கு வரி செலுத்துதல் பொது மக்களின் முதன்மையான கடமை என்பதை தொடக்கப்பள்ளி கல்வியின் போதே வலியுறுத்தப்பட்டது. எனவே, வரி பாக்கிகள் இல்லாமல் வசூல் செய்யப்பட்டன. மது, புகையிலை, உப்பு மீது மறைமுக வரிகள் விதிக்கப்பட்டன. அரசுச் செலவுகளில்

சிக்கனம் கடைபிடிக்கப்பட்டது. கணக்குகள் தணிக்கைகுள்ளாக்கப்பட்டன. தோல்வியுற்ற நாடுகளிடமிருந்து வசூலிக்கப்பட்ட போர் இழப்பீட்டுத் தொகைகளை ஒரு தனி நிதியாகச் சேமித்து வைத்து போர்ச் செலவுகளுக்கு பயன்படுத்தப்பட்டு வந்தது. இதனால் நெப்போலியனின் ஓயாத போர்கள் நாட்டின் நிதி நிலையைப் பாதிக்கவில்லை.

**3) தப்பியோடிய பிரபுக்களுடன் சமரசம் :** புரட்சிக் காலத்தில் புரட்சி அரசின் தண்டனைகளுக்கு அஞ்சி நாட்டை விட்டோடிய பிரபுக்களின் சொத்துக்கள் மீண்டும் அவர்களுக்களிக்கப்பட்டது. அரசுப்பதவிகளிலும் அவர்கள் அமர்த்தப்பட்டனர்.

**4) போப்புடன் ஒப்பந்தம்:** புரட்சிக் காலத்தில் கத்தோலிக்க திருச்சபை பெரும் நெருக்கடிக்குள்ளாக்கப்பட்டது. எனினும், மக்கள் இன்னமும் கத்தோலிக்க சமயத்தையே ஆர்வத்துடன் பின்பற்றினர். ‘‘மக்களுக்கு ஒரு சமயம் வேண்டும்; அச்சமயம் அரசுக் கட்டுப்பாட்டினுள் இருக்க வேண்டும்’’ என்ற கருத்தினைக் கொண்ட நெப்போலியன் 1802–ல் சமயம் சம்பந்தமாகப் போப் ஏழம் பயசுடன் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டார். அதன் முக்கிய அம்சங்கள் :

i. புரட்சியின் போது திருச்சபையின் சொத்துக்கள் அரசினால் பறிமுதல் செய்யப்பட்டதையும், மடாலயங்கள் அழிக்கப்பட்டதையும் போப் ஒப்புக்கொண்டார்.
ii. 1794–லிருந்து நிறுத்தி வைக்கப்பட்ட சம்பளப் பாக்கியை குருக்களுக்கு வழங்க நெப்போலியன் இணங்கினார். தொடர்ந்து அரசே திருச்சபை அதிகாரிகளுக்கு சம்பளம் வழங்கும்.
iii. நெப்போலியனால் தேர்ந்தெடுக்கப்படுபவர்களை போப், பிஷப்புகளாக நிமிக்க வேண்டும். பிரான்சில், 10 ஆர்ச் பிஷப்புகளும் 50 பிஷப்புகளும் நியமிக்கப்பட்டனர்.
iv. குருக்களை பிஷப்புகளே நியமிப்பர்
v. ஆலயங்கள் திறக்கப்பட்டு புரட்சிக்கு முன்பிருந்ததைப் போல வழிபாடு நடைபெற வகை செய்யப்பட்டது. போப்புடன் செய்து கொண்ட இந்த ஒப்பந்தம் நூறு ஆண்டுகளுக்கு மேலாக கடைப்பிடிக்கப்பட்டு வந்தது.

**5) கல்வி** :நாட்டுப் பண்பையும் பற்றையும் ஊட்டி வளர்ப்பதில் கல்வியின் பங்கை நன்கு உணர்ந்த நெப்போலியன் பல சீர்திருத்தங்களைச் செய்தார். அக்கல்விச் சீர்திருத்தங்களின் நோக்கம் :

**i)** கிறிஸ்துவ சமய ஒழுக்க நெறிகளைப் போதிப்பது.

ii) அரசுக்கு விசுவாசமாக இருந்து உரிய கடமைகளை நிறைவேற்றுவது.

iii) அரசின் சட்ட ஒழுங்குகளுக்கு கீழ்ப்படிவது.

அ) ஒவ்வொரு கம்யூனிலும் பிரிபெக்ட் அல்லது சப்–பிரிபெக்ட் கண்காணிப்பின்கீழ் ஆரம்பப்பள்ளி தொடங்க வேண்டும்.

ஆ) உயர்நிலைப் பள்ளிகள், இலக்கணப் பள்ளிகள், தொழிற்கூடங்கள், இராணுவப் பள்ளிகள் ஆகியவை நாட்டின் பல்வேறு பகுதிகளில் அரசினால் தொடங்கப்பட்டன. ஒவ்வொரு நகரிலும் ஒரு உயர்நிலைப்பள்ளி இருக்கவேண்டும்.

இ) பாரீசில் பல்கலைக்கழகம் நிறுவப்பட்டது. சமயத் தத்துவம், சட்டம், மருத்துவம், இலக்கியம், அறிவியல் போன்ற பாடங்கள் கற்றுக் கொடுக்கப்பட்டன. நாட்டின் கல்வி முறையை ஒரு சீராக அமைத்து, கண்காணிக்கும் பொறுப்பும் அதற்களிக்கப்பட்டது.

**6) சட்டத் தொகுப்பு :** நாட்டின் சட்டங்களைத் தொகுத்தமைக்கும் பணி தேசியப் பேரவை காலத்தில் தொடங்கப்பட்டாலும் அதன் பணி நெப்போலியன் காலத்தில்தான் பெரும்பாலும் நடைபெற்றது. ஆவர் சட்டத் தொகுப்பில் தனிக்கவனம் செலுத்தி அதற்கென அமைக்கப்பட்ட குழுக்களில் தனது கருத்துக்களை வெளியிட்டு வந்தார். அதன் பயனாக,

i) சிவில், கிரிமினல், வர்த்தக சட்டங்கள் யாவும் தொகுக்கப்பட்டன.

ii) அதன் மூலம் நாடெங்கும் ஒரே மாதிரியான சட்டங்கள் நடைமுறையிலிருக்கும் வாய்ப்பு ஏற்பட்டது.

இச்சட்டங்கள் யாவும் புரட்சிக் கருத்துக்களான, தனி மனித உரிமை, சமத்துவ உரிமை, சமயப் பொறை, சம வாய்ப்பு ஆகியவற்றை உட்கொண்டிருந்தன. இச்சட்டங்கள் பிரான்சில் மட்டுமல்லாது ஐரோப்பாவின் பல்வேறு நாடுகளிலும் பின்பற்றப்பட்டன. வரலாற்றாசிரியர் ஒருவர் குறிப்பிட்டதுபோல இந்த சட்டத் தொகுப்புகள் பிரான்சின் புகழை ஐரோப்பவெங்கும் பரப்பின. புரட்சித் தத்துவங்கள் நடைமுறைக்குகந்ததாக

அதன் மூலம் மாற்றப்பட்டுவிட்டன. உரிமைகள் ஒழுங்கினோடு இணைக்கப்பட்டு விட்டன. ஜஸ்டினியன் காலத்திற்குப்பின் வேறு எந்த சட்டத் தொகுப்பும் ஐரோப்பாவில் இந்த அளவிற்கு பின்பற்றப்பட்டதில்லை.

இச்சட்டத் தொகுப்பின் நிலைத்த பயன் பற்றி நெப்போலியனே பின்வருமாறு கூறியுள்ளார். **“என்னுடைய பெருமைக்கு உண்மையான காரணம் நான் வென்ற நாற்பது போர்கள் அல்ல. ஏனெனில் வாட்டர்லு தோல்வி அந்த எல்லா வெற்றிகளின் நினைவையும் அழித்துவிடும். ஆனால், எனது சட்டத்தொகுப்பு அழிக்க முடியாத என்றும் நிலைத்திருக்கக்கூடியதொன்றாகும்’’.**

**பொதுப் பணிகள் :**

மக்கள் நலனில் அக்கறை கொண்ட நெப்போலியன், நெடுஞ்சாலைகள், கால்வாய்கள், பாலங்கள் போன்ற போக்குவரவு சாதனங்கள் பலவற்றை அமைத்தார். இருநூற்றுமுப்பதுக்கும் மேற்பட்ட சாலைகள் இவர் காலத்தில் அமைக்கப்பட்டன. துறைமுக வசதிகள் விரிவுபடுத்தப்பட்டன. சதுப்பு நிலங்கள் வேளாண்மைக்கு ஏற்றதாக்கப்பட்டன. அரசிற்கு சொந்தமான மாளிகைகள் புதுப்பிக்கப்பட்டன. பூங்காக்கள், மண்டபங்கள், செயற்கை ஊற்றுகள் அமைக்கப்பட்டன. வெற்றி கொள்ளப்பட்ட நாடுகளிலிருந்து கவர்ந்து கொண்டு வந்த கலைச் செல்வங்களைக் காப்பதற்கு அருங்காட்சியகம் ஒன்று நிறுவப்பட்டது.

**புதிய விருதுகள் Legion of Honour** என்ற புதிய அமைப்பை ஏற்படுத்தி நாட்டின் பல்வேறு துறைகளில் சிறப்பாகப் பணியாற்றியவர்களுக்கு எந்தவித வேறுபாடுமின்றி விருதுகள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது. இது குறிப்பிட்ட துறைகளில் அரிய சாதனை நிகழ்த்தியவர்களைப் பாராட்டுவதாக அமைந்ததோடு உக்கமளிப்பதாயுமிருந்தது.

**திறனாய்வு :**

நெப்போலியன் பதவி ஏற்ற நேரம் சுதந்திரம் என்பதன் பெயரால் அராஜகமும் உழலும் நிரம்பிய காலமாயிருந்தது. எனவே, அவர் **“மக்களுக்கு இப்போது தேவை சுதந்திரமன்று ; சுமத்துவமே’’** என்று அறிவித்தார். அதனால்தான் அதிகாரங்களை எல்லாம் ஒருமுகப்படுத்தி தனது கரங்களிலே குவித்துக்கொண்டார். கட்டுப்பாட்டையும் ஒழுங்கையும் வளர்க்கக் கல்வியை ஒரு கருவியாகக் கொண்டார். உள்ளாட்சி

நிறுவனங்களின் தோர்தலுக்குப் பதில் நியமனங்களையே புகுத்தினார். செய்தித்தாட்களைக்கூட கடுமையான தணிக்கைக்குள்ளாக்கினார். இவ்வாறு புரட்சியின் உயிரோட்டமாக விளங்கிய ‘‘சுதந்திரத்தை’’ கைவிட்டுவிட்டார். அதற்கு ஈடாக நிர்வாகத்தில் திறமையையும், பொதுவாழ்வில் நேர்மையையும், சமூகத்தில் கட்டுப்பாட்டையும் நிலைநாட்டினார். அதனால்தான் அவரது சீர்திருத்தங்கள் நீண்டகாலத்திற்கு பலனளித்தன.

**கண்டத் திட்டக் கொள்கை**

பிரான்சுக்கு எதிராக பிரிட்டன் உருவாக்கிய மூன்றாவது கூட்டிணைவை நொறுக்குவதில் நெப்போலியன் வெற்றி பெற்றார். ஆஸ்திரியாவை உல்ம் போர்க்களத்திலும் பிரஷ்யாவை ஜெனாவிலும் ரஷியாவை பிரிட்லாந்திலும் தோற்கடித்து ஐரோப்பாக்கண்டத்தில் தனக்கு எதிரிகள் இல்லை என்ற நிலையை உருவாக்கினார். 1807–ல் ரஷியாவுடன் செய்து கொண்ட டில்சிட் உடன்படிக்கை அவரது புகழின் உச்சகட்டமாகக் கருதப்படுகிறது. எனிலும், நெப்போலியனின் நெஞ்சில் ஓர் முள் உறுத்திக்கொண்டேயிருந்தது. பிரிட்டனை அடிபணிய வைக்க முடியவில்லையே என்ற இயலாமைதான் ஆதிக்க ஆணவத்தை முள்ளாகக் குத்திக் கொண்டிருந்தது.

புவியியல் ரீதியில் பிரிட்டன் ஒரு மிகப்பெரிய சாதகமான நிலையைப் பெற்றிருந்தது. ஐரோப்பாக் கண்ட பாகத்திலிருந்து இங்கிலீஷ் கால்வாய் என்ற குறுகிய நீர்ப்பரப்பால் பிரிக்கப்பட்டு தனியொரு தீவாக இருந்தது. அந்த இங்கிலீஷ் கால்வாய் இயற்கை அகழியாக பாதுகாப்பளித்துக் கொண்டிருந்தது. எனவே, பிரிட்டனைத் தோற்கடிக்க வேண்டுமென்றால் கடற்படை வலு வேண்டும். அந்த வலிமை பிரான்சுக்கு பற்றாக்குறை. அதே சமயத்தில் பிரிட்டன் கடற்படை வலிமையில் உலகப்புகழ் பெற்றிருந்தது. நைல் நதிச் சண்டையும் (1799) டிரபால்கர் (1805) சண்டையும், கடலில் பிரிட்டனின் மேலாண்மையை தெளிவாக உணர்த்திவிட்டது. எனினும் பிரிட்டனை விட்டுவிட நெப்போலியனின் ஆதிக்க ஆணவம் உடன்படவில்லை. மேலும், பிரான்சிற்கு எதிரான அனைத்துக் கூட்டுகளையும் அமைத்ததோடு, அவற்றிற்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்துக் கொண்டிருந்ததும் பிரிட்டன்தான்.

தரைச் சண்டையில் கொடிகட்டிப் பறக்கும் பிரான்ஸ் கடற் சண்டையில் தரைதட்டிப் போக நேர்கிறது. தரையில் பிரான்ஸ் சிங்கமென்றால் கடலில் பிரிட்டன் திமிங்கலம். சிங்கம் எப்படி திமிங்கலத்தை அடித்து வீழ்த்துவது ? இதே பிரச்சனை தான் நெப்போலியனுக்கு. இறுதியாக அதற்கும் ஒரு திட்டம் வகுத்தார். அதுதான் ஐரோப்பிய **கண்டப் பொருளாதாரத் திட்டம் (Continental System)** ஆகும்.

அத்திட்டத்தின் உட்பொருள் இதுதான். பிரிட்டனின் வலிமைக்கு அடிப்படைக் காரணம் அதன் கடல்கடந்த வர்த்தகமும், குடியேற்ற நாட்டு வாணிபமும் ஆகும். ஊலகில் பல பாகங்களில் உள்ள வர்த்தகப் பொருட்களை ஐரோப்பாவிற்கு விற்று பெரும் பொருள் ஈட்டி வருகிறது. எனவே, நெப்போலியனின் கண்ணோட்டத்தில் இங்கிலாந்து ''கடைக்காரர்கள் நாடு'' (Nations of Shop Keepers). ஆந்த வர்த்தகத்தை தடைசெய்து அதன் பொருளியல் வளத்தை அழித்துவிட்டால், பிரிட்டன் வலிமைகுன்றி அடிபணிந்துவிடும் என்று எதிர்பார்த்தார். இந்த சிந்தனையோட்டத்தின் அடிப்படையில் தோன்றியதுதான் ஐரோப்பிய கண்டப் பொருளாதாரத் திட்டம் ; அத்திட்டத்தின் கொள்கைகளை பல ஆணைகளாக வெளியிட்டார். அவை :

**(i)பெர்லின் ஆணைகள் (1806) :** பிரிட்டிஷ் தீவுகள் பொருளாதார முற்றுகைக்குள்ளாக்கப்பட்டுள்ளன. பிரிட்டிஷ் கப்பல்கள் எதுவும் ஐரோப்பிய துறைமுகங்களை நெருங்கக் கூடாது. பிரிட்டிஷ் பொருட்கள் ஐரோப்பிய சந்தையில் விற்கப்படக்கூடாது.

**(ii) மிலான் ஆணைகள் (1807) :** பிரிட்டிஷ் குடியேற்றங்களிலிருந்து வரும் நடுநிலை நாடுகளின் நாடுகளின் கப்பல்களில் வரும் சரக்குகள் கைப்பற்றப்படும்.

இதற்குப் பதிலடியாக பிரிட்டன் ஒரு ஆணை வெளியிட்டது. அது **ஆர்டர்ஸ் இன் கவுன்சில் (orders in Council) (அல்லது குழு ஆணை)** எனப்பட்டது. இதன்படி பிரான்சுடனும் அதன் கூட்டாளிகளுடனும் வர்த்தகம் செய்யும் நாட்டுக் கப்பல்கள் கைப்பற்றப்படும். நடுநிலை நாட்டுக் கப்பல்கள் ஐரோப்பா கண்டத்தின் துறைமுகங்களுக்கு பிரிட்டிஷ் துறைமுகங்கள் வழியாகத்தான் செல்லவேண்டும்.

**கண்டத்திட்டம் தோல்விக்கான காரணங்கள் :**

**1) பிரிட்டிஷ் கடல்வலிமை :** கண்டத் திட்டத்தை திறமையாக செயல்படுத்த வலிய கப்பற்படை தேவை. கப்பற்படை மூலம் தான் பிரிட்டிஷ் கப்பல்கள் ஐரோப்பிய துறைமுகங்களை அணுகாது பார்த்துக் கொள்ளமுடியும். ஆனால், பிரான்சிடம் போதிய கப்பற் படை இல்லாதது ஒரு பெருங்குறை. ஆனால், பிரிட்டிஷார் கடற்படை வலுமிக்கவர்களாக இருந்ததினால் அவர்களால் ஐரோப்பிய துறைமுகங்களை கடுமையாகக் கண்காணிக்க முடிந்தது. பிற கண்டங்களிலிருந்து பிரான்சிற்கு பொருட்கள் வராதபடி தடுக்கவும் முடிந்தது.

**2) பிரிட்டிஷ் பொருட்களின் இன்றியமையாமை :** காபி, சர்க்கரை, புகையிலை போன்ற பொருட்கள் பிற கண்டங்களிலிருந்து பிரிட்டிஷ் கப்பல்கள் மூலமாகவே இறக்குமதியாகி வந்தன. தற்போது பிரிட்டிஷ் கப்பல்கள் தடுக்கப்பட்டுவிட்டது. வேறு வழியில் இப்பொருட்கள் ஐரோப்பாவிற்கு அளிக்க பிரான்சாலும் இயலவில்லை. அப்பொருட்களின் விலை அதிகரித்தது. மக்கள் பெரிதும் தொல்லைகளுக்கு உள்ளானார்கள்.

**3) பிரெஞ்சு கூட்டாளிகளின் ஒத்துழையாமை :** முதலில் ஐரோப்பிய நாடுகள் கண்டத்திட்டததிற்கு ஒப்புதல் அளித்திருந்தாலும் அதனால் ஏற்பட்ட தொல்லைகளினால் அத்திட்டத்தைப் புறக்கணிக்க எண்ணினர். முதலில் பெரும் பாதிப்பிற்குள்ளான ஹாலந்து நாடு கண்டத்திட்டத்தை எதிர்த்தது. இரண்டாவது போர்ச்சுகல், மூன்றாவது போப், இறுதியாக ரஷியா கண்டத்திட்டத்தை கைவிட முடிவு செய்தன.

**கண்டத் திட்டத்தற்காக நெப்போலியன் செய்த போர்களும் ஆக்கிரமிப்புகளும் :**

கண்டத் திட்டத்தை எப்படியாவது நிறைவேற்றி பிரிட்டனைப் பணியவைக்கவேண்டும் என்பதில உறுதியாக நின்ற நெப்போலியனால் அதன் தோல்வியை சகித்துக் கொள்ள இயலவில்லை. அதனை மீற முயன்ற நாடுகளின் மீது சீற்றங்கொண்டார். அந்நாடுகளுக்கு படையனுப்பி தோற்கடித்து துப்பாக்கி முனையில் கண்டத்திட்டத்தை செயல்படுத்த முடிவுசெய்தார். அது எதிர்பாரா பல சிக்கல்களில் நெப்போலியனை சிக்கவைத்து அவரது வீழ்ச்சிக்கு அடிகோலியது.

**(i) போர்ச்சுக்கல் ஆக்கிரமிப்பு (1808)** : போர்ச்சுக்கலுக்கு படை அனுப்பி அந்நாட்டைத் தோற்கடித்து கைப்பற்றினார். அந்நாட்டு மன்னர் கப்பலில் ஏறி பிரோஸிலுக்கு தப்பி ஒடினார்.

**(ii) தீபகற்பப் போர் (1808 – 14)** : போர்ச்சுக்கல் நாட்டை ஆக்கிரமிக்கச் சென்ற பிரெஞ்சுப்படை ஸ்பெயின் நாடு வழியாகச் சென்றது. பிற நாட்டுப் படையொன்றை தங்கள் நாட்டு வழியாக அணிவகுத்துச் செல்ல அனுமதித்த ஸ்பெயின் மன்னர் ஆறாம் சார்லசை எதிர்த்து ஸ்பானியர்கள் கிளர்ச்சியிலிறங்கினர். இக் கிளர்ச்சிக்கு சார்லசின் மகன் பெர்டினாண்டு தலைமை தாங்கினார். அதனால் வெறுப்புற்ற சார்லஸ் பதவி விலக முடிவு செய்தார். இதனைக் கண்ணுற்ற நெப்போலியன் சார்லசையும் அவரது மகன் பெர்டினாண்டையும் சமரசம் செய்வித்தற்பொருட்டு பேச்சுவார்த்தைக்கு அழைத்தார். பேச்சுவார்த்தையின் முடிவில் சார்லஸ் முடிதுறந்தார். நெப்போலியனின் சகோதரர் **ஜோசப் போனபார்ட்** ஸ்பெயின் மன்னனாக்கப்பட்டார். பெர்டினாண்டு சிறையிலடைக்கப்பட்டார்.

நெப்போலியனின் இந்த தன்மூப்பான செயலைக் கண்ட ஸ்பானியர்கள் ஆத்திரமடைந்தனர். தங்கள் நாட்டை நெப்போலியன் இழிவுபடுத்திவிட்டார் எனக் கொதித்தெழுந்தனர். தேசிய உணர்வால் உந்தப்பட்டு தங்கள் மீது திணிக்கப்பட்ட மன்னரான ஜோசப் போனபார்ட்டை எதிர்த்து கிளர்ச்சியிலறங்கினர். சரகோஸா, பெய்லன் என்ற இடங்களில் பிரெஞ்சுப் படையைத் தோற்கடித்தனர்.

நெப்போலியனுக்கு எதிரான இந்த சந்தர்ப்பத்தை ஆங்கிலேயர் பயன்படுத்திக் கொள்ள முடிவு கட்டினர். ஆர்தர் வெல்லெஸ்லி தலைமையில் போர்ச்சுக்கல்லுக்கு படையொன்றை அனுப்பினர். அவர் போர்ச்சுக்கல்லை கைப்பற்றி ஸ்பெயினுள் நுழைந்தார். எனவே நெப்போலியன் பெரும்படையுடன் ஸ்பெயின் வரவேண்டி நேர்ந்தது. நெப்போலியன் இருக்கும் வரை பிரிட்டிஷ் படை பின் வாங்கியது.

நெப்போலியனுக்கெதிராக ஸ்பெயின் தேசியவாதிகள் நாட்டுப் பற்றுணர்வோடு வீராவேசமாக வெற்றிகரமாகப் போராடியதைக் கேள்வியுற்று ஆஸ்திரியா இதுதான் தக்க

தருணம் என்று பிரான்சிற்கெதிராக போர் நடவடிக்கையிலிறங்கியது. உடனே நெப்போலியன் ஆஸ்திரியா விரைய நேரிட்டது.

நெப்போலியன் ஸ்பெயினை விட்டு வெளியேறியதும் வெல்லெஸ்லி மீண்டும் படையுடன் இறங்கினார். போர்ச்சுக்கல்லில் டாரஸ்வெட்ராஸ் என்ற மூன்றடுக்கு கோட்டைகளைக் கட்டி அங்கு பாதுகாப்பாக இருந்து கொண்டு ஸ்பெயினுக்குள் ஊடுருவினார். இதற்கிடையில் நெப்போலியன் ரஷியப் படையெடுப்பை மேற்கொண்டதால் ஸ்பெயினில் உள்ள பிரெஞ்சுப் படைகள் திரும்ப அழைத்துக் கொள்ளப்பட்டன. இது வெல்லெஸ்லிக்கு நல்லதொரு வாய்ப்பாகப் போய்விட்டது. சாலமென்கா, டலரா, விக்டோரியா ஆகிய இடங்களில் வெற்றி பெற்று ஸ்பெயினை விட்டு பிரெஞ்சுக்காரரைத் துரத்தி பிரான்ஸ் நாட்டினுள்ளும் காலடி எடுத்து வைத்தார்.

தேவையில்லாத இந்த தீபகற்பப் போர் கண்டத் திட்டத்தை செயல்படுத்த முற்பட்டதால் மூண்ட போர். நெப்போலியனின் தோல்விக்கு இது முதல்படி. **“ஸ்பானிய குடற்புண்தான் என்னைக் கொன்றுவிட்டது**’’ எனப் பின்னர் நெப்போலியனே வருந்திக் கூற நேரிட்டது.

**போப் கைது செய்யப்படல் :** கண்டத்திட்டத்தை கைவிட்ட மற்றொரு ஐரோப்பிய தலைவர் போப். ஏற்கனவே பிரான்சின் சமய ஏற்பாடுகள் குறித்து வேறுபாடு எழுந்ததால் நெப்போலியன் ரோமைக் கைப்பற்றி போப்பை கைது செய்து அவிக்னான் நகரத்தில் காவலில் வைத்தார். இது உலகெங்கிலும் உள்ள கத்தோலிக்கர்களின் வெறுப்பைக் கிளறியது.

**ரஷியப் படையெடுப்பு** : **1807**–ல் ரஷியாவுடன் டில்சி ஒப்பந்தம் செய்தபோது ஸார் மன்னர் நெப்போலியனின் கண்டத் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்திருந்தார். ஆனால், நெப்போலியனின் நடவடிக்கைகள் கண்டு வெறுப்புற்ற அவர், இறுதியாகக் கண்டத் திட்டத்தைக் கடைப்பிடிக்க முடியாது என அறிவித்துவிட்டார். இதனால் ஆத்திரமடைந்த நெப்போலியன், **1812**–ல் ரஷியா மீது படையெடுத்தார். நெப்போலியனின் மாபெரும் படை ரஷியா மீது பாய்ந்தது. பொரோடினோ என்ற இடத்தில் நெப்போலியன் பெரும் வெற்றி பெற்றார். அதன்பின் எதிர்ப்பே இல்லை.

நெப்போலியன் வெற்றி வீரராய் மாஸ்கோவினுள் நுழைந்தார். ஆனால், மாஸ்கோ தீப்பிடித்து எரிந்து கொண்டிருந்தது. படை வீரர்களுக்கு உணவுப் பொருள்கூட கிடைக்கவில்லை. இந்த நெருக்கடியான நேரத்தில் ரஷியாவின் கடுமையான குளிர்காலம் நெருங்கி வந்தது.

வேறு வழியின்றி நெப்போலியன் ரஷியாவை விட்டு தம் படை வீரர்களுடன் வெளியேறினாா. ரஷிய வீரர்கள் மறைந்திருந்து தாக்கி பெருந்தொல்லையளித்தனர். உணவுப் பற்றாக்குறை போர் வீரர்களை குற்றுயிராக்கியது. கடுமையான குளிர் அவர்களைக் கொன்றது. இவ்வாறாக ஆறு இலட்சம் பேர் கொண்ட மாபெரும் படையில் 20,000 பேரே நாடு திரும்பினர்.

**நான்காவது கூட்டணி** : நெப்போலியனின் படைகள் ரஷியாவில் அழிவுற்றதைக் கண்ட அவரது அரசியல் எதிரிகள் உற்சாகமடைந்தனர். பிரிட்டன் மீண்டும் முயற்சி எடுத்து நான்காவது கூட்டணியை உருவாக்கியது. இதில் பிரிட்டன், ரஷியா, பிரஷியா ஆகிய நாடுகள் சேர்ந்தன. சற்றுத் தாமதமாக ஆஸ்திரியாவும் இதில் சேர்ந்தது.

**பன்னாடுகளின் போர் (1814)** : ரஷியத் தோல்வியிலிருந்து திரும்பி வந்த நெப்போலியன் படைகளை நான்காவது கூட்டணியின் படைகள் லிப்சிக்கில் சந்தித்தன. அங்கு நடைபெற்ற போரில் நெப்போலியன் தோற்கடிக்கப்பட்டு கைதியாக்கப்பட்டு எல்பா தீவிற்கு அனுப்பப்பட்டார்.

**நூறு நாள்** : எல்பாவிலிருந்து நெப்போலியன் தப்பி மீண்டும் பிரான்ஸ் திரும்பி ஆட்சியைப் பிடித்தார். ஆனால், இம்முறை அவர் பிரான்சில் (1815 மார்ச் 20 முதல் 1815 ஜுன் 29 வரை) நூறு நாட்களே ஆட்சிபுரிய முடிந்தது. அதற்குள் அவரது பகை நாடுகள் படைதிரட்டி அவரைப் போர் முனையில் சந்திக்கக் காத்திருந்தன.

**வாட்டர்லு (1815)** : பெல்ஜியத்திலிருந்த பிரிட்டிஷ் படையைத் தாக்கி விரட்ட நெப்போலியன் சென்றார். வாட்டர்லூ என்ற இடத்தில் பிரிட்டிஷ் படைத்தளபதி வெல்லிங்டன் கோமகன் நெப்போலியன் படைகளை சந்தித்தார். அங்கு நடைபெற்ற வாட்டர்லூ போரில் 1815 ஜுன் 18–ல் நெப்போலியன் தோற்கடிக்கப்பட்டார். பின்னர்

கைதியாக செயின்ட் ஹெலினா என்ற தீவிற்கு அனுப்பப்பட்டார். ஐந்து ஆண்டுகளுக்குப் பின் அங்கே மரணமடைந்தார்.

## <u>வியன்னா மாநாடு</u>

**முன்னுரை :**

நெப்போலியனால் சீர்குலைக்கப்பட்ட ஐரோப்பிய வரைபடத்தை 1789–க்கு முன் இருந்ததைப் போன்று இழந்தவர்களை பதவியில் அமர்த்தவும் இனிமேல் ஐரோப்பாவில் பிரஞ்சுப் புரட்சி போன்ற புரட்சி தோனறாமலிருக்கவும் 1815–ல் ஆஸ்திரியாவின் தலைநகரில் ஐரோப்பிய நாடுகளின் தலைவர்கள் கூடிய மாநாடுதான் வியன்னா மாநாடு. அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த இந்த மாநாடடில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்கள் பங்கு பெற்றாலும், அதில் முக்கியமானவர்களை இங்கு காண்போம்.

**<u>பங்கு பெற்றவர்கள் :</u>**

1) **மெட்டர்னிக்** ஆஸ்திரிய நாட்டின் முதன்மை அமைச்சர் என்று அழைக்கப்பட்ட சான்றோர் மெட்டர்னிக். இவர் இந்த மாநாட்டை தலைமை தாங்கி நடத்திய இராஜதந்திரி ஆவார்.
2) **ஸார் முதலாம் அலெக்சாண்டர்** ரஷ்ய நாட்டின் அரசர் ஸார் முதலாம் அலெக்சாண்டர்.
3) **ஆஸ்திரிய பேரரசர் முதலாம் பிரான்சிஸ்**
4) **கேசல்ரீக்** இங்கிலாந்து நாட்டு பிரதம அமைச்சர் கேசல்ரீக்
5) **பிரஷிய அரசர் மூன்றாம் பிரடரிக் வில்லியம்**
6) பிரான்ஸ் நாட்டின் சார்பாக அமைச்சர் டாலரண்ட் போன்றோர் கலந்து கொண்டு, அவர்கள் தங்கள் நாட்டின் நலனைக் காப்பதில் கவனமாகச் செயல்பட்டனர்.

**மாநாட்டின் முன்னுள்ள பிரச்சினைகள் :**

1) **ஐரோப்பிய தேசப்படத்தைச் சீரமைப்பது** இருபத்தி மூன்று ஆண்டு போர்க்காரணமாக ஐரோப்பிய தேசப்படம் சீர்குலைக்கப்பட்டிருந்தது. புதிய நாடுகள் உருவாக்கப்பட்டிருந்தன. பழைய எல்லைகள் மமற்றப்பட்டிருந்தன. அவற்றை மீண்டும் எவ்வாறு சீரமைக்க வேண்டும் என்பதே முதல் பிரச்சனையாக இருந்தது.

2) **நிலையான அமைதியை உருவாக்குவது** தாராள முற்போக்கு கருத்துக்கள் வலியுறுத்தப்பட்டதாலே புரட்சி ஏற்படுகிறது. புரட்சி, போர்களை உண்டுபண்ணி அமைதியைக் கெடுக்கிறது. முற்போக்குக் கருத்துக்களை ஒடுக்கி புரட்சியை அடக்கி எவ்வாறு நிரந்தர அமைதியை ஏற்படுத்துவது என்பது இரண்டாவது பிரச்சனையாக இருந்தது.

3) **போரில் கைப்பற்றப்பட்ட இடங்களை எவ்வாறு பங்கு வைப்பது** என்பது மூன்றாவது பிரச்சினையாக இருந்தது.

4) **மீண்டும் பிரான்ஸ், ஐரோப்பாவின் அமைதியைக் குலைத்துவிடாதபடி சில முன்னேற்ப்படுகளைச் செய்யவேண்டும்** என்பது நான்காவது பிரச்சனையாக இருந்தது.

**மாநாட்டு ஏற்பாடுகளின் அடிப்படைக் கொள்கை :**

மாநாடு சில அடிப்படைக் கொள்கைகளை வகுத்துக்கொண்டு அதன்படியே அரசியல் ஏற்ப்பாடுகளைச் செய்ய முற்பட்டது.

**i) முன்னிலைமீட்சி (Restoration)**

**ii) முறைமைக் கொள்கை (Legitimacy)**

**iii) இழப்பீடு (Compensation)**

முன்னிலை மீட்சி என்ற கோட்பாட்டின்படி புரட்சிக்கு முன்பிருந்த அரசுகளே பெரும்பாலும் புதுப்பிக்கப்பட்டு, பழைய அரசமரபிற்கே அவை அளிக்கப்பட்டன. சான்றாக ஸ்பெயின், ஹாலந்து, பீட்மாண்ட், சார்டினியா, போர்ச்சுக்கல், போப்பின் நாடுகள், நேப்பிள்ஸ், சிசிவி ஆகிய நாடுகளில் புரட்சிக்கு முன்பிருந்த பழைய அரசம ரபினரே மீண்டும் ஆட்சிப்பொறுப்பில் அமர்த்தப்பட்டனர்.

முறைமைக் கொள்கையின்பப பிரான்சிற்கு பாரம்பரிய முறைப்படியும் சட்டப்படியும் உள்ள பிரதேசங்கள் அளிக்கப்பட்டன. அதாவது 1790—ல் என்ன எல்லை இருந்ததோ அதே எல்லை அதற்கு மீண்டும் அளிக்கப்பட்டது.

இழப்பீடு என்ற கொள்கைப்படி, இந்த அரசியல் ஏற்பாடுகளினால் ஏதாவது ஒரு பிரதேசத்தை இழக்க நேர்ந்தால் அதற்கு ஈடாக மற்றொரு நிலப்பகுதி அளிக்கப்பட்டது.

சான்றாக ஹாலந்து தனது குடியேற்றங்களை இழந்ததற்கு ஈடாக ஆஸ்திரிய நெதர்லாந்து (பெல்ஜியம்) அளிக்கப்பட்டது. ஆஸ்திரியா, நெதர்லாந்தை இழந்ததற்காக, வெனிஷியா, லம்பார்டி பகுதிகளைப் பெற்றது.

பிரான்ஸ் மீண்டும் வலிமைமிக்க நாடாக வளர்ச்சியுற்று ஐரோப்பிய அமைதிக்கு ஊறுவிளைவித்து விடக்கூடாது; ஐரோப்பாவின் வல்லமைச் சமநிலை கெட்டுவிடக்கூடாது என்பதற்காக பிரான்சைச் சுற்றியுள்ள நாடுகள் வலுப்படுத்தப்பட்டன. எனவே, ஹாலந்திற்கு ஆஸ்திரிய நெதர்லாந்து அளிக்கப்பட்டது. தென்கிழக்கில் உள்ள சார்டீனியாவிற்கு பீட்மான்ட் அளிக்கப்பட்டது. கிழக்கில் உள்ள பிரஷியாவிற்கும் சில பகுதிகள் அளிக்கப்பட்டன.

**வியன்னா மாநாட்டின் அரசியல் ஏற்பாடுகள் :**

**பிரான்ஸ் : 1790–**ல் உள்ள எல்லைகள் அளிக்கப்பட்டன. பழைய பூர்போன மரபு புதுப்பிக்கப்பட்டது. பதினாறாம் லூயியின் சகோதரர் பதினெட்டாம் லூயி பிரெஞ்சு அரியணையில் அமர்த்தப்பட்டார். எல்பாவிலிருந்து தப்பிவந்த நெப்போலியனுக்கு மீண்டும் ஆதரவளித்ததால் அது 28 மில்லியன் பவுன் இழப்பீடு தருமாறு கோரப்பட்டது. அதுவரை பிரான்சின் வடகிழக்குப் பகுதியில் வல்லரசுப் படைகள் நிறுத்தப்பட்டிருக்கும் எனவும் விதிக்கப்பட்டது. நெப்போலியன் கவர்ந்து சென்ற கலைப் பொருட்களை உரிய நாடுகளுக்கு திருப்பியளிக்க வேண்டும்.

**ஹாலந்து** : பழைய ஆரஞ்சு மரபு புதுப்பிக்கப்பட்டது. அதனுடைய குடியேற்றங்களான கேப் குடியேற்றம் இலங்கைத்தீவு ஆகியவற்றை பிரிட்டன் எடுத்துக்கொண்டதால் இழப்பீடாக அருகில் உள்ள ஆஸ்திரிய நெதர்லாந்து (பெல்ஜியம்) இணைக்கப்பட்டது. பிரான்சின் வடகிழக்கு எல்லையில் உள்ள நாடுகளை வலுப்படுத்த வேண்டும் என்பதும் அதற்கொரு காரணமாகும்.

**பிரஷியா :** இந்நாடும் ஜெர்மனியில் பல பகுதிகளைப் பெற்று வலுமிக்க நாடானது. போலந்திடமிருந்து போஸன் பகுதியும் ஸ்வீடனிடமிருந்து பொமரேனியாவும் சாக்சனியில் ஐந்திலிரு பகுதியும் ரைன் பகுதியில் சில இடங்களையும் கோலோன் டிரவஸ்

பகுதிகளையும் பெற்றது. இந்நாடு பிரான்சின் கிழக்கெல்லையில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

**ஆஸ்திரியா** : நெதர்லாந்தை (பெர்ஜியம்) ஹாலந்திற்கு அளித்ததற்கு ஈடாக அருகில் உள்ள இத்தாலயின் வளமான மாநிலங்களான லம்பார்டி, வெனிஷியாவைப் பெற்றது. மற்றும் டைரால், இல்லீரியன் மாநிலங்கள் ஸால்ஸ்பர்க் ஆகிய பகுதிகளையும் போலந்திடமிருந்து கலிசியாவையும் பெற்றது.

**ருஷியா** : வார்சா கோமகன் நாட்டின் (போலந்து) பெரும் பகுதியைப் பெற்றது. ஸ்வீடனிடமிருந்த பின்லாந்தையும் எடுத்துக்கொண்டது.

**சார்டினியா** இந்நாடு பிரான்சின் தென்கிழக்கு எல்லையிலிருந்ததால் பல புதிய நிலப்பரப்புகளைப் பெற்று வலுப்படுத்தப்பட்டது. பிரான்சிடமிருந்து சாவாய், நீஸ் பகுதிகளைப் பெற்றது. மற்றும் பீட்மான்ட், ஜெனோவா பகுதிகளையும் பெற்றது.

**பிரிட்டன்** : குடியேற்ற நாட்டு ஆதிக்கத்தையும், கடல் வாணிபத்தையும் தான் அயல்நாட்டு கொள்கையின் இரு கண்ணெனப் போற்றிய பிரிட்டன் அதற்குரிய இடங்களைப் பெறுவதிலேயே குறியாய் இருந்தது. மத்திய தரைக்கடலில் உள்ள மால்டா, வடகடலில் உள்ள ஹெலிகோலாந்து, ஏட்ரியாட்டிக்கில் உள்ள அயோனியன் தீவுகள், ஆப்பிரிக்காவின் தென்கோடியில் உள்ள கேப் குடியேற்றம், இந்துமா கடலில் உள்ள மொரஷியஸ், இலங்கை மற்றும் மேற்கிந்தியத் தீவுகளான செயின்ட் லூசியா, டொபாகோ, டிரினிடாட் ஆகியவற்றையும் பெற்றது, ருலந்திற்கு ஆறு மில்லியன் பவுன்களை இழப்பீடாகக் கொடுத்தது.

**இத்தாலி** : இத்தாலியை ஒரு நாடாக்க வேண்டும் என்ற தேசியவாதிகளின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. மெட்டர்னிக் கூறியபடி இத்தாலி என்பது ஒரு புவியியல் பெயராகவே கருதப்பட்டது. கீழ்க்கண்டவாறு இத்தால சின்னாபின்னமாக்கப் பட்டிருந்தது.

i. லம்பார்ட்டி, (வெனிஷியா) ஆஸ்திரியாவிடமிருந்தன.
ii. பர்மா, மடோனா, டஸ்கனி ஆஸ்திரிய ஹாப்ஸ்பர்க் மரபு கோமான்களுக்குக் கட்டுப்பட்டிருந்தன.

(இதில் பார்மா நெப்போலியனின் மனைவியும் ஆஸ்திரிய இளவரசியுமான லூயிமேரிக்கு அளிக்கப்பட்டது)

iii. ரோம் மற்றும் போப்பின் நாடுகளான மத்திய இத்தாலி போப்பாண்டவரிடமிருந்தன.

iv. நேபிள்ஸ், சிசிலி பூர்போன் மரபு அரசர் பெர்டினாண்டிடமிருந்தன.

v. சார்டினியா, பீட்மாண்ட் சவாய் அரசமரபின் கட்டுப்பாட்டில் இருந்தன.

**ஜெர்மனி** : ஜெர்மனியின் 39 சிற்றரசுகளை நெப்போலியன் ஒரு கூட்டரசாக இணைத்து அதற்கு ரைன் கூட்டமைப்பு என்ற பெயரிட்டிருந்தார். இப்போது அக்கூட்டரசு அப்படியே வைத்துக் கொள்ளப்பட்டு, அதற்கு ஜெர்மன் கூட்டமைப்பு என பெயர் சூட்டப்பட்டது. பிராங்பர்ட் நகரில் இக்கூட்டமைப்பின் டயட் (Diet) பாராளுமன்றம் இருக்கும். அதற்கு ஆஸ்திரிய சான்ஸ்லர் தான் தலைமை தாங்குவார். இவ்வாறு ஜெர்மனியில் ஆஸ்திரிய ஆதிக்கம் நிலை நாட்டப்பட்டது.

**ஸ்பெயின் :** பழைய பூர்போன் மரபு நிலைநாட்டப்பட்டது.

**போர்ச்சுக்கல் :** பழைய அரசமைப்பு புதுப்பிக்கப்பட்டது.

**ஸ்விட்சர்லாந்து** : பழைய கூட்டாட்சி புதுப்பிக்கப்பட்டது. பிரான்சிடமிருந்து மூன்று கான்டன்கள் (மாநிலங்கள்) இதனுடன் இணைக்கப்பட்டன.

**ஸ்வீடன்** : தனது பொமரேனியாவை பிரஷியாவிற்கும், பின்லாந்தை ரஷியாவிற்கும் விட்டுக் கொடுத்ததற்கு இழப்பீடாக டென்மார்க்கிடமிருந்து நார்வேயைப் பெற்றது. டென்மார்க் நெப்போலியனுடன் உறவு கொண்டிருந்ததால் அதற்குத் தண்டனையாக நார்வே அதனிடமிருந்து எடுத்துக்கொள்ளப்பட்டது.

**திறனாய்வு :**

**நிறைகள்** : ஒழுக்க முறைமையின் சீரமைப்பு ஐரோப்பிய அரசியல் முறையின் புத்துயிர்ப்பு, நியாயமான பங்கீட்டு முறை, அமைதிக்கான நிரந்தர ஏற்பாடு என்றெல்லாம் வியன்னா ஏற்பாடு உண்மையில் பல நிறைகளைக் கொண்டிருந்தது. எனவேதான் டேவிட் தாம்சன் என்ற வரலாற்ற வல்லுநர் இதனை நியாயமான அரசியல் நுட்பங்கள் மிக்கதோர் உடன்படிக்கை எனப் போற்றியுள்ளார்.

முதலாவதாக, போர்களுக்குக் காணரணமான பிரான்சுக்கு மாநாட்டில் தன் நிலையை எடுத்துக்கூற வாய்ப்பளிக்கப்பட்டதோடு, அது அநியாயமாகப் பழிவாக்கப்படுவதிலிருந்து பாதுகாக்கப்பட்டது. அந்நாட்டு பிரதிநிதியான டாலிரண்டின் முறைமை (Legitimacy) கொள்கை ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதனால் பிரான்சிற்குரிய சட்டப்பூர்வமான இடம் எதுவும் பறிமுதல் செய்யப்படவில்லை.

இரண்டாவதாக, வல்லரசு எதற்கும் மனக்குறை ஏற்படாதவாறு பார்த்துக் கொள்ளப்பட்டதால், விபன்னா ஏற்பாட்டிற்கு உடனடி ஆபத்து எதுவும் ஏற்படவில்லை. அதனால் அமைதி நிலைநாட்டப்பட்டது. நூற்றாண்டு காலத்திற்கு ஐரோப்பாவில் கண்ட அளவில் மாபெரும் போர் நடைபெறவில்லை. இடையிடையே போர்கள் நடைபெற்றாலும் அவை இருநாடுகள் சம்பந்தப்பட்டதாகவே இருந்தது.

மூன்றாவதாக, இதற்கு முன்னதாக செய்யப்பட்ட உட்ரக்ட் உடன்படிக்கை **(1713)** பின்பு செய்யப்பட்ட வெர்செயில்ஸ் உடன்படிக்கை **(1919)** ஆகியவற்றோடு ஒப்பிட்டு பார்க்கும்போது வியன்னா ஏற்பாட்டின் நிறை தெளிவாகப் புரியும். உட்ரக்ட் உடன்படிக்கையால் முப்பது ஆண்டு கூட அமைதியை நிலைநாட்ட முடியவில்லை. வெர்செயில்ஸ் உடன்படிக்கை இருபது ஆண்டு கூட அமைதியை நிலைநாட்ட இயலவில்லை. உட்ரக்ட் உடன்படிக்கை ஆதாயம் பெறுவதையே நோக்கமாக் கொண்டிருந்தபோது வெல்செயில்ஸ் பழிவாங்குவதையே குறிக்கோளாகக் கொண்டிருந்தது. வியன்னாவோ, புரட்சி குழப்பம் ஏற்படாதவாறு தடுத்து அமைதியை நிலைநாட்டுவதை நோக்கமாகக் கொண்டிருந்தது.

இறுதியாக தேசியம், சுதந்திரம், மக்களாட்சி முறை நிராகரிக்கப்பட்டு, பழைய மன்னராட்சி மரபுகளே புதுப்பிக்கப்பட்டது என்ற குறை கூறப்படுகிறது. அன்றைய வல்லரசுகளுக்கு காலத்தாற் முற்பட்ட அந்த முற்போக்கு கொள்கைகள் சரியாகப் புரியவில்லை. அவர்களுக்குப் புரிந்ததெல்லாம் அமைதி ஒன்றுதான்.

**குறைகள்** : முதலாவதாக, மாநாட்டில் வல்லரசுகளின் சுயநலமே மேலோங்கியிருந்தது. அதனால் சிறு நாடுகளின் உரிமைகள் புறக்கணிக்கப்பட்டன. ரஷியாவின் தன்னலம் போலந்தை அபகரித்தது என்றால், ஆஸ்திரியாவின் தன்னலம்

லம்பார்டி வெனிஷியாவை அபகரித்ததது. பிரஷியாவும் சாக்சனியில் எவ்வளவு பகுதிகளைப் பெற முடியும் என்று கணக்கிட்டதே தவிர சம்பந்தப்பட்ட நாட்டு மக்களின் உணர்வுகளை பொருட்படுத்தவில்லை.

இரண்டாவதாக, பிரெஞ்சுப் புரட்சி ஏன் ஏற்பட்டது. அதன் விளைவாக தோன்றிய கருத்துக்கள் எவை என்பது பற்றிய சிந்தனை எதுவுமே இல்லாம., அப்புரட்சியின் இரத்தக்கறை படிந்த நிகழ்ச்சிகளை மட்டும் கருத்தில் கொண்டு புரட்சியின் பாடங்களை உணரத் தவறிவிட்டனர். குறிப்பாக, ‘‘தேசியம்’’ என்ற கருத்தின் உட்பொருளையும், வலிமையையும் பொருட்படுத்தவே இல்லை. அதனால்தான் போலந்தின் தேசியம் புறக்கணிக்கப்பட்டது. பெல்ஜிய மக்களின் விருப்பத்தை அறிய முயற்சியே எடுக்கப்படவில்லை. இத்தால ஒரு புவியியல் பெயராக ஆக்கப்பட்டது.

மூன்றவாவதாக, வியன்னா ஏற்பாடு சில பொருந்தா இணைப்புகளையும் ஏற்பாடுகளையும் செய்திருந்ததால், அவை நீடிக்கவில்லை. அதாவது வியன்னா ஏற்பாட்டிலி நிரந்தரக் கூறுகள் (permanency) எதுவும் இல்லை. பெல்ஜியம் ஹாலந்திலிருந்து 15 ஆண்டுகளில் பிரிந்துவிட்டது. நார்வே 90 ஆண்டுகளில் ஸ்வீடனிடமிருந்து பிரிந்துவிட்டது. அடுத்த சில ஆண்டுகளில் போலந்து தனி நாடாக உருவானது. இத்தாலியும் ஜெர்மனியும் தேசிய நாடாக உருவாயின. பிரான்சில் போனபாட்டிசம் மறுபடியும் தலைகாட்டவே கூடாது என்று பல தடுப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டும் முப்பத்தைந்து ஆண்டுகளில் மீண்டும் பிரான்சில் ஒரு போனபார்ட் மரபினர் பேரரசராக முடிசூட்டுவதை தடுக்க இயலவில்லை. கால மாறுதலினால் ஏற்படும் முற்போக்கு முன்னேற்றத்தைப் புரிந்து கொள்ளாததால்தான் வியன்னாவில் இந்த விபரீதங்கள் நிகழ்த்தப்பட்டன.

நான்காவதாக, முன்னிலை மீட்சி என்ற பெயரில் அரச குடும்பங்கள்தான் புதுப்பிக்கப்பட்டனவேயன்றி குடியரசுகள் அன்று. இத்தாலியின் பழம்பெரும் குடியரசுகளான ஜெனோவாவும் வெனிசும் வல்லரசுகளின் சுயநலத்திற்குப் பலியாயின.

# ஐரோப்பியக் கூட்டமைப்பு

## (CONCERT OF EUROPE)

நெப்போலியன் போனபார்ட் வாட்டர்லூ போரில் தோற்கடிக்கப்பட்ட பிறகு ஐரோப்பிய மன்னர்களும், அரசியல்வாதிகளும் ஐரோப்பாவில் நிரந்தரமான சமாதானத்தை ஏற்படுத்தவும், எதிர்காலப் போர்களிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ளவும் முயற்சி எடுத்தனர். 1815–ல் ஆஸ்திரிய நாட்டின் தலைநகரான வீயன்னாவில் கூடி முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டது. அந்த முடிவுகளையும், ஏற்பாடுகளையும் எல்லா ஐரோப்பிய நாடுகளும் கடைப்பிடித்து செயல்படுத்தவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. இவ்வாறு வியன்னா ஏற்பாடுகளைச் செயல்படுத்தவும், செயல்படுத்தும்போது ஏற்படும் பிரச்சனைகளை அவ்வப்போது கூடி தீர்க்கவும் ஏற்படுத்தப்பட்ட அமைப்பிற்கு ஐரோப்பியக் கூட்டமைப்பு என்று பெயர்.

இக்கூட்டமைப்பு சுதந்திர வேட்கைக்கு எதிரான ஓர் அமைப்பாகும். இதன் கொள்கைகளும், நடவடிக்கைகளும், குடியாட்சிக் கருத்துக்களுக்கும் தேசியத்திற்கும் எதிரானவை. எனவேதான் சுமார் எட்டு ஆண்டுகளுக்குள் இக்கூட்டமைப்பு வீழ்ச்சியடைந்தது. ஆனாலும், உலக நிறுவனம் ஒன்று அமைக்கப்பட ஆரம்பிக்கப்பட்ட முதல முயற்சியாக விளங்கியது என்று கூறலாம்.

**ஐரோப்பியக் கூட்டமைப்பின் நோக்கங்கள் :**

1. ஐரோப்பாவில் புரட்சிப் போர்கள் ஏற்படாதவாறு தடுத்து அமைதியை நிலைநாட்டுதல்.
2. புரட்சி இயக்கங்களையும், விடுதலை எண்ணங்களையும் வளரவிடாமல் தடுத்தல்.
3. குடியரசுகளை ஒழித்தல்.
4. வீயன்னா மாநாட்டின் ஏற்பாடுகளை உறுதிப்படுத்தி, அவைகளைச் செயல்படுத்துதல்.
5. கருத்து வேறுபாடுகளை தங்களுக்குள் அமைதியான முறையில் பேசி தீர்ததுக்கொள்ளுதல்.
6. ஐரோப்பாவில் சக்தி சமநிலையைப் பாதுகாத்தல்.

**2. நால்வர் உடன்பாடு (Quadruple alliance) : 1815, Nov**

மெட்டர்னிக்கின் முயற்சியாலும், இராஜதந்திரத்தாலும், ரஷ்யா, பிரஷ்யா, ஆஸ்திரியா, இங்கிலாந்து, ஆகிய நாடுகள் சேர்ந்து நால்வர் உடன்பாட்டை அமைத்தன. ஐரோப்பாவில் அமைதியை ஏற்படுத்துவதும், வீயன்னா ஏற்பாட்டை செயல்படுத்திக் காப்பற்றுவதும், போனபார்ட் வம்ச வழியை மீண்டும் ஐரோப்பாவில் தலைதூக்கவிடாமல் பாத்துக்கொள்வது ஆகியவையை இதன் முக்கிய நோக்கமாக இருந்தது. முக்கிய பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு அடிக்கடி கலந்து பேசி முடிவுகளை மேற்கொள்ள வேண்டும் என்று தீர்மானம் செய்தனர். 1818–ல் இந்த உடன்பாட்டில் பிரான்ஸ் சேர்ந்த போது ஐவர் உடன்பாடாக மாறியது.

**ஐரோப்பியக் கூட்டமைப்பின் செயல்பாடுகள் :**

தங்கள் கொள்கைகளைச் செயல்படுத்துவதற்கு ஐரோப்பிய கூட்டமைப்பு நாடுகள் பல மாநாடுகளைக் கூட்டின. ஏ–லா–சாப்பேல் என்னுமிடத்தில் முதல் மாநாடு கூட்டப்பட்டது.

**1. ஏ–லா–சாப்பேல் மாநாடு (Congress of Aix-la-Chappele): 1818**

இந்த மாநாடு மெட்டர்னிக்கின் பெரும் முயற்சியால் கூட்டப்பட்டது. முதலில் பிரான்சு நாடு முடியாட்சியை அமைதியான முறையில் ஏற்றுக்கொண்டதால் அந்த நாட்டையும் ஐரோப்பியக் கூட்டமைப்பில் சேர்த்துக் கொள்ளப்படவேண்டும் என தீர்மானிக்கப்பட்டது. மேலும், பல பிரச்சனைகள் விவாதிக்கப்பட்டன. இம்மாநாடு ஐரோப்பிய நாடுகளின் உள்நாட்டுப் பிரச்சனைகளில் தலையிட்டு புரட்சி இயக்கங்களையும், முன்னேற்றக் கருத்துக்களையும் முளையிலேயே கிள்ளி எறிந்துவிட விரும்பியது. ஆனால், இதனை இங்கிலாந்து எதிர்த்தது. உதாரணமாக ஜெர்மனியில் ஏற்பட்ட கிளர்ச்சியை வன்முறையில் மெட்டர்னிக் அடங்கியதால், இங்கிலாந்து வெளிப்படையாகவே தனது எதிர்ப்பை காண்பித்தது. முதல் மாநாட்டிலேயே உறுப்பினர் நாடுகளுக்கிடையே, மோதல்களும் கருத்து வேறுபாடுகளும் ஏற்பட்டன.

**2. டிராப்போ மாநாடு (Congress of Troppau): 1820**

1820-ஆம் ஆண்டு ஐரோப்பாவில் மீண்டும் புரட்சி இயக்கங்கள் தோன்றின. முக்கியமாக ஸ்பெயின் நாட்டிலும் இத்தாலியிலுள்ள நேப்பிள்சிலும் மக்கள் உரிமைகள்

நிறைந்த அரசியலமைப்பைக் கோரினர். ஸ்பானிய அரியணையில் அமர்த்தப்பட்ட 'ஏழாம் பெர்டினாண்டை' எதிர்த்து கர்னல்ரீகோ என்பவரின் தலைமையில் 'கேடிஸ்' நகரில் பெரும் கிளர்ச்சி ஒன்று ஏற்பட்டது. இது போன்ற கிளர்ச்சிகள் ஆஸ்திரியாவின் கட்டுப்பாட்டிலுள்ள இத்தாலியப் பகுதிகளிலும் பரவிவிடும் என்று பயந்த மெட்டர்னிக் 1820–ல் டிராப்போ என்னுமிடத்தில மாநாடு ஒன்றைக் கூட்டினார்.

இம்மாநாட்டில், ஸ்பெயினில் ஏற்பட்ட புரட்சியை படை பலத்துடன் அடக்க வேண்டும் என்று சார் அலெக்ஸாந்தர் விரும்பினார். ஆனால், மேற்கு ஐரோப்பாவில் ரஷ்ய தலையீட்டை இங்கிலாந்து விரும்பவில்லை. இந்த மாநாட்டில் ''எங்கெல்லாம் புரட்சி வெடிக்கின்றதோ அங்கெல்லாம் இராணுவத்தை அனுப்பி அதை நசுக்கவேண்டும்'' என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்த தீர்மானத்தை இங்கிலாந்து கடுமையாக எதிர்த்தது. எனவே, எந்த முடிவும் எடுக்கப்படாமல் இம்மாநாடு முடிந்தது.

### 3. லேபாக் மாநாடு (Congress of Laibach) : 1821

1821–ஆம் ஆண்டு ''லேபாக்'' என்னுமிடத்தில் ஒரு மாநாடு கூட்டப்பட்டது. இம்மாநாடு கூட்டப்பட்ட நேரத்தில், கிரிஸ், ஸ்பெயின், இத்தாலி ஆகிய நாடுகளில் புரட்சி இயக்கங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. இம்மாநாட்டின் தீர்மானத்தின்படி ஆஸ்திரியப் படைகள் நேப்பிள்ஸில் நேரடியாகத் தலையிட்டு புரட்சியை அடக்கி எதேச்சதிகாரத்தை நிலை நிறுத்தின. பியட்மாண்டில் தோன்றிய புரட்சி ஒடுக்கப்பட்டது. ஆனால், இந்த பிற்போக்கான நடவடிக்கைகளை இங்கிலாந்து வன்மையாகக் கண்டித்தது. மேலும், ரஷ்யாவுக்கும் ஆஸ்திரியாவிற்கும் இடையேயும் முரண்பாடுகள் தோன்ற ஆரம்பித்தன.

### 4. வெரோனா மாநாடு (Congress of Verona) : 1822

1822–ஆம் ஆண்டு வெரோனாவில் மாநாடு ஒன்று கூட்டப்பட்டது. அப்போது துருக்கியின் கீழ் இருந்த கிரிஸில் புரட்சி வெடித்து. ஸ்பெயினிலும் மீண்டும் புரட்சி ஏற்பட்டு நிலைமை சீர்கேடு அடைந்திருந்தது. எனவே, ஸ்பெயின், கிரிஸ், ஆகிய நாடுகளிலுள்ள பிரச்சனைகளை இம்மாநாடு விவாதித்தது. மெட்டர்னிக் இத்தாலிய அரசியலில் தலையிட்டது போல ரஷ்ய சார் அலெக்ஸாந்தர் பால்கன் அரசியலில்

தலையிட நினைத்தார். இதனை மெட்டர்னிக் விரும்பவில்லை. மெட்டர்னிக் மிகத் திறமையுடன் ஸ்பானியப் பிரச்சனைகளுக்கே மாநாட்டில் முதலிடம் அளிக்க முடிவு செய்தார்.

ஸ்பானிய புரட்சி இயக்கங்களை நசுக்க ஒரு பிரெஞ்சுப் படையை அனுப்ப முடிவு செய்யப்பட்டது. இந்த அனுமதியை எதிர்த்து, மாநாட்டை விட்டே வெளியேறியது இங்கிலாந்து. பின்னர், ஐரோப்பியக் கூட்டமைப்பை விட்டே விலகியது. மாநாட்டின் முடிவின்படி **1823–**ல் பிரெஞ்சுப் படைகள் ஸ்பெயின் நாட்டினுள் நுழைந்து புரட்சி இயக்கத்தை நசுக்கியது. ‘கர்னல்ரீகோ’ கொல்லப்பட்டார். வெரொனா மாநாட்டுடன் ஐரோப்பியக் கூட்டமைப்பு கலைந்துவிட்டது.

**ஐரோப்பியக் கூட்டமைப்பு தோல்வியடையக் காரணங்கள் :**

1. **ஒற்றுமை இல்லை :** ஐரோப்பியக் கூட்டமைப்பின் உறுப்பினர் நாடுகளான ரஷ்யா, ஆஸ்திரியா, இங்கிலாந்து, ஆகிய நாடுகளுக்கிடையே ஒற்றுமை இல்லை. இங்கிலாந்து ஜனநாயக இயக்கங்களுக்கு ஆதரவு அளித்தது. ஆனால், மற்ற மூன்று நாடுகள் எதேச்சதிகாரத்தை ஆதரித்தன. இவ்வாறு உறுப்பு நாடுகட்கிடையே தோன்றிய அடிப்படை கருத்து முரண்பாடுகள் இக்கூட்டமைப்பு தோல்விடைய முக்கியக் காரணமாகும்.
2. பிற நாட்டு உள் விவகாரங்களில் தலையிடுவதையும், சிறிய நாடுகளின் நலன்கள் பாதிக்கப்படுவதையும், இங்கிலாந்து ஏற்கவில்லை. ஒவ்வொரு மாநாட்டிலும் தனது எதிர்ப்பை வெளிப்படுத்தியது இங்கிலாந்து.
3. இங்கிலாந்தைத் தவிர, மற்ற நாடுகள் பிற்போக்குவாதத்தின் அடிப்படையில் இயங்கின. முன்னேற்றக் கருத்துகளுக்கு தடையாக விளங்கின. விடுதலை இயக்கங்களை நசுக்கி வந்தன.
4. ஐரோப்பிய மக்களின் தேசிய உணர்வுகளையும், ஜனநாயக இயக்கங்களையும் நசுக்கியதால் இக்கூட்டமைப்பை மக்கள் வெறுத்தனர்.
5. விடுதலை இயக்கங்களை ஐரோப்பாவை விட்டே ஒழிப்பதற்குத் திட்டமிட்டு செயல்பட்டு வந்தது ஐரோப்பியக் கூட்டமைப்பு.

6. ஐரோப்பியக் கூட்டமைப்பில் உள்ள வல்லரசு நாடுகள் சிறிய நாடுகள் அனைத்தும் தங்களுக்கு அடங்கி நடக்கவேண்டும் என்று விரும்பின. எனவே, சிறிய நாடுகள் வல்லரசுகளின் எதேச்சதிகாரப் போக்கை எதிர்த்தன.
7. 1823–ல் அமெரிக்க ஜனாதிபதி மன்றோவினால் வெளியிட 'மன்றோ கொள்கை' ஐரோப்பிய நாடுகளை அமெரிக்க விவகாரங்களில் தலையிடுவதைத் தடுத்து நிறுத்தியது. இதன்படி, ஸ்பானிய அமெரிக்கக் குடியேற்றங்களின் விடுதலையை அமெரிக்காவும், இங்கிலாந்தும் வெளிப்படையாக ஆதரித்தன.

**மதிப்பீடு :**

இவ்வாறு ஐரோப்பியக் கூட்டமைப்பு, ஐரோப்பா முழுவதிலுமுள்ள மக்களிடையே எழுந்த விடுதலை உணர்ச்சியையும், தேசிய உணர்ச்சியையும் தடைசெய்ய முயற்சித்தது. அதற்காகப் பல நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டாலும், இறுதியில் தோல்வியே ஏற்பட்டது. இதற்கு அந்த அமைப்பிலிருந்த நாடுகளுக்கிடையே காணப்பட்ட கருத்து வேறுபாடுகளே காரணம்.

ஆனால், அனைவரும் ஒன்றுகூடி கருத்துப் பரிமாற்றம் செய்வதிலும், 'பன்னாட்டு ஒன்றுமை உணர்வை' ஏற்படுத்துவதிலும், ஐரோப்பியக் கூட்டமைப்பு வெற்றியடைந்தது. அதனை நடைமுறையில் செயல்படுத்தியும் காட்டியது.

# <u>மெட்டர்னிக் காலம்</u>

## (ERA OF METTERNICH - 1815 – 1848)

**1815–**ல் வீயன்னா மாநாட்டிற்குத் தலைமை தாங்கிய ஆஸ்திரிய நாட்டின் சான்சலர் மெட்டர்னிக் அதிலிருந்து **1848–**ம் ஆண்டு வரை ஐரோப்பிய அரசியலில் தலைமை இடம் வகித்தார். அப்பொழுது இவருடைய ஆதிக்கமே ஐரோப்பாவில் மேலோங்கியிருந்ததால் **1815** முதல் **1848** வரை உள்ள காலத்தை ‘மெட்டர்னிக் சகாப்தம்’ என்று அழைக்கலாம்.

**1773**, மே **15–**ல் பிறந்த மெட்டர்னிக் இளமையிலேயே அரச சேவையில் புகுந்தார். தன்னுடைய தந்தையின் இராஜதந்திர அனுபவங்களை முழுமையாகப் பெற்றார். **1801** – முதல் பெர்லின், பாரிசு, டிரஸ்டின் ஆகிய நகரங்களில் ஆஸ்திரிய இராஜதந்திரப் பணியில் அமர்ந்தார். தன்னுடைய அரசியல் தந்திரம், அனுபவம், திறமை இவற்றால் படிப்படியாக முன்னேறினார். இறுதியில் **1809**, மே மாதம் தன்னுடைய **36–**ம் வயதில் ஆஸ்திரியாவின் சான்சலாராகப் பொறுப்பேற்று **1848–**ம் ஆண்டு வரை நீடித்தார். பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஆஸ்திரியா உருவாக்கிய மாபெரும் ராஜதந்திரியே மெட்டர்னிக் ஆவார்.

### மெட்டர்னிக்கின் கொள்கைகள் :

#### 1. விடுதலை மற்றும் புரட்சி இயக்கங்கட்கு எதிர்ப்பு :

புரட்சி நடந்த காலத்தில் பயங்கர ஆட்சியின் மூலம் பிரான்சில் நடைபெற்ற மனிதத் தன்மையற்ற நிகழ்ச்சிகளைக் கண்டபின், மெட்ட்ர்னிக் புரட்சியின் பரம விரோதி ஆனார். பிரெஞ்சுப் புரட்சி ஒரு ‘சாபக்கேடு’ என்றும் ‘‘ஒழிக்கப்படவேண்டிய எரிமலை’’ என்றும் ‘‘சமூக ஒழுங்கை கெடுக்கும் நச்சுப்பாம்பு’’ என்றும் கருதினார். எனவே தான் விடுதலை, ஜனநாயகம் மற்றும் புரட்சிக் கருத்துக்களை ஐரோப்பாவிலிருந்தே விரட்ட எண்ணினார்.

#### 2. பழைய பிற்போக்குக் கொள்கைகளில் விருப்பம் :

மெட்டர்னிக் ஐரோப்பிய மக்களிடையே தேசிய எண்ணம் வளர்வதை விரும்பவில்லை. முக்கியமாக ஆஸ்திரியாவில் தேசிய எண்ணம் பரவவிடாமல் தடுக்க

நினைத்தார். இவ்வாறு விடுதலை மற்றும் தேசிய எண்ணங்களின் வளர்ச்சியை அவர் விரும்பவில்லை.

**மெட்டர்னிக் திட்டம் (Metternich System) :**

மெட்டர்னிக் திட்டம் என்பது, பூரணமான எதேச்சதிகார பிற்போக்கு அரசுகளை அமைத்தலும், ஐரோப்பாவில் விடுதலை, புரட்சி இயக்கங்களை நசுக்குதலுமே ஆகும். இந்தத் திட்டத்தில் அடிப்படையிலேயே இவருடைய செயல்கள் இருந்தன. பேச்சுரிமையும், பத்திரிகை சுதந்திரமும், பாராளுமன்ற ஜனநாயகமும் மெட்டர்னிக் திட்டத்தின் பரம விரோதிகள். எனவே, அவற்றை ஒழிப்பதில் தீவிரமாக செயல்பட்டார் மெட்டர்னிக்.

**ஐரோப்பாவில் மெட்டர்னிக் திட்டம் செயல்படுத்தப்படுதல் :**

**1. ஆஸ்திரியா :**

ஆஸ்திரியப் பேரரசில் ஜெர்மானியர்கள், மாகியர்கள், இத்தாலியர்கள், செக் ஆகிய பல்வேறு இனத்தவர்கள் காணப்பட்டனர். அவர்களிடம் தேசிய உணர்ச்சியும் அரசியல் ஒற்றுமையும் இல்லை. எனவே அமைதியின்மையும், குழப்பங்களும் காணப்பட்டது. எனவே இங்கு எதேச்சதிகார முடியாட்சியை வெற்றிகரமாக அமைக்க முடிந்தது.

a. **கல்விக் கட்டுப்பாடு :** இளைஞர்களின் சுதந்திர எண்ணங்களை ஒடுக்குவதற்கு அவர்களை அதிகமாக இருக்கக்கூடிய பல்கலைக் கழகங்கள் மீது கட்டுப்பாடுகளை விதித்தார். புத்தகங்கள் தணிக்கை செய்யப்பட்டன. மாணவர்களின் அரசியல் கூட்டங்கள் தடைசெய்யப்பட்டன. அரசியல் வரலாறு போன்ற பாடங்கள் பாடத்திட்டத்திலிருந்தே நீக்கப்பட்டன.

b. **பத்திரிக்கைத் தணிக்கை :** விடுதலை எண்ணங்களும் தேசீய உணர்வுகளும் பரவாமல் இருக்க பத்திரிக்கைகள் தணிக்கை செய்யப்பட்டன. அப்படி விடுதலை கருத்துக்களைப் பரப்பும் பத்திரிக்கைகள் தடைசெய்யயப்பட்டன.

c. **எல்லைப் புறங்களில் பாதுகாப்பு :** விடுதலைக் கொள்கைகள், புரட்சி எண்ணங்களைக் கொண்ட புத்தகங்கள், பிரதிகள் நாட்டின் உள்ளே வராமல் இருக்க நடவடிக்கைகள் எடுத்தார். வெளிநாட்டுப் பயணங்கட்குத் தடை

விதிக்கப்பட்டது. விடுதலை மற்றும் புரட்சிக் கருத்துக்களைப் பற்றிப் பேசியவர்கள் விசாரணை இன்றி சிறையிலடைக்கப்பட்டனர்.

ஆஸ்திரியப் பேரரசு தழைத்தோங்க வேண்டுமென்றால் விடுதலை, புரட்சிக் கருத்துக்களை நசுக்க் வேண்டும் என்றார். எனவே, இவருடைய திட்டம் வெற்றிகரமாக ஆஸ்திரியாவில் செயல்படுத்தப்பட்டது.

**2. ஜெர்மனி :**

ஜெர்மன் கூட்டமைப்பு ‘‘மக்களின் கூட்டமைப்பாக இல்லாமல் மன்னர்களின் கூட்டமைப்பாகவே’’ காணப்பட்டது. விடுதலை எண்ணம் கொண்ட மக்கள் ஏமாற்றம் நிறைந்தவர்களாகக் காணப்பட்டார்கள். 1817–ஆம் ஆண்டு ‘மார்ட்டின் லூதர்’ போப்பாண்டவரை எதிர்த்த 300வது ஆண்டு நிறைவை ஒரு விழாவாகக் கொண்டாட ஆரம்பித்தனர். அப்போது பல்கலைக்கழக மாணவர்கள் பிற்போக்கு அரசியல் கொள்கையை எதிர்த்து கிளர்ச்சி செய்தனர். பிற்போக்கு நூல்கள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன.

இச்சமயத்தில் மெட்டர்னிக் தன் திட்டத்தை செயல்படுத்த முற்பட்டார். 1819–ல் ‘கார்ல்ஸ்பாட்’ என்ற இடத்தில் ஜெர்மானிய முக்கிய அரசியல் பிரமுகர்களின் கூட்டத்தை கூட்டி அதன் முடிவில் ‘‘கார்ல்ஸ்பாட் ஆணை’’ (Garlsbad Decrees)களை வெளியிட்டார். அதன்படி பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மாணவர்கள் கண்காணிக்கப்பட்டனர். அரசுக்கெதிரான புரட்சியாளர்களின் சதித்திட்டங்களைக் கண்டறிய நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டது. பத்திரிக்கைச் சுதந்திரம் பறிக்கப்பட்டது. இதன் விளைவாக பிரான்சிஸ்விக் சாக்ஸனி, ஹெசிஹாசல் ஆகிய ஜெர்மானியப் பகுதிகளில் புரட்சி ஒடுக்கப்பட்டது.

**3. இத்தாலி :**

வீயன்னா மாநாட்டின் மூலம் இத்தாலியின் வட பகுதிகளில் ஆஸ்திரியாவின் ஆதிக்கத்தை நிலைநாட்டியிருந்தார் மெட்டர்னிக். நேப்பிள்ஸில் முடியாட்சியை ஏற்படுத்த இரண்டாம் பெர்டினாண்டுக்கு ஆதரவு அளித்தார். அத்துடன் அவருடன் ரகசிய உடன்படிக்கை ஒன்று செய்துகொண்டார்.

1820–ல் நேப்பிள்ஸில் கிளர்ச்சி ஏற்பட்டபோது ஆஸ்திரியப் படை அனுப்பப்பட்டு, கிளர்ச்சி நசுக்கப்பட்டது. 1821–ல் பீட்மாண்டில் கிளர்ச்சி ஏற்பட்டபோது அதுவும் ஒடுக்கப்பட்டது. மேலும், பார்மா, மாடனா, போப்பின் பகுதிகளிலும் புரட்சி நடவடிக்கைகள் ஒடுக்கப்பட்டன.

இதனால்தான் ஹேய்ஸ் என்பவர் ''ஆஸ்திரியாவின் பிற்போக்கு தேர் இத்தாலியின் தலையையும் வாலையும் நசுக்கிப் போட்டது'' என்கிறார்.

**4. ஸ்பெயின் :**

வீயன்னா ஏற்பாட்டின்படி ஏழாம் பெர்டினாண்டு ஸ்பானிய மன்னராக்கப்பட்டார். இவர், ஸ்பெயின் நாட்டில் விடுதலை இயக்கங்களை ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுத்தார். விடுதலைக் கருத்துக்களை ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுத்தார். விடுதலைக் கருத்துக்களை கொண்ட அரசியலமைப்பை ரத்து செய்தார்.

ஆனாலும், புரட்சி இயக்கம் பரவியதால், வல்லரசுகளின் உதவியை நாடினார். 1822ல் வெரொனாவில் மாநாடு கூடியபோது, மெட்டர்னிக் ஸ்பானியப் பிரச்சனைகட்கு முக்கியத்துவம் கொடுத்தார். ஒரு பிரெஞ்சுப் படை அனுப்பப்பட்டு கிளர்ச்சி முறியடிக்கப்பட்டது. ஏழாம் பெர்டினாண்டின் எதேச்சதிகாரம் நிலைநாட்டப்பட்டது.

**5. பிரான்சு :**

நெப்போலியனின் வீழ்ச்சிக்குப் பின், பிரான்சைச் சுற்றி வலிமையான நாடுகளை உருவாக்க முயன்றார் மெட்டர்னிக். பிரெஞ்சுப் புரட்சியின் கருத்துக்கள் ஐரோப்பாவில் பரவாமல் தடுப்பதில் கவனமாக இருந்தார். ஆனால், முடியாடசியை பிபிரஞ்சு மக்கள் ஏற்றுக் கொண்டதால் அதன் பின் மெட்டர்னிக் அங்கு அதிக கவனம் செலுத்தவில்லை. எனவேதான் அவருக்குத் தெரியாமலேயே புரட்சி இயக்கங்கள் வளர்ந்து பின்னர் 1830, ஜுலையிலும், 1848, பிப்ரவரியிலும் பிரான்ஸில் பெரும் புரட்சி ஏற்பட்டது. அதன் விளைவாக பல ஐரோப்பிய நாடுகளிலும் புரட்சி ஏற்பட்டது. மெட்டர்னிக் நாட்டை விட்டே ஓடினார். இதுவே மெட்டர்னிக் திட்டத்தின் தோல்விக்கும் வழிவகுத்தது.

## மெட்டர்னிக் திட்டத்தின் தோல்விக்கான காரணங்கள்

**1) புரட்சிக் கருத்துக்களை நசுக்க முடியவில்லை :**

1. புரட்சிக் கருத்துக்களை நசுக்கினார் மெட்டர்னிக். ஆனால், புரட்சிக் கருத்துக்களின் வளர்ச்சியையும், அவை பரவியதைபும் தடுக்க முடியவில்லை. மெட்டர்னிக்கின் கடுமையான சட்டங்களுக்கு மத்தியில் புரட்சிக் கருத்துக்களே வெற்றியடைந்தன. 1848–ல் பிரான்சில் வெடித்த புரட்சி, ஆஸ்திரியாவுக்கு பரவி நிலைமை கட்டுக்கடங்காமல் போகவே பதவி விலகி இங்கிலாந்திற்கு ஓடிவிட்டார் மெட்டர்னிக். அவர் சகாப்தமும் முடிந்தது.

**2. இங்கிலாந்தின் எதிர்ப்பு :**

பிற நாட்டு விவகாரங்களில் நேரடியாகத் தலையிடும் ‘மெட்டர்’னிக் திட்டத்தை இங்கிலாந்து ஆரம்பத்திலிருந்தே எதிர்த்து வந்தது. விடுதலை இயக்கங்கள் மீது பற்றுக்கொண்ட இங்கிலாந்து டிராப்போ, வெரோனா மாநாடுகளில் எதிர்த்து, பின்னர் ஐரோப்பிய கூட்டமைப்பிலிருந்தே வெளியேறியது. இதனால் மெட்டர்னிக் திட்டம் தோல்வியடைந்தது.

**3. தேசிய தன்மையின் வளர்ச்சி :**

ஜெர்மனி, இத்தாலி, ஸ்பெயின் ஆகிய நாடுகளில் தேசியத் தன்மையின் வளர்ச்சி மெட்டர்னிக் திட்டத்திற்கு ஒரு சவாலாகவே இருந்தது. மேலும் தேசிய இயக்கங்கட்கு இங்கிலாந்து வெளிப்படையாக ஆதரவு தெரிவித்து வந்தது. இதனால் மெட்டானிக் திட்டம் தோல்வியடைந்தது.

**மதிப்பீடு :**

1815 முதல் 1848 ஐரோப்பிய அரசியலில் ஆஸ்திரிய நாட்டிற்கு தலைமையிடம் கிடைக்கச் செய்தவர் மெட்டர்னிக் ஆவார். நாட்டுப்பற்றின் காரணமாகவே ஐரோப்பாவில் பரவிவரும் புரட்சிக் கருத்துக்கள் ஆஸ்திரியாவிலும் பரவிவிடாமல் தடுக்க நினைத்தார். வீயன்னா மாநாட்டிலும், ஐரோப்பியக் கூட்டமைப்பிலும் இவருடைய ஆதிக்கமே இருந்தது. இவருடைய திட்டம் குறுகிய காலப் பயன்களைத் தந்தது. இவருடைய திட்டம் குறுகிய காலப் பயன்களையேத் தந்தது. இவருடைய பிற்போக்குக் கருத்துக்கள் புரட்சிக் கருத்துக்களுக்கு முன் தோல்வியடைந்தது. ஆனால், ஐரோப்பிய அரசியலில் சுமார் நாற்பது ஆண்டுகள் அமைதியை ஏற்படுத்தியவர் மெட்டர்னிக் என்று புகழப்படுகிறார்.

## <u>புனித உடன்பாடு (Holy Alliance)</u>

ரஷ்யாவின் சார் முதலாம் அலெக்சாந்தர் **(1801–1825) 1815–**ல் ஆரம்பித்த தூய இயக்கமே 'புனித உடன்பாடாகும்'. இவர் சிறந்த கிறிஸ்தவ மதப்பற்று மிக்கவர். வீயன்னா ஏற்பாட்டை உறுதிப்படுத்தவும், ஐரோப்பிய அரசர்களுக்கிடையே சகோதரத்துவத்தின் அடிப்படையில் ஒற்றுமையை ஏற்படுத்தவும், கிறிஸ்தவ மதத்தின் புனிதக் கோட்பாடுகளான 'நீதி, கிறிஸ்தவம், கருணை, அமைதி' (Justice, Christianity, Charity, Peace) ஆகியவற்றின் அடிப்படையில் அரசியல் கொள்கைகள் செயல்படவும் ஆரம்பிக்கப்பட்ட இயக்கமே 'புனித உடன்பாடாகும்'.

**புனித உடன்பாட்டின் வரலாற்றுப் பின்னணி :**

இந்தப் புனித உடன்பாட்டில் காணப்பட்ட கருத்துக்கள் இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்பே ஐரோப்பாவில் தோன்றியது. பிரெஞ்சு அரசர் நான்காம் ஹென்றி **(1589 – 1610)** எலிசபெத் அரசின் அரசியல் கெகள்கையின் தாக்கத்தினால் ''மாபெரும் திட்டம்'' (Grand Design) என்ற அமைப்பை அமைத்தார். பல்வேறு ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த **66** உறுப்பினர்களைக் கொண்ட 'பொதுக்குழு' (General Council) ஒன்று அமைக்கப்பட்டது. 'ஐரோப்பாவில் ஏற்படும் பிரச்சனைகளைத் தீர்த்து அமைதியை ஏற்படுத்துவதே' இதன் நோக்கமாகும். இது பற்றி நான்காம் ஹென்றின் அமைச்சரும் அவரது துநருங்கிய நண்பருமான சல்வி கூறியதாவது : ''ஐரோப்பாவில் அடிக்கடி ஏற்படும் ரத்தக்களரியை நிரந்தரமாக தடுப்பதும், ஐரோப்பிய அரசர்களை சகோதரத்துவத்தின் அடிப்படையில் ஒற்றுமையாக வாழச் செய்வதும் மாபெரும் திட்டத்தின் நோக்கமாகும்'' என்றார். ஆனால் **1610–**ல் நான்காம் ஹென்றி இறந்துவிடவே இத்திட்டம் முழுமையடையவும் இல்லை. செயல்படுத்தப்படவும் இல்லை.

இதன் பிறகு ஒரு நூற்றாண்டு கழித்து **1713–**ல் மீண்டும் இந்த மாதிரியான திட்டம் ஒன்று Abbe de St.Pierre என்பவரால் ஐரோப்பியக் கழகம் (European league) என்ற பெயரில் அமைக்கப்பட்டது. இந்த ஐரோப்பியக் குழுவில் சேர்ந்த உறுப்பினர்கள் ''ஒருவருக்கொருவர் போர் புரியும் உரிமையை விட்டுவிட வேண்டும். தங்களுக்குள் எழும் பிரச்சனைகளை 'நிரந்தர காங்கிரஸ்' (Permanent Congress) என்ற இந்த அமைப்பின் மூலமே தீர்த்துக்கொள்ள வேண்டும்''. இவ்வாறு 'ஐரோப்பிய நாடுகள்

ஒன்றுபட வேண்டும்' என்ற எண்ணம் ஏற்கனவே தோன்றியிருந்தது. அடுத்த நூற்றாண்டில், அதாவது **1815**–ல் இதே அடிப்படையில் தான் ரஷ்யாவின் சார் முதலாம் அலெக்சாந்தர் புனித உடன்பாட்டைத் தோற்றுவித்தார்.

**புனித உடன்பாட்டின் தோற்றம் :**

ரஷ்யா சார் முதலாம் அலெக்சாந்தர் தனது ஆட்சிக் காலத்தின் ஆரம்பத்தில் தாராளக் கருத்துகூகள் மீது அதிக நாட்டம் கொண்டிருந்தார். அதன் ஆட்சிக்குட்பட்ட போலந்தில் ஒரு அதசியலமைப்பை உருவாக்க நினைத்தார். ரஷ்யாவில் கூட ஒரு புதிய அரசியலமைப்பை உருவாக்க நினைத்தார். ஆனால், இந்த தாராளக் கருத்துக்கள் அவரிடம் ஆழமாக வேரூன்றவில்லை. மேலோட்டமாகவே இருந்தது. 'ஐரோப்பியக் கூட்டமைப்பு' (European Confederation) என்ற கருத்து இவரை வெகுவாகக் கவர்ந்துவிட்டது. நெப்போலியனுக்கெதிராக தேசப்படைகள் போர்புரிந்து கொண்டிருந்த போதே சர் அலெக்சாந்தர் இங்கிலாந்திடம் 'ஒரு பன்னாட்டு ஒழுங்கை ஏற்படுத்த வேண்டும். பன்னாட்டு ஒழுங்கை ஏற்படுத்த வேண்டுமானால் ஒவ்வொரு நாடும் உள்நாட்டில் ஒழுங்கை நிலைநாட்ட வேண்டும்' என்று கூறினார்.

இதன் அடிப்படையில் இங்கிலாந்தின் தலைமை அமைச்சர் வில்லியம் பிட்டுடன் ஒரு உடன்படிக்கை செய்துகொண்டார். அதன்படி ''ஐரோப்பாவில் நெப்போலியனுக்கெதிரான போர் முடிந்து அமைதி ஏற்பட்டபின், பொதுவான உலக அமைதிக்கு பங்கம் விளைவிப்பனவற்றைத் தடுக்க ஒருவருக்கொருவர் ஒத்துழைக்க வேண்டும்'' என்று முடிவெடுத்தனர். இதில் இங்கிலாந்தின் நோக்கம் 'பிரான்ஸ் மீண்டும் ஐரோப்பிய அமைதியைக் கெடுப்பதற்கு அனுமதிக்காமல் ஐரோப்பா முழுவதற்குமான ஒரு ஒழுங்கை ஏற்படுத்த வேண்டும்' என்பதுதான். ஆனால், அலெக்சாந்தரோ நான்காம் ஹென்றியின் 'மாபெரும் திட்டத்தின்' அடிப்படையிலும் இந்த புதிய ஒழுங்கு அமைய வேண்டும் என்று விரும்பினார். எனவே **1815** செப்டம்பர் **26**–ஆம் தேதி 'புனித உடன்பாடு' உருவாக்கப்படுவதாக அறிவித்தார் சார் முதலாம் அலெக்சாந்தர்.

**புனித உடன்பாட்டின் முக்கிய அம்சங்கள் :**

- கிறிஸ்தவ மதத்தின் புனிதக் கோட்பாடுகளான நீதி, கிறிஸ்தவம், கருணை, அமைதி, ஆகியவற்றின் அடிப்படையில் அரசியல் கொள்கைகள் செயல்படவும், ராஜதந்திர நடவடிக்கைகள் நடைபெறவும் வேண்டும்.
- ஐரோப்பியக் கிறிஸ்தவ மன்னர்கள் அனைவரும் கிறிஸ்தவக் குடும்பத்தில் சகோதரர்கள் ஆவர். தங்களுக்குக் கடவுளால் தான் அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது என்பதை உணர்ந்து கொண்டு தங்கள் மதக்கோட்பாடுகளுக்கு உட்பட்டே ஆட்சி புரிய வேண்டும்.
- தங்கள் நாட்டின் மக்களை பிள்ளைகளாகவும், தங்களை அவர்களின் அன்பான தந்தையுமாக பாவித்து நடந்து கொள்ள வேண்டும்.
- விடுதலை இயக்கங்களே பொதுவாக போர்கள் ஏற்பட முக்கியக் காரணம். எனவே அவை கிறிஸ்தவக் கொள்கைகளுக்குப் புறம்பானவை. ஆகவே, விடுதலை இயக்கங்கள் ஒழிக்கப்படவேண்டும்.

இவ்வாறு சமயச் சார்புடன் அரசியல் இணைந்து செயல்படுதலின் அவசியத்தின் அடிப்படையில் புனித உடன்பாட்டைத் தோற்றுவித்தார் சார் அலெக்சாந்தர். பன்னாட்டு ராஜதந்திரத்தில் ஒழுக்கத்தையும், ஐரோப்பாவில் அரசியல் விழிப்புணர்வையும் ஏற்படுத்தும் ஒரு அமைப்பாகவே இதனை நாம் கருதலாம். ஆஸ்திரியா, பிரஷ்யா ஆகிய நாடுகள் இப்புனித உடன்பாட்டில் சேர்ந்தன. ஆனால் இங்கிலாந்தோ ‘‘ஐரோப்பிய சுதந்திரத்திற்கு மறைவான ஆபத்து இதில் உள்ளது’’ என்ற சந்தேகம் கொண்டு புனித உடன்பாட்டில் கையெழுத்திட மறுத்துவிட்டது.

**மதிப்பீடு :**

சார் அலெக்சாந்தரின் புனித உடன்பாடு ‘இறந்தே பிறந்த குழந்தை’ (Still born) போன்றுதான் இருந்தது. இதற்கு யாருமே முக்கியத்துவம் தரவில்லை. எந்த நாடும் முழுமனதுடன் இதனை ஏற்றுக் கொள்ளவில்லை. இதன் கொள்கைகள் ஒருபோதும் செயல்படுத்தப்படவில்லை. ஆரம்பத்திலிருந்தே இந்த உடன்பாடு எல்லோராலும் தவறாகவே புரிந்துகொள்ளப்பட்டது. அதன் நோக்கங்களும் நடைமுறை முக்கியத்துவமும் தவறாகவே விளக்கமளிக்கப்பட்டன. ‘‘பிற்போக்குவாதத்தன்

அடையாளம் என்றும், விடுதலை எண்ணங்களுக்கு விரோகமாகச் செயல்பட்ட சதி என்றும் மக்களுக்கு எதிரான மன்னர்களின் கூட்டு'' (a symbol of Reaction, a conspiracy against Liberalism and a league of princess against their people) என்றும் இந்த உடன்பாடு கண்டிக்கப்பட்டது.

மெட்டர் நிக் (Metternich) என்பவர் இதனை 'தேவையற்ற வார்த்தைகளின் பத்திரமே' (Verbiage) என்றும், என்றும் ''a Foud sound nothing' என்றும் 'a moral demonstration' என்றும் வர்ணித்தார். டெலிராண்ட் என்பவர் இதனை 'a ludicrous Contract' என்று குறை கூறினார்.

இவ்வாறு சார் முதலாம் அலெக்சாந்தரால் தோற்றுவிக்கப்பட்ட 'புனித உடன்பாடு' எல்லோராலும் கண்டிக்கப்பட்டது. இது ஒரு புனிதமாகவோ, உடன்பாடாகவோ கருதப்படவில்லை. 1825 – டிசம்பர் மாதம் அலெக்சாந்தர் இறந்தவுடன் இந்த உடன்பாடு மறைந்து போனது.

## 1830–ஆம் வருட ஜூலைப் புரட்சி

## (JULY REVOLUTION, 1830)

வீயன்னா மாநாட்டின் ஏற்பாட்டின்படி பிரான்ஸ் நாட்டில் ''**18–ஆம் லூயி**'' **(1814–24)** பேரரசராக முடிசூட்டப்பட்டார். இவர் மிதவாத நோக்குடையவர். இவர் பிரெஞ்சுப் புரட்சியை மறக்கவில்லை. நெப்போலியனின் சீர்திருத்தங்களைப் பின்பற்றினார். பிரெஞ்சு மக்களின் ஆதரவைப் பெறும் நோக்கத்துடன் **1814** ஜூன் **4**–ஆம் தேதி, ''அரசியலமைப்புச் சாசனம்'' (Charter) ஒன்றை வெளியிட்டார். அதன்படி, இங்கிலாந்தில் அமைந்திருப்பதைப் போன்ற பாராளுமன்றம் அமைக்கப்பட்டது. மக்களின் உரிமைகளை மதித்து ''பேச்சுரிமை, மத வழிபாட்டுரிமை, பத்திரிக்கை சுதந்திரம்'' ஆகிய உரிமைகளை வழங்கினார். இது மன்னரே மக்களுக்கு மனமுவந்து கொடுத்த உரிமைகள் ஆகும். ஆனாலும், அதன்பின் நடந்த பல நிகழ்ச்சிகள் **1830**–ஆம் வருட ஜூலைப் புரட்சி ஏற்படக் காரணமாயின.

**ஜூலைப் புரட்சிக்கான முக்கியக் காரணங்கள் :**

**1. வெண் பயங்கரம் (White terror) :**

**18**–ஆம் லூயி பிரெஞ்சு மக்களுக்கு **1814**–ல் வழங்கிய அரசியலமைப்பு சாசனத்தை (பட்டயம்) தீவிரவாதிகள் எதிர்த்தனர். இவர்கள் பிரான்சில் எதேச்சதிகாரமும், சிறப்புரிமைகளும் மீண்டும் கொண்டுவரப்படவேண்டும் என்றனர். பத்தரிகை சுதந்திரம் பறிக்கப்படவேண்டும் என்றனர். நிலங்களை இழந்த நிலசுவான்தார்களுக்கு மீண்டும் நிலங்களைக் கொடுக்க வேண்டும் என்றனர். எனவே, மக்களுக்கு **18**–ஆம் லூயி வழங்கிய பட்டயத்தை எதிர்த்தனர். வாட்டர்லூ போரில் நெப்போலியன் தோற்கடிக்கப்பட்டபின் ஏற்பட்ட குழப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு, நாடடில் பயங்கர நடவடிக்கைகளை ஆரம்பித்தனர். இதற்கு, 'வெண் கொட்டம் அல்லது வெள்ளை கொடூர ஆட்சி' என்று பெயர். இவர்கள் மிதவாத அரச குடும்பத்தினரையும், கத்தோலிக்கர்களையும் தாக்க முற்பட்டனர். நாடெங்கிலும் கொலையும், கொள்ளையும் தாண்டவமாடின. இந்த நிலை **1816**–ஆம் வருடத் தேர்தல் வரை பிரான்சில் நீடித்தது.

## 2. முடியாட்சியை ஆதரிக்கும் பிரபுக்களின் வலிமை அதிகரித்தது :

பதினெட்டாம் லூயியின் மிதவாதக் கொள்கைகளை பிரபுக்களும், சமயக் குருமார்களும் எதிர்த்தனர். அவருடைய சீர்திருத்தங்களை விரும்பவில்லை. பிரான்சில் மீண்டும் எதேச்சதிகார முடியாட்சியை அமைக்கவும், இழந்த தங்கள் உரிமைகளையும், சலுகைகளையும் மீண்டும் பெறவும் நினைத்தனர். புதிய பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பெற்ற இவர்கள் உயர்குடியாளர் ஆட்சியை அமைக்க திட்டமிட்டனர். மேலும், ஐரோப்பிய அரசியலில் மெட்டர்னிக் வழியே பிரான்சும் செல்லவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. பிரான்ஸ் நால்வர் உடன்பாட்டில் சேர்ந்தது. பின் அது ஐவர் உடன்பாடானது.

## 3. பிரெஞ்சு மன்னர் பத்தாம் சார்லஸ் (Charlex – X) 1824 – 30 :

1924–ல் 18–ம் லூயி இறந்ததும், அவருடைய சகோதரர் ‘கவுண்ட் அர்ட்டாய்’ பத்தாம் சார்லஸ் என்ற பெயரில் பிரெஞ்சு மன்னரானார். இவர் ஒரு பிற்போக்குவாதி. இவர்தான் ஜூலை புரட்சிக்கு முக்கிய காரணம். இவருடைய ஆட்சிக் காலத்தில் பிரபுக்களும் குருமார்களும், 18–ஆம் லூயி வழங்கிய தாராள சீர்திருத்தங்களை அகற்றவும், எதேச்சதிகாரத்தை நிலைநாட்டவும் முயன்றனர். ஆனால், மக்கள் மனதில் புரட்சியின் வடுக்கள் ஆழமாகப் பதிந்திருந்ததால், பத்தாம் சார்லஸின் பிற்போக்குக் கொள்கைகளை ஏற்க மறுத்து, பின்னர் புரட்சியின் மூலம் தூக்க எறிந்தனர்.

## 4. ‘‘வில்லெல்’’ மந்திரிசபை (Villele Ministry) :

1821-ல் வில்லெஸ் தலைமையில் புதிய மந்திரிசபை அமைக்கப்பட்டது. அப்போது முடியாட்சியைப் பின்பற்றுகிறவர்கள் அரசாங்கத்தில் ஆதிக்கம் கொண்டிருந்தனர். பிற்போக்குக் கொள்கை கொண்ட வில்லெல் மந்திரிசபை 1827 வரை நீடித்தது. அப்போது பத்திரிகைகைத் தணிக்கை முறை அமல்படுத்தப்பட்டது. மக்களது உரிமைகள் பறிக்கப்பட்டன. மேலும், வில்லெலின் நடவடிக்கைகளால் தொழிலதிபர்கள் ஆத்திரம் அடைந்தனர். நடுத்தரக் குடும்பத்தினர் இன்னலுற்றனர். எனவே, இவர் பதவி நீக்கம் செய்யப்பட்டார். புதிய தேர்தலுக்கு உத்தரவு இடப்பட்டது.

### 5. மார்டிக்னாக் மந்திரிசபை (Martignac Ministry) :

அதன்பின் நடைபெற்ற தேர்தலில் மிதவாதிகள் பெரும்பான்மை பெற்று மார்டிக்ளாக் தலைமையில் புதிய மந்திரிசபை அமைத்தனர். இது 1829 வரை நீடித்தது. இந்த அமைச்சரவை எடுத்த நடவடிக்கைகளையும், இயற்றிய சட்டங்களையும் அரசர் எதிர்த்தார். எனவே, மார்டிக்னாக் பதவி விலக்கப்பட்டார். புதிய தேர்தலுக்கு உத்தரவிடப்பட்டது.

### 6. போலிக்னாக் மந்திரிசபை (Polignac Ministry) :

முடியாட்சியை ஆதரித்த போலிக்னாக் என்ற பிற்போக்குவாதியின் தலைமையில் புதிய மந்திரிசபை அமைக்கப்பட்டது. இவர், பாராளுமன்றத்தின் எதிரி. எதேச்சதிகார ஆட்சியில் வழக்கமாகத் தோன்றும் தீமைகள் மீண்டும் தலைதூக்கின. மக்கள் புரட்சியின் போது தாங்கள் அடைந்த உரிமைகளை இழந்துவிடுவோமோ என்று பயந்தனர்.

### 7. பத்தாம் சார்லஸின் ஆணவமும், அவர் இயற்றிய அவசரச் சட்டமும் :

நாட்டில் கொராநதளிப்பு அதிகமானதால், போலக்னாக் மந்திரிசபை கலைக்கப்பட்டது. பாராளுமன்ற பிரதிநிதிகள் சபைக்கு புதிதாகத் தேர்ந்தெடுக்கப் – பட்டவர்களில் மிதவாதிகளே பெரும்பான்மை பெற்றனர். எனவே, போலிக்னாக்கின் தூண்டுதலின் பேரில் 1830, ஜூலை 25–ஆம் தேதி, மூன்று அவசர அடக்குமுறை ஆணைகளை வெளியிட்டார் பத்தாம் சார்லஸ். அதற்கு ‘‘செயின்ட் கிளௌடு (St.Cloud) ஆணைகள்’’ என்று பெயர். அதன்படி,

a) பிரதிநிதிகள் சபை கலைக்கப்பட்டு, புதிய தேர்தல் நடத்த உத்தரவிடப்பட்டது.

b) மக்களின் வாக்குரிமை குறைக்கப்பட்டது.

c) பத்திரிக்கை சுதந்திரம் பறிக்கப்பட்டது.

பத்தாம் சார்லஸின் இந்த ஆணைகள் மக்களுக்கு 18–ஆம் லூயியினால வழங்கப்பட்ட உரிமைகளின் அப்பட்டமான மீறுதல் ஆகும். எனவே, 1830, ஜூலை 28–ல் புதன்கிழமை பாரிசு நகர மக்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். புரட்சித்தலைவர் லபாயட்டின் (Lafayatte) தலைமையில் என்ற இடத்தில் ஒரு தற்காலக அரசு அமைக்கப்பட்டது.

தொழிலாளர்கள், முன்னாள் போர் வீரர்கள் மற்றும் மன்னரின் படைவீரர்கள் மக்களுடன் சேர்த்துக்கொண்டனர். சுமார் மூன்று நாட்கள் நடைபெற்ற தெருச்சண்டைகளிலும், குழப்பங்களிலும் 300 பேருக்கு மேல் மாண்டனர். பயந்துபோன பத்தாம் சார்லஸ், நாட்டை விட்டே ஓடினார். பிரதிநிதிகள் சபை ஜுலை 13–ல் ஆர்லியன்ஸ் வம்சத்தைச் சேர்ந்த ‘‘லூயி பிலிப்’’ (Louis Philippe) என்பரை ‘‘பிரெஞ்சு மக்களின் மன்னராகத்’’ தேர்ந்தெடுத்தது. அரசியலமைப்புக்கு உட்பட்ட அரசாங்கம் பிரான்சில் அமைக்கப்பட்டது.

**1830 ஜுலைப் புரட்சியின் முக்கியத்துவம் (விளைவுகள்) :**

1) அரசியலமைப்புக்கு உட்பட்ட முடியாட்சி பிரான்சில் ஏற்படுத்தப்பட்டது. மக்களுக்கு மீண்டும் உரிமைகள் வழங்கப்பட்டது. ‘செயின்ட்கிளௌடு’ ஆணைணள் ரத்து செய்யப்பட்டன.
2) மெட்டர்னிக் ஒழித்துக்கட்ட நினைத்த தேசியம், விடுதலை எண்ணம் ஆகியவை உறுதியுடன் நிலைநாட்டப்பட்டன.
3) வீயன்னா மாநாடு ஒரு போலிக் கட்டிடம் என்பதனை இப்புரட்சி நிரூபித்தது. பெல்ஜியம் சுதந்திரம் அடைந்தது. ஜெர்மனி, இத்தாலி, ஸ்பெயின், போாச்சுக்கல், ஆகிய நாடுகளில் கிளர்ச்சி ஏற்பட்டது. அது தேசியத்தற்குக் கிடைத்த பெரிய வெற்றியாகும்.
4) மக்களளட்சி முறை வலுப்பெற இப்புரட்சி உதவியது.
5) புரட்சி இயக்கங்கட்கு பிரான்சும் இங்கிலாந்தும் ஆதரவு காட்டியதால், தேசிய விடுதலை இயக்கங்கள் தடையின்றி வளர்ச்சியடைந்தன.
6) இப்புரட்சி மெட்டர்னிக் திட்டத்த்தற்கு கிடைத்த ஒரு பெரிய தோல்வியாகும்.
7) இப்புரட்சியின் விளைவாக இங்கிலாந்தில் பாராளுமன்றச் சீர்திருத்தச் சட்டங்கள் இயற்றப்பட்டன.
8) மக்களின் ‘ஆளுமை’ அங்கீகரிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டன.

**ஐரோப்பாவில் ஜுலைப் புரட்சியின் பிரதிபலிப்புகள்**

**1. போலந்தில் கிளர்ச்சி :**

வீயன்னா ஏற்பாட்டிற்குப் பின்னர் ரஷ்யாவின் ‘‘முதலாம் சார் அலெக்ஸாந்தர்’’ அரசியலமைப்புக்கு உட்பட்டு போலந்தை ஆட்சி செய்தார். தனி நிர்வாகத்தையும், அதன்

தனி இராணுவத்தையும் அமைத்திருந்தார். ஆனால், மக்களுக்கு அதிருப்தி இருந்தே வந்தது.

ஆனால், 1825–ல் பதவி ஏற்ற அவரது சகோதரர் ''சார் முதலாம் நிக்கோலஸ்'' மக்களின் உரிமைகளை நசுக்க முற்பட்டார். எனவே, ஜுலைப் புரட்சியைப் பின்பற்றி போலந்திலும் கிளர்ச்சி ஏற்பட்டு, நாடு முழுவதும் பரவியது. வார்சாவில் ஒரு மாகாண ஆட்சியை புரட்சியாளர் அமைத்தனர். எனவே, ரஷ்யப்படைகள் போலந்துக்குள் புகுந்து புரட்சியாளர்களை கொன்று குவித்தது.

சரியான தலைவர் இல்லாததாலும், புரட்சியாளரிடையே கருத்து வேறுபாடு காணப்பட்டதாலும் புரட்சியாளர் சரணடைந்தனர். போலந்து ரஷ்யாவுடன் இணைக்கப்பட்டது. அது தனது தேசியத் தலைமையை இழந்தது. ரஷ்யாவின் ஒரு மாநிலமாக மாற்றப்பட்டது. இவ்வாறு ஜுலைப் புரட்சியினால் போலந்து என்ற ஒரு நாடே இல்லாமல் போய்விட்டது.

**2. இத்தாலியில் கிளர்ச்சி :**

ஜுலைப் புரட்சியின் பிரதிபலிப்பாக இத்தாலியிலுள்ள இரகசியக் கழகங்கள் சுறுசுறுப்படைந்தன. பார்மா, மாடனா, டஸ்கனி ஆகிய பகுதிகளில் ஆஸ்திரிய ஆட்சியை எதிர்த்து கிளர்ச்சிகள் ஏற்பட்டன. ஆனால், மெட்டர்னிக்கின் படைகள் புரட்சியை ஒடுக்கின. இதன் மூலம் ஆஸ்திரியாவின் மீது இத்தாலிய மக்களின் வெறுப்பு அதிகமாகியது.

**3. ஜெர்மனியில் கிளர்ச்சி :**

ஜுலைப் புரட்சியைப் பின்பற்றி, வடஜெர்மன் நாடுகளான சாக்ஸனி, ஹனோவர், பிரன்ஸ்விக், ஹெஸ்ஸி, ஆகியவற்றிலும், பவேரியா, பூரம்பர்க் போன்ற தென் ஜெர்மன் நாடுகளிலும், மக்கள் புரட்சி செய்து அரசியலமைப்புக்கு உட்பட்ட ஆட்சியை அகற்றக் கோரினர். சிற்றரசர்கள் மக்கள் கோரிக்கைகட்கு பணிந்து ஒப்புக்கொண்டனர். ஆனால், மெட்டர்னிக் கார்ல்ஸ்பர்ட் ஆணையை பயன்படுத்தி புரட்சியை அடக்கி வெற்றி கண்டார்.

## 4. பெல்ஜிய விடுதலைப் போர் :

வீயன்னா மாநாடு ஹாலந்து நாட்டுடன் பெல்ஜியத்தை இணைத்தது. இதற்குக் காரணம், பிரான்ஸின் ஆக்கிரமிப்பைத் தடுக்க ஹாலந்து பலப்படுத்தப்படவேண்டும் என்பதே ஆகும். ஆனால், மொழி, மதம், கலாச்ச்ாரம், பொருளாதாரம், ஆகியவற்றில் முற்றிலும் வேறுபட்ட பெல்ஜியம் மக்கள் தாங்கள் பிரிக்கப்பட்டு தனிநாடாக செயல்படவே விரும்பினர். மக்கள் தொகையில் குறைவான ஹாலந்து தங்களை ஆட்சி செய்வதை விரும்பவில்லை. அத்துடன் தங்கள் மீது டச்சுமொழி திணிக்கப்படுவதையும் எதிர்த்தனர்.

இவர்களது விருப்பத்தற்கு ம்ன்னர் முதலாம் வில்லியம் இணங்கவில்லை. எனவே, ஜூலைப் புரட்சியின் விளைவாக மக்களும் புரட்சியில் ஈடுபட்டனர். புரட்சிக்கு ஆதரவாக, பிரான்சும் இங்கிலாந்தும் படைகளை அனுப்பி வைத்தன. புரட்சிப்படையினர் வில்லியத்தின் படைகளை விரட்டியடித்தனர். பெல்ஜியப் புரட்சி வெற்றியடைந்தது. பெல்ஜியம் விடுதலை அடைந்தது.

**லண்டன் மாநாடு :**

a. பெல்ஜியத்தின் எதிர்காலம் பற்றி ஆலோசித்து முடிவெடுக்க லண்டனில் ஒரு மாநாடு கூட்டப்பட்டது. மாநாட்டின் முடிவுப்படி,
b. பெல்ஜியம் சுதந்திர நாடாக அங்கீகரிக்கப்பட்டது.
c. அதன் ‘நடுநிலை’ எல்லா ஐரோப்பிய நாடுகளாலும் ஒப்புக்கொள்ளப்பட வேண்டும்.
d. அங்கு அரசியலமைப்புக்கு உட்பட்ட முடியாட்சி அரசு அமைக்கப்படவேண்டும்.

இவ்வாறு பெல்ஜியம் **1831**–ல் தனி சுதந்திர நாடாக உருவானது. ‘சாக்ஸ்கோ பர்க்’ வம்சத்தைச் சேர்ந்த ‘லியோபோல்ட்’ பெல்ஜிய மன்னரானார். இது தேசியத் தன்மைக்குக் கிடைத்த மிகப்பெரிய வெற்றியாகும். வீயன்னா ஏற்பாட்டிற்குக் கிடைத்த மிகப்பெரிய தோல்வியாகும். மெட்டர்னிக் திட்டத்திற்குக் கிடைத்த மிகப் பெரிய மரண அடியாகும். இத்தாலி, ஜெர்மனி, போலந்து, போன்ற நாடுகளில், பிற்போக்கு சக்திகள் வெற்றி பெற்றாலும், **1830**–ஆம் வருட ஜூலைப் புரட்சி ஐரோப்பிய மக்களின் உரிமைகள் வலிமையடைய பெரிலும் காரணமாக அமைந்தது.

## 1848–ஆம் வருட பிப்ரவரிப் புரட்சி

## (FEBRUARY REVOLUTION, 1848)

**1830**–ஆம் வருட ஜூலைப் புரட்சிக்குப் பின்னர் 'லூயி பிலிப்' பிரெஞ்சு அரியணையில் அமர்த்தப்பட்டார். இவருடைய ஆட்சி ''ஜூலை முடியரசு'' என்று அமைக்கப்படுகிறது. இவர் தன்னை ''குடிமக்களின் மன்னராக'' (citizen king) அறிமுகப்படுத்திக்கொண்டார். முடியாட்சியின் அடையாளச் சின்னங்களான கிரீடம், செங்கோல் ஆகியவைகளைத் தூக்கி எறிந்தார். முற்போக்குக் கொள்கைகளைப் பின்பற்றி சில நடவடிக்கைகளை மேற்கொண்டார். லூயிபிலிப் வயது, சொத்துதகுதிகளைக் குறைத்து வாக்காளர் எண்ணிகையை அதிகப்படுத்தினார். ஆனாலும், கடைசி வரை அவரால் மக்கள் விருப்பப்படி நடந்துகொள்ள முடியவில்லை. நாட்டில் மக்களின் எதிர்ப்பு நாளுக்கு நாள் வளர்ந்து வந்து இறுதியில் புரட்சி ஏற்பட்டது. லூயி பிலிப் நாட்டைவிட்டு ஒடினார். பிரான்ஸ் இரண்டாம் முறையாக 'குடியரசாகப்' பிரகடனப்படுத்தப்பட்டது.

### 1848 பிப்ரவரிப் புரட்சிக்கான காரணங்கள் :

**1. கட்சிகளின் எதிர்ப்பு :**

லூயி பிலிப்பிற்கு எதிராக பல கட்சிகள் குரல் எழுப்பின. ''லெஜிடிமிஸ்ட்'' (Legitimists) கட்சியினர், 'பூர்போன்' பரம்பரையே நாாடடை ஆளவேண்டும் என்று நினைத்தனர். 'போனபார்ட் கட்சியினர்' (Bonapartists) நெப்போலியன் காலத்திய அரசு புதுப்பிக்கப்படவேண்டும் என்று நினைத்தனர். குடியரசுக் கட்சியினர் முதலில் லூயி பிலிப்பை ஆதரித்தாலும், மேலும் சீர்திருத்தங்கள் செய்யப்பட்டாததால், அடிக்கடி கலவரம் செய்தனர். இவ்வாறு மக்களிம் ஒற்றுமையன்மையும், மனக்கசப்பும், உள்ளக் குமுறலும் ஏற்பட்டது.

**2. தொழிலாளர்களிடையே காணப்பட்ட அதிருப்தி :**

தொழிற்புரட்சியின் விளைவாக, நாட்டில் தொழில் வளம் பெருகியது. ஆனால், தொழிலாளர்களின் கஷ்டங்கள் அதிகரித்தன. வேலையில்லா பிரச்சனை, குறைந்த ஊதியம், தொழிற்சங்க உரிமை, ஆகியவற்றின் அடிப்படையில் போராடினர். அவர்களின்

நன்மைக்காக இதுவரை யாரும் புரட்சி செய்யவில்லை. அவர்கள் நலன்களில் அக்கறைப்படவும் இல்லை. எனவே, புதிய சோசலிசக் கொள்கை உருவானது.

**3. சோஷலிச இயக்கத்தின் வளர்ச்சி :**

தொழிலாளர்களின் நலன் பேணும் 'சோஷலிஸ்ட் கட்சி' உதயமானது. தொழில்களின் அமைப்பு, தொழிலாளி முதலாளி உறவு, புதிய சமுதாயம், ஆகிய கருத்துக்கள் ஆழமாக விவாதிக்கப்பட்டன. இதனால் ''சோஷலிச இயக்கம்'' ஆரம்பமானது. சோஷலிச இயக்கத்திற்குத் தலைமை தாங்கியவர்களில் செயின்ட் சைமன், ராபர்ட் ஓவன், லூயி பிளாங் ஆகியோர் முக்கியமானவர்கள் ஆவர்.

**a) செயின்ட் சைமன் (St.Simon) 1760 – 1826 :**

இவருடைய கருத்துக்கள் சமுதாயச் சீர்திருத்தத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தது. ''செயல்திறன் மிக்க மனிதனால் சமுதாயத்தை நல்வழிப்படுத்த முடியும். ஏழைகளும், பணக்காரர்களும் ஒன்றுபட்டு உழைத்தால் சமுதாயம் முன்னேறும். தொழிற்சாலைகளை அரசே ஏற்று நடத்தவேண்டும். உழைப்புக்கேற்ற ஊதியம் வேண்டும்'' போன்ற தன் கருத்துக்களை வெளியிட்டார். 'Labour according to capacity and reward according to services' என்ற முறையில்தான் தொழிற்துறை நிறுவனங்கள் சீரமைக்கப்பட வேண்டும் என்றார். இதனால் ஒரு புதிய எழுச்சி ஏற்பட்டது.

**b) ராபர்ட் ஓவன் (1771 – 1858) :**

'பிரிட்டிஷ் சோசலிச இயக்கத்தின் தந்தை' எனப்படும் ராபர்ட் ஓவன், தொழிலாளர் பிரச்சனைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தார். கூட்டுறவு சங்கங்களின் மூலம் வேலை இல்லாதவர்கட்கு உதவி அளிக்கும் முறையை ஆதரித்தார். இவ்வாறு கூட்டுறவு இயக்கங்களின் வளர்ச்சிக்கு பாடுபட்டார். இவருடைய கருத்துக்கள் பிரெஞ்சு தொழிலாளர்களிடையே பிரபலமாகியது.

**c) லூயி பிளாங் (Louis Blanc) :**

லூயி பிளாங் சோசலிச இயக்கத்திற்கு ஓர் திட்டவட்டமான கொள்கையை வகுத்துக் கொடுத்தார். தன்னுடைய ''தொழிலாளர்களின் சீரமைப்பு'' என்ற நூலில்

‘‘ஒவ்வொரு மனிதனுக்கும் வேலை செய்யும் உரிமை இருக்கிறது; அந்த உரிமையைக் கொடுப்பதும், பாதுகாப்பதும் அரசாங்கத்தின் கடமையாகும்’’ என்று குறிப்பிட்டார்.

‘அரசாங்கமே முதலீடு செய்து தொழிற்சாலைகளை ஆரம்பித்து, அதில் தொழிலாளர்களின் நிர்வாகத்தை ஏற்படுத்தி லாபத்தைப் பிரித்துக் கொள்ளலாம்’’ என்றும் கூறினார்.

இக்கருத்துக்கள் பிரெஞ்சு தொழிலாளரிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தியது. தங்கள் பிரச்சனைகளைத் தீர்க்கவும், உரிமைகளைப் பெறவும் போராடினார் லூயி பிளாங்.

**4. ஹைசாட் (Guizot) :**

இவர் **1840–**ல் முதல் அமைச்சராக நியமிக்கப்பட்டார். இவர், அரசனுக்கு ஆலோசகராகவும் செயல்பட்டார். இவர் பதவி ஏற்ற பிறகு, தொழிலாளர்களின் கிளர்ச்சிகள் ஒடுக்கப்பட்டன. பழைய சட்டங்கட்கும் சபைகட்கும் உயிரூட்டினார். நாட்டின் பிரச்சனைகளைப் பற்றி இவர் கவலைப்படவில்லை.

அப்போது பிரதிநிதிகள் சபையில் முக்கியத் தலைவராகத் திகழ்ந்தவர் தையர்ஸ் (Thiers) என்பவராவார். இவருக்கும் ஹைசாட்டுக்கும் பல விஷயங்களில் கருத்து வேற்றுமை ஏற்பட்டது. தையர்ஸ் சிறந்த சிந்தனையாளர். தாராளக் கொள்கைகளை ஆதரித்தார். அரசனின் தன்னாட்சி முறைக்கு எதிர்ப்பு தெரிவித்தார். வாக்குரிமை விரிவுபடுத்தப்பட வேண்டுகோள் விடுத்தார். ஆனால், ஹைசாட் இதனை எதிர்த்தார்.

நாட்டில் சட்டமன்ற சீர்திருத்தமும், தேர்தல் முறையிலும், வாக்குரிமையிலும், சீர்திருத்தங்கள் கேட்டு **1848–**ஆம் வருட துவக்கத்தில் கிளர்ச்சிகள் ஏற்பட்டன. ஆனால், கிளர்ச்சிகளை அதிகப்படுத்தும் அளவிற்கு ஹைசாட் ஒரு சொற்பொழிவு ஆற்றினார். ‘‘மக்களின் குறைபாடுகள் கண்மூடி.தனமானவை. அவர்கள் கேட்கும் அரசியல் மாற்றங்கள், மாறுபட்ட மனப்பான்மை கொண்டு எழுந்தவை’’ என்று பேசினார். இதனால், நாட்டின் எல்லாக் கட்சிகளும் அரசுக்கு எதிராக ஒன்று சேர்ந்தன.

### 3. சீர்திருத்த விருந்தும், பிப்ரவரிப் புரட்சியும் (Reform Banquets) :

ஹைசாட்டின் பேச்சிற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவும், ஜனநாயக ரீதியிலான அரசு அமைய வேண்டுமென்றும், வாக்குரிமை விரிவுபடுத்தப்படவும், நாடெங்கிலும் ‘‘சீர்திருத்த விருந்துக்கு’’ தையர்சும், அவரின் ஆதரவாளர்களும் ஏற்பாடு செய்தனர்.

இத்தகைய கூட்டம் ஒன்று பாரிசு நகரில் 1848 பிப்ரவரி 22–ஆம் தேதி நடக்க இருந்தது. ஆனால், இக்வட்டத்தை அரசு தடை செய்தது. எனவே கோபமடைந்த பொதுமக்கள் ஹைசாட்டை பதவி விலக்கக் கோரினர். ஹைசாட் மாளிகை முன்பு ஆர்ப்பாட்டம் நடத்தினர். அப்போது பாதுகாப்புப் படையினர் சுட்டதில் 23 போ கொல்லப்பட்டனர். எனவே நாட்டில் அமைதி இன்மை ஏற்பட்டது. பல இடங்களில் தீவட்டி ஊர்வலம் நடத்தப்பட்டது.

இச்சூழ்நிலையில் ஹைசாட் பதவி விலகினார். மகிழ்ச்சியடைந்த மக்கள் மன்னரைப் பதவியிலிருந்து விரட்டி பிரான்சில் குடியரசை அமைக்க எண்ணினர். கிளர்ச்சியை அடக்க அனுப்பப்பட்ட படையினரும் மக்களுடன் சேர்ந்து கொண்டனர். எனவே லூயிபிலிப் முடி துறந்து 1848 பிப்ரவரி 24–ல் இங்கிலாந்துக்கு ஓடினார். பிரான்ஸில் ‘‘இரண்டாவது குடியரசு’’ பிரகடனப்படுத்தப்பட்டது.

### 1848–ம் வருட பிப்ரவரி புரட்சியின் பிரதிபலிப்புகள் :

### 1. ஆஸ்திரியாவில் புரட்சி :

பிப்ரவரிப் புரட்சி முதலில் ஆஸ்திரியாவில் எதிரொலித்தது. ஏற்கனவே ஆஸ்திரியாவில் மெட்டர்னிக்கின் அடக்குமுறைக்கு எதிராக நாட்டின் பல பகுதிகளில் கிளர்ச்சிகள் நடைபெற்று வந்தன. இப்போது பிப்ரவரிப் புரட்சியின் தூண்டுதலால் பொஹிமியா, செக்கோஸ்லோவாகியா, ஹங்கேரி, ஆகிய பகுதிகளில் புதிய அரசியலமைப்பை ஏற்படுத்த மக்கள் பொங்கி எழுந்தனர்.

தொழிலாளர்களும் மாணவர்களும் புரட்சியாளர்களுடன் சேர்ந்து கொண்டனர். மெட்டர்னிக்கினால் புரட்சியை அடக்க அனுப்பப்பட்ட படை மக்களுடன் சேர்ந்துகொண்டது. நிலைமையை சமாளிக்க முடியாத மெட்டர்னிக் நாட்டை விட்டு ஓடினார். அத்துடன் மெட்டர்னிக் சகாப்தமும்’ முடிந்தது.

பின்னர், பேரரசர் முதலாம் பெர்டினாண்டு, பொஹிமியாவிலும், ஹங்கேரியிலும் புரட்சி இயக்கங்களை நசுக்கினார். ஆனாலும், சிறுபபன்மை இனத்தவர்கட்கு சில உரிமைகளும் நாட்டில் சில சீர்திருத்தங்களும் கொண்டுவரப்பட்டன.

**2. ஜெர்மனியில் புரட்சி :**

**1848–** பிப்ரவரி புரட்சியின் விளைவாக ஜெர்மானிய சிற்றரசுகளிலும் புரட்சி இயக்கம் பரவியது. மக்களின் அடிப்படை உரிமைகளைப் பெறவும், புதிய அரசியலமைப்பை உருவாக்கவும், ஜெர்மானிய ஐக்கியத்தை ஏற்படுத்தவும், புரட்சியாளர்கள் கோரிக்கை வைத்தனர்.

சாக்ஸனி, ஹனோவர், பவேரியா, ஆகிய பகுதிகளில் மக்களிடையே கொந்தளிப்பு ஏற்பட்டது. பிரஷ்ய அரசர் பிரடரிக் வில்லியம் ரஷ்ய மன்னரின் உதவியுடன் கிளர்ச்சியை அடக்க முயன்றார். ஆனால், கிளர்ச்சி தீவிரமடையவே பல சீர்திருத்தங்களை அறிவித்தார். தேசியவாதிகள் **1848–**ல் 'பிராங்கர்ட்' என்னுமிடத்தில் கூடி, ஐக்கிய ஜெர்மனிக்கு புதிய அரசியலமைப்பை உருவாக்க முயற்சித்தனர். ஆனால், அரசர் அதனை ஏற்றுக்கொள்ள மறுத்தார். தேசீயவாதிகள் கைது செய்யப்பட்டனர். புரட்சி அடக்கப்பட்டது.

**3. இத்தாலியில் புரட்சி :**

பிப்ரவரியில் புரட்சியின் விளைவாக இத்தாலியிலும் புரட்சி தோன்றியது. முதலில சிசிலி பகுதியில் தோன்றியது. பின்னர், ஆஸ்திரியாவின் கட்டுப்பாட்டில் உள்ள லம்பார்டி, வெனிஷியா ஆகிய பகுதிகளில் மக்கள் கிளர்ந்தெழுந்து ஆஸ்திரியப் படைகளை விரட்டியடித்தனர். பீட்மாண்ட் அரசர் மக்களுக்குப் புதிய சலுகைகளை வழங்கினார். வெனிஷியாவிலும் புதிய குடியரசு நிறுவப்பட்டது.

ஆனால், இத்தாலியப் பகுதிகளில் ஏற்பட்ட புரட்சி இயக்கங்களை ஆஸ்திரியத் துருப்புக்கள் அடக்கியது. புரட்சி இயக்கங்கட்கு தலைமை தாங்கிய சார்டீனிய, பீட்மாண்டின் அரசர் ''சார்லஸ் ஆல்பர்ட்''டின் படைகளை ஆஸ்திரியப் படைகள் தோற்கடித்தது. எனவே, அவர் முடிதுறந்தார். அவருக்குப் பின் அவர் மகன் இரண்டாம்

விக்டர் இம்மானுவேல் பதவி ஏற்றார். இவர் மட்டுமே அரசியலமைப்பை கலைக்க மறுத்தார். பின்னர், இவர் தலைமையில் இத்தாலி ஐக்கியமடைய வழிவகுத்தார்.

**1830, 1848–ஆம் வருடப் புரட்சிகளைப் பற்றிய ஒப்பீடும், மதிப்பீடும் :**

**1) நோக்கங்கள் வேறுபட்டவை :**

**1830–**ஆம் வருடப் புரட்சி பத்தாம் சார்லஸின் பிற்போக்குக் கொள்கைகளை எதிர்த்து ஏற்பட்ட புரட்சியாகும். அப்புரட்சி "முடியாட்சியின் வல்லாட்சி"யைத்தான் எதிர்த்தது. முடியாட்சியை எதிர்க்கவில்லை. எனவேதான் புரட்சியின் முடிவில் 'முடியாட்சியின் வல்லாட்சி ஒழிந்து அரசியலமைப்புக்கு உட்பட்ட முடியாட்சி ஏற்பட்டது.

ஆனால், **1848–**ஆம் வருடப் புரட்சியோ, ஜனநாயகக் கொள்கையுடன் சேர்ந்த சமதர்ம இயக்கத்தின் புரட்சியாகும். வாக்குரிமையை விரிவுபடுத்தவும், சமுதாயத்தில் சீர்திருத்தம் ஏற்படவும் நடந்த புரட்சியாகும். சமதர்மம், குடியாட்சி முறை இரண்டுமே இப்புரட்சியின் குறிக்கோள்கள் ஆகும். எனவேதான் இப்புரட்சியின் முடிவில் பிரெஞ்சு மன்னர் லூயி பிலிப் விரட்டப்பட்டு, பிரான்ஸ் நாடு ஒரு குடியரசாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.

**2)** இரண்டு புரட்சிகளுமே ஐரோப்பாவில் எல்லா நாடுகளிலும் எதிரொலித்தது. **1830–**ஆம் வருடப் புரட்சியின் போது அரசியலமைப்புக்கு உட்பட்ட அரசாங்கங்கள் அமையவே கிளர்ச்சிகள் ஏற்பட்டன. பெல்ஜியத்தில் தேசிய இயக்கம் உருவெடுத்து, அது விடுதலை அடைந்தது. பல நாடுகளில் மக்களாட்சியுகம் பிறந்தது.

ஆனால், **1848–**ஆம் வருடப் புரட்சி நடுத்தர வகுப்பினரின் ஆட்சியை ஒழித்து அரசியல் சமத்துவத்தை ஏற்படுத்தியது. வயது வந்தோர் யாவருக்கும் வாக்குரிமை அளிக்கப்பட்டு குடியரசுக் கொள்கையில் ஒரு புதுயுகம் ஆரம்பமானது. தேசிய உணர்வு பல நாடுகளில் தூண்டிவிடப்பட்டது.

**3)** மொ.த்த்தில் இரண்டு புரட்சிகளுமே தோல்விடைந்தன. புரட்சியாளர்கள் அடக்கப்பட்டனர். **1830–**ம் வருடப் புரட்சியினால் போலந்து என்ற நாடே மறைந்து

போனது. 1848–ம் வருடப் புரட்சியின் இறுதியிலும் பிரஷ்யா, சார்ட்டீனியா, தவிர மற்ற நாடுகளில் புரட்சியினால் நேரடி பலன் ஏதும் கிட்டவில்லை.

4) இப்புரட்சிகளின் விளைவாக ஐரோப்பிய ஆட்சியாளர்கள் சிலர் அரசியலமைப்புக்கு உட்பட்ட அரசாங்கத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொண்டனர். இந்த வகையில் பார்க்கும்போது, இப்புரட்சியின் அரசியலில் முன்னேற்றக் கருத்துக்களைப் புகுத்தியதாகக் கருதலாம். ஆஸ்திரியாவில் அடிமை வியாபாரம் நிறுத்தப்பட்டது. பிரஷ்யாவிலும், சார்டீனியாவிலும் அரசியலமைப்புகள் உருவாக்கப்பட்டன. ஸ்காட்டிநேவிய நாடுகளின் மக்கள் தாங்களுக்கென பல உரிமைகள் பெற்றனர். ஹாலந்து சட்டசபைக்கு அதிக அதிகாரங்கள் கிடைத்தன. சுவிட்சர்லாந்து நாட்டில் மக்களுக்கு அதிக அதிகாரங்கள் உள்ள புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட்டது. இங்கிலாந்தில் பெரும்பான்மை நடுத்தர வர்க்கத்தினருக்கு வாக்குரிமை வழங்கும் விதத்தில் வாக்காளர் சொந்தமாக வைத்திருக்கும் சொத்தின் அளவு குறைக்கப்பட்டது. கிரேக்க நாடும் பெரும்பான்மை இலத்தீன் அமெரிக்க நாடுகளும் சுதந்திரமடைந்துவிட்டன. சுருங்கக் கூறினால், 1830, 1848–ல் நடைபெற்ற புரட்சிகள் தோற்றவைகளாகக் காட்சியளிப்பினும், தேசியப்பற்றும், மக்களாட்சி முறையும் எல்லா எதிர்ப்புகளையும் உடைத்துத் தள்ளி மெதுவாக் முன்னேறி வந்தன என்பதே உண்மை.

## <u>மூன்றாம் நெப்போலியன்</u>

## (Napoleon III – 1848-1870)

**1848–**ம் வருடப் பிப்ரவரிப் புரட்சிக்குப் பின்னர் பிரான்ஸ் ஒரு குடியரசு நாடாகப் பிரகடனம் செய்யப்பட்டது. தற்காலிக அரசாங்கம் ஒன்று அமைக்கப்பட்டது. இந்த புதிய குடியரசிற்கு அரசியலமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டது. அதன்படி, **1848** டிசம்பர் **19–**ம் தேதி தேர்தல் நடந்தது. அதில் புகழ்பெற்ற நெப்போலியன் போனபார்ட்டின் சகோாரரும் ஹாலந்து நாட்டின் மன்னராக நியமிக்கப்பட்டவருமான லூயி போனபார்ட்டின் புதல்வரான லூயி நெப்போலியன் பெருவாரியான வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். பின்னர் **1852–**ல் தன்னை மூன்றாம் நெப்போலியன் என்ற பெயருடன் பேரரசராக மாற்றிக் கொண்டார். அப்போது இவர் ஐரோப்பாவில் மிக அதிக வலிமை பெற்ற அதிகாரம் உடையவராக விளங்கினார். **1870–**ம் ஆண்டு வரை பிரான்ஸை ஆளும் மூன்றாம் நெப்போலியனின் ஆட்சியில் வெற்றியும் தோல்வியும் மாறிமாறி காணப்பட்டன. **1870–**ல் மூன்றாம் நெப்போலியன் வீழ்ச்சியடைந்தார்.

### 1848 பிப்ரவரி புரட்சிக்குப் பின் பிரான்ஸ் :

**1848–**ம் வருட பிப்ரவரிப் புரட்சிக்குப்பின் அமைக்கப்பட்ட அரசாங்கத்தில் சமதர்மவாதிகளின் செல்வாக்கு அதிகமாயிருந்தது. எனவே அவர்கள் ‘வேலை கேட்பது மக்களின் உரிமை; வேலை கொடுப்பது அரசின் கடமை’ என்ற கொள்கையைச் செயல்படுத்தினார்கள். நாடு முழுவதும் பல ‘வேலை வாய்ப்பு ஸ்தாபனங்கள்’ நிறுவப்பட்டன. ஆனால், இச்செயல்களைக் குடியரசுவாதிகள் எதிர்த்தனர். **1848–**ல் ஏப்ரலில் வயது வந்தோருக்கு வாக்குரிமை அடிப்படையில் ‘தேசிய சட்டமன்றத்திற்கு’ உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். சட்டமன்றம் மே **4–**ம் தேதி கூடியது. இந்தப் புதிய சட்டமன்றத்தில் குடியரசுவாதிகள் பெரும்பான்மை பெற்றிருந்தனர். எனவே அவர்கள் சமதர்மவாதிகட்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொண்டனர். வெறுப்படைந்த சமதர்மவாதிகள் **1848**, ஜூன் மாதம் பெரும் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். இக்கிளர்ச்சியைத் தளபதி கெவக்நாக் என்பவர் இரும்புக்கரம் கொண்டு நசுக்கினார். சமதர்ம இயக்கம் நசுக்கப்பட்ட பின்பு, பிரெஞ்சுக் குடியரசுக்குப் புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட்டது. அதன்படி,

a. பிரான்ஸ் நாட்டின் குடியரசுத் தலைவர் நான்கு ஆண்டு காலத்திற்கு மக்களால நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படவேண்டும்.

b. புதிய சட்டமன்றம் அமைக்கப்படவேண்டும் என்று முடிவானது. இதன் அடிப்படையில் **1848** டிசம்பர் **19**–ஆம் தேதி தேர்தல் நடைபெற்றது. குடியரசுக் கட்சியின் சார்பில் தளபதி கெவக்நாக் (General Cavagnac) போட்டியிட்டார். நெப்போலியன் போனபார்ட்டின் சகோதரன் மகனும், அப்போது நெப்போலியன் குடும்பத்தில் மூத்த பிரதிநிதியாக இருந்தவருமான லூயி நெப்போலியனும் போட்டியிட்டார்.

**குடியரசுத் தலைவராக லூயி நெப்போலியன்:**

தேர்தலில் லூயி நெப்போலியனுக்கு ஆதரவான முறையில் இவர் பெயரே உயர்ந்ததாக இருந்தது. தனது பெரியப்பா மாவீரன் நெப்போலியனைப் போல பிரான்ஸ் நட்டின் பெருமையை உயர்த்துவார் என்று மக்கள் நம்பினர். அத்துடன் லூயி நெப்போலியன் பலதரப்பட்ட மக்களுக்கும் பல்வேறு வாக்குறுதிகளை வாரி வழங்கியிருந்தார். எனவே, பிரெஞ்சு மக்கள் நெப்போலியன் போனபார்ட்டின் பெருமையை மனதில் வைத்துக்கொண்டு லூயி நெப்போலியனுக்கு ஓட்டுப் போட்டுவிட்டனர். இவருக்கு ஐந்தரை மில்லியன் ஓட்டுக்கள் கிடைத்தன. மற்ற எல்லா வேட்பாளர்கட்கும் சேர்த்து இரண்டு மில்லியன் ஓட்டுக்கள் கூட கிடைக்கவில்லை.

**பிரெஞ்சுப் பேரரசராக லூயி நெப்போலியன்:**

குடியரசுத் தலைவராக இருந்த லூயி நெப்போலியன் விரைவிலேயே பேரரசரானார். நடைபெற்று முடிந்த தேர்தலில் குடியரசுக் கட்சியினரின் தோல்வி, மக்கள் குடியரசுக் கொள்கை மீது நம்பிக்கை இழந்துவிட்டார்கள் என்று காட்டுவதாக கருதிய லூயி நெப்போலியன், பிரான்சில் மீண்டும் மன்னராட்சியை ஏற்படுத்தத் திட்டமிட்டுச் செயல்பட்டார். பிரெஞ்சுக் கத்தோலிக்க மக்களையும் குடியானவர்களையும் திருப்திப்படுத்த் பல நடவடிக்கைகளை மேற்கொண்டார். வயதுவந்தவர்கட்கு வாக்குரிமை அளிப்பதற்கு முனைப்புடன் ஈடுபட்டார். இதனை சட்டமன்றம் எதிர்த்தது. குடியரசுத் தலைவர் பதவியை இரண்டாம் முறையாகவும் வகிக்க அனுமதிக்குமாறு சட்டசபையிடம் கோரினார். இதற்கும் சட்டசபை ஆதரவு தர மறுக்கவே, **1851** – டிசம்பர்

2–ம் தேதி ஒரு திடீர்ப்பு புரட்சியைத் தோற்றுவித்து எதிர்க்கட்சித் தலைவர்களைச் சிறைப்பிடித்தார். சட்டமன்றத்தைக் கலைத்தார். விக்டர்ஹ்யூகோ, தியர்ஸ் உட்பட ஆயிதக்கணக்கான தனது அரசியல் விரோதிகளை நாடு கடத்தினார்.

அதன்படி குடியரசுத் தலைவரின் பதவிக் காலத்தைப் பத்தாண்டு காலத்திற்கு நீடிக்கவும், அரசியலமைப்பைத் திருத்தியமைக்கவும், 1851 – டிசம்பர் 20–ல் மக்களிடம் வாக்கெடுப்பு நடத்தினார். இதற்கு ஆதரவாக ஏழரை மில்லியன் மக்கள் வாக்களித்தார்கள். லூயி நெப்போலியனது இந்த வெற்றி மிக உயர்வானதாயும் அதிகாரமிக்கதாயுமிருந்தது. 1852 – ஜனவரியில் புதிய அரசியலமைப்பு செயல்படுத்தப்பட்டது. அதன்பின் அனைத்து அதிகாரங்களையும் தன்வசப்படுத்திக் கொண்டு, தான் பேபரசராக இருப்பதா இல்லையா என்று மக்களின் இசைவைப் பெற 1852–நவம்பர் 21–ல் வாக்கெடுப்பு நடத்தினார். பேரரசராக ஆவதற்கு ஆதரவாக 78 இலட்சம் பேர் வாக்களித்தனர். எனவே, லூயி நெப்போலியன் ‘பேரரசர் மூன்றாம் நெப்போலியன்’ என்ற பெயருடன் 1852–டிசம்பர் 2–ஆம் தேதி முடிசூட்டிக் கொண்டார். இவ்வாறு பிரான்சில் குடியரசு மறைந்து இரண்டாவது பேரரசு உதயமானது. மூன்றாம் நெப்போலியன் பதினெட்டு ஆண்டுகள் (1852 – 1870) பிரெஞ்சுப் பேரரசராக ஆட்சி புரிந்தார்.

**மூன்றாம் நெப்போலியனின் உள்நாட்டுக் கொள்கை :**

மூன்றாம் நெப்போலியன் ஒரு சிறந்த ராஜதந்திரி. தான் பேரரசர் ஆவதற்குக் காரணம் நெப்போலியன் போனபார்ட்டின் சகோதரன் மகன் என்ற தகுதி மட்டுமே இருந்ததுதான் என்பதனை நன்றாக உணர்ந்திருந்தார். மேலும் மக்கள் தன்னிடம் விருவிருப்பான ஆட்சியையும் எதிர்பார்க்கிறார்கள் என்றும் உணர்ந்தார். எனவேதான் எதேச்சதிகாரமாக நடந்து கொண்டாலும், மக்களின் நன்மைக்காகவும், பிரான்ஸ் நாட்டின் புகழுக்காகவும், துணிச்சல் மிக்க, வெற்றி தரக்கூடிய கொள்கைகளைப் பின்பற்றினார்.

**1. புதிய அரசியலமப்பு :**

மூன்றாம் நெப்போலியனால் உருவாக்கப்பட்ட அரசியலமைப்பில் மன்னரின் அதிகாரமே மேலோங்கி இருந்தது. சட்டமன்றத்திற்கு உண்மையான அதிகாரம் இல்லை. மந்திரிகளை அரசரே நியமித்தார். அரசியலமைப்பிற்கு உட்பட்ட அரசாங்கம் போலத் தோன்றினாலும், அதிகாரங்கள் அனைத்தும் அரசரின் கையிலேயே இருந்தது. ஆனால், மக்கள் கண்டனக் குரல் எழுப்பவே 1860–க்குப் பிறகு அரசியலமைப்பில் தாராளப் போக்குடைய மாற்றங்களைச் செய்தார்.

**2. கிறிஸ்தவ சபைகட்குச் சலுகை :**

மூன்றாம் நெப்போலியன் அரசாங்கத்திற்கும் மதத்திற்கும் தொடர்பு உண்டாக்க விரும்பினார். கத்தோலிக்கத் திருச்சபைகள் ஊக்குவிக்கப்பட்டன. பல்கலைக்கழகங்கள் மற்றும் அரசாங்கப் பள்ளிகளின் மீது திருச்சபையின் ஆதிக்கம் ஏற்படுத்தப்பட்டது.

**3. தொழில் வளர்ச்சி**

தொழில்துறை வளர்ச்சிக்கு மூன்றாம் நெப்போலியன் ஆதரவு அளித்தார். தொழில் அபிவிருத்திக்காக குறைந்த வட்டிக்குக் கடன் வழங்கவும் தவணை முறையில் திருப்பிச் செலுத்தப்படவும் வசதி செய்து கொடுக்கப்பட்டது.

**4. தொழிலாளர்கட்கு வசதி :**

தொழிலாளர்களின் நலன் பேணிப் பாதுகாக்கப்பட்டது. வயோதிக காலத்திலும் விபத்தின்போதும் தொழிலாளர்கட்குப் பாதுகாப்பு அளிக்க இன்ஷ்ரன்ஸ் திட்டம் செயல்படுத்தப்பட்டது. அவர்களுக்காக தொழிலாளர் மருத்துவமனைகள் அமைக்கப்பட்டன. தொழிலாளர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட்டது. முதலாளி – தொழிலாளி பிரச்சினையைத் தீர்க்க சமரசக் கழகம் என்ற அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. தொழிற்சங்கங்கள் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டன.

**5. விவசாயம் வாணிபம் :**

நாட்டில் விவசாயத்தையும் வாணிபத்தையும் பெருக்க மூன்றாம் நெப்போலியன் நடவடிக்கைகளை மேற்கொண்டார். விவசாயிகட்குக் கடன் வழங்கும் சங்கங்கள்

நிறுவப்பட்டன. பாரிசிலும் வேறு சில மாகாணங்களிலும் நில வங்கிகள் அமைக்கப்பட்டன. விவசாயக் கழகங்கள் விரிவுபடுத்தப்பட்டன. சதுப்பு நிலங்கள் சாகுபடிக்குக் கொண்டு வரப்பட்டன. இதனால் விவசாய உற்பத்தி பெருகியது. இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளுடன் வியாபார ஒப்பந்தம் செய்யப்பட்டது. அயல்நாட்டு வாணிபம் செழிப்பதற்காக ‘பிரெஞ்சு அட்லாண்டிக் கம்பெனி’ என்ற அமைப்பு ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இதனால் நாட்டின் பொருளாதார நிலை உயர்ந்தது.

**6. போக்குவரத்து :**

மூன்றாம் நெப்போலியன் காலத்தில் பிரான்சில் போக்குவரத்து வசதி அதிகரிக்கப்பட்டது. துறைமுகங்கள் விரிவாக்கப்பட்டன. புதிய கால்வாய்கள் வெட்டப்பட்டது. இரயில் பாதைகள் விரிவுபடுத்தப்பட்டன. இதனால் தொழில் நகரங்கட்கு மூலப் பொருட்கள் வேகமாகவும், எளிதாகவும் கொண்டு செல்ல வசதி ஏற்பட்டது. தபால், தந்தி துறையும் வளர்ச்சியடைந்தது.

**7. பாரிசு நகரத்தின் வளர்ச்சி :**

பாரிசு நகரில் புதுமை அம்சங்கள் கொண்ட, கலைத்திறனுடன் கூடிய கட்டிடங்கள் கட்டப்பட்டன. சுகாதார வசதிகள் அதிகப்படுத்தப்பட்டது. நகரமே புதுமைக் கோலம் பெற்றது. ஐரோப்பாவிலேயே அழகுமிக்க நகரம் என்ற பெயர் பெற்றது. பாரிசு ஐரோப்பிய நாகரிகத்தின் உறைவிடமாகத் திகந்தது.

## மூன்றாம் நெப்போலியனின் வெளிநாட்டுக் கொள்கை

**நோக்கங்கள்:**

1. நெப்போலியன் போனபார்ட்டைப் போல புகழடையவும், அவர் அடைந்த உன்னதமான நிலையைத் தானும் அடையவும் விருப்பம் கொண்டார். அவர் விட்டுச் சென்ற அரும்பணிகளைத் தொடர்வதும் பிரெஞ்சுப் புரட்சியின் பெரும் இலட்சியங்களை அடைவதுமே தன் நோக்கம் என்றார் மூன்றாம் நெப்போலியன்.
2. பிரான்சு நாட்டிலும் பிற ஐரோப்பிய நாடுகளிலும் எற்பட்ட தேசிய உணர்ச்சியை மதிக்கவும் அதன் வெற்றிக்காக உழைக்கவும் விரும்பினார்.
3. வீயன்னா மாநாட்டின் எற்பாடுகளை உடைத்து அதனைத் தேல்விடையச் செய்ய நினைத்தார்.
4. பிரான்ஸ் நாட்டின் தொழில் வளர்ச்சிக்கும் வாணிபத்திற்கும் வசதியாக குடியேற்றப் பகுதிகளை பிரான்சுக்கு ஏற்படுத்த நினைத்தார்.
5. நெப்போலியன் போனபார்ட்டின் தோல்விக்குக் காரணம் அவர் இங்கிலாந்தை விரோதித்துக் கொண்டார் என்பதால், தானும் அந்தத் தவறைச் செய்யாமல் இங்கிலாந்துடன் நட்புடன் இருக்க நினைத்தார்.
6. இரஷ்யாவின் முதலாம் சார் நிக்கோலஸ் மூன்றாம் நெப்போலியனின் பதவியை அங்கீகரிக்கவில்லை. மேலும், இரஷ்யா தான் நெப்போலியன் போனபார்ட்டின் தோல்விக்குக் காரணம் என்று நினைத்து இரஷ்யாவை வெறுத்தார். அதற்காக வஞ்சம் தீர்க்கவும் எண்ணினார்.

**வெளிநாட்டுக் கொள்கையின் செயல் உருவம் :**

மேற்கண்ட நோக்கங்களின் அடிப்படையில் மூன்றாம் நெப்போலியன் தனது வெளிநாட்டுக் கொள்கையை அமைத்துக் கொண்டார். முதலில் விருவிருப்பான சில வெற்றிகள் கிடைத்தது. இவரது சில வெளிநாட்டு நடவடிக்கைகள் வினோதமாகவும், நிலையற்றதாகவும், நாணயமற்றதாகவும் இருந்தது. எனவே, இறுதியில் அவருடைய கொள்கைகள் நாட்டை அழிவிலும், அவமானத்திலும் கொண்டுபோய்விட்டது.

**1. கிருமிப்போர் (1854 – 56) :**

துருக்கியின் ஆதிக்கத்திலிருந்த பாலஸ்தீனத்திலுள்ள கிறிஸ்தவப் புண்ணிய ஸ்தலங்களைப் பாதுகாப்பது குறித்து துருக்கிக்கும் ரஷ்யாவிற்குமிடையே எழுந்த பிரச்சனையில் மூன்றாம் நெப்போலியன் தலையிட்டார். இந்த விவகாரத்தில் ரஷ்யாவின் தலையீட்டை வெறுத்தார். காரணம் இதனால் ரஷ்யாவின் செல்வாக்கும், பலமும் வளரக்கூடும் என்று பயந்தார். மேலும், இதில் தலையிடுவதன் மூலம் பிரான்சிலுள்ள கத்தோலிக்கர்களின் நல்லெண்ணத்தைப் பெறலாம் என்றும், நெப்போலியன் போனபார்ட் ரஷ்யாவில் அடந்த தோல்விக்கு வஞ்சம் தீர்த்துக் கொள்ளலாம் என்றும் நினைத்தார். எல்லாவற்றிற்கும் மேலாக, வீரம் பொருந்திய இராணுவச் செயலைச் செய்வதின் மூலம் தனது அதிகாரம் புகழடையும் என்ற எண்ணத்துடன் கிருமியப் போரில் கலந்துகொண்டார்.

இரஷ்யா கப்பற்படை ஒன்றை அனுப்பி வாலாச்சியா மோல்டேவியா ஆகிய துருக்கியப் பகுதிகளைக் கைப்பற்றியதுடன் போர் ஆரம்பித்தது. துருக்கிக்கு ஆதரவாக இங்கிலாந்தும் பிரான்சும் தங்கள் படையை அனுப்பின. இதனால் போரில் இரஷ்யா தோற்கடிக்கப்பட்டது. **1856–**மார்ச் **3–**ஆம் தேதி மூன்றாம் நெப்போலியன் தலைமையில் பாரிசில் 'அமைதி மாநாடு' கூட்டப்பட்டது. அதன் முடிவில் பாரிசு உடன்படிக்கை கையெழுத்தானது. இப்போரினால் பிரான்ஸ் ஒரு இலாபத்தையும் அடையாமலிருந்தாலும், மூன்றாம் நெப்போலியனின் பெருமை உயர்ந்தது. மக்கள் மத்தியில அவர் செல்வாக்கு அதிகமானது.

**2. மூன்றாம் நெப்போலியனும் இத்தாலிய இணைவும் :**

ஐரோப்பாவில் தோன்றிய தேசிய இயக்கங்கட்கு மூன்றாம் நெப்போலியன் முழு ஆதரவு அளித்தார். அப்போது இத்தாலியில் தோன்றிய தேசிய இயக்கத்திற்கு உதவ எண்ணினார். இத்ததலியின் சுதந்திர இயக்கத்தல் உண்மையான இரக்கம் நெப்போலியனிடமிருந்தது. அதனுடன் பிரான்சின் அதிகாரத்தையும், தனது அரசியல் தந்திரத் திறமையையும் வெளிக்காட்ட இதனை சிறந்த வாய்ப்பா எடுத்துக் கொள்ள ஆவலுள்ளவராக இருந்தார். **1858**, ஜுலையில் இத்தாலிய இணைவிற்குப் பாடுபட்ட கவுண்டகவூருடன் மறைவானதும் புகழ்பெற்றதுமான பிளாம்பியர்ஸ் சந்திப்பை மேற்கொண்டார். அந்த சந்திப்பின் போது மத்திய, வட இத்தாலியிலிருந்து ஆஸ்திரியரை

விரட்ட இரண்டு இலட்சம் வீரர்களைக் கொண்ட படையை அனுப்பி உதவி செய்வதாகவும் அதற்குப் பதிலாக நைஸ், செவாய் ஆகிய படைகளைப் பெற்றுக் கொள்வதாகவும் கவூருடன் ‘பிளாம்பியர்ஸ் உடன்படிக்கை’ செய்துகொண்டார்.

மூன்றாம் நெப்போலியனின் உதவியுடன் இத்தாலியர் மெகண்டோ, சால்வரினோ ஆகிய இடங்களில் ஆஸ்திரியர்களைத் தோற்கடித்தனர். லம்பார்டியிலிருந்து ஆஸ்திரியா விரட்டப்பட்டது. இச்சூழ்நிலையில் பிரஷ்யா இப்போரில் தலையிடும் அபாயம் ஏற்பட்டுவிடும் என்று பயந்து திடீரென ஆஸ்திரிய அரசர் பிரான்சிஸ் ஜோசப்புடன் ‘வில்லா பிராங்கா’ என்ற இடத்தில் உடன்பாடு செய்துகொண்டு போரை முடித்துக் கொண்டார், மூன்றாம் நெப்போலியன். இவ்வாறு அரை குறையாக உதவியது, இத்தாலியட்கட்கு பெரும் ஏமாற்றத்தை அளித்தது. மேலும் தம் ஒப்பந்தத்தின்படி முழுமையான உதவி அளிக்காமலிருந்தும் அதற்கு ஈடாகப் பேசிய செவாய் நைஸ் ஆகிய பகுதிகளைத் தமக்கு கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்தி நெப்போலியன் பெற்றுக்கொண்டதும் இத்தாலியட்கட்கு கடுங்கோபத்தை அளித்தது. மூன்றாம் நெப்போலியனின் இச்செயலை இத்தாலியர்களுக்கு இழைக்கப்பட்ட நம்பிக்கைத் துரோகம் என்று கூறி சினங்கொண்டார் கவுண்ட்கவூர். இங்கிலாந்துதும நெப்போலியனின் இச்செயலை வெறுத்தது. மூன்றாம் நெப்போலியனின் ஒழுங்கற்ற, நிலையற்ற வெளிநாட்டுக் கொள்கைக்கு இதுவே சான்று ஆகும்.

**3. குடியேற்றங்களை அமைத்தல் :**

பிரான்ஸ் நாட்டிற்குக் குடியேற்றங்களைப் பெறுவதில் மிகவும் அக்கறை கொண்டார். மேற்கு ஆப்பிரிக்க நாடான அல்ஜுரியாவை பிரான்சின் ஆதிக்கத்திற்குட்படுத்தினார். இந்தோசீனாவில் **1857–**ல் குடியேற்றம் அமைக்க பிரெஞ்சுப் படைகளை அனுப்பினார். **1853–**ல் கம்போடியா பிரெஞ்சுக் குடியேற்றம் ஆனது. மேலும், சீனாவுக்குப் பிரெஞ்சுத் துருப்புக்களை அனுப்பி அங்கு வியாபார மத உரிமைகளை **1860–**ல் டீன்ஸ்டின் (Tienstin) உடன்படிக்கைப்படி பெற்றார்.

**4. மூன்றாம் நெப்போலியனும், போலந்துப் புரட்சியும் :**

**1863–**ல் போலந்தில் ரஷ்ய ஆதிக்கத்தை எதிர்த்து மக்கள் பெரும் புரட்சி செய்தனர். தங்களுக்கு உதவி செய்யுமாறு புரட்சிக்காரர்கள் நெப்போலியனைக்

கேட்டுக்கொண்டனர். போலந்தில் கத்தோலிக்க மக்களே அதிகம் என்பதால், முதலில் புரட்சிக்காரர்கட்கு உதவி செய்ய நினைத்தார். ஆனால், அப்படி உதவினால், ரஷ்யா, ஆஸ்திரியா, பிரஷ்யா, ஆகிய நாடுகளுடன் போர் செய்யவேண்டிய நிலை ஏற்பட்டுவிடலாம் என்று பயந்தார். எனவே போலந்துப் புரட்சியாளர்கட்கு ஆதரவாக சார் இரண்டாம் அலெக்ஸாந்தருக்கு ஒரு கடிதம் எழுதியதுடன் நிறுத்திக் கொண்டார். போலந்துப் புரட்சியாளர்கள் ரஷ்யாவில் கொடூரமாக நசுக்கப்பட்டனர். போலந்துக்குப் பரிவு காட்டியதால் ரஷ்யாவின் வெறுப்பையும் கோழைத்தானமான இவர் நடந்து கொண்டதால் பிரெஞ்சுக் கத்தோலிக்கர்களின் வெறுப்பையும் சம்பாதித்துக் கொண்டார்.

**5. மெக்ஸிகோ விவகாரத்தில் தலையீடு :**

தனது இத்தாலியக் கொள்கையினால் இழந்த புகழை மீண்டும் பெற அசட்டுத்தனமாக ஒரு காரியத்தில் இறங்கினார் மூன்றாம் நெப்போலியன். **1863—**ல் அவர் புதுமையான மெக்ஸிகோத் துணிகரச் செயலில் ஈடுபட்டார். ஸ்பெயின் நாட்டிடமிருந்து விடுடுலையடைந்த மெக்ஸிகோ தான் கடன்பட்ட நாடுகட்குக் கடனைத் திருப்பிக்கொடுக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. மேலும், உள்நாட்டில் மீண்டும் மீண்டும் ஏற்பட்ட புரட்சிகளால் தொல்லையுற்றிருந்ததது. கடனை வசூல் செய்வதாக இங்கிலாந்து, பிரான்ச, ஸ்பெயின் ஆகிய மூன்று நாடுகளும் கூட்டாக ஆக்கிரமிப்பதாக இருந்தது. ஆனால், இங்கிலாந்து, ஸ்பெயின் ஆகிய நாடுகள் ஆக்கிரமிப்புச் செயலிலிருந்து விலகிச் சென்றன. ஆனால், மூன்றாம் நெப்போலியனின் இராணுவ நடவடிக்கை மூலம் மெக்ஸிகோவில் நேரடியாகத் தலையிட்டார். இது வெறி கொண்டதும், பகட்டானதுமான ஒரு திட்டமாகும்.

**1863—**ல் ஒரு பிரெஞ்சுப் படையை மெக்ஸிகோவிற்கு அனுப்பி அந்நாட்டைக் கைப்பற்றினார் மூன்றாம் நெப்போலியன். மெக்ஸிகோ அதிபர் ‘பெனிட்டோஜ்வாரஸ்’ நாட்டைவிட்டே ஓடினார். மெக்ஸிகோ ஒரு குடியரசு நாடாக அறிவிக்கப்பட்டது. ஆஸ்திரியப் பேரரசரின் சகோதரரான ‘மாக்ஸிமிலியன்’ என்பவரை மெக்ஸிகோவின் பேரரசராக்கினார் மூன்றாம் நெப்போலியன். ஆனால், இந்தப் புதிய ஏற்பாட்டை மெக்ஸிகோ மக்கள் சிறிதும் ஏற்றுக்கொள்ளவில்லை. எனவே, புதிய அரசை எதிர்த்துப்

போராட ஆரம்பித்தனர். கொரில்லாப் போர் முறையால் பிரெஞ்சுப் படைகள் அல்லல்பட்டன.

இச்சூழ்நிலையில் அமெரிக்காவில் உள்நாட்டுப் போர் முடிந்து அங்கு சமாதானம் ஏற்பட்டது. மன்றோக் கோட்பாட்டின் அடிப்படையில் அன்னியத் துருப்புக்கள் அமெரிக்க மண்ணிலிருந்து வெளியேற வேண்டுமென்று அமெரிக்கா கேட்டுக் கொண்டது. இதனால் **1867**–ல் பிரெஞ்சுப் படைகள் திருப்பி அழைக்கப்பட்டன. நெப்போலியனால் கைவிடப்பட்ட மாக்ஸிமிலியன், புரட்சியாளர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார். நெப்போலியனின் வெளிநாட்டுக் கொள்கை இங்கே படுதோல்வி அடைந்தது. மூன்றாம் நெப்போலியனின் மெக்ஸிகோத் துணிகரச் செயல் அவர் பெயருக்கும், புகழுக்கும் களங்கம் ஏற்படுத்தியது. பெரும் அவமானமடைந்தார். நாட்டிற்குப் பெரும் பொருள் இழப்பு ஏற்பட்டது. பிரான்சின் கௌரவம் மிகவும் பாதிக்கப்பட்டது.

**6. பிராங்கோ பிரஷ்யப் போரும் நெப்போலியனின் வீழ்ச்சியும் :**

ஐரோப்பாவில் பிரஷ்யாவின் வலிமை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வந்தது. புரட்டஸ்தாந்து நாடான பிரஷ்யா வலிமைமடைந்தால் தங்கள் நாட்டிற்கு ஆபத்து என்று பிரெஞ்சு கத்தோலிக்க மக்கள் பயந்தனர். ஜெர்மானியக் கூட்டமைப்பிலிருந்து பிரான்ஸின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளைப் பெற பிரஷ்யா முயற்சித்தது. இச்சூழ்நிலையில் தனது தோல்விகளைத் திசை திருப்ப ஒரு போர் அவசியம் என்பதனை மூன்றாம் நெப்போலியன் உணர்ந்தார். போரில் வெற்றி பெறுவது வாயிலாக வீழ்ச்சியடைந்துவரும் தனது அதிகாரத்தை நிலையான அடிப்படையில் நிலை நிறுத்தலாம் என்று மூன்றாம் நெப்போலியன் எண்ணினார்.

இச்சூழ்நிலையில் ஸ்பானிய அரியணை குறித்து பிரஷ்யாவிற்கும் பிரான்சிற்குமிடையே பகைகை ஏற்பட்டு அதன் விளைவாக போர் ஏற்பட்டது. (ஜெர்மானிய இணைவில் விரிவாகத் தரப்பட்டுள்ளது) போரில் பிரெஞ்சுப் படைகள் 'செடான்' போர்க்களத்தில் பிரஷ்யப் படைகளால் தோற்கடிக்கப்பட்டன. **1870**, செப்டம்பர் **1**–ம் தேதி, பதினேழாயிரம் வீரர்களை இழந்தபின், **1,04,000** வீரர்களுடன் மூன்றாம் நெப்போலியன் பிரஷ்யப் படைகளிடம் சரணடைந்தார். பிரான்சில் அடல்ப் தியர்சின் (Adolphe Thiers) தலைமையில் மூன்றாவது குடியரசு நிறுவப்பட்டது.

**மதிப்பீடு :**

நெப்போலியன் போனபர்ட்டின் புகழால் உயர்ந்த மூன்றாம் நெப்போலியன் திறமையற்றவராகக் காணப்பட்டார். நெப்போலியன் போனபார்ட்டிடம் காணப்பட்ட மன உறுதியும், அரசியல் தெளிவும், பிடிவாத குணமும் இவரிடம் காணப்படவில்லை. அத்துடன் அரசியல், சமூகம் ஆகியவைகளில் அவருக்கிருந்த பரந்த நோக்கும் இராணுவ அறிவாற்றலும் இவரிடம் சிறிதளவும் இல்லை. சில நேரங்களில் மட்டுமே இவரது கனவுகள் நனவானதுடன் அரசியல் தந்திரம், அரசியல் வல்லமை ஆகிய இவைகளில் இவரது அறிவாற்றல் ஒளி வீசியது.

மூன்றாம் நெப்போலியனின் திட்டங்கள் ஒழுங்கற்றதாகவும், கொள்கைகள் உறுதியற்றதாகவும் காணப்பட்டன. தாராளக் கொள்கைகளை உடைடவராக இருந்ததாலும், அனைத்து மக்களின் ஆதரவை இவரால் பெற முடியவில்லை. வெளிநாட்டுக் கொள்கையில் தனது இராஜதந்திரமற்ற நடவடிக்கைகளால் தோல்வியடைந்தார். கடைசிவரை புரிந்து கொள்ளவும், அறிந்து கொள்ளவும் முடியாத ஒரு புதிராகவே இருந்தார். தன்னுடைய நிலையற்ற, நாணயமற்ற கொள்கைகளாலும், உலகின் உண்மைகள் சாத்தியக் கூறுகள் இவற்றைப் பற்றித் தேவையான அளவு புரிந்துகொள்ளாததாலும் இறுதியில் மூன்றாம் நெப்போலியன் வீழ்ச்சியடைந்தார்.

## இத்தாலிய இணைவு

## (UNIFICATION OF ITALY)

பழங்கால இத்தாலி ரோமானியப் பேரரசின் கீழ் ஒன்றாக இணைந்த ஒரே நாடாக விளங்கியது. ஆனால், மத்திய காலத்தில் அது பல மாகாணங்களாகப் பிரிந்து கிடந்தது. நெப்போலியன் போனபார்ட் தன்னுடைய படையெடுப்புகளின் மூலம் இத்தாலிய மாகாணங்களைக் கைப்பற்றி ஓரளவு ஒற்றுமைப்படுத்தி வைத்திருந்தார். ஆனால், **1815–**ஆம் வருட வியன்னா மாநாடு இத்தாலியைக் கீழ்க்கண்டபடி மீண்டும் துண்டு துண்டாக பிரித்து, அதன் ஐக்கியத்தைக் குலைத்துப் போட்டது. தேசிய உயர்வை நசுக்கியது.

a. சார்டீனியா, பீட்மாண்ட் ஆகிய இரண்டு பகுதிகள் இத்தாலியச் சிற்றரசரான முதலாம் விக்டர் இமானுவேலிடம் கொடுக்கப்பட்டது.
b. லம்பார்டி, வெனிஷியா, இல்லீரியா ஆகிய பகுதிகள் ஆஸ்திரியப் பேரரசின் நேரடிக் கட்டுப்பாட்டின்கீழ் வைக்கப்பட்டது.
c. டார்மா, மாடனா, டஸ்கனி, ஆகிய பகுதிகள் ஆஸ்திரியாவின் மறைமுக ஆதிக்கத்தின் கீழ் வைக்கப்பட்டது.
d. நேப்பிள்ஸ், சிசிலி ஆகிய பகுதிகள் பூர்போன் சிற்றரர்களிடம் கொடுக்கப்பட்டது.
e. போப்பின் பகுதிகள், ரொமாக்னோ ஆகியவைப் போப்பாண்டவரின் ஆளுகைக்கு உட்படுத்தப்பட்டது.

இவ்வாறு இத்தாலியில் அந்நிய ஆதிக்கம் மேலோங்கிக் காணப்பட்டது. இத்தாலி என்பது ஒரு 'நிலவியல் சொல்லாகவே' (Geographical expression) இருந்தது. ஆனால், இப்பகுதிகளில் இத்தாலிய தேசப்பற்று வீழ்ச்சியுறவில்லை. ஆஸ்திரியாவின் ஆதிக்கத்தை இத்தாலிய மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. **1848–**க்குப் பிறகு நடைபெற்ற பல நிகழ்ச்சிகளின் விளைவாக இத்தாலியப் பகுதிகள் எல்லாம் ஒன்றாக இணைந்து ஒரே நாடானது.

**இத்தாலிய இணைவிற்கு இருந்த தடைகள்:**

இத்தாலியப் பகுதிகள் மீது இருந்த ஆஸ்திரியாவின் ஆதிக்கமே இத்தாலிய இணைவிற்கு மிகப்பெரிய தடையாக இருந்தது. **1830, 1848–**ஆம் வருடப் புரட்சிகளின்

பிரதிபலிப்புகள் இத்தாலியிலும் காணப்பட்டன. ஆனால், ஆஸ்திரியாவின் சான்சலர் மெட்டர்னிக்கின் படைகள் புரட்சியாளர்களை அடக்கின. புரட்சிகள் தோல்வியடைந்தன. எனவே, இத்தாலி இணைய வேண்டுமானால் இத்தாலியில் அந்நியர் ஆதிக்கம் குறிப்பாக ஆஸ்திரியாவின் ஆதிக்கம் ஒழிக்கப்படவேண்டும். ஏனெனில் ஆஸ்திரியாவின் பிற்போக்கு சக்தி இத்தாலியில் உறுதியாக வேரூன்றியிருந்தது. எனவே, இத்தாலிய மக்களிடையே தேசிய உணர்வை மேலும் வளர்ச்சியடையச் செய்ய வேண்டும்.

**இத்தாலிய இணைவு ஏற்படுவதற்கான காரணங்கள்:**

இத்தாலியிலிருந்த அந்நிய அரசுகள் புரட்சி இயக்கங்களையும், தேசிய கருத்துக் கொண்டவர்களையும் அடக்க முற்பட்டன. முற்போக்குக் கருத்துக் கொண்டவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்பட்டார்கள். மெட்டர்னிக்கின் பிற்போக்கு ரதம் இத்தாலியின் தலையையும், வாலையும் நசுக்கிப்போட்டது. ஆனாலும், தேசிய உணர்வு மக்களிடம் சிறிதுசிறிதாக வளர்ந்து வந்தது. விழிப்புணர்வு ஏற்பட்டது. தேசிய ஐக்கியத்தை ஏற்படுத்த அவர்களிடம் தீவிர உணர்ச்சி ஏற்பட்டது. கீழ்க்கண்ட காரணங்கள் இத்தாலிய இணைவு ஏற்பட வழிவகுத்தன.

**1. கார்பொனாரி (Carbonari) :**

நாட்டின் ஒருமைப்பாட்டை உருவாக்கவும், அடக்குமுறை ஆட்சியை விரட்டவும், இத்தாலியில் பல இரகசியக் கழகங்கள் அமைக்கப்பட்டன. அவைகள் தேசியமும் விடுதலையும் கோரி கிளர்ச்சி செய்தன. அவைகளில் ஒன்று தான் ‘கார்பொனரி’ என்ற இரகசியக் கழகமாகும். இக்கழகம் முதன் முதலில் 1820–ல் நேப்பிள்ஸ் நகரிலும் 1821ல் பியட்மாண்டிலும் நடைபெற்ற புரட்சிகளுக்குப் பெரிதும் துணைபுரிந்தது. அந்நியர் ஆதிக்கத்தை இத்தாலியிலிருந்து அகற்றுவது, நாட்டை ஐக்கியப்படுத்தி அரசியல் சுதந்திரம் பெறுவது ஆகியவையே இதன் முக்கியப் பணி ஆகும். விடுதலை எண்ணம் கொண்ட வீரமிக்க இளைஞர்கள் இக்கழகத்தில் அதிகமாகச் சேர்ந்தார்கள். இக்கழகத்தின் கிளைகள் நாடு முழுவதும் அமைக்கப்பட்டன.

## 2. இத்தாலியத் தத்துவ ஞானிகளும், கவிஞர்களும்

இத்தாலிய தேசிய சுதந்திரப் போராட்டத்திற்கு இலக்கியமும் துணை புரிந்தது. இத்தாலியத் தத்துவ ஞானிகளும், கவிஞர்களும் மக்களிடையே புரட்சிக் கருத்துக்கடைப் பரப்புவதில் முக்கியப் பங்காற்றினார்கள். இத்தாலிய ஐக்கியம் ஏற்படும் முன்பு மக்கள் அனைவரும் ஒருமித்த அரசியல் கருத்துக்களை கொண்டிருக்க வேண்டுமென்று மஜினி, கியோபெர்ட்டி, டிசாங்டிஸ் ஆகியோர் விரும்பினர். மான்சோரி (Manzori) என்பவர், ஐ பிராமசி சோசி (I PROMESI SOSSI) என்ற நூலிலும், ஸில்வியோ பெல்லிஸ் (SILVIO PELLICE) என்ற தனது சுயசரிதையிலும் மக்கள் மனதில் தேசிய உணர்வை ஏற்படுத்தும் விதமாக எழுதினார். நாவலாசிரியரான விக்டர்ஹுகோ (VICTOR HUGO) தனது நாவல்கள் மூலமாக குடியரசுக் கொள்கைகளைப் பரப்பினார்.

## 3. ரிஸ் ஆர்க்கிமென்டோ (Risorgimento):

இத்தாலியக் கவிஞர்களும், எழுத்தாளர்களும் தங்கள் கருத்துக்கள் மூலம் மக்கள் மனதில தேசிய மறுமலர்ச்சியை எற்படுத்தினர். அதன் மூலம் இத்தாலியில் ஒரு 'புத்யிர்ப்பு' இயக்கம் தோன்றியது. இத்தாலியில் வேகமாக வளர்ந்துவந்த தேசிய இயக்கம் முழுவதுமே, ''ரிஸ் ஆர்க்கிமென்டோ'' அல்லது புத்துயிர்ப்பு என்ற சொல்லால் குறிக்கப்படுகிறது. **1847–**ல் கவுண்டர்கவூர் ரிஸ் ஆர்க்கிமென்டோ என்ற பெயரில் ஒரு பத்திரிக்கையை ஆரம்பித்து தேசியக் கருத்துக்களைப் பரப்பினார். ரிஸ் ஆர்க்கிமென்டோ என்ற சொல் 'இத்தாலிய மக்களின் பழங்காலப் பெருமைகளையும், ரோமானியப் பேரரசின் புகழையும், பண்பாட்டையும், கவிஞர் தாந்தே யின் பாடல்களையும், மறுமலர்ச்சிக்கான கலை, விஞ்ஞான வளர்ச்சியையும், மக்களுக்கு நினைவூட்டியது. இந்த எண்ணங்களின் அடிப்படையில் அரசியல் ஒற்றுமையைத் தற்போது ஏற்படுத்த மக்கள் ஆர்வம் கொண்டனர்.

## 4. ஜோசப் மஜினியின் தூண்டுதல்

**(Joseph Mazzini, (1805 – 1875)**

இவர் ஒரு சிறந்த சிந்தனையாளர், ஜெனோவா நகரவாசியான மஜினி, இத்தாலியின் ஒற்றுமையின்மையும், நாட்டின் சீரழிந்த நிலையினையும் கண்டு கருஞ்சட்டை அணிந்து கொண்டார். இளமையில் கார்பொனாரி கழகத்தில் சேர்ந்து

தீவிரமாகப் பணியாற்றினார். இவர், ஆஸ்திரியாவுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டதால் நாடு கடத்தப்பட்டார். இவருடைய நோக்கம் 'இத்ததாலி இணைக்கப்பட்டு, சுதந்திர நாடாக ஆவது எவ்வளவு முக்கியமோ அதுபோல இத்தாலி ஒரு ஜனநாயக குடியரசு நாடாகவும் ஆவது முக்கியம்' என்பதாகும். தாய்நாட்டின் விடுதலைக்காக ஒவ்வொருவரும் போராடக் கடமைப்பட்டவர்கள் என்று கூறினார். இவர், 1831–ஆம் வருடத்தில் 'மார்சிலஸ்' என்ற இடத்தில் 'இளம் இத்தாலிய இயக்கம்' ஒன்றை ஆரம்பித்து இரண்டு வருடத்தில் அதில் 60,000 உறுப்பினர்கள் சேர்ந்தார்கள்.

**5. இளம் இத்தாலிய இயக்கம் (Young Italy Movement):**

ஜோசப் மஜினியினால் 1831–ல் ஆரம்பிக்கப்பட்ட இந்த இயக்கம், தீவிரவாதத் தன்மை கொண்டது. இதன் நோக்கங்கள் பின்வருமாறு :

a. இத்தாலிய மக்களிடையே ஒற்றுமை, தேசியம் ஆகிய இலட்சியங்களைப் பரப்புதல்.
b. அந்நிய நாடுகளின் ஆதிக்கத்தை ஒழித்து இத்தாலியை இணைத்தல்,
c. நாட்டிற்காகத் தியாகம் செய்யும் உணர்வை மக்களிடம் வளர்த்தல்,
d. மக்களிடையே கல்வி அறிவை ஊட்டி நாட்டின் பழங்காலப் பெருமைகளையும், தற்போதையச் சிறுமையையும் எடுத்துக்கூறுதல்,
e. இத்தாலியில் ஜனநாயகக் குடியரசு ஒன்றை நிறுவுதல்.

இளம் இத்தாலியில் இயக்கம் மக்களின் ஆதரவைப் பெற்று பலமடைந்தது. ஆயிரக்கணக்கான இளைஞர்கள் இந்த இயக்கத்தில் சேர்ந்து இத்தாலிய இணைவிற்குத் தங்களை அர்ப்பணித்துக் கொண்டார்கள். இவ்வாறு இத்தாலிய இணைவிற்காக அரும்பாடுபட்டவர் மஜினி என்று புகழப்படுகிறார்.

**6. சார்லஸ் ஆல்பர்ட் (Charles Albert):**

இவரை இத்தாலிய இணைவின் முன்னோடி என்று கூறலாம். 1831–ல் சார்டீனியாவின் அரசரானார். 1848–ம் ஆண்டின் தொடக்கத்தில் இத்தாலிய தேசிய இயக்கத்தின் சிறந்தத் தலைவராக மதிக்கப்பட்டார். 1848–ஆம் வருடம் பிரப்ரவரிப் புரட்சியின் விளைவாக இத்தாலியின் பல பகுதிகளில் புரட்சி ஏற்பட்டது. அப்போது

இத்தாலிய மக்களும் தேசியவாதிகளும் சார்லஸ் ஆல்பர்ட் ஆஸ்திரியா மீது படையெடுத்து அவர்களை இத்தாலியிலிருந்து விரட்ட வேண்டும் என்று கேட்டுக்கொண்டனர். அதன்படி 1848, மார்ச் 23–ல் ஆஸ்திரியா மீது போர் தொடுத்தார். ஆனால், 1848 ஜுலை 25–ல் கஸ்டோஸா (Custozza) என்ற இடத்தில் ஆஸ்திரியர்களால் தோற்கடிக்கப்பட்டார். அவர் 1849–ல் மீண்டும் படையெடுத்தபோது 1849 மார்ச் 23–ல் நொவரா (Novarra) என்ற இடத்தில் முழுமையாகத் தோற்கடிக்கப்பட்டார். இதனால், தனது அரச பதவியை இழந்தார். அதன்பின் இவரது மகன் இரண்டாம் விக்டர் இம்மானுவேல் அரசரானார். சார்லஸ் ஆல்பர்ட்டின் முயற்சிகள் வெற்றியடையாமல் போனாலும், பின்னர் அவரது மகன் தலைமையில் ஆஸ்திரியா தோற்கடிக்கப்பட்டு இத்தாலி ஐக்கியமடைந்தது.

### 7. இரண்டாம் விக்டர் இமானுவேல் (Victor Emmanuel II) :

சார்லஸ் ஆல்பர்ட்டுக்குப்பின் சார்டீனிய மன்னராகப் பதவி ஏற்றவர் இரண்டாம் விக்டர் இமானுவேல் ஆவார். இவர், துணிவு மிகுந்தவராகவும், நேர்மையான அரசியல்வாதியாகவும் இருந்தார். பொதுவாழ்வில் கண்ணியமிக்கவர். போரில் வெற்றியோடு திரும்பும் வல்லமை பெற்றவர். இவரது தலைமையின் கீழ் பியட்மாண்ட் பிரதேசம் மட்டும் தன்னாட்சி பெற்று விளங்கியது. இந்த சார்டீனிய பியட்மாண்ட் அரசியலிருந்தே ஐக்கிய சுதந்திர இத்தாலி உருவாகியது என்று கூறலாம். இத்தாலி இணைந்த பிறகு நாட்டின் தலைவராக பணியாற்ற சம்மதித்தார். ஆஸ்திரியாவுடன் தனக்கிருந்த உறவுகளை எல்லாம் முறித்துக் கொண்டார். இவர் மீது இத்தாலியத் தேசீயவாதிகள் நம்பிக்கை வைத்தனர்.

### 8. கவுண்ட்கவூர் (Count Camillo Bensoi de Cavour, 1810 – 1861)

பியட்மாண்டில் ஓர் உயர்குடியில் பிறந்த கவூர் முதலில் எதேச்சதிகார கொள்கையின் சார்பாளராகவே இருந்தார். படையில் சேர்ந்து பணியாற்றினார். பின்னர் படையிலிருந்து விலகி தனது கொள்கைகளை மாற்றிக் கொண்டு, ஜனநாயக, தாராள கொள்கைகளைப் பின்பற்றினார். பல இடங்களுக்குச் சென்று அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டார். இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகளின் அரசியலை கற்று அறிந்தார். சார்டீனிய பாராளுமன்றத்தின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பியட்மாண்டில் திருச்சபை பெற்றிருந்த பொருளாதார, சட்ட சலுகைகளைச் சாடினார். **1852–**ல் விக்டர் இமானுவேலின் தலைமை அமைச்சராகப் பதவியேற்றார். இவர் சார்டீனிய அரசரின் கீழ் இத்தாலி இணைவதை விரும்பினார்.

கவூர் இரண்டு சக்திகளை உடையவராக இருந்தார். ஒன்று இத்தாலியின் மீது பற்று, மற்றொன்று பியட்மாண்டின் படை. ஆனால், இத்தாலி ஐக்கியமடைய இவை போதாது என்றார். ஐரோப்பிய அரசுகளின் ஆதரவாலும், கூட்டுறவாலுமே, முக்கியமாக பிரான்ஸின் துணையுடனே இத்தாலிய இணைவை ஏற்படுத்த முடியும் என்று நம்பினார். இதுவே கவூரின் இராஜதந்திர யுக்தியாகும். இந்த யுக்திதான் இறுதியில் வெற்றியைத் தேடித் தந்தது. தனது கொள்கைகளை செயல்படுத்தும் முகமாக முதலில் பியட்மாண்டை நவீனப்படுத்தினார். அங்கு பல சீர்திருத்தங்களை மேற்கொண்டார். இத்தாலிய ஐக்கியத்திற்கு அது தலைமை ஏற்கும்படியாக பியட்மாண்டை வலிமைப்படுத்தினார். மஜினி, கரிபால்டி ஆகியோரின் ஆதரவையும், பல ரகசியக் கழகங்கள் மற்றும் இளைஞர்களின் ஆதரவையும் பெற்று இத்தாலியை ஐக்கியப்படுத்தினார். இத்தாலிய ஐக்கியத்திற்காக தமது உயிரையே கொடுத்தார். இத்தாலிய இணைவிற்குக் காரணமாக கவூர் ‘இத்தாலியின் பிஸ்மார்க்’ என்று அழைக்கப்பட்டார்.

### 9. கரிபால்டி (Giuseppe Garibaldi):

இத்தாலிய இணைவு இயக்கத்தில் பெரும்பங்கு எடுத்துக் கொண்ட வீரர் கெசப்போ கரிபால்டி ஆவார். **1807–**ல் நைசில் (Nice) பிறந்த இவர் மஜினியின் சீடராவார். தீராத தேசப்பற்றும் தணியாத விடுதலை வேட்கையும் கொண்டவர். இளம் இத்தாலிய இயக்கத்தில் சேர்ந்து பல புரட்சிகளில் ஈடுபட்டார். தென் இத்தாலிய (நேப்பிள்ஸ், சிசிலி) விடுதலைக்குக் காரணமானவர் இவரே. தனது தலைமையின் கீழ் திறமை வாய்ந்த சுமார் முப்பதாயிரம் வீரர்களைக் கொண்ட படையை உருவாக்கினார். இப்படை வீரர்கள் சிறந்த தேசிய உணர்ச்சி கொண்டவர்கள். நாட்டுக்காக தங்கள் உயிரையும் தியாகம் செய்யத் தயாராக இருந்தார்கள். தங்கள் வலிமையின் அறிகுறியாக செங்சட்டை அணிந்தார்கள். எனவே, அவர்கள் ‘செஞ்சட்டையினர்’ (Red Shirts) என்று அழைக்கப்பட்டனர். ‘இத்தாலிய இணைவின் போர்வீரர்’ என்று கரிபால்டி அழைக்கப்படுகிறார்.

**இத்தாலிய இணைவின் பல்வேறு நிலைகள்:**

இத்தாலிய இணைவு கீழ்க்கண்ட ஆறு நிலைகளில் நிறைவேறியது.

**1. கிருமியப் போர் (Grimean War): 1853 – 56**

**1854–**ல் தொடங்கிய கிருமியப் போரில் இங்கிலாந்தும் பிரான்சும் இரஷ்யாவுக்கு எதிராகப் போரிட்டன. இப்போரில் இங்கிலாந்தையும் பிரான்சையும் ஆதரிக்கும்படி விக்டர் இமானுவேலிடம் ஆலோசனை கூறினார், கவூர். இப்போரில் சார்டீனியா உதவி செய்தால் போருக்குப் பின் ஐரோப்பிய நாடுகளின் அரசியலில் முக்கிய இடத்தைப் பிடிக்க முடியுமென்றும் பின்னர் இத்தாலியிலுள்ள ஆஸ்திரியர்களை விரட்ட பிரான்சிடம் உதவி கேட்க முடியும் என்று நம்பினார், கவூர். ஆதன்படி பிரான்சுக்கு ஆதரவாக **15,000** சார்டீனிய வீரர்கள் அனுப்பப்பட்டனர். கிருமியாவில் செர்னயா (Cernaya) என்ற இடத்தில் சார்டீனிய வீரர்கள் வெற்றியடைந்தனர். கிருமியப் போரில் பிரான்ஸ் வெற்றியடைந்தது.

**1856–**ல் நடைபெற்ற பாரிசு மாநாட்டில் பங்குகொண்ட கவூர் இத்தாலியப் பிரச்சனைகளை பிற ஐரோப்பிய நாடுகளுக்கும் தெரியப்படுத்தினார். எவ்வாறு இத்தாலி வடக்கிலும், தெற்கிலும் மோசமாக ஆளப்படுகிறது என்று கூறினார். இதனால் பிற ஐரோப்பிய நாடுகளின் அனுதாபத்தைப் பெற்றார். இங்கிலாந்தின் வெளி உறவு அமைச்சர் கிளாரிண்டன் (Clarindon) கவூருக்கு ஆதரவு தெரிவித்தார்.

**2. ஆஸ்திரிய – சார்மனியப் போர் (1859 – 60)** (லம்பார்டி இணைக்கப்படுதல்)

கிருமியப் போரின் மூலமாக பிரெஞ்சுப் பேரரசர் மூன்றாம் நெப்போலியனின் நட்பு கவூருக்குக் கிடைத்தது. இத்தாலிய சுதந்திர இயக்கத்தில் உண்மையான இரக்கம் நெப்போலியனிடமிருந்தது. அதனுடன் பிரான்சின் அதிகாரத்தையும், தனது அரசியல் தந்திரத் திறமையையும் ஐரோப்பா முழுவதிற்குமே காட்டிக் கொள்வதில் ஆவல் உள்ளவராய் இருந்தார். இந்த வாய்ப்பை கவூர் பயன்படுத்திக்கொண்டார். **1858** ஜூலை மாதம் பிளாம்பியர்ஸ் (Plombiors) என்ற நகரில் நெப்போலியனுடன் மறைவானதும் புகழ் பெற்றதுமான சந்திப்பை மேற்கொண்டார். பேச்சுவார்த்தையின் இறுதியில் டிசம்பர் மாதம் ரகசிய உடன்படிக்கை ஒன்று செய்துகொள்ளப்பட்டது. அதன்படி,

a. இத்தாலியின் வடபகுதியிலுள்ள லம்பார்டி, வெனிஷியா ஆகிய பகுதிகளிலிருந்து ஆஸ்திரியாவை வெளியேற்றி அவைகளைச் சார்டீனியாவுடன் இணைப்பதற்கு பிரான்ஸ் உதவி செய்யும்.
b. சார்டீனியாவுக்கும் ஆஸ்திரியாவுக்கும் போர் மூண்டால் இரண்டு இலட்சம் போர் வீரர்களை சார்டீனியாவுக்கு ஆதரவாக அனுப்புவதாக நெப்போலியன் வாக்களித்தார்.
c. நெப்போலியன் செய்யும் உதவிக்குப் பரிசாக செவாய்,நைஸ் (Savoy, Nice) ஆகிய பகுதிகள் நெப்போலியனுக்குக் கொடுக்கப்படவேண்டும்.
d. லம்பார்டி, வெனிஷியா தவிர மீதி உள்ள இத்தாலியப் பகுதிகள் எல்லாம் இணைக்கப்பட்டு, போப்பாண்டவரின் தலைமையில் ஒரு கட்டமைப்பாக வைக்கப்படவேண்டும்.
e. ஏதேனும் ஒரு காரணத்தைக் காட்டி, கவூர்தான் போரை ஆரம்பித்து வைக்கவேண்டும்.

இந்த உடன்படிக்கைக்குக் பிறகு, விக்டர் இமானுவேல் தமது பாராளுமன்றத்தைக் கூட்டி அதில் ‘தான் இத்தாலி முழுவதிலுமுள்ள மக்களின் விருப்பங்களைப் பூர்த்தி செய்யப் போவதாக’ அறிவித்தார். இதனைக் கேட்ட ஆஸ்திரியப் பேரரசர் வெகுண்டெழுந்து **1859**, ஏப்ரல் **19**–ம் தேதி பியட்மாண்டின் மீது படையெடுத்தார். போர் ஆரம்பமானது. பிளாம்பியர்ஸ் உடன்படிக்கைப்படி சார்டீனியாவுக்கு உதவுவதற்காக பிரெஞ்சுப்படை ஒன்றை அனுப்பினார் மூன்றாம் நெப்போலியன். **1859**, ஜுன் **4**–ல் மெஜண்டா (Megenta) என்ற இடத்தில் நடைபெற்ற கடும் சண்டையில் ஆஸ்திரியப் படைகளை ஜுன் **24**–ஆம் தேதி சால்பரினோ (Solferino) என்ற இடத்தில் பிரெஞ்சு சார்டீனியக் கூட்டுப்படைகள் தோற்கடித்தன. லம்பார்டி, வெனிஷியா, ஆகிய பகுதிகளிலிருந்து ஆஸ்திரியா விரட்டப்பட்டது.

இந்த வெற்றிகளுக்குப்பின் திடீரென போரை முடித்துக்கொண்டார் மூன்றாம் நெப்போலியன். ஏனெனில் அவர் சக்தி வாய்ந்த இத்தாலியை உருவாக்க விரும்பாததே காரணமாகும். தனது தளபதி புளூரி (Fleury) என்பவரை ஆஸ்திரியப் பேரரசர் பிரான்சிஸ் ஜோசப்பைச் சந்திக்க அனுப்பினார். அவரும், போரை முடிக்க விருப்பம்

கொண்டவராக இருந்தார். **1859**, ஜுலை **11–**ஆம் தேதி நெப்போலியனை வில்லாபிராங்கா (Villafranca) என்ற இடத்தில் சந்தித்து அவருடன் உடன்படிக்கை ஒன்று செய்துகொள்ளப்பட்டது. இந்தப் பேச்சுவார்த்தையில் சார்டீனியா சேர்த்துக் கொள்ளப்படவில்லை. வில்லாபிராங்கா உடன்படிக்கை **1859**, நவம்பர் **10–**ல் சூரிச் அமைதி ஒப்பந்தப்படி (Peace of Zurichi) உறுதிப்படுத்தப்பட்டது, வில்லாபிராங்கா உடன்படிக்கைபடி.

a. லம்பார்டி மூன்றாம் நெப்போலியன் மூலம் விக்டர் இம்மானுவேலுக்குக் கொடுக்கப்படவேண்டும்.
b. வெனிஷியாவை ஆஸ்திரியாவே வைத்துக் கொள்ளவேண்டும்.
c. பிரான்சும், ஆஸ்திரியாவு., போப்பாண்டவரின் தலைமையில் ஐக்கிய இத்தாலி உருவாக்கப்பட உதவி செய்யவேண்டும்.
d. பார்மா, மாடனா, டஸ்கனி, ஆகிய பகுதிகளிலிருந்து விரட்டப்பட்ட அரசர்கள் மீண்டும் அங்கு அமர்த்தப்படவேண்டும்.
e. போப்பாண்டவர் தனது ஆட்சிப் பகுதியில் சீர்திருத்தங்கள் செய்யவேண்டும்.
f. நைஸ், செவ்வாய், ஆகிய பகுதிகள் பிரான்சுக்குக் கொடுக்கப்படவேண்டும்.

இந்த உடன்படிக்கையினால் மூன்றாம் நெப்போலியன் இத்தாலிய மக்களால் நம்பத்தகாதவர் என்று தூற்றப்பட்டார். இத்தாலி இமணவதை இவ்வுடன்படிக்கைத் தடுக்கிறது என்றும், எனவே இதனை ஏற்றுக்கொள்ளக்கூடாது என்றும் இமானுவேலிடம் குவூர் கூறினார். ஆனால், இமானுவேல் ஏற்றுக் கொள்ளவில்லை. எனவே, பதவியை கவூர் ராஜினாமா செய்தார். ஆஸ்திரிய சார்டீனியப் போரின் விளைவாக லம்பார்டி சார்டீனிய – பியட்மாண்ட் அரசுடன் இணைக்கப்பட்டது.

### 3. பார்மா, மாடனா, டஸ்கனி, ரொமாக்னா ஆகியவை இணைதல் (Modena, Tuscany, Romagna):

ஆஸ்திரிய சார்டீனியப் போரில் மூன்றாம் நெப்போலியன் இத்தாலிக்கு துரோகம் செய்தார் என்றாலும், அது இத்தாலிக்குப் பல வழிகளில் நன்மையாகவே முடிந்தது. வில்லாபிராங்கா உடன்படிக்கையின்படி, பார்மா, மாடனா, டஸ்கனி, ரொமாக்னா, ஆகிய பகுதிகளில் வைக்கப்பட்ட பழைய ஆட்சியாளர்களை, மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

அந்தப்பகுதி மக்களிடம் மேலோங்கி நின்றவை கவூர், கரிபால்டி, மஜினி, ஆகியோரின் பெயர்களே ஆகும். குவூரின் நெருங்கிய நண்பரான ஃபரினி (Farini) மாடனாவிலும் பார்மாவிலும் ரிகாசோலி (Ricasoli) என்பவர் டஸ்கனியிலும் புரட்சிக் கருத்துக்களைப் பரப்பினர். அங்கு தங்கள் ஆட்சியாளர்களுக்கு எதிராக மக்கள் புரட்சியில் ஈடுபட்டனர். அதன் விளைவாக அங்கிருந்த ஆட்சியாளர்கள் ஓடிவிட்டனர். 1859 – ஆகஸ்ட் மாதம் பிளாரன்ஸ் நகரில் கூடி பாராளுமன்றம், டஸ்கனி இமானுவேலின் தலைமையை ஏற்றுக்கொள்வதாக அறிவித்தது. 1860 – ஜனவரியில் மீண்டும் பதவியேற்றிருந்த கவூர் இந்த மத்திய இத்தாலியப் பிரதேசங்கள் அங்குள்ள மக்களின் விருப்பப்படியே இணைக்கப்படும் என்றார். மக்கள் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இத்தாலியுடன் இணைவதற்கு ஆதரவாக 3,86,000 ஓட்டுகளும், எதிராக 15,000 ஓட்டுகளும் கிடைத்தன. எவ்விதப் போரும் இல்லாமல், பார்மா, மாடனா, டஸ்கனி, ரொமாக்னா ஆகிய மத்திய இத்தாலியப் பகுதிகள் பியட்மாண்ட் சார்டீனிய அரசுடன் இணைக்கப்பட்டன.

**4. நேப்பிள்ஸ், சிசிலி, போப்பின் பகுதிகள் இணைக்கப்படுதல் :**

இத்தாலி முழுமையாக இணைக்கப்படவேண்டும் என்ற கவூரின் எண்ணம் நிறைவேறவேண்டுமானால், போப்பின் பகுதிகளும், இத்தாலியின் தென்பகுதியிலுள்ள நேப்பிள்ஸ், சிசிலி, ஆகியவைகளும், இத்தாலியுடன் இணைக்கப்படவேண்டும். போப்பாண்டவர் 9–ம் பயஸ் இத்தாலியின் விடுதலை மற்றும் ஐக்கியத்தை எதிர்ப்பவரானார். நேப்பிள்சும், சிசிலியும் 1859–ல் பதவி ஏற்ற இரண்டாம் பிரான்சிஸ் என்ற போர்பான் மன்னரின் கொடுமை வாய்ந்த பிற்போக்கான அரசரின் கீழ் இருந்தன. இப்பகுதிகளை வெற்றிகரமாக இணைத்துக் கொடுத்த பெருமை கரிபால்டியையே சாரும்.

கவூரின் வேண்டுகோளுக்கிணங்க நோபிள்சையும், சிசிலியையும் கைப்பற்ற கரிபால்டி 1,136 செஞ்சட்டை வீரர்களுடன் 1860 மே 5–ஆம் தேதி ஜெனாவா துறைமுகத்திலிருந்து இரண்டு கப்பல்களில் புறப்பட்டார். மே 11–ஆம் தேதி சிலியிலுள்ள மர்சலா (Marsala) என்ற இடத்தில் வந்து இறங்கினார். பின்னர் இராணுவத் தலைமையிடமாகத் திகழ்ந்த பாலர்மோவை (Palermo) நோக்கி முன்னேறினார். சிசிலி

மக்களின் ஆதரவுடன் இராணுவத்தளபதி லான்சா (Lanza)வை மிக எளிதில் மர்சலாவுக்கு வெளியே தோற்கடித்தார் கரிபால்டி.

இதே நேரத்தில் நேப்பிள்சிலும் தேசிய இயக்கம் வலுவடைந்தது. தேசியவாதிகள் கரிபால்டியை உதவிக்கு அழைத்தார்கள். எனவே செஞ்சட்டையினர் டிரெனியன் கடலைக் கடந்து நேப்பிள்சின் தென்பகுதியில் நுழைந்தனர். நேப்பிள்ஸ் மன்னர் இரண்டாம் பிரான்சிஸ் **1860**–செப்டம்பர் **6**–ல் நாட்டை விட்டு ஒடி, ரோமில் தஞ்சமடைந்தார். போர்பான் வம்ச அரசர் தூக்கி எரியப்பட்டதால் கவூர் மகிழ்ச்சி அடைந்தார். நேப்பிள்ஸ், சிசிலி ஆகிய பகுதிகளை இத்தாலியின் பெயராலும், விக்டர் இம்மானுவேலின் பெயராலும் ஆளப்போவதாக கூறிவிட்டார் கரிபால்டி. சார்டீனியாவுடன் இவை இணைக்கப்படும் என்று அறிவிக்க மறுத்துவிட்டார் கரிபால்டி.

எனவே, கரிபால்டியின் எண்ணம் மீது ஐயம் கொண்ட கவூர், அவருக்கு முன்பு போப்பின் பகுதிகள் மீது படையெடுக்க முற்பட்டார். இதற்கிடையில் போப்பின் பகுதிகளிலுள்ள மார்ச்சஸ் (Marches) உம்பிரியா (Umbira) ஆகிய இடங்களில் புரட்சி தோன்றியது. போப்பின் படைகள் இக்கிளர்ச்சிகளை அடக்க முற்பட்டபோது கவூர் போப் ஒன்பதாம் பயசுக்கு (Pius IX) ‘‘புரட்சியாளர்ர்ளை அடக்க முற்பட்டால் அதனைத் தடுக்க சார்டீனியா அரசுக்கு உரிமை உண்டு’’ என்று அறிவித்ததோடு மட்டுமல்லாமல் அதனையே காரணமாகக் கொண்டு இத்தாலியப் படைகளைப் போப்பின் அரசுக்குள் அனுப்பினார். போப்பின் படைகள் கேசில்பிடார்டோ (Casteifidardo) என்ற இடத்தில் தோற்கடிக்கப்பட்டது. ரோம் நீங்கலாக போப்பின் பகுதிகள் இணைக்கப்பட்டது.

இதன் பின்னர் விக்டர் இமானுவேலின் வெற்றிப்படைகள் நேப்பிள்ஸ் நோக்கி வந்தன. அவரைச் சந்தித்த கரிபால்டி தனது வெற்றிகளை இத்தாலிய இணைவிற்கு அர்ப்பணித்தார். எவ்வித பிரதிபலனும் எதிர்பாராமல் தனது சொந்த ஊரான கேப்ரேரா (Caprera) போய்ச் சேர்ந்தார். நேப்பிள்சிலும் சிசிலியிலும் வாக்கெடுப்பு நடத்தப்பட்டு, மக்களின் பேராதரவுடன் அவை இத்தாலியுடன் இணைக்கப்பட்டன.

‘‘**1861**, பிப்ரவரி **18**–ஆம் தேதி புதிய இத்தாலியப் பாராளுமன்றம் டூரின் (Turin) நரில் கூட்டப்பட்டது. இதுவரை சார்டீனிய அரசாக இருந்தது. இப்போது, இத்தாலிய அரசாக (Kingdom of Italy) மார்ச் **17**–ஆம் தேதி பிரகடனப்படுத்தப்பட்டது. இரண்டாம்

விக்டர் இம்மானுவேல் 'இத்தாலிய அரசராகப்' பிரகடனப்படுத்தப்பட்டார். பதினெட்டு மாதங்களில் உருவான புதிய இத்தாலிய அரசு, 22 மில்லியன் மக்களைக் கொண்டதாக இருந்தது. ஆனாலும், இத்தாலி அரசு முழுமையடைய எஞ்சியுள்ள வெனிஷியாவும், ரோம் நகரும் இத்தாலிலியடன் இணைக்கப்படவேண்டும்.

**5. வெனிஷியா இணைக்கப்படுதல்** (ஆஸ்திரிய பிரஷ்யப்போர்) :1866

இத்தாலிய இணைவிற்காகப் பாடுபட்ட கவூர் **1861–**ஜுன் மாதம் மரணமடைந்தார். அவரது எண்ணங்கள் கிட்டத்தட்ட எல்லாம் நிறைவேறிவிட்டன. இத்தாலிய ஐக்கியம் நிறைவடையவேண்டுமானால், எஞ்சியுள்ள ரோமைச் சுற்றியிருந்த போப்பின் பகுதியியும், வெனிஷியாவும் இணைக்கப்படவேண்டும்.

**1866–**ல் ஏற்பட்ட ஆஸ்திரிய – பிரஷ்யப் போரின் விளைவாக வெனிஷியா இணைக்கப்பட்டது. மத்திய ஐரோப்பாவில் வளர்ச்சியடைந்துகொண்டிருந்த பிரஷ்யா ஆஸ்திரியாவைத் தோற்கடிக்க பல ராஜதந்திர நடவடிக்கைகளில் ஈடுபட்டது. அதன் சான்சலரான பிஸ்மார்க் நட்பு நாடுகளைப் பெறுவதில் ஆர்வம் கொண்டார். "வெனிஷியாவிலுள்ள ஆஸ்திரியர்களை இத்தாலி தாக்குமானால், அச்சமயத்தில் ஆஸ்திரியா தன் கவனத்தையெல்லாம் வெனிஷியாவில் வைத்திருக்கும். அவ்வேளையில் பிரஷ்யாவை ஆஸ்திரியாவால் வலிமையாக எதிர்க்க முடியாது'' என்று முடிவு செய்த பிஸ்மார்க், இம்மானுவேலின் நட்பை நாடினார். "போர் ஆரம்பித்தவுடன் பிரஷ்யாவுக்கு ஆதரவாக இத்தாலியப் படைகள் வெனிஷியாவிலுள்ள ஆஸ்திரியர்களைத் தாக்க வேண்டுமென்றும், அதற்காக ஆஸ்திரியர்களை தோற்கடித்தபின் வெனிஷியாவை இமானுவேலுக்குக் கொடுப்பதாக'' உறுதியளித்தார் பிஸ்மார்க்.

**1866** – ஏப்ரலில் போர் மூண்டது. அப்போது இத்தாலியில் திறமை மிக்க படைத்தலைவர்களும் இல்லை ; படையில் ஒழுங்குமில்லை. படையெடுப்பைக் குறித்து திட்டமான நடவடிக்கைகளும் இல்லை. எனவே, இத்தாலியப் படைகள் சரியாகப் போரிடவில்லை. ஜுலை **24–**ல் கஸ்டோசா (Custozza) என்ற இடத்தில் நடைபெற்ற போரில் இத்தாலியக் கப்பற்படை லிசா(Lissa) என்ற இடத்தில் தோற்றுப்போனது. ஆனால், பிஸ்மார்க்கின் கணிப்பின்படி, ஆஸ்திரியாவின் பெரியபடை ஒன்றை இத்தாலியில் தங்கியிருக்கச் செய்துவிட்டதின்படி பிரஷ்யாவுக்கு மதிப்பிடமுடியாத

உதவியைச் செய்தனர் இத்தாலியர். இப்போரில் பிரஷ்யா வெற்றியடைந்தது. போரின் முடிவில் 1856 ஆகஸ்ட் 23–ல் ஏற்பட்ட பிரேக் (Prague) உடன்படிக்கையின்படி வெனிஷியா இத்தாலிக்குக் கொடுக்கப்பட்டது. வெனிஷியாவில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. 6,40,000 வாக்குகள் ஆதரவுடன் இத்தாலியுடன் வெனிஷியா இணைந்தது.

**6. ரோம் இணைக்கப்படுதல் : 1870**

எஞ்சிய பகுதியான ரோம் மட்டும் ஐக்கிய இத்தாலியில் இணைக்கப்படாமல் இருந்தது. காரணம், 1849–ஆம் வருடம் முதல் பிரெஞ்சுப்படை ஒன்றை போப்பாண்டவருக்குப் பாதுகாப்பாக ரோமில் வைத்திருந்தார் மூன்றாம் நெப்போலியன். ரோமை இணைக்க இமானுவேல் விரும்பினாலும், அதற்காக பிரான்சுடன் போர் தொடுக்க விரும்பவில்லை. இதற்கிடையில், போப்பாண்டவர் 9–ஆம் பயஸ் மிதவாத எதிர்ப்பு சக்திகளடன் சேர்ந்தார். 1864 டிசம்பரில் ‘முன்னேற்றம், மிதவாதம், புதிய இத்தாலிய அரசு ஆகியவையுடன் இணங்கி நடக்கவேண்டும் என்பது தவறு’’ என்று தெரிவித்திருந்தார்.

1870–ல் பிரான்சுக்கும் பிரஷ்யாவுக்குமிடையே போர் ஏற்பட்டதால் ரோம் நகரில் வைக்கப்பட்டிருந்த படைகளை திரும்ப அழைக்கும் நிலை மூன்றாம் நெப்போலியனுக்கு ஏற்பட்டது. இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்ட இமானுவேல் 1870, செப்டம்பர் 20–ஆம் தேதி ஒரு படையை அனுப்பி ரோமைக் கைப்பற்றினார். ரோமில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டு மக்களின் ஆதரவுடன் இத்தாலியுடன் ரோம் இணைக்கப்பட்டது. ரோம் நகர் ஐக்கிய இத்தாலியின் தலைநகராக அறிவிக்கப்பட்டது.

**முடிவுரை :**

இவ்விதமாக இத்தாலிய இணைவு முற்றுப் பெற்றது. இத்தாலியர் மகிழ்ச்சியடைந்தனர். தாந்தே முதல் மஜினி காலம் வரையிலும் இத்தாலியத் தலைவர்களின் கனவு நனவாகியது. இரண்டாம் விக்டர் இமானுவேலின் தலைமையும், கவூரின் ராஜதந்திரமும், மஜினியின் இலட்சியக் கோட்போடுகளும், கரிபால்டியின் செயல்திறனுமே வலிமையான, சுதந்திரமான ஐக்கிய இத்தால உருவாகக் காரணமாக அமைந்தன.

## ஜெர்மானிய இணைவு

**முன்னுரை :**

ஜெர்மானிய இணைவு என்பது **39** ஜெர்மானியச் சிற்றரசுகள் ஆஸ்திரியாவின் ஆதிக்கத்திலிருந்து விடுவிக்கப்பட்டு, பிரஷ்யாவின் தலைமையில் ஒன்றாக இணைக்கப்பட்டு, பிரஷ்யாவின் தலைமையில் ஒன்றாக இணைக்கப்பட்டு, ஜெர்மானியப் பேரரசு உதயமான வரலாறாகும். ஜெர்மானிய ஐக்கியம் ஒரு தனி நபரின் ஒப்பற்ற சாதனை எனலாம். அவர் பிரஷ்யாவின் புகழ்மிக்க சான்ஸலர் ஆட்டோவான் பிஸ்மார்க்.

பிஸ்மார்க் ஜெர்மானிய இணைவிற்கென மாபெரும் இயக்கம் எதனையும் தொடங்கவில்லை. பொதுக் கூட்டங்கள், மாநாடுகள், பிரச்சாரக் குழுக்கள், எதனையும் அவர் நம்பவில்லை. அவர் நம்பியிருந்தெல்லாம் இரும்பு ஆயுதங்களையும் குருதி கொட்டத் தயாராய் இருந்த ஆயிரமாயிரம் போர் வீரர்களையும் தான்.

ஆம். இரும்பும் இரத்தமும் தான் அவரது கோட்பாடுகள் ஆயின. அக்கோட்பாடுகளைச் செயற்படுத்த மூன்று போர்களை நடத்தினார். அவை **1)** டென்மார்க் போர் **(1864), 2)** ஆஸ்திரியப் பிரஷியப் போர் **(1866), 3)** பிராங்கோ – பிரஷியப் போர் **(1870 – 71).** அப்போர்களுக்கான சூழ்நிலைகள் அவரால உருவாக்கப்பட்டன. போருக்கான உடனடிக் காரணங்களும் அவரால் தான் செயற்கையாக சிருஷ்டிக்கப்பட்டன. எல்லாமே அவரது ராஜதந்திர மூளையில் உருவான முன்னேற்பாட்டுத் திட்டங்கள் தாம். போருக்கான ஏற்பாடுகளையும் முன்கூட்டியே செய்திருந்தார். எனவே, எண்ணியதை எண்ணியவாறே செய்து முடித்தார்.

**ஜெர்மனியின் நிலை :**

நவீன காலத்தின் தொடக்கத்தில் ஜெர்மனி முன்னூறுக்கும் மேற்பட்ட சிற்றரசுகளாகச் சிதறுண்டு கிடந்தது. **1806–**ஆம் ஆண்டு நெப்போலியன் அவற்றை **39** அரசுகளாகச் சுருக்கி ரைன் வட்டமைப்பு என்ற அரசியல் ஏற்பாட்டில் ஒருங்கிணைத்தார். **1815–**ஆம் ஆண்டு வியன்னா ஏற்பாடு அந்த அமைப்பை அப்படியே வைத்துக் கொண்டு அதற்கு ஜெர்மன் கூட்டமைப்பு என்று பெயர் சூட்டி, ஆஸ்த்ரியத் தலைமையின் கீழ் கொண்டு வந்தது. பிராங்பர்ட் நகரில் ஜெர்மன் சிற்றரசுகளின் பேரவை (ஈண்ங்ற்) ஒன்று ஏற்படுத்தப்பட்டது. அதற்கு ஆஸ்திரியச் சான்ஸலர்தான் தலைமை வகித்தார்.

இவ்வாறு ஆஸ்திரியாவின் செல்வாக்கு ஜெர்மன் அரசியலரங்கில் நிலைநாட்டப்பட்டது. ஜெர்மனி ஒரு தேசமாக ஒருங்கிணைவதை ஆஸ்திரியா விரும்பவில்லை. எனவே, ஜெர்மன் இணைவிற்கு முதல் எதிரி ஆஸ்திரியா தான் என்பது தெளிவாக்கப்பட்டு விட்டது.

ஜெர்மனியில் ஆஸ்திரியாவின் செல்வாக்கிற்கு ஓரளவு ஈடுகொடுக்கக்கூடிய வலிமை பெற்ற ஒரே ஒரு நாடு பிரஷியா. மகா பிரடரிக் காலத்தில் ஜெர்மனியில் தொடங்கிய ஆஸ்திரிய–பிரஷிய ஆதிக்கப்போட்டி பிஸ்மார்க் காலத்தில் இறுதிக் கட்டத்தை அடைந்தது. வியன்னா மாநாட்டிற்குப்பின் ஆஸ்திரியாவே ஜெர்மனினியல் மேலாதிக்கம் செலுத்தி வந்தது. இப்போது பிஸ்மார்க்கின் தலைமையில் பிரஷியா ஜெர்மனியிலிருந்து ஆஸ்திரியாவை வெளியேற்றி அந்நாட்டை ஒருங்கிணைக்கத் தொடங்கியது.

**ஜெர்மன் இணைப்பிற்கான முயற்சிகள் :**

1. **1842–**ல் பிரஷியா வடக்கு ஜெர்மன் சிற்றரசுகளுடன் சேர்ந்து செய்து கொண்ட **சால்வரின் சுங்க வரிக்கூட்டு** ஏற்பாடு வர்த்தக ரீதியில் ஜெர்மன் இணைப்பினை ஏற்படுத்தியது. இது அரசியல் ரீதியான இணைவிற்கு முன்னோடியாக இருந்தது.
2. **1848–**ஆம் ஆண்டு பிப்ரவரி புரட்சியின் விளைவாக ஜெர்மன் தேசியவாதிகள் பிராங்பர்ட்டில் ஜெர்மானிய இணைவிற்கான ஏற்பாடுகளைச் செய்ய ஒன்று கூடினர். ஐக்கிய ஜெர்மனிக்கான அரசியலமைப்பை உருவாக்கியது. அது வரம்பிற்குட்பட்ட முடியாட்சியைக் கொண்டிருந்தது. ஐக்கிய ஜெர்மனியின் மணிமுடியை பிரஷிய மன்னருக்கு வழங்க முன் வந்தது. ஜெர்மன் மக்கள் பிரதிநிதிகள் வழங்க முன் வந்த மணிமுடி மதிப்பிற்குரியதன்று என்று பல ஐரோப்பிய அரசர்களால் இகழ்ந்துரைக்கப்பட்டது. எனவே, பிரஷிய அரசர் அதனை ஏற்றுக் கொள்ள மறுத்தார். ஜெர்மானிய ஐக்கியத்திற்கு தேசியவாதிகள் எடுத்த முயற்சி இவ்வாறு தோல்வியில் முடிந்தது.
3. எனினும் ஜெர்மானிய இணைவு அவசியத் தேவை என்பதை அரசியல்வாதிகளும், ஜெர்மன் இளவரசர்களும் உணரத் தலைப்பட்டனர். பிரஷிய மன்னர் பிரடரிக் வில்லியம், ஜெர்மன் இளவரசர்கள் கூட்டிணைவு ஒன்றை தமது

தலைமையில் அமைக்க முயற்சி எடுத்தார். ஸால்வரைன் சுங்கவரிக் கூட்டினால் பயனடைந்த ஜெர்மன் சிற்றரசர்கள் இந்த அரசியல கூட்டில் விரும்பிச் சேர்ந்தனர். ஆனால், ஆஸ்திரியா இத்தகைய கூட்டை எதிர்த்து வந்தது. இச்சமயத்தில் பிரஷியக் கூட்டில் இணைந்திருந்த ஹெஸ்ஸி தேர்வாளர் அதிலிருந்து விலக முயன்றது புதிய பிரச்சனையை கிளறிவிட்டது. ஹெஸ்ஸி மக்கள் இணைப்பை ஆதரித்தபோது தேர்வாளர் அதனை எதிர்த்தார். இப்பிரச்சனை ஜெர்மன் பேரவைக்கு (டயட்) எடுத்துச் செல்லப்பட்டது. அங்கு ஆஸ்திரியா உட்பட பல அரசுகள் ஹெல்ஸி தேர்வாளரை ஆதரித்தனர். இது விரைவில் ஆஸ்திரிய பிரஷிய செல்வாக்குப் போட்டியாக மாறியது. இப்போட்டியில் ரஷியஸார் ஆஸ்திரியாவை ஆதரித்தால் பிரஷியா பின்வாங்க நேரிட்டது. ஆல்மூட்ஸ் (1850) என்ற இடத்தில் ஏற்பட்ட ஒப்பந்தப்படி பிரஷியா தனது இணைப்பு முயற்சியைக் கைவிட்டது. ஜெர்மன் பேரவையில் ஆஸ்திரிய ஆதிக்கம் மீண்டும் நிலைநாட்டப்பட்டது.

ஆல்மூட்ஸ் நிகழ்ச்சிகள் பிரஷியாவிற்கு தலைக்குனிவை ஏற்படுத்தியது. எனினும் அதன் விளைவுகள் மிக முக்கியமானதாக இருந்தன.

1. ஜெர்மன் இணைவைத் தன் தலைமையில் ஏற்படுத்தத் தீர வேண்டும் என்ற பிரஷிய நோக்கம் உறுதிப்பட்டது.
2. ஜெர்மன் இணைவிற்கு முதல் எதிரி ஆஸ்திரியா.
3. ஆஸ்திரியா செல்வாக்கை ஜெர்மன் அரசியல் அரங்கிலிருந்து அடியோடு ஒ.க்க வேண்டுமென்றால் பிரஷியாவின் படைவலிமையைப் பெருக்க வேண்டும் என்ற எண்ணம் வலுப்பட்டது.

**பிஸ்மார்க்கின் வருகை :**

இச்சமயத்தில் 1858–ல் முதலாம் வில்லியம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றார். இவர் ஜெர்மன் இணைவிற்கு பிரஷிய தலைமையில் உறுதியான நம்பிக்கை கொண்டிருந்தார். அதற்கு பிரஷிய படைவலுவை அதிகரிக்கத் திட்டமிட்டார். போர் அமைச்சராக ஆல்பிரட் வான் ரூன் என்பாரை நியமித்தார். இவ்விருவரும் படைப்பெருக்கத்தற்கான திட்டங்களை வகுத்தனர். தமது திட்டத்தை செயற்படுத்த தகுதியும் திறமையும் வாய்ந்த

புதிய பிரதம அமைச்சர் ஒருவரை நியமிக்க எண்ணினார். அதன் விளைவாக ஆட்டோவான் பிஸ்மார்க் பிரஷிய சான்ஸ்லராக (பிரதமராக) 1862–ல் நியமிக்கப்பட்டார்.

**பிஸ்மார்க்கின் நோக்கமும் கொள்கையும் :**

ஜெர்மானிய இணைவு, அதற்கு பிரஷியாவின் தலைமை ஆகிய இரண்டு நோக்கங்களிலும் பிஸ்மமர்க் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருந்தார்.

பிராங்பர்ட் பாராளுமன்றத்தின் தோல்வி, ஆல்முட்ஸ் தலைமை ஆகியவற்றின் கசப்பான அனுபவங்கள் பிஸ்மார்க் மனதில் தெளிவான சிந்தனைக் கருத்துக்களை ஏற்படுத்தியிருந்தன. அவர் கூறியபடி, இன்றையப் பிரச்சனைகளைப் பெரும்பான்மையினரின் தீர்மானங்கள் மூலம் தீர்த்து விட முடியாது. அதை இரும்பும் இரத்தமும் மட்டுமே தீர்க்க முடியும் என்று நம்பினார். அதாவது,

1. பெரும்பான்மையினர் தீர்மானம் என்ற பாராளுமன்ற முறைமைகளில் அவருக்கு நம்பிக்கையில்லை. எதேச்சதிகார வல்லாட்சிதான் இன்றைய சூழ்நிலைகளுக்கு உகந்தது.
2. போரின் மூலம் தான் தமது நோக்கத்தை ஈடேற்ற முடியும்.

இந்த நோக்கத்தைக் கொண்ட பிஸ்மார்க் பாராளுமன்றத்தில் உள்ள தாராள சீர்திருத்தவாதிகள் எதிர்ப்பைத் துச்சமாக எண்ணினார். பாராளுமன்ற அனுமதியின்றி நிதி திரட்டினார். மோல்டக், ரூன் ஆகிகியார் திட்ட்ப்படி படை வலிமை அதிகரிக்கப்பட்டது.

**டென்மார்க்குடன் போர் (1864) :**

டென்மார்க்கின் தென் பகுதியில் உள்ள ஸ்லெஷ்விக் ஹோல்ஸ்டெய்ன் என்ற இரு குறுநிலப் பகுதிகள் டென்மார்க் மன்னர் ஆதிக்கத்தின் கீழ் இருந்தன. அவற்றைத் தம் நாட்டுடன் இணைத்து விட விரும்பினார். இவற்றுள் ரேுல்ஸ்டெய்ன் ஜெர்மன் பேரவையில் (டயட்) உறுப்பினராக இருந்தது. இரண்டிலும் குறிப்பிடத்தக்க அளவில் ஜெர்மன் இன மக்கள் வாழ்ந்து வந்தனர். எனவே, அவற்றை டென்மார்க்குடன் இணைப்பதை பிஸ்மார்க் எதிர்த்தார். எனினும் டென்மார்க் மன்னர் அவற்றை தம்

நாட்டுடன் இணைத்தார். உடனே பிஸ்மார்க், ஆஸ்திரியாவுடன் சேர்ந்து, டென்மார்க் மீது போர் தொடுத்தார்.

டென்மார்க் தோற்கடிக்கப்பட்டது. இரு குறுநிநிப் பகுதிகளும் ஆஸ்திரிய பிரஷிய ஆதிக்கத்தின் கீழ் தற்காலிகமாக வைக்கப்பட்டன. ஜெர்மன் பேரவைக்கு இப்பிரச்சனையை கொண்டு செல்லாமல் இரு நாடுகள் மட்டும் அதனைத் தீர்த்துக் கொள்ள வேண்டுமென முடிவு செய்யப்பட்டது.

**ஆஸ்திரிய பிரஷியப் போர் (1866) :**

**112**டென்மார்க்கிடமிருந்து கைப்பற்றிய ஷ்லெஷ்விக், ஹோல்ஸ்டெய்ன் பகுதிகள் தொடர்பாக ஆஸ்திரியா பிரஷியா அரசுகளிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது. அது பகைமையாக வளர்ந்தது. ஆஸ்திரியா அப்பிரச்சனையை ஏற்கனவே செய்து கொண்டிருந்த ஒப்பந்தத்திற்கு மாறாக ஜெர்மன் பேரவைக்கு கொண்டு சென்றது. அதனை எதிர்த்த பிரஷியா போர் தொடங்கியது.

ஆஸ்திரியாவுடன் போர் புரிய வேண்டும் என்ற திட்டத்தில்தான் ஷ்லெஸ்விக் ஹோல்ஸ்டெய்ன் சிக்கலை பிஸ்மார்க் முன் கூட்டியே உருவாக்கினார் என்று கூறப்படுகிறது. அப்போரில் ஆஸ்திரியாவைத் தனிமைப்படுத்துவதற்கு ஏற்கனவே ராஜதந்திர நடவடிக்கையில் பிஸ்மார்க் ஈடுபட்டிருந்தார்.

**1863–**ஆம் ஆண்டு போலந்துப் புரட்சியின் போது புரட்சியாளர்களை ஒடுக்குவதற்கு ரஷியாவிற்கு உதவி புரிந்து அந்நாட்டின் நட்பினைப் பெற்றிருந்தார். மேலும், கிரிமியப் போரின் போது ஆஸ்திரியா தனக்கெதிராக பகை உணர்வு கொண்டிருந்ததை ரஷியா மறக்கவில்லை. .னவே, அந்நாடு பிரஷ்யாவிற்குச் சாதகமான நடுநிலையை மேற்கொண்டதில் வியப்பில்லை.

இரண்டாவது, பிரான்சின் மூன்றாம் நெப்போலியனின் நடுநிலையைப் பெறுவதற்கு சில வெகுமதிகளை அளிக்கத் தயாராய் இருப்பதாக பிஸ்மார்க் போக்கு காட்டினார். நெப்போலியனின் படைகள் மெக்சிகோ சேற்றில் சிக்கியிருப்பதை

அறிந்திருந்தார். எனவே, அவர் தீவிர படை நடவடிக்கை எதிலும் ஈடுபட முடியாது என எதிர்பார்த்தார்.

மூன்றாவது, வெனிஷியாவை இத்தாலியுடன் இணைக்க விரும்பிய விக்டர் இமானுவேலுடன் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டார். பிஸ்மார்க் ஆஸ்திரியாவை வடக்கிலிருந்து தாக்கும் போது, இத்தாலி தெற்கிலிருந்து தாக்க வேண்டும் என்று ஒப்புக் கொள்ளப்பட்டது. அதற்குப் பரிசு வெனிஷியா என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இறுதியாக, தனிமைக் கொள்கையைக் கடைபிடித்து வந்த பிரிடடனின் ஆதரவும் எளிதில் கிடைத்துவிட்டது. தடையில்லா வாணிபக் கொள்கையைப் பின்பற்றிய பிரஷியாவை ஆதரிக்க பிரிட்டனுக்கு தடையேதும் இல்லை. ஜெர்மன் தேசியத்தை ஆதரித்த பிரிட்டன் ஆஸ்திரிய பிற்போக்கு வல்லாட்சியை எதிர்தது வந்தது குறிப்பிடத்தக்கது.

போர் தொடங்கியதும் தளபதி மோல்ட்கே உருவாக்கியிருந்த பிரஷியப்படை ஆஸ்திரியாவை போடோல், கிட்கின் ஆகிய இடங்களில் தோற்கடித்து விரைந்து முன்னேறியது. சடோவா என்ற இடத்தில் நடைபெற்ற இறுதிப்போரில் ஆஸ்திரியா படுதோல்வியுற்றது. பிரஷியப் படைகளுக்கு வியன்னாவிற்குச் செல்லும் பாதை திறந்து விடப்பட்டது. ஆஸ்திரியா அமைதியை நாடியது. தொடர்ந்து பிரேக் உடன்படிக்கை கையெழுத்தானது.

**பிரேக் உடன்படிக்கை** :

ஆஸ்திரிய – பிரஷியப் போரை பிரேக் உடன்படிக்கை முடிவிற்குக் கொண்டு வந்தது. அதன்படி,

1. ஹோல்ஸ்டெய்ன் பிரஷியாவுடன் இணைக்கப்பட்டது.
2. ஜெர்மன் கூட்டமைப்பு கலைக்கப்பட்டது.
3. பிரஷியாவின் தலைமையில் வடக்கு ஜெர்மனி கூட்டமைப்பு உருவானது.
4. வெனிஷியா இத்தாலிக்கு கொடுக்கப்பட்டது.

**போரின் விளைவுகள் :** அனைத்து கணிப்புகளையும் பொய்யாக்கும் வண்ணம், ஆஸ்திரிய – பிரஷியப் போர் ஏழே வாரத்தில் முடிவுற்றது. ஜெர்மனியின் மீதான

ஆஸ்திரிய செல்வாக்கு அடியோடு அகற்றப்பட்டது. ஜெர்மனியின் தலைமைக்கு முழுத் தகுதி வாய்ந்தது பிரஷியா தான் என்பது நிரூபிக்கப்பட்டு விட்டது. வடக்கு ஜெர்மன் கூட்டமைப்பு ஜெர்மானிய இணைப்பின் இறுதிப் படிக்கட்டாய் அமைந்தது. இத்தாலி ஐக்கியமும் இறுதிக் கட்டத்தை அடைந்தது.

எல்லாவற்றிற்கும் மேலாக மத்திய ஐரோப்பா பகுதியில் பிரஷ்யாவின் எழுச்சி பழைய வல்லமைச் சமநிலையை மாற்றியமைத்துவிட்டது. வடஜெர்மன் கூட்டமைப்பாக வளர்ச்சியுற்ற பிரஷியா வலிமை பெற்று விளங்கியது. இது பிரான்சிற்கு அதிர்ச்சி அளித்தது.

பிஸ்மார்க்கின் சடோவா வெற்றி, மூன்றாம் நெப்போலியனின் ராஜதந்திரத் தோல்வியாகக் கருதப்பட்டது. ஆஸ்திரியப் பிரஷியப் போர் இரு நாடுகளின் ஆற்றல் திறனை காலி செய்யும் அளவிற்கு நீண்ட நாள் நடைபெறும் என்று எதிர்பார்த்த நெப்போலியனுக்கு ஏழுவாரப் போர் அதிர்ச்சியளித்தது. அவரது அரசியல் எதிர்பார்ப்புகளைப் பொய்யாக்கியது. அவரால் அப்போால் தலையிடவும் முடியவில்லை. பிஸ்மார்க் தமக்கு போக்கு காட்டிவிட்டார் என்பதை காலங்கடந்து உணர்ந்தார். இது பிரான்ஸ் பிரஷிய உறவுக்கு நெருக்கடியைத் தோற்றுவித்தது.

**பிராங்கோ – பிரஷியப் போர் (1870 – 71) :**

'பிரான்சுடன் ஒரு போர் என்பது' வரலற்றில் தர்க்க ரீதியாக நிர்ணயிக்கப்பட்டு விட்டதாக பிஸ்மாக் கருதினார். தெற்கு ஜெர்மன் சிற்றரசுகள் பிரான்சுடன் தொடர்பு கொண்டிருந்தன. அவைகளை பிரஷியாவுடன் இணைப்பதற்கு ஒரு போர் தேவை என்று கருதினார். மேலும், அப்போர் ஜெர்மன் மக்களிடையே நாட்டுப் பற்றுணர்வை உருவாக்கும் என்றும் எதிர்பார்த்தார்.

போருக்கு முன் தமது ராஜதந்திர நடவடிக்கைகள் மூலம் பிரான்சைத் தனிமைப்படுத்தினார். நடந்து முடிந்த போரில் ஆஸ்திரியா மீது கடுமையான நிபந்தனைகளைச் சுமந்தாததன் மூலம் அந்நாட்டின் பகையை தவிர்த்தார். பிரேக் உடன்படிக்கை மூலம் வெனிஷியாவை இத்தாலக்கு அளித்ததால் அந்நாடு பிரஷியாவிற்கு நன்றிக் கடன்பட்டிருந்தது. மேலும், பிரான்ஸ-க்கும் பிரஷியாவிற்கும்

போர் மூண்டால் ரோம் நகரில் நிறுத்தப்பட்டிருக்கும் பிரஞ்சுப்படை வாபசாகும் சூழ்நிலை தோன்றும். அதன் மூலம் இத்தாலி இணைவு முழுமை பெறும் வாய்ப்பு ஏற்படும் என கருதியது. எனவே இத்தாலி பிரஷியாவிற்கு ஆதரவான நடுநிலையை மேற்கொள்ளும் என நியாயமாக எதிர்பார்க்கப்பட்டது. கிரிமியப் போரில் பிரான்சிடம் தோல்வியுற்ற ரஷியா, அதன் மீது வெறுப்புற்றிருந்தது. எனவே, போர் ஏற்பட்டால் ஐரோப்பிய நாடுகள் எதுவும் பிரான்சிற்கு துணை போகாது என்று உறுதிப்படுத்திக் கொண்டார். அதன்பின் போருக்கான உடனடிக் காரணத்தையும் எதிர்நோக்கியிருந்தார்.

**ஸ்பானிய அரசுரிமைப் போர் :** ஸ்பெயினில் ஏற்பட்ட உள்நாட்டுக் குழப்பம் காரணமாக அதன் அரசி விரட்டப்பட்டார். ஸ்பெயின் மக்கள் (பிரஷிய மன்னரின் ஹோஹன்ஸாலர்ன் மரபைச் சேர்ந்த) லியோபால்டு என்பாரை ஸ்பானிய அரியணையில் அமருமாறு வேண்டினர். இதனை மூன்றாம் நெப்போலியன் கடுமையாக எதிர்த்தார். பிரஷிய மன்னரின் உறவினரை பிரான்சிற்குத் தெற்கில் உள்ள ஸ்பெயின் நாட்டின் மன்னராக்கினால் பிரஷிய செல்வாக்கு அதிகரித்து விடுவதோடு கிழக்கு, தெற்கு எல்லைகளில் ஆபத்தை எதிர்நோக்க வேண்டியதிருக்கும் என நெப்போலியன் நியயாமாகவே அஞ்சினார். அவரது கடுமையான எதிாப்பு காரணமாக அம்முயற்சி கைவிடப்பட்டது. ஸ்பெயின் அரியணை தொடர்ந்து ஓராண்டு காலம் காலயாகவே இருந்தது. ஹோஹன்ஸாலர்ன் மரபினரை ஸ்பானிய அரசராக்க வேண்டும் என்ற முயற்சி மீண்டும் புதுப்பிக்கப்பட்டது. இம்முறையும் நெப்போலியன் கடுமையாக எதிாப்பு தெரிவித்தார். பின் பிரஷியா மீது ஒரு ராஜதந்திர வெற்றி பெறும் நோக்குடன் செயல்பட்டார்.

தமது தூதர் பெனடிட்டி என்பவர் மூலம் பிரஷிய மன்னர் வில்லியத்திடம் ஹோகன்ஸாலர்ன் மரபைச் சேர்ந்த ஒருவரை ஸ்பெயின் அரியணையில் அமர அனுமதிக்க மாட்டேன் என ஒரு நிரந்தர உத்திரவாரதம் பெறப் பணித்தார். எம்ஸ் என்ற இடத்தில் பிரெஞ்சுத் தூதர் பெனடிட்டி பிரஷிய மன்னரைச் சந்தித்த போது, அவர் அப்படியொரு உத்திரவாதம் கொடுக்க மறுத்தார். பின் தமக்கும் பிரெஞ்சுத் தூதருக்குமிடையில் நடந்த பேச்சுக்களை விளக்கி பிஸ்மார்க்கிற்கு தந்தி கொடுத்தார்.

## எம்ஸ் தந்தி

பிரான்சுடன் போர் தொடுக்க தகுந்ததொரு வாய்ப்பினை எதிர்நோக்கியிருந்த பிஸ்மார்க் தமக்கே உரித்தான ராஜதந்திர முறையில் எம்ஸ் தந்தியைப் பயன்படுத்தினார். தங்கள் தூதரை பிரஷிய மன்னர் அவமதித்து விட்டார் என்று பிரெஞ்சு மக்கள் எண்ணும்படி தந்தியின் வாசகங்களை மாற்றியமைத்து பிரெஞ்சுப் பத்திரிக்கைகளுக்குக் கொடுத்தார். தங்கள் மன்னரை பிரெஞ்சுத் தூதர் அவமதித்து விட்டார் என்று பொருள்படும் படி ஜெர்மன் பத்திரிக்கைகளுக்கு செய்தி கொடுத்தார். இரு நாடுகளிலும் போர் மூலம் இந்த அவமானத்தை சரி செய்ய வேண்டும் என்ற சூழ்நிலை உருவாயிற்று. இது ஒருவருக்கெதிராக ஒருவரை ஆவேசம் கொண்டெழச் செய்தது. பிரெஞ்சு மக்கள், 'பெர்லினுக்கு எதிராகப் போர்' என்ற வெறிக்கூச்சலை எழுப்பினர். வேறு வழியின்றி மூன்றாம் நெப்போலியன் பிரஷியா மீது போர் தொடுத்தார்.

போரில் எவ்வித முன் அனுபவம் அற்ற மூன்றாம் நெப்போலியன், பிஸ்மார்க்கை எதிர்த்து போரில் இறங்கியது மாபெரும் தவறு. சுமார் எழுபதினாயிரம் வீரர்களை வழிநடத்திச் சென்ற மூன்றாம் நெப்போலியன், இறுதியில் நிபந்தனையின்றி சரணடைந்தார். தமது வாழ்க்கையின் இறுதியான தோல்வியை, இழிவான தோல்வியைச் செடான் போர்க்களத்தில் சந்தித்தார்.

போர் விரைவில் முடிவுற்றது. நெப்போலியன் தோற்கடிக்கப்பட்டு கைது செய்யப்பட்டார். பரெஞ்சு மக்கள் மூன்றாம் குடியரசை நிறுவி போரைத் தொடர்ந்து நடத்தினர். பிரஷியப் படைகள் பிரான்சினுள் முன்னேறி பாரீஸ் நகரை முற்றுகையிட்டனர். இறுதியில் பிரெஞ்சுக்காரர்கள் பணிந்தனர்.

## பிராங்பர்ட் உடன்படிக்கை (1871) :

பிராங்பர்ட் உடன்படிக்கை பிராங்கோ பிரஷியப் போரை ஒரு முடிவிற்குக் கொண்டு வந்தது. அதன்படி,

- ஆல்செஸ் மற்றும் மெட்ஸ் உட்பட லொர்ரைன் மாநிலங்கள் ஜெர்மனிக்கு கொடுக்கப்பட்டன.

➢ 200 மில்லியன் பவுன்களை பிரான்ஸ் போர் இழப்பீடாக ஜெர்மனிக்கு கொடுக்க வேண்டும்.

**போரின் விளைவுகள்** :

இப்போர் ஜெர்மானிய தேசிய உணர்வைக் கிளர்ந்தெழுச் செய்தது. எனவே போர் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போதே பவோயா, பேடன், உட்டன்பர்க் முதலிய தெற்கு ஜெர்மனி அரசுகள் வட ஜெர்மன் கூட்டமைப்புடன் இணைந்தன. ஜெர்மானிய இணைவு முற்றுப் பெற்றது. 1871 ஜனவரி 18–ல் வெர்சேல்ஸ் அரண்மனையின் கண்ணாடி மாளிகையில் பிரஷிய மன்னர் முதலாம் வில்லியம் ஜெர்மன் பேரரசர் (ஹெய்சர்) என பிரகடனப்படுத்தப்பட்டார். பிரெஞ்சுப் பேரரசு மறைந்தது, ஜெர்மானியப் பேரரசு உதயமானது.

இப்போர் இத்தாலிய இணைவின் முழுமைக்கு உதவியது போரின் போது ரோமில் இருந்த பிரஞ்சுப்படைகள் விலகிக் கொள்ள இத்தாலிப் படைகள் ரோம் நகரைக் கைப்பற்றிக் கொண்டன. இத்தாலி இணைவு முழுமை பெற்றது. ஆனால், இப்போரின் முடிவில் பிரஞ்சு மக்கள் மீது சுமத்தப்பட்ட பிராங்பர்ட் உடன்படிக்கை பிரஞ்சு மக்கள் மனதில் ஜெர்மனியின் மீது பழிவாங்கும் உணர்வை தோற்றுவித்தது.

* * *

## பிஸ்மார்க்கின் உள்நாட்டுக் கொள்கை

**1871–**ல் வெர்செயில்ஸ் கண்ணாடி மாளிகையில் ஜெர்மன் பேரரசு பிரகடனப்படுத்தப்பட்டது. அன்றைய தினமே பிஸ்மார்க் அதன் சான்ஸ்லராக அதாவது பிரதமராக நியமிக்கப்பட்டார். **1891–**வரை இருபதாண்டு காலத்திற்கு அவர் அப்பதவியை வகித்தார். அக்காலக் கட்டத்தில் ஜெர்மனியை ஒரு வளமிக்க நாடாகவும் வலுமிக்க நாடாகவும் மாற்றுவதற்கு பல சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தார்.

**உள்நாட்டுச் சீர்திருத்தங்கள்** :

- ஜெர்மனியை உண்டாக்கிய பிஸ்மார்க் **1871–**க்குப் பின் ஜெர்மானியரை உண்டாக்க வேண்டியதிருந்தது. வரலாற்றுக் காலந்தொட்டே ஐக்கியம் என்பதை அறியாத ஜெர்மானியரை அரசியல் ரீதியில் ஒன்றுபடுத்திய பிஸ்மார்க், நிர்வாக ரீதியிலும் பொருளியல் ரீதியிலும் ஒன்றுபடுத்த பல சட்டங்களை இயற்றினார்.
- பேரரசு முழுமைக்கும் ஒரே வகையான சட்டங்களும் சட்ட நிறுவனங்களும் ஏற்படுத்தப்பட்டன.
- ஒரே மாதிரியான நாணய முறையை நாடெங்கும் புகுத்தினார்.
- **1873–**ல் இயற்றப்பட்ட சட்டப்படி பேரரசின் ரெயில்வே நிறுவனம் ஏற்படுத்தப்பட்டு எல்லா ரெயில்வேக்களும் ஒருங்கிணைக்கப்பட்டன. பேரரசின் எல்லாப் பகுதிகளிலும் ரெயில்வே, இராணுவம், தபால், தந்தி, ஆகியவைகளை தொடர்புபடுத்தி சிறப்பாக சிக்கலின்றி செயல்பட ஏற்பாடு செய்தார்.
- **1875–**ஆம் ஆண்டு வங்கிச் சட்டப்ப்டி மாநில அரசின் அதிகாரத்தின் கீழ் செயல்பட்ட வங்கிகள் அனைத்தையும் பண்டேஸ்ராட் அதிகாரத்தின் கீழ் வைக்கப்பட்டது. **1876–**ல் பேரரசின் வங்கி அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. இது மைய அரசின் பொருளியல் நிலையை பலப்படுத்தியது.
- நான்கு இலட்சம் வீரர்களைக் கொண்ட நிலைப்படை ஒன்றை நிறுவுவதற்கு ஏற்பாடு செய்தார். அதற்கு நிரந்தரமாக தேசிய வருமானத்திலிருந்து ஒரு குறிப்பிட்ட தொகையை ஒதுக்குவதற்கும் ஏற்பாடு செய்தார். ஆனால், பேரரசுப் பாராளுமன்றம் இதற்கு ஒப்புதல் அளிக்காததால் தனது செல்வாக்கின் காரணமாக குறுகிய கால மானியம் அளிக்க ஒப்புதல் பெற்றார்.

**நாகரீகத்திற்கான போராட்டம் : (Kultur Kampf)**

ரோமன் கத்தோலிக்க திருச்சபைக்கும் பிஸ்மார்க்கிற்கும் கடுமையான மோதல் ஏற்பட்டது. பொதுவாக கத்தோலிக்கர்கள் ஆஸ்திரியாவிற்கு ஆதரவாகவும் புராட்டஸ்டண்டு பிரஷிய அரசம ரபிற்கு எதிராகவும் இருந்தார்கள். அரச ஆணையை விட டதருச்சபையின் ஆணைக்கே அதிக மதிப்பு அளித்தனர். **1870–**ல் போப் திருச்சபைக்கு **"தவறா வரம்''(Doctrine of Papal Infalliability)** இருப்பதாகப் பிரகடப்படுத்தினார். போப் பிரகட்னப்படுத்தும் திருச்சபை ஆணைகளில் தவறே இருக்காது. அதனை அனைத்து திருச்சபையினரும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதுதான் இதன் பொருள். இது அரசின் ஆணைகளை அச்சுறுத்துவதாக உள்ளது எனக் கருதிய பிஸ்மார்க் கத்தோலிக்க திருச்சபைக்கெதிராக பல சட்டங்களை இயற்றினார். கத்தோலிக்க திருச்சபையினர் இன்னமும் இடைக்கால மூடநம்பிக்கையிலே மூழ்கி கிடக்கின்றனர். அவர்களை நாகரீகமுள்ளவர்களாகச் செய்ய வேண்டியதிருக்கிறது என்று கூறி **"நாகரீகத்திற்கான போராட்டம்''** தொடங்கப்பட்டது. அதாவது கத்தோலிக்க திருச்சபைக்கு எதிரான சட்டங்கள் இயற்றப்பட்டன.

முதலில் **1872–**ல் ஏசு சபைக் குருக்கள் ஜெர்மனியை விட்டு வெளியேற்றப்பட்டனர். ஜெர்மனிக்கும், வாடடிகானுக்கும் இடையில் உள்ள தொடர்புகள் முறிக்கப்பட்டன. அதன் பின் **1873–**லும் **1874–**லும் **"மே (May) சட்டங்கள்''** இயற்றப்பட்டன.

1. ஜெர்மனியில் உள்ள கத்தோலிக்க குருக்கள் மற்றும் திருச்சபை அதிகாரிகள் அனைவரும் ஜெர்மானியக் குடிகளாக இருக்க வேண்டும். ஜெர்மன் பள்ளிகளில் பயின்று ஜெர்மானிய பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.
2. கத்தோலிக்கர் நடத்தும் கல்வி நிறுவனங்கள் அரசினால் எடுத்துக் கொள்ளப்பட்டன.
3. சமயக் கல்வி நிறுவனங்கள் ஜெர்மன் மொழியிலேயே நடைபெற வேண்டும்.
4. திருமணங்கள் அரசினால் பதிவு செய்யப்படவேண்டும்.
5. பொது சமய விலக்கு கூடாது.

6. திருச்சபை சார்ந்த வழக்குகளில் மேல் முறையீடு ஜெர்மனிக்கு வெளியே எடுத்துச் செல்லப்படக்கூடாது.
7. குருக்களை அரசே நியமிக்கும்.
8. சமய துறவற நிறுவனங்கள் தடை செய்யப்பட்டன.

போப் மே சட்டங்கள் செல்லாது என்று அறிவித்து, கத்தோலிக்கர்கள் அதனை எதிர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அரசு கடுமையான அடக்குமுறைகளை மேற்கொண்டது. ஆறு பிஷப்புகள் உட்பட எராளமான குருக்கள் சிறையில; அடைக்கப்பட்டனர். 1,300 கோவில்களில் கத்தோலிக்க வழிபாடுகள் நிறுத்தப்பட்டன.

நாளடைவில் இந்த அடக்குமுறைச் செயல்கள் பயனற்றுப் போயின. **விண்ட்தார்ஸ்டட்** என்பார் தலைமையில் கத்தோலிக்கர் ஆதரவான **"சென்டர் கட்சி''** ஜெர்மன் ரீக்ஸ்டாக்கில் (பாராளுமன்றத்தில்) வலுவுள்ளதாகியது. அதன் எண்ணிக்கை 60–லிருந்து 90 ஆகியது. எனினும் **"நாங்கள் (முந்திய ஜெர்மன் பேரரசரைப் போல் போப்பிடம் மண்டியிட) கனோசாவிற்குச் செல்லமாட்டோம்''** என்று பிஸ்மார்க் அறிவித்தார்.

ஆனால் ரீக்ஸ்டாக்கில் சோஷலிஷ்டுகள் எண்ணிக்கை அதிகரித்தது பிஸ்மார்க்கிற்கு அதிர்ச்சியளித்தது. அவர் சோஷலிஸ்டுகளை தேச விரோதிகள், அரச விரோதிகள் எனக் கருதினார். மேலும் அவர்களது அராஜகத்தை ஒழிப்பதற்கு கத்தோலிக்கர்களின் சென்டர் கட்சியின் ஆதரவு தேவைப்பட்டதால் 1880–ல் மே சட்டங்களை தளர்த்தினார். புதிய போப்பான பதிமூன்றாம் லியோவிடம் சமரசம் செய்து கொண்டார்.

**சோஷலிஸ்டுகளை ஒடுக்குதல்** :

தொழில் புரட்சி காரணமாக ஜெர்மனியில் தொழிலாளர் வர்க்கம் வலுப்பெற்றது. அவர்களிடையே சோஷலிசக் கொள்கைகள் செல்வாக்குடன் திகழ்ந்தது. பிற்போக்கு எதேச்சதிகாரியான பிஸ்மார்க்கிற்கு சோஷலிச கொள்கைகள் மக்கள் விரோதக் கொள்கைகளாகத் தெரிந்தன. 1878–ல் பேரரசர் வில்லியமை கொலை செய்ய முயற்சிகள் நடைபெற்றன. அந்தப் பழியை சோஷலிஸ்டுகள் மேல் சுமத்தி அவர்களை

ஏடுக்குவதற்கு கடுமையான தண்டனைச் சட்டங்களை இயற்றினார். எனினும் ஜெர்மன் ரீக்ஸ்டாக்கில் அவர்கள் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டுதானிருந்தது.

**சமூக நலச் சட்டங்கள்** :

சோஷலிச கொள்கையை வளரவிடாமல் தடுப்பதற்காகவே பிஸ்மார்க் பல சமூகச் சட்டங்களை இயற்றினார். தொழிலாளர்களுக்கு விபத்து, நோய் ஆகியவற்றிலிருந்து பாதுகாப்பளிக்கும் சட்டங்கள் இயற்றப்பட்டன. முதியோர் ஓய்வூதியம், ஆயுள் காப்பு நிதி போன்றவற்றிற்கான நல்வாழ்வுச் சட்டங்களை இயற்றினார்.

**காப்பு வரிகள்** :

வளர்ந்து வரும் ஜெர்மன் ஆலைத் தொழில் உற்பத்திக்கு வெளிநாட்டுப் போட்டியிலிருந்து பாதுகாப்பளிக்க காப்பு வரிகளை விதித்தார். இதனால் அரசிற்கு வருவாய் கிடைத்ததுடன் தொழில் உற்பத்தியும் பெருகியது.

**குடியேற்ற நாடுகள்** :

குடியேற்ற நாடுகள் அமைப்பதில் பிஸ்மார்க் தொடக்கத்தில் அதிக ஆர்வம் காட்டவில்லை. ஆனால், வளர்ந்து வரும் ஆலைத் தொழில்களுக்கு ஏற்ற சந்தைகளுக்காக குடியேற்ற நாடுகள் அமைக்க வேண்டியதிருந்தது. அதன் பயனாக கிழக்காப்பிரிக்கா, தென் மேற்கு ஆப்பிரிக்கா, டோகோலாந்து, காமரூன் ஆகிய ஆப்பிரிக்கப் பிரதேசங்களில் சமோவன், மார்ஷல் தீவுகள், கரோலின் தீவுகள் போன்ற தீவுகளிலும் குடியேற்றங்களை நிறுவினார்.

**பதவி விலகுதல்** :

**1888–**ல் பேரரசர் முதலாம் வில்லியம் மரணமடையவும் அவரது மகன் மூன்றாம் பிரடரிக் பேரரசரானார். அவரும் உடல் நலக் குறைவு காரணமாக **99** நாட்களுக்குள் மரணம் அடைந்து விட்டதால் அவரது மகன் இரண்டாம் வில்லியம் பேரரசரானார். இருபத்தொன்பது வயது நிரம்பிய இளைஞரான அவரால் பிஸ்மார்க்கின் தன்னிச்சையான போக்கை சகித்துக் கொள்ள முடியவில்லை. துடுக்கான போக்கும், சுயமாக முடிவெடுத்து செயலாற்றும் ஆர்வமும் மிகுந்த இரண்டாம் வில்லியமுடன்

பிஸ்மார்க்கினால் இணைந்து பணியாற்ற இயலவில்லை. கருத்து வேறுபாடுகள் காரணமாக **1890–**ல் பதவி விலகினார்.

## <u>பிஸ்மார்க்கின் வெளி உறவுக் கொள்கை – மூவர் கூட்டு உருவாதல்</u>

### பிஸ்மார்க்கின் வெளி உறவுக் கொள்கை : (1871 – 90)

'இரும்பும் இரத்தமும்' என்ற கொள்கையைக் கொண்ட பிஸ்மார்க் அக்கொள்கையின் மூலம் தாம் அடைய வேண்டிய இலட்சியத்தை **1871–**ல் அடைந்து விட்டார். அதாவது போர்க்களவெற்றிகள் மூலம் அவர் 'ஜென்மன் ஐக்கியம்' என்ற தமது குறிக்கோளை அடைந்துவிட்டார். வேண்டுமென்று திட்டமிட்டு மூன்று போர்களை உருவாக்கி நடத்தி இலட்சியத்தில் வெற்றி பெற்றுவிட்டார்ர் அந்தப் போர்களினால் பெற்ற வெற்றியை தக்க வைத்துக் கொள்வதே அதன்பின் அவரது நோக்கமாயிருந்தது. ஜெர்மனிக்கு ஐரோப்பாவில் மேலும் பல இடங்களைக் கைப்பற்ற வேண்டுமென்ற எண்ணம் அவருக்கில்லை. அதற்கேற்ப நமது அயல் நாட்டுக் கொள்கையை மாற்றி அமைத்துக் கொண்டார்.

**அதன் முக்கிய அம்சங்களாவன ;**

* அன்றைய நிலையைத் தக்க வைத்துக் கொள்ளுதல். (Maintancence of Status quo)
* பிரரன்சை ராஜதந்திர ரீதியில் தனிமைப்படுத்துதல்.
* ரஷியாவின் நபுறவை விடாமல் பற்றுதல்.
* பிரிட்டனுடன் உறவு.

முதலாவதாக, ''ஐக்கிய ஜெர்மனியைப் பாதுகாத்தல்'' என்பது தான் அவரது குறிக்கோளாக இருந்தது. அதற்கு அன்றைய ஐரோப்பிய வல்லமைச் சமநிலையை சீர்குலைக்கக் கூடிய வேறு எந்த நிகழ்ச்சிகளும் நடைபெற்றுவிடக்வடாது என்பதில் முன்னெச்சரிக்கையுடனிருந்தார். அதற்கு அடிப்படை ''அமைதி'' என்று உறுதியாகக் கருதினார். இரத்தக்கறை படிந்த இரும்பு ஆயுதங்களைத் தூரவீசி எறிந்துவிட்டு அமைதியின் அண்ணலாக மாறினார். ஐரோப்பிய அமைதியைக் கெடுக்கும் எந்த நிகழ்ச்சிகளையும் தடுத்தார். சான்றாக பால்கன் சிக்கல் காரணமாக **1878–**ல் ரஷியாவிற்கும் பிரிட்டனுக்கும் போர் ஏற்படும் சூழ்நிலை தோன்றியபோது பிஸ்மார்க்

தம்மை நடுவராக கருதிக் கொண்டு அவர்களிடையே சமரசம் ஏற்படுத்தும் எண்ணத்துடன் பெர்லின் மாநாட்டைக் கூட்டினார்.

இரண்டாவதாக, **1870–71** பிராங்கோ பிரஷியப் போரில் பிரான்ஸ் படுதோல்வி அடைந்தபின் தலைநகர் பாரிசை முற்றுகையிட்டு கைப்பற்றினார். ஓரளவு கடுமையான நிபந்தனைகளையுடைய பிராங்பர்ட் உடன்படிக்கையை அதன் மீது திணித்தார். அல்சாஸ், லொரைன் என்ற இரு கயவளம் மிக்க நிலங்களை அபகரித்தார். போர் இழப்பீடு கோரினார். அவர்கள் தலைநகரில் உள்ள வெர்செயில்ஸ் மாளிகையில் ஜெர்மன் பேரரசின் தொடக்கத்தைக் கோலாகலமாகக் கொண்டாடினார். இந்த நிகழ்ச்சிகள் எல்லாம் தீவிர தேசீய உணர்வு கொண்ட பிரெஞ்சு மக்களின் உள்ளங்களில் மாறா வடுவாக உறுத்திக் கொண்டிருக்கும் என்பதையும் உணர்ந்தார். குறிப்பாக அல்சாஸ் லொரைன் இழப்பை தாங்கிக் கொள்ளமாட்டார்கள். தகுந்ததொரு சந்தர்ப்பத்தில் அதனை மீண்டும் கைப்பற்றிக் கொள்ளத்தயங்கவும் மாட்டார்கள் என்று எதிர்பார்த்தார். நிச்சயம் எதிர்காலத்தில் பழிவாங்கும் போர் ஒன்று தொடங்குவார்கள் என்றும் எதிர்பார்த்தார். பிரான்ஸ் மட்டும் தனியாக ஜெர்மனியைத் தோற்கடிக்க முடியாது. ஏனெனில் ஜெர்மனி பிரான்சை விட பொருளியல், மக்கள் தொகை, படை ஆகியவற்றில் முன்னணியில் நிற்கிறது. ஆனால் பிற ஐரோப்பிய வல்லரசு ஒன்றுடன் கூட்டுச் சேர்ந்து ஜெர்மனியைத் தாக்கினால் ஒருவேளை வெற்றி பெற்றுவிடலாம். எனவே பிரான்ஸ் பிற ஐரோப்பிய வல்லரசுடன் கூட்டுச் சேராமல் பார்த்துக்கொள்வது அவரது வெளியுறவுக் கொள்கையின் முக்கிய அம்சமாகத் திகழ்ந்தது.

பிரான்சை சற்று அளவிற்கு அதிகமாகவே இழிவுபடுத்திவிட்டோம் என்று உணர்ந்த பிஸ்மார்க் அதனைச் சாந்தப்படுத்த பிற சலுகைகளைக் காட்ட முன்வந்தார். பிரான்ஸ் குடியேற்றங்கள் அமைப்பதை ஊக்குவித்தார். ஆப்பிரிக்காவில் டுனிசியா, மொராக்கோ ஆகிய இடங்களில் ஆதிக்கம் செலுத்துவதை அவர் ஆதரித்தார்.

மூன்றவாவதாக, ரஷியாவின் நட்புறவை கைவிட்டுவிடக்கூடாது என்பதில அதிக முன்னெச்சரிக்கை காட்டினார். ஜெர்மனி ஐரோப்பாவின் மத்தியில் அமைந்திருந்தது. அதன் மேற்கு எல்லையில் உள்ள பிரான்சுடன் நிரந்தர பகைமையை ஏற்படுத்தியாகிவிட்டது. கிழக்கு எல்லையில் உள்ள ரஷியாவையும் பகைத்துக்

கொண்டால் போர் காலங்களில் இரு முனைகளில் போரிடும் தர்மசங்கடமான நிலை ஏற்பட்டுவிடக்கூடாது என அஞ்சினார். அதனால்தான் ரஷிய உறவுக்கு அதிக முக்கியத்துவமளித்தார்.

நான்காவதாக, பிரிட்டனுடன் நட்புறவு என்பதும் அவரது அயல்நாட்டுக் கொள்கையின் முக்கிய அம்சமாக இருந்தது. பிரிட்டன் தனது கடலாதிக்கம், குடியேற்ற நாட்டு வர்த்தகம் ஆகியவற்றில் எப்போதுமே தனது மேலாண்மையை நிலைநாட்டி வருகிறது என்பதை பிஸ்மார்க் அறிவார். அதற்கு சவால் விடக்கூடிய அளவிற்கு எந்த நாடாவது கடலாதிக்கத்தைப் பெருக்க முற்பட்டால் அதனை அது பகை நடவடிக்கையாகவே கருதும் என்றும் அறிவார். அதனால் பிஸ்மார்க் கடலாதிக்கப் பெருக்கம், குடியேற்ற ஆதிக்கம் ஆகியவற்றில் அதிக ஆர்வம் காட்டவில்லை. ‘கடல் திமிங்கலத்திற்கும் கரை சிங்கத்திற்கும்’ மோதல் வராது என்று நம்பினார். பிரிட்டனுடன் ஒரு திட்டவட்டமான உடன்பாட்டிற்கு வர பிஸ்மார்க் முயன்றார். அது கைகூடவில்லை. பொதுவாக பத்தொன்பதாம் நூற்றாண்டில் பிரிட்டன் தனித்தொதுங்கும் கொள்கையையே கடைபிடித்துக் கொண்டிருந்தது.

**ராஜதந்திர கூட்டுக்கள்** :

**1871–**க்கும், **1890–**க்கும் இடையில் பிஸ்மார்க் ஐரோப்பிய ராஜதந்திர நிகழ்ச்சிகளின் நடுநாயகமாக திகழ்ந்தார். பெர்லின் ஐரோப்பிய யாஜதந்திர தலைநகரமாகியது. பிரான்சைத் தனிமைப்படுத்தவேண்டும் என்ற முயற்சி காரணமாக பிற நாடுகளுடன் வல்லமைச் சமநிலையைத் தமக்குச் சாதகமாக வைத்துக் கொள்ள முயன்றார்.

**மூன்று பேரரசர் கூட்டு : (1872)**

**1872–**செப்டம்பரில் பிஸ்மார்க், ஜெர்மனி, ஆஸ்திரியா, ரஷியா, ஆகிய நாடுகளடங்கிய மூன்று பேரரசர் கூட்டு ஏற்படுத்தினர். இதன் நோக்கம்.

- ஐரோப்பாவில் அமைதியை நிலைநாட்டுதல்.
- அமைதிக்கு ஆபத்து வருமானால் மூன்று பேரரசர்களும் கலந்து பேசி பொதுவான நடவடிக்கை எடுத்தல்.

✧ இப்போதுள்ள அரசியல் ஏற்பாடுகளே தொடர்ந்து இயங்குமாறு பார்த்துக் கொள்ளல்.

இந்தக் கூட்டு பிஸ்மார்க் எதிர்பாத்த நன்மையை நல்கியது. அதாவது பிரான்ஸ் தனித்தொதுக்கப்பட்டது. அல்சை, லொரைன் பகுதிகளை மீண்டும் கைப்பற்றுவதற்குப் போர் தொடங்கினால் எளிதில் முறியடிக்கப்பட்டுவிடும்.

ஆனால் இந்த மூன்று பேரரசர் கூட்டு நெருக்கமான உறவுகளைக் கொண்டிருக்கவில்லை. ஆஸ்திரியாவும் ரஷியாவும் பால்கனில் எதிரும் புதிருமாக இருந்ததால் அவைகளுக்குள் மனக்கசப்பு ஏற்பட்டது. 1876–ல் பால்கன் விஷயமாக இரு அரசுகளும் ஒரு உடன்பாட்டிற்கு வந்தன. பாஸ்னியா ஹெர்சிகோவினாவை ரஷியா ஆஸ்திரியாவுக்கு விட்டுக் கொடுக்க முன்வந்தது. அதுபோல பல்கேரியாவில் ரஷியா தனது மேலாதிக்கத்தை நிறுவிக்கொள்ள இணங்கியது.

1878 பெர்லின் காங்கிரஸில் ஆஸ்திரியா பிரிட்டனுடன் சேர்ந்து ரஷியா உருவாக்கிய பெரும் சுதந்திர பல்கேரியாவை மூன்றாகப் பிரிக்குமாறு கோரியது. இதனை ரஷியா எதிர்த்தது. ஆனால் பிஸ்மார்க் ஆஸ்திரியாவை ஆதரித்ததால் ரஷியா விட்டுக்கொடுக்க நேர்ந்தது. அதே சமயத்தில் ஆஸ்திரியா பாஸ்னியா ஹெர்சிகோவினாவை எடுத்துக் கொண்டது. ரஷியா, தான் ஏமாற்றப்பட்டுவிட்டதாக உணர்ந்தது. எனவே பெர்லின் காங்கிரசிற்குப் பின் மூன்று பேரரசர் கூட்டில் விரிசல் ஏற்பட்டது.

**ஆஸ்திரிய–ஜெர்மன் இருவர் கூட்டு : (1878)**

பால்கன் பகுதியில் ரஷிய ஆதிக்க விஸ்தரிப்பு திட்டங்களைக் கண்டஞ்சிய ஆஸ்திரியா, ஜெர்மனியுடன் ஒரு திட்டவட்டமான உடன்பாட்டிற்கு வர முயன்றது. ஆஸ்திரிய சான்ஸ்லர் ஆண்ட்ரஸ்ஸி பிஸ்மார்க்கைக் சந்தித்து 1879 அக்டோபர் 7–ல் இருவர் உடன்படிக்கை செய்து கொண்டார். இது ரஷியாவின் தாக்குதலுக்கு எதிரான பாதுகாப்பு ஒப்பந்தாமாகும். இதன் முக்கிய அம்சங்கள்.

i) இரு நாடுகளில் ஏதாவது ஒன்றை ரஷியா தாக்கினால் ஒருவருக்கொருவர் படை உதவி செய்ய வேண்டும்.

ii) வேறு ஏதாவது ஒரு நாடு (பிரான்ஸ்) இரு நாடுகளில் ஒன்றை தாக்கினால், மற்றொரு நாடு சாதகமான நடுநிலையை மேற்கொள்ள வேண்டும்.

iii) ரஷியாவும், பிரான்சும் சேர்ந்து தாக்கினால் இரு நாடுகளும் ஒருங்கிணைந்து போராட வேண்டும்.

இரகசியமாக வைத்துக் கொள்ளப்பட்ட இவ்வுடன்படிக்கை ஐந்தாண்டு காலத்திற்கு மட்டும் செய்து கொள்ளப்பட்டது. அதன்பின், தொடர்ந்து புதுப்பிக்கப்பட்டு முதல் உலகப் போர் தொடங்கும் வரை நீடித்தது. 1887–வரை இந்த உடன்படிக்கையின் அம்சங்களை பிஸ்மார்க் இரகசியமாக வைத்திருந்தார்.

**மூவர் கூட்டு : (Triple Alliance)**

ஆஸ்திரியாவுடன் செய்து கொண்ட இருவர் கூட்டை மேலும் வலுப்படுத்த முயன்றார். பிரிட்டனை அதில் இணைக்க பெரிதும் முயன்றார். இது பலனளிக்கவில்லை. பின் அதில் இத்தாலியை இணைக்க முயன்றார். ஆப்பிரிக்காவில் வட பகுதியில் உள்ள டுனிசியாவை இத்தாலியும் கைப்பற்ற விரும்பியது. பிரான்சும் விரும்பியது. இந்த இரு நாடுகளுக்கிடையில் டுன்சியா பற்றிய போட்டியைப் பயன்படுத்தி இத்தாலியை இருவர் கூட்டில் இணையுமாறு செய்ய திட்டமிட்டார். பிரான்சிடமிருந்து அல்சாஸ், லொரைன் பகுதிகளைக் கைப்பற்றியிருப்பதால் அதற்கு ஆறுதலாகவும், அதனை ஈடுகட்டும் வகையிலும் பிஸ்மார்க் பிரான்சிடம் டுனிசியாவைக் கைப்பற்றிக் கொள்ளுமாறு ஊக்கமளித்தார். அதே சமயத்தில் இத்தாலியிடமும் அந்நாட்டைக் கைப்பற்றிக் கொள்ளுமாறு தூண்டினார். பிரான்ஸ் 1881–ல் டுனிசியாவைக் கைப்பற்றிய போது இத்தாலி அதிர்ச்சியடைந்தது. ஏற்கனவே பிரான்சில் உள்ள திருச்சபை ஆதரவாளர்கள் போப்பின் உலகியல் அதிகாரங்களை இத்தாலி அரசு பறிமுதல் செய்ததை கடுமையாகக் கண்டித்தார். அதனால் இத்தாலியில் பிரான்ஸ் மீது வெறுப்பு அதிகமாகியது. எனவே பிஸ்மார்க் எதிர்பார்த்தபடி இத்தாலி இருவர் கூட்டில் இணைய முன் வந்தது. அது இப்போது மூவர் கூட்டு ஆகியது. அதன் முக்கிய அம்சங்கள்

- ◊ பிரான்ஸ் இத்தாலியை தாக்கினால் மற்ற இரு நாடுகளும் அதற்கு உதவ வேண்டும்.

- இரு வல்லரசுகள் அதாவது பிரான்ஸ், ரஷியா ஆகிய இரு நாடுகளும் மூவர் கூட்டில் உள்ள ஏதாவது ஒரு நாட்டையோ அல்லது இரு நாடுகளையோ தாக்கினால் மூன்று நாடுகளும் சேர்ந்து தாக்க வேண்டும்
- இங்கிலாந்திற்கு எதிரான எந்தப் போரிலும் இத்தாலி கலந்து கொள்ளாது.

இந்த உடன்படிக்கை ஐந்து ஆண்டு காலத்திற்கு செய்துகொள்ளப்பட்டது. அவ்வவ்போது புதுப்பிக்கப்பட்டு **1914** வரை நீடித்தது. **1887**–ல் இந்த உடன்படிக்கை முதல தடவையாகப் புதுப்பிக்கப்படும் போது, இத்தாலியோ, ஆஸ்திரியாவோ, பால்கன் தீபகற்பத்தில் எந்தப் பகுதியையும் முக்கூட்டு நாடுகளுக்குத் தெரிவிக்காமல் கைப்பற்றக் கூடாது என்ற நிபந்தனை சேர்த்துக் கொள்ளப்பட்டது.

ஜெர்மனிக்கு இத்தாலியை பிரான்சுடன் சேராமல் தடுத்தது மனநிறைவளித்தது. இத்தாலி ஒரு வல்லரசாக ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன் பிரான்ஸ் தாக்குதலிலிருந்து பாதுகாப்பு பெற்றது. ஆஸ்திரியாவிற்கும் இத்தாலிக்குமிருந்த பழைய பகைமை மறைந்தது. இந்தக் கூட்டு ஐரோப்பாவில் பிரான்சைத் தனிமைப்படுத்துவதில வெற்றி பெற்றது. ஆனால் நாளடைவில் இக்கூட்டுக்கு எதிராக மற்றொரு கூட்டு உருவாகத் தொடங்கியது. அதனால் ஐரோப்பா இரு இராணுவ முகாம்களாகப் பிரியும் அபாயம் ஏற்பட்டது.

**மீண்டும் மூவர் பேரரசர் கூட்டு : (1881–1887)**

ரஷியாவிற்கெதிராக ஜெர்மனி ஆஸ்திரியாவுடன் ஒரு உடன்படிக்கை செய்திருந்தபோதிலும், பிஸ்மார்க் ரஷியாவை ஒரே அடியாகக் கைவிட மனமின்றியிருந்தார். தனியாக விடப்பட்ட ரஷியா ஒரு வேளை, பிரான்சுடன் கூட்டு சேர்ந்து விடலாம் என்று அஞ்சிய பிஸ்மார்க் ரஷியாவை எப்படியாவது ஒரு கூட்டில் வளைத்துப்போட வேண்டும் என்று எண்ணினார். அச்சமயத்தில் ரஷிய ஸார் மன்னராக இருந்தவர் மூன்றாம் அலெக்சாண்டர். அவரும் ஒரு எதேச்சதிகார வல்லாட்சியாளராக இருந்ததால் ஜெர்மனி, ஆஸ்திரியாவுடன் ஒரு உடன்பாட்டிற்கு வர விரும்பினார். அதன்படியாக மீண்டும் மூன்று பேரரசர் கூட்டு புதுப்பிக்கப்பட்டது. அதன் அம்சங்கள் :

- மூன்று பேரரசர்களுள் யாராவது ஒருவர் வேறொரு வல்லரசோடு போரிட நேர்ந்தால் மற்றுமிருவர் சாதகமான நடுநிலையை மேற்கொள்ள வேண்டும்.

- பால்கனில் ஆஸ்திரிய நலன்களை ரஷியா அங்கீகரித்தது.
- கருங்கடல் நீர்ச்சந்திகள் போர்க்கப்பல்களுக்கு மூடப்பட்டிருக்க வேண்டும்.
- வாய்ப்பு ஏற்படும்போது, ஆஸ்திரியா, பாலகன் சிற்றரசுகளான பாஸ்னியா, ஹெர்சிகோவினாவை இணைத்துக் கொள்ளும். இந்த அம்சம மட்டும் இரகசியமாக வைத்துக் கொள்ளப்பட்டது.

மூன்று பேரரசர்கள் கூட்டு ஒரு திட்டவட்டமான பாதுகாப்பு ஏற்பாடு அல்ல. ஒரு நட்பு ஏற்பாடு என்றுதான் கூற முடியும். இது மூன்று ஆண்டுகளுக்கு அமலில் இருக்கும். 1884–ல் மீண்டும் மூன்று ஆண்டுகளுக்கு நீடிக்கப்பட்டது. 1887–ல் ஜெர்மனி–ஆஸ்திரியா இருவர் கூட்டு அம்சங்கள் வெளியிடப்பட்டன. அதில் ரஷிய தாக்குதலுக்கு எதிராக ஆஸ்திரியாவிற்கு ஜெர்மன் உதவிபுரியம் என்று ஒரு அம்சம் இருந்ததைக் கண்டு ரஷியா அதிர்ச்சியடைந்தது. அதன் பின் ரஷியா மூன்று பேரரசு கூட்டில் நீடிப்பது அர்த்தமில்லை எனக் கருதி அதிலிருந்து விலகி விட்டது.

**மறுகாப்புறுதி ஒப்பந்தம் : (1887)**

பால்கனில் ஆஸ்திரியாவும் ரஷியாவும் இரு துருவங்களாக இயங்கியதால் ஆஸ்திரியா இருக்கும் எந்தக் கூட்டிலும் ரஷியா இருக்க முடியாது என்ற நிலை ஏற்பட்டு விட்டது. அதற்காக ரஷியாவை விட்டு விடவும் பிஸ்மார்க்கிற்கு விருப்பமில்லை. எனவே, 1887–ல் ரஷியாவுடன் மூன்று ஆண்டுகட்கு மறுகாப்புறுதி ஒப்பந்தம் செய்து கொண்டார். அதன் முக்கிய அம்சங்கள் :

★ இரு அரசுகளுள் ஏதாவது மூன்று வேறொரு வல்லரசுடன் போர்புரிய நேர்ந்தால் மற்றொரு அரசு சாதகமான நடுநிலையை மேற்கொள்ள வேண்டும். ஆனால், இது வேண்டுமென்று தொடங்கும் ஆக்கிரமிப்புப் போர்களுக்குப் பொருந்தாது.

★ பால்கனில் தற்போதுள்ள அரசியல் ஏற்பாடுகளே நீடிக்க வேண்டும்.

★ பல்கோரியாவில் ரஷியாவின் நலன்களை ஜெர்மனி அங்கீகரிக்கும் மற்றும் ஒரு ரகசிய நிபந்தனையின்படி, பல்கேரியாவில் மீண்டும் சிக்கல்கள் எழாதபடி பார்த்துக் கொள்ள ஜெர்மனி ரஷியாவிற்கு உதவ வேண்டும் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டது.

★ இரு நாடுகளும் பால்கன் பகுதியின் அரசியலைக் கண்காணிக்க உரிமை பெற்றன.

ஆனால், பல்கேரியாவில், ரஷியா தன்னிச்சையாகத் தலையிடுவதை ஆஸ்திரியாவும் பிரிட்டனும் அனுமதிக்காது என்பதும் பிஸ்மார்க்கிற்குத் தெரியும்.

**திறனாய்வு** :

சிக்கல் மிகுந்த இந்த கூட்டுக்களை பிஸ்மார்க் சாதுரியமாக உருவாக்கி ஐரோப்பாவின் அரசியல் ஏற்பாடுகளை அப்படியே பாதுகாப்பதோடு பிரான்சையும் வெற்றிகரமாக தனிமைப்படுத்தி வந்தார். ஆனால் ஒன்றுக்கொன்று முரண்பட்டு நிற்கும் இக்கூட்டுக்கள் பிஸ்மார்க் முறையின் பலவீனத்தை நன்கு வெளிப்படுத்தின. ரஷ்யாவிற்கு எதிராக ஆஸ்திரியாவின் உதவியைப் பெற விரும்பிய பிஸ்மார்க், ஆஸ்திரியாவிற்கு உதிராகத் தமது உதவியை ரஷியாவிற்கு உறுதி செய்யவில்லை. ஒரு சிலரை சில காலம் மட்டும் முட்டாளாக்கலாம், எல்லோரையும் எல்லா காலத்திற்கும் முட்டாளாக்க முடியாது. ரஷியாவிற்கெதிராக ஆஸ்திரியாவிற்கு உதவுவதாகவும் ஆஸ்திரியாவிற்கெதிரராக ரஷியாவிற்குச் சாதகமாக நடுநிலை மேற்கொள்ளவதாகவும் முரணான ஒப்பந்தங்கள் நீண்ட காலத்திற்கு நீடிக்கவில்லை. அவர் பிரான்சிற்கு எதிராக உருவாக்கிய மூவர் கூட்டின் உறுப்பினரான இத்தாலி என்றுமே அக்கூட்டிற்கு பற்றுறுதி காட்டியதில்லை. இவரது ராஜதந்திரக்கூட்டு நாளடைவில் அதற்கு எதிரான மற்றொரு ராஜதந்திரக்கூட்டு உருவாக் வழி வகுத்துவிட்டது. அதுதான்மூவர் நட்புறவு. (Triple Entente).

## கீழைச்சிக்கல் (பால்கன் பிரச்சனை)

**முன்னுரை** :

1453–ல் உதுமானியத் துருக்கியர் கான்ஸ்டாண்டிநோபிளைக் கைப்பற்றியதைத் தொடர்ந்து தென்கிழக்கு ஐரோப்பா முழுவதையும் (பால்கன் தீபகற்பம்) கைப்பற்றினர். இப்பகுதியில் வாழ்ந்த கிறிஸ்தவ மக்கள் சுமார் இரண்டரை நூற்றாண்டு காலம் துருக்கியர் ஆதிக்கத்தின் கீழ் இருந்தனர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பல்வேறு காரணங்களால் அம்மக்களிடையே சுதந்திர உணர்ச்சி தலைதூக்கியது. துருக்கியப் பேரரசும் வலுவிழந்நது. எனவே, பால்கன் மக்கள் விடுதலைப்போர் தொடங்கினர். இப்போர் உதுமானியத் துருக்கிய ஏகாதிபத்தியத்திற்கும் பால்கன் மக்களுக்குமிடையில் நிகழ்ந்த போராக மட்டும் இருந்திருந்தால் கீழைச்சிக்கல் உருவாகியிருக்காது. ஆனால் அவ்விடுதலைப் போரில் சுயநல நோக்கங்களால தூண்டப்பட்ட ஐரோப்பிய வல்லரசுகள் தலையிட்டன. இத்தலையீடுகள் விடுதலைப் போரை பெரும் சிக்கல்மிகு பிரச்சனையாக மாற்றிவிட்டது. அதுவே கீழைச்சிக்கல் எனப்பட்டது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் துவக்கத்தில், ஐரோப்பாவிலிருந்து துருக்கியப் பேரரசு படிப்படியாக மறைந்து வருவதால் ஏற்பட்ட அரசியல் வெற்றிடத்தை நிரப்ப எழுந்த பிரச்சனை – கீழைச்சிக்கல் – என மில்லர் என்பபா குறிப்பிடுகிறார். அடிக்கடி மாறிக் கொண்டிருந்த பின் தொடர முடியாத பின்னிப் பிணைந்த முரண்பட்ட நலன்களும், எதிரெதிற் நிற்கும் மக்களும் ஒன்றுக்கொன்று எதிரான சமயங்களும் மோதி நிற்பதே கீழைச்சிக்கல் என மார்லிபிரவு விளக்கம் தருகிறார்.

கீழைச்சிக்கலின் நான்கு முக்கிய அம்சங்கள் :

1. துருக்கி பேரரசின் அழிவு.
2. பாலகன் மக்களிடையே தோன்றிய தேசிய உணர்வு.
3. துருக்கியப் பேரரசின் அழிவில் ஆதாயம் பெறத் துடிக்கும் ரஷியா.
4. இங்கிலாந்து, பிரான்ஸ் போன்ற வல்லரசுகளின் சுயநல நோக்கங்கள்.

**துருக்கியப் பேரரசின் அழிவு** :

பதினாறாம் நூற்றாண்டில் மூன்று கண்டங்களில் பரவி நின்ற உதுமானியப் பேரரசு ஐரோப்பிய அரசுகளுக்கு அச்சத்தை உண்டு பண்ணியது. அதே பேரரசு பத்தொன்பதாம் நூற்றாண்டில் வலுவிழந்து நின்றது. ஐரோப்பாவின் நோயாளி என எள்ளி நகையாடத்தக்க அளவிற்கு அது சீரழிந்தது. துருக்கி தன் ஐரோப்பிய மாநிலங்களை கட்டிக்காக்க இயலாமல் தவித்தது. அங்கு நல்லாட்சி நடத்தவும் முடியாமல் விடுதலைப்புரட்சிகளை அடியோடு ஒடுக்கவும் சக்தியின்றியிருந்தது. அதே சமயத்தில் அவற்றிற்கு சுதந்திரம் கொடுக்க மனமின்றியிருந்தது. ஐரோப்பிய ராஜதந்திரிகளின் செயல்களைப் புரிந்து கொள்ளும் மனப்பக்குவமும் இல்லாதிருந்தது.

பெரும் வெற்றியாளர்களான துருக்கியர்கள் மோசமான ஆட்சியாளர்களாக இருந்தனர். வாளின் வலிமையால கைப்பபற்றிய நாடுகளை வாளின் வலிமையால் தான் ஆள முடிந்தது. நிர்வாகம் சீரழிந்து கிடந்தது. விடுதலைக் கிளர்ச்சிகளை படுகொலை மூலம் ஒடுக்க முயன்றார். இது ஐரோப்பா வெங்கும் கண்டனக் குரல்களை எழுப்பியது.

**பால்கனில் தேசிய உணர்வு** :

பால்கன் பகுதியில் ஐந்து தேசிய இனத்தவர்கள் வாழ்ந்தனர். அவர்கள், கிரேக்கர், பல்கேரியர், ருமேனியர், ஸ்லாவ்கள் (செர்பியர்) மற்றும் அல்பேனியர். இவர்களில் பெரும்பாலோர் கிறிஸ்தவ சமயப் பிரிவான வைதீகத் திருச்சபை அல்லது கிரேக்கத் திருச்சபையைச் சேர்ந்தவர்கள். இரண்டரை நூற்றாண்டுகளாக அன்னியர் ஆதிக்கத்தின் கீழ் வாழ்ந்தாலும் தங்களின் இன மற்றும் சமய உணர்வுகளைக் கைவிடவில்லை. பிரெஞ்சுப் புரட்சி தோற்றுவித்த சுதந்திர உரிமை உணர்சிகள் பால்கன் பகுதியிலும் பரவத் தொடங்கியது. அதன் காரணமாக அங்கு தேசிய எழுச்சி தோன்றியது.

**ரஷ்யாவின் ஆதிக்க ஆசை :**

அழிந்து வரும் துருக்கிகிப் பேரரசின் வலுவற்ற தன்மையிலிருந்து ரஷ்யா ஆதாயம் பெற முயற்சித்தது. துருக்கியப் பிரச்சனையில் தலையிடுவதற்கு பல காரணங்கள் இருந்தன.

1. புவியியல் ரீதியில் ரஷியப் பேரரசின் தெற்கு எல்லையையொட்டி பால்கன் பகுதி அமைந்திருந்தது.
2. சமய ரீதியில் பால்கன் மக்களைப் போல் வைதீகத் திருச்சபையைச் சார்திருந்தது.
3. இன வழியில் பால்கனில் வாழ்ந்த ஸ்லாவ் இன மக்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தது.
4. உடன்படிக்கை மூலமாக பல சலுகை உரிமைகளைப் பெற்றிருந்தது. குறிப்பாக 1774–ஆம் ஆண்டில் துருக்கியுடன் செய்து கொள்ளப்பட்ட குட்செக் கெய்னாட்ஜி உடன்படிக்கை துருக்கியப் பேரரசில் வாழும் கிறிஸ்துவ மக்களின் பாதுகாவலனாக ரஷ்யாவை அங்கீகரித்தது. இந்த நிபந்தனையின்படி கிறிஸ்துவ மக்களின் நலன்களைப் பாதுகாக்கப் போகிறேன் என்று கூறி துருக்கியப் பேரரசின் உள்நாட்டுப் பிரச்சனைகளில் தலையிடும் வாய்ப்பை ஏற்படுத்தியது.

இவை தவிர அரசியல் நோக்கில் இரு ஆதிக்க நோக்கங்கள் இருந்தன.

- முதலாவதாக, கருங்கடலில் துறைமுகங்களைப் பெற்று பாஸ்பரஸ், டார்டன்ஸ் நீர்ச்சந்திகள் வழியாக கப்பல் விடும் உரிமை பெற்று மத்தியத் தரைக்கடலில் வலம் வர அது விரும்பியது. அதன் மூலம் பிற நாடுகளுடன் வர்த்தகக் கலாச்சாரத் தொடர்பு கொள்ளவதும் அதன் நோக்கம்.
- இரண்டாவதாக, துருக்கிய நோயாளியின் சொத்துக்களை அபகரித்தல், அதாவது, வைதீகத் திருச்சபையின் காவலன் என்ற முறையில் அது தோன்றி வளர்ந்த பழைய பைசாண்டியப் பேரரசை (பால்கன் பகுதியை) தனது ஆதிக்கத்தின் கீழ் புதுப்பித்தல்.

**ஐரோப்பிய வல்லரசுகளின் தலையீடு :**

**1. பிரிட்டன் :** நெப்போலியனின் எகிப்தியப் படையெடுப்பிற்குப் பின் மத்திய கிழக்குப் பகுதியின் (துருக்கியப் பேரரசுப் பகுதி) முக்கியத்துவம் உணரப்பட்டது. கிழக்கு நாடுகளின் தலைவாயில் போன்றிருந்த இப்பகுதியின் அரசியல், இராணுவ மற்றும் வர்த்தக முக்கியத்துவம் நன்கு வெளிப்பட்டது. எனவே கிழக்குப் பகுதியில் பேரரசுகளையும் குடியேற்ற நாடுகளையும் நிறுவியிருந்த பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய வல்லரசுகள் மத்திய கிழக்கில் தங்களுக்கு விரோதமான எந்த அரசும் கால்

ஊன்றிவிடக்கூடாது என்பதில் கவனமாக இருந்தனன குறிப்பாக ரஷியாவின் ஆதிக்கம் ஏற்பட்டு விடக்கூடாது என்று கருதின.

மத்திய கிழக்குப்பகுதி நோக்கி ரஷியா ஒரு அடி முன்னேறினாலும், பிரிட்டிஷ் அரசியல்வாதிகள் அச்சமடைந்தனர். ரஷிய முன்னேற்றத்தைப் பற்றிய இந்த வரம்பு கடந்த அச்சம் ரஷ்ய பீதியாக மாறியது. எனவே பால்கன் பற்றிய பிரிட்டிஷ் கொள்கை இரு நோக்கங்களை கொண்டிருந்தது. அவை,

- ரஷியாவின் ஆதிக்க விரிவாக்கத்தைத் தடுப்பது.
- உதுமானிய துருக்கியப் பேரரசை ஆதரித்து வலுப்படுத்துவது.

**பிரான்ஸ்** : பதினாறாம் நூற்றாண்டில் இருந்தே பிரான்ஸ் துருக்கியுடன் நேச உறவு கொண்டிருந்தது. கேபிச்சுலேஷன் என்ற ஒப்பந்தப்படி துருக்கியப் பேரரசில் பல வர்த்தக சலுகைகளை பெற்றிருந்தது. எனவே அப்பகுதியில் ரஷிய செல்வாக்கு பரவுவதை பிரான்ஸ் எதிாத்தது.

**ஆஸ்திரியா** : பால்கனில் ரஷியாவிற்கு நேர் போட்டியாக இருந்தது ஆஸ்திரியா. துருக்கியயைப் போல், ஆஸ்திரியாவில் ஸ்லாவ் இன மக்கள் வாழ்ந்து வந்ததால் அம்மக்களின் கிளர்ச்சி ஆஸ்திரியாவையும் பாதித்தது. ஸ்லாவ் இன மக்களின் விடுதலை போராட்டத்திற்கு ரஷியா ஆதரவளிப்பதை ஆஸ்திரியா விரும்பவில்லை. டான்யூப் ஆறு வழியாக நடைபெற்ற வர்த்தகம் இடையூறு இன்றி நடைபெற வேண்டும் என ஆஸ்திரியா அக்கறை எடுத்துக் கொண்டது. அப்பகுதியில் ரஷியாவின் ஆதிக்கம் பரவுவதை எதிர்த்தது.

பொதுவாக ரஷியா நீங்கலாக, பிற ஐரோப்பிய நாடுகள் துருக்கியப் பேரரசின் பிரதேச ஒருமைப்பாடு பாதுகாக்கப்பட வேண்டும் என எண்ணின. அதன் மூலம் அவை ஐரோப்பாவிலேயே ஒரு பிற்போக்கு வல்லாட்சிக்கு முட்டுக் கொடுத்து நிற்கும் பரிதாப நிலையில் இருந்தன. அதே சமயத்தில், தேசியம், முற்போக்குச் சீர்திருத்தம், ஆகியவற்றின் மொத்த எதிரியான ரஷிய ஸார், பாலகனின் தேசிய உணர்வுகளின்

காவலனாக சீர்திருத்த இயக்கங்களின் நண்பனாகக் காட்சியளிப்பது வரலாற்று விநோதங்களில் ஒன்று.

**தொகுப்புரை** :

இவ்வாறு கீழைச் சிக்கலைச் சுற்றி வல்லரசுகளின் வலுவான ராஜதந்திரத் திட்டங்கள் உருவாயின. அவை சிக்கலைத் தீர்ப்பதற்குப் பதில் அதனை அதிகரிக்கச் செய்துவிட்டது. உடனே ரஷியா பாலகன் தேசிய இனத்திற்கு உதவிபுரிய வரும், பிற ஐரோப்பிய வல்லரசுகள் ரஷியா எங்கே வெற்றி பெற்று ஆதாயமடைந்துவிடுமோ என்ன் அஞ்சி அப்பிரச்சனையில் தலையிடும். அவைகள் தேசிய இனத்திற்கு உதவியளிக்க விரும்பினாலும் அது ரஷியாவிற்கு சாதகமாகிவிடுமே என்றுதான் அஞ்சின. அதே சமயத்தல் துருக்கியின் ஆட்சி முறையை சீர்திருத்தி பால்கன் மக்களுக்கு நல்லாட்சி அளிக்குமாறு செய்ய இயலாதவாறு அவை தவித்தன. அதனால் பால்கன் சிக்கல் பெருஞ்சிக்கலாக மாறிக் கொண்டே இருந்தது.

பத்தொன்பதாம் நூற்றாண்டு முழுவதும் கீழைச்சிக்கல் பிரச்சனை ஐரோப்பிய ராஜதந்திரிகளுக்குப் பெருஞ்சோதனையாக இருந்தது. ஐரோப்பிய அமைதிக்கும் பேராபத்து விளைவித்தது, பல போர்கள் நிகழ்ந்தன. கிரேக்க விடுதலைப்போர், கிரிமியப் போர், ரஷிய துருக்கியப் போர், பால்கன் போர்கள் ஆகிய போர்கள் நடந்தன. எட்ரியாநோபிள் உடன்படிக்கை **(1829)**, பாரிஸ் உடன்படிக்கை **(1856)**, சான்ஸ்டபானோ உடன்படிக்கை **(1878)**, பெர்லின் காங்கிரஸ் **(1878)** லண்டன் உடன்படிக்கை **(1913)**, புகாரஸ்ட் உடன்படிக்கை **(1913)** போன்ற உடன்படிக்கைகள் கையெழுத்தாயின. **1878–**ல் கீழைச்சிக்கலைத் தீர்க்க பெர்லினில் ஒரு ஐரோப்பியக் காங்கிரசே கூடியது. இவைகள் எதுவும் பால்கன் சிக்கலுக்குத் தீர்வு காணவில்லை. இறுதியில் முதல உலகப்போர் தொடங்குவதற்கு அது ஒரு வகையில் காரணமாருந்தது. அப்போருடன் கீழைச்சிக்கலும் முடிவுற்றது.

* * *

## கிரேக்க விடுதலைப் போர்

## (1821 – 1829)

உதுமானியப் பேரரசின் சிதைவைச் சுட்டிக்காட்டும் முக்கிய கட்டமாக கிரேக்க விடுதலைப்போர் விளங்குகிறது. இதுவெறும் உதுமானியர் உள்நாட்டுப் பிரச்சனையாகக் கருதப்படவில்லை. நெப்போலியன் சகாப்தத்திற்குப் பின் ஐரோப்பாவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய நிகழ்ச்சியாகவும், ஐரோப்பிய ராஜதந்திரங்களுக்கு பெரும் தலைவலி தரும் சிக்கலாகவும் இருந்தது. உதுமானியப் பேரரசைப் பற்றி ஐரோப்பியவல்லரசுகள் என்ன கருத்துக் கொண்டிருக்கின்றன என்பதை எடுத்துக் காட்டும் நிகழ்ச்சியாகவும் அமைந்தது.

வெற்றி வீரர் இரண்டாம் முகமதின் காலத்திற்கு பின் கிரேக்க நாடு உதுமானியப் பேரரசின் பிரிக்கமுடியாத அங்கமாக இருந்தது. ஐரோப்பிய நாகரீகத்தையும், பண்பாட்டையும், தனிமனித உரிமைச் சிறப்பையும் கற்றுத் தெளிந்த அந்நாடு இரண்டரை நூற்றாண்டு காலமாக அன்னியப் பண்பாட்டிற்கும் அரசியல் ஆதிக்கத்திற்கும், சமயச் செல்வாக்கிற்கும் அடிபணிந்திருந்தது. எனினும் அந்த இரண்டரை நூற்றாண்டு காலம் தங்கள் தனித்தன்மையையும் உரிமை உணர்வையும் போற்றிப் பாதுகாத்து வந்தனர். பிரெஞ்சுப் புரட்சியினால் வெடித்துச் சிதறிய பொறிகளான விடுதலை, தேசிய உணர்வுகள் கிரேக்க மண்ணிலும் விழுந்து அவை உரிமைத் தீயாக சுடர் விட்டு எரிய ஆரம்பித்தது.

**கிரேக்க விடுதலைப் போரின் காரணங்கள்** :

1. **1560–**ல் கிரேக்கர்களின் அரசியல் சுதந்திரம் பறிபோனாலும்கூட, அவர்களின் வைதீகத் திருச்சபை சுதந்திரமாக இயங்கி வந்தது. அத்திருச்சபை கிரேக்கர்களிடையே ஒருமைப்பாட்டையும் தாங்கள் தனித்தேசிய இனத்தைச் சேர்ந்தவர்கள் என்ற எண்ணத்தையும் அழியவிடாது பாதுகாத்து வந்தது.
2. ரிகாஸ் என்ற கிரேக்கத் தேசியக் கவிஞரால் நிறுவப்ப.ட் ஹெட்டேரியா பிலைக் அல்லது நண்பர்கள் கழகம் எனப்பட்ட இரகசிய இயக்கம் பண்டையப் பண்பாட்டுச் சிறப்புக்களை எடுத்துக்காட்டியது நாட்டுப் பற்றையும் ஊட்டியது. உதுமானியப் பேரரசின் பிற இடங்களிலும் ஐரோப்பிய நகர்களிலும் வாழ்ந்த

கிரேக்க வர்த்தகர்களும் செல்வந்தர்களும் கிரேக்க கல்விக் கூடங்களுக்கு அறக்கொடை வழங்கினர். இவை பண்டைய கிரேக்க பண்பாடு வரலாற்று உணர்வுகளை அழிந்துவிடாது காப்பாற்றி சுதந்திர உணர்வாக புத்துயிர் பெற உதவின.

3. கிரேக்கக் குடியானவர்கள் மிகக் கொடூரமாக நடத்தப்பட்டார்கள். அவர்களைப் பொறுத்தமட்டில் வாயென்னும் பெயரால் அவர்களின் உழைப்பைக் கசக்கிப் பிழியும் இயந்திரமாக உதுமானிய நிர்வாகம் கருதியது. சட்டத்தன் பாதுகாப்பு அவர்களுக்கில்லை. பாஷாக்கள் (ஆளுநர்கள்) தங்கள் குறுகிய பதவி காலத்திற்குள் தங்களை விரைவாக செல்வந்தர்கள் ஆக்கிக் கொள்வதில் கண்ணும் கருத்துமாயிருந்தனர். மொரியா பகுதியில் எழுந்த கிரேக்க விடுதலைப் போர் நிலமானியக் கொடுமைக்கெதிரான விவசாயிகளின் கிளர்ச்சியாகவும் இருந்தது.
4. கிரீஸின் மலைப்பாங்கான பகுதிகளிலும் தீவுகளிலும் கிளெப்ட் எனப்பட்ட கூட்டத்தினர் உதுமானியச் சட்ட திட்டங்களுக்கு அஞ்சாது சுதந்திரமாக வாழ்ந்தனர். உதுமானியர்களை அடியோடு வெறுத்த அவர்கள் கொள்ளைத் தாக்குதல்களை மேற்கொண்டு மறைந்து வாழ்ந்தனர். இவர்களுடைய உதுமானிய எதிர்ப்புணர்வு நாளடைவில் கிரேக்கத் தேசிய உணர்வர்க மலர்ந்தது.
5. கிரீஸின் வட பகுதியில் உள்ள ஜனீனாவின் ஆளுநராக அலிபாஷா சுல்தானுக்கெதிராகக் கொடி தூக்கினார். இதனால் கிரீஸில் உள்ள கோட்டை காவற்படைகள் அனைத்தும் அக்கலகத்தை அடக்கும் பணியில் ஈடுபட்டன. இச்சந்தர்ப்பத்தை கிரேக்க விடுதலை வீரர்கள் பயன்படுத்திக் கொள்ள முடிவு கட்டினர்.

**இப்ஸிலாந்தியின் முயற்சிகள் (1821)** :

இச்சமயத்தில் இப்ஸிலாந்தி என்பவர் மால்டாவியா. வலாச்சியாப் பகுதிகளில் வாழும் கிரேக்கர்களின் துணை கொண்டு கிளர்ச்சியைத் தொடங்கினார். ரஷிய மன்னர் அலெக்சாண்டரின் உதவியை நம்பிக்கையுடன் எதிர்நோக்கி நின்றார். ஆனால் அச்சமயத்தில் ஜார் ஆஸ்திரிய சான்ஸ்லர் மெட்டர்னிக்கின் கட்டளைக்கிணங்க

கிளர்ச்சிசிாளர்களுக்கு உதவ மறுத்து விட்டார். எனவே இப்ஸிலாந்தின் முயற்சி தோல்வியுற்றது.

**மொரியாவில் கிளர்ச்சி** :

அதே சமயத்தல் மொரியா பகுதி கிரேக்கக் குடியானவர்கள் தொடங்கிய கிளர்ச்சி சுதந்திரப் போராட்டமாகத் கொழுந்துவிட்டெரியத் தொடங்கியது. வால்டெட்ஸி என்ற இடத்தில் கிளர்ச்சியாளர்கள் துருக்கியப் படையைத் தோற்கடித்து படுகொலை செய்தனர். தீவுப் பகுதிகளில் வாழ்ந்த கிரேக்க வர்த்தகர்கள் கப்பற்படையொன்றை அமைத்து ஈஜியன் தீவுகளையும் அயோனியன் தீவுகளையும் மொரியா கரையோரப் பகுதிகளையும் சூறையாடினார். விரைவில் மொரியா முழுவதும் மமடடுமின்றி கொரிந்து நிலச்சந்திக்கு வடபுறமும் கிளர்ச்சியாளர்கள் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது. **1822–**ல் கிரேக்கர்கள் தங்கள் விடுதலையைப் பிரகடனப்படுத்தினர்.

**துருக்கியின் எதிர் நடவடிக்கைகள்** :

கிரேக்கர்களின் கிளர்ச்சியையும் முஸ்லீம்களின் படுகொலையையும் கேள்வியுற்ற சுல்தான் இரண்டாம் முகமது, தலைநகர் உட்பட பேரரசின் பிற பகுதிகளில் வாழ்ந்த கிரேக்கர்களைப் படுகொலை செய்தார். கிரேக்க வைதீகத் திருச்சபைத் தலைவர் கொல்லப்பட்டு அவரது சடலம் கடலில் வீசப்பட்டது. இப்பயங்கரச் செய்தி கிறிஸ்தவ ஐரோப்பாவை அதிர்ச்சியுறச் செய்தது.

**1821–**ல் தொடங்கிய இக்கிளர்ச்சியை அடக்க சுல்தான் முழு முயற்சியுடன் நடவடிக்கைகளை மேற்கொண்டும் முடியவில்லை. எனவே தமது எகிப்திய ஆளுநரான முகமது அலியின் உதவியை நாடினார். ஐரோப்பிய முறையில் பயிற்சியும் படைக்கலன்களும் கொண்டிருந்த முகமது அலியின் படையொன்று அவரது மகன் இப்ராஹுூம் தலைமையில் கிரீசிற்குப் புறப்பட்டது.

**இப்ரஹிமின் வெற்றிகள்** :

**1824–**ல் அலெக்சாண்டிரியாவிலிருந்து புறப்பட்ட அவர், வழியில் கிரீட் தீவைத் தாக்கிக் கைப்பற்றி மொரியாவில் இறங்கினார். முதலில் நாவேரினாவைக் கைப்பற்றி மிஸ்ஸலோங்கியை தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தார். விரைவில் ஏதன்சும், கொரிந்தும் வீழ்ந்தது. ரஸித் பாஷா என்ற அல்பேனியப் படைத்தலைவர் கிரேக்கர்களை

முறியடித்தார். படுகொலை புரிவதில் இப்ராஹீம் கிரேக்கர்களுக்குச் சற்றும் இளைத்தவரல்ல என்பதை நிரூபித்துக் காட்டினார். கிரீஸ் முழுவதும் மீண்டும் உதுமானியர் ஆதிக்கத்தில் கொண்டு வரப்பட்ட வேளையில் ஐரோப்பிய வல்லரசுகள் தலையிட்டன.

பிரிட்டனின் புதிய அயல்நாட்டு அமைச்சர் கா்னிங் பிரபு கிரேக்க விடுதலைப் போருக்குத் தார்மீக ஆதரவு அளித்தாலும் அரசியல் ரீதியில் ஆதரவளிக்கத் தயங்கினர். எனெனில், உதுமானியப் பேரரசை உருக்குலையச் ச்சய்யும் எந்த முயற்சியும் ரஷியாவிற்கே சாதகமாக அமையும் என நம்பினார். எனினும் கிரேக்கர்களுக்கு தற்காலிகப் புரட்சி அரசு அந்தஸ்து அளிக்க முன்வந்தார். பிரான்சும் சற்றேறக்குறைய இதே கருத்தினையே கொண்டிருந்தது.

ஆஸ்திரியச் சான்ஸ்லர் மெட்டர்னிக்கிற்கு புரட்சி. தேசியம் என்பவை அறவே பிடிக்காத கொள்கைகள். எனவே, கிரேக்க விடுதலை முழக்கத்திற்கு அவர் ஆதரவு நல்கவில்லை.

ரஷிய ஜார் முதலாம் அலெக்சாண்டர் மெட்டர்னிக்கின் செல்வாக்கிலிருந்து விடுபட முடியாமலும், நாட்டு மக்களின் கிரேக்க ஆதரவு உணர்வை அலட்சியப்படுத்த முடியாத நிலையிலும் தவித்தார். அவர் 1825–ல் மரணமடைந்தபின் ரஷியாவில் அரியணை ஏறிய முதலாம் நிக்கோலஸ், துருக்கியைப் பொறுத்த மட்டில் மகாகாதரினின் கொள்கையைக் கடைப்பிடிப்பவர். துருக்கியைத் துண்டு துண்டாக்கி கான்ஸ்டாண்டி நோபிளில் பண்டைய பைசாண்டியப் பேரரசை ரஷிய ஜார் தலைமையில் புதுப்பிக்க துடித்துக் கொண்டிருந்தார்.

**இலண்டன் ஒப்பந்தம் (1827)** :

கிரேக்க விடுதலைப் போரில் ரஷியா தன்னிச்சையாகத் தலையிடுவதை விரும்பாத பிரிட்டனும், பிரான்சும், ரஷியாவுடன் இணைந்து செயல்பட விரும்பின. அதன் காரணமாக அந்நாடுகள் செயின்ட் பீட்டர்ஸ்பர்க் பிரகடனத்தை வெளியிட்டன. அதில் சுல்தானின் மேலதிகாரத்திற்குட்பட்டு, சுயாட்சி பெற்ற கிரிஸ் உருவாக்கப்பட வேண்டுமென்றும், அதற்குரிய நடவடிக்கைகளுக்கு தாங்கள் தயார் எனவும்

அந்நாடுகள் அறிவித்தன. பிரகடனத்தை கிரேக்கர்கள் ஏற்றனர். வெற்றி பாதையிலிருந்த சுல்தான் ஏற்க மறுத்தார். எனவே, மூன்று வல்லரசுகளும் இலண்டன் ஒப்பந்தம் செய்து கொண்டு தங்கள் பிரகடனத்தை படைபலம் கொண்டு செயல்படுத்த முடிவு கட்டின.

**நவாரினோ போர் (1827) :**

பிரிட்டிஷ், பிரெஞ்சு, ரஷியக் கப்பற்படைகள் கிரேக்கத் துறைமுகங்களை முற்றுகையிட்டு, துருக்கி எகிப்தியக் கப்பற்படைகளை உள்ளே வரவோ வெளியே செல்லவோ முடியாதவாறு பாதுகாத்து நின்றன. நவாரினோவில் தம் கப்பற்படைகளை நிறுத்தி வைத்திருந்த இப்ராஹிம் அங்குள்ள மக்களைத் தாக்கத் தொடங்கினர். அதன் காரணமாகப் போர் மூண்டது. போர் தொடங்கிய சில மணி நேரத்திற்குள்ளாக துருக்கி எகிப்திய கப்பற்படை முற்றிலும் மறைந்து விட்டன. நவாரினோவில் துருக்கிய கப்பற்படையின் அழிவுச் சின்னங்கள் தாம் மிஞ்சின. லெபாண்டோ போருக்குப் பின் **(1571)** உதுமானியர் அடைந்த கடுமையான கப்பற்படை தோல்வி இதுவாகும் .

**ரஷிய – துருக்கியப் போர் (1829 – 29) :**

1. ரஷ்யா, தான் கைப்பற்றிய பகுதிகளை அனடோலியாவில் உள்ள எர்ஸிரம் உட்பட துருக்கிக்கு திருப்பியளித்தது. டான்யூப் நதி முகத்துவாரத்திலுள்ள மோல்டாவியாவின் ஒரு சிறு பகுதியை மட்டும் வைத்துக் கொண்டது.

2. மோல்டாவியாவும், வலாச்சியாவும் உதுமானியருக்கே திருப்பி அளிக்கப்பட்டது. அவை சுய ஆட்சி பெற்ற பகுதிகளாக அங்கீகரிக்கப்பட்டன. தங்களுக்கென தனிப்படை வைத்துக் கொண்டன. பெயரளவிற்கே அவை துருக்கிய சுல்தானுக்கு கட்டுப்பட்ட நாடுகளாகக் கருதப்பட்டன.

3. செர்பியாவின் தன்னாட்சியும் அங்கீகரிக்கப்பட்டது. ஆனால், பெல்கிரேடு, ஒர்சோவா அரண்களில் தொடர்ந்து துருக்கியப்படை இருக்க அனுமதியளிக்கப்பட்டது.

4. துருக்கிக்கும், ரஷ்யாவிற்கும் புருத் நதியே எல்லையாகக் கருதப்பட்டது.

5. டான்யூப் கரைகளிலிருந்த உதுமானியர் கோட்டைகள் எல்லாம் அழிக்கப்பட வேண்டுமென விதிக்கப்பட்டது.
6. துருக்கி ரஷ்யாவிற்கு போர் இழப்பீடாக ஒரு பெருந்தொகை அளிக்க வேண்டும். அதை பத்தாண்டு காலத்திற்குள் கொடுக்க வேண்டுமெனவும் வற்புறுத்தப்பட்டது.

7. கிரீசைப் பொறுத்தமட்டில் ஏற்கனவே சுல்தான் ஏற்றுக் கொண்டபடி, அவரது மேலதிகாரத்திற்குட்பட்ட சுய ஆட்சி பெற்ற கிரீஸ் உருவாக்கப்பட்டது. சுய ஆட்சி பெற்ற கிரீஸில் கொரிந்திற்கும் வடக்கில் உள்ள பகுதிகளும் அடங்கியிருக்குமாறு செய்யப்பட்டது.

**ஏட்ரியாநோப்பிள் உடன்படிக்கை முக்கியத்துவம்** :

1. ஏட்ரியாநோப்பிள் உடன்படிக்கை உதுமானியப் பேரரசின் சிதைவிற்கு அங்கீகாரம் அளித்தது போலாயிற்று. தொடர்ந்து மற்ற கிறிஸ்தவ குடிகளும் சுய ஆட்சி கோருவதற்கு தூண்டுகோலாகவும் இருந்தது.

2. ரஷ்யாவிற்கு ராஜதந்திர ரீதியில் இது ஒரு மாபெரும் வெற்றி. கிரீஸின் விடுதலைக்கு பிரிட்டனும் பிரான்சும் ஆதரவளித்த இலண்டன் ஒப்பந்தமும், நவாரினோ போரும் தான் முக்கிய காரணமென்றாலும், விடுதலை வாங்கித்தந்த பெருமையை ரஷ்யா ஜார் மட்டுமே தட்டிப் பறித்துச் சென்று விட்டார். பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய வல்லரசுகள் சுயநலம் காரணமாக ரஷ்யா மீது கொண்ட சந்தேகத்தனால் உறுதியற்ற முறையில் தலையிட்டது தான் அதற்குக் காரணம்.

3. உதுமானியப் பேரரசில் எழுந்த கீழைச்சிக்கல் இப்போது ஐரோப்பியப் பிரச்சனையாகிவிட்டது. எந்தவொரு நாடும் தன்னிச்சையாக அச்சிக்கலில் எந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியாது என்பது உறுதியாகியது.

4. ரஷ்யா மீது கொண்ட அச்சம் காரணமாக பிரிட்டனும், பிரான்சும் உதுமானியப் பேரரசின் ஒருமைப்பாட்டைக் கட்டிக்காக்க உறுதி பூண்டுள்ளன என்பது தெளிவானது.

5. போர் தொடங்கிய போது ரஷ்யா தனக்கு உதுமானியப் பகுதிகளை இணைத்துக் கொள்ளும் எண்ணம் கிடையாது என்று கூறியபடியே நடந்துகொண்டது. என்றாலும் புவியியல் முக்கியத்துவம் வாய்ந்த டான்யுப் முகத்துவாரப் பகுதிகளை எடுத்துக்கொண்டது குறிப்பிடத்தக்கது.

6. இறுதியாக, சுல்தானின் இராணுவ வலிமையின்மை நன்கு வெளிப்பட்டுவிட்டது. தனக்கு கீழுள்ள ஆளுநர் ஒருவரின் உதவி பெற்றே உள்நாட்டு கலவரத்தை அடக்க வேண்டிய பரிதாப நிலைக்குத் தள்ளப்பட்டார். இதை தெளிவாக உணர்ந்து கொண்ட முகம்மது அலி, சிரியா உள்ளிட்ட எகிப்தின் மரபுரிமை மன்னராகும் தன் கனவைப் பூர்த்தி செய்யத் துணிந்தார். சுல்தானின் மேலாதிக்கத்தையே புறக்கணித்து போர் முரசு கொட்டினார். அதன் தொடர்ச்சியாக கீழைச்சிக்கலின் அடுத்த அரசியல் வெல்திறன் நாடகம் ஆரம்பமானது.

## கிரிமியப் போர் (1854 – 1856)

## பாரீஸ் உடன்படிக்கை (1856)

கீழைச்சிக்கல் என்னும் நீண்ட தொடர் நாடகத்தில் கிரிமியப் போர் ஓர் முக்கிய இடத்தை வகிக்கிறது. இப்போர், உண்மையில் ஐரோப்பிய வல்லரசுகளின் ஆதிக்கப் போட்டி காரணமாகவே மூண்டது. ஒரு புறம் ரஷியாவும், மறுபுறம் பிரிட்டன், பிரான்சும் ஒன்றையொன்று ராஜதந்திர ரீதியில் வெற்றி கொள்ள முயன்றன. இதில் ஆஸ்திரியாவும் சிக்கிக் கொண்டது. மிகப்பிந்திய நிலையில் சார்டினியாவும் தலையிட்டது. துருக்கிக்கு ஆதரவாக பிரிட்டனும் பிரான்சும், ரஷ்யாவிற்கெதிராகப் போரில் குதித்தாலும் இப்போரில் உதுமானியர் பங்கு மிகவும் குறைவானது. உதுமானிய மண்ணில் போர் நடைபெறவில்லை. போர்ப் பிரச்சனைகள் இலண்டனிலும், வியன்னாவிலும், இறுதியில் பாரிசிலும் தான் விவாதிக்கப்பட்டதேயன்றி இஸ்தாம்பூலில் அல்ல. ரஷிய ஜார் முதலாம் நிக்கோலாசும், பிரெஞ்சுப் பேரரசர் மூன்றாம் நெப்போலியனும், ஆஸ்திரிய, சான்ஸ்லர் புயோலும், பிரிட்டிஷ் அமைச்சர் பாகர்ஸ்டனும் தான் அதிகப் பங்கெடுத்தனரேயன்றி சுல்தான் அப்துல் மஜித் அன்று. ஆனால், போருக்கான அடிப்படைப் பிரச்சனைகளும் உடனடிக் காரணமும் உதுமானியப் பேரரசு தொடர்புடையது என்பதில் ஐயமில்லை.

**அடிப்படைக் காரணம்** :

**ரஷ்யாவின் நிலைமை** : ரஷ்ய ஜார் நிக்கோலஸ் கூற்றுப்படி உதுமானியப் பேரரசு ஆட்டம் கண்டுவிட்டது. எந்த நிமிடத்திலும் அது சிதறுண்டு போய் அழிந்து விடக்கூடிய அபாய கட்டத்தை அடைந்துவிட்டது. இந்த நிலையில் பால்கன் சிற்றரசுகளை தன் பாதுகாப்பிற்குட்பட்ட நாடாக மாற்றி கான்ஸ்டாண்டிநோபிளில் பழைய பைசாண்டியப் பேரரசைத் தம் தலைமையில் புதுப்பிக்க வேண்டும் என அவர் விரும்பினார். எனவே நிலைமை மேலும் மோசமாகுமுன் உதுமானியப் பேரரசின் ஐரோப்பியப் பகுதிகளை பங்கு போட்டுக் கொள்ள வேண்டும். அதற்கு ஐரோப்பிய வல்லரசுகள் குறிப்பாக பிரிட்டன் முன்வந்து தன்னுடன் ஒத்துழைக்க வேண்டுமெனவும் விரும்பினர். இதன்மூலம் மகாபீட்டர் மற்றும் மகாகாதரின் கடைப்பிடித்து வந்த ஆக்கிரமிப்புப் போர்களும் ஆதிக்க விஸ்தரிப்பும் என்ற கோட்பாட்டையே புதிய முறையில் வெளிப்படுத்தினார்.

**பிரிட்டன் பிரான்ஸ் நிலை** : ஐரோப்பிய ராஜதந்திரிகள் நடத்திய அரசியல் சதுரங்க ஆட்டத்தின் பகடைக் காய்களின் நிலையே துருக்கியின் நிலையாகும். பிரிட்டிஷ் அரசியல் வல்லுநர் ஸ்ட்ராப்போர்ட் கானிங், ரஷிய ராஜதந்திரி மென்ஷிகாவ் ஆகிய இருவரும் உருட்டி விளையாடிய பொம்மையாகவே சுல்தான் காட்சியளித்தார்.

**உடனடிக் காரணம்** : உதுமானியப் பேரரசில் உள்ள கிறிஸ்தவப் புனித இடங்களில் (ஜெருசலேம் போன்றவை) ஆதிக்கம் செலுத்துவது குறித்து கிரேக்க (வைதீகத் திருச்சபை) துறவிகளுக்கும், இலத்தீன் (கத்தோலிக்க திருச்சபை) துறவிகளுக்கும் இடையில் முரண்பாடு எழுந்தது. முந்தியவர்கள் சார்பில் ரஷியாவும், பிந்தியவர்கள் சார்பில் பிரான்சும் கோரிக்கைகளை வலியுறுத்தின. பிரான்ஸ் தனது 1740–ஆம் ஆண்டு காபிசுலேஷன்ஸ் எனப்பட்ட ஒப்பந்தத்தை ஆதாரமாகவும், ரஷியா குட்செக் கைனார்ட்ஜி உடன்படிக்கைப்படி, வைதீகத் திருச்சபையின் காவலன் என்ற முறையில் பிரச்சனையை முன் வைத்தது. புனித இடம் தொடர்பாக அந்த ஆலயக் கதவுகளின் சாவியை யார் வைத்திருப்பது ? புனித விளக்கை யார் ஏற்றுவது ? என்ற பிரச்சனைகளே தீர்க்கப்பட வேண்டியவைகளாக இருந்தன. இவை தீர்க்க முடியாத சிக்கல்கள் அல்ல. இரு தரப்பினரும் மனம் விட்டுப் பேசினால் இரு தரப்பினருக்கும் மனநிறைவு அளிக்கும் வகையில் அதைத் தீர்த்து விடலாம். ஆனால், அதை கௌரவப் பிரச்சனையாக ஆக்கி, ராஜதந்திர வெற்றி பெறுவதை நோக்கமாகக் கொண்டதால் அது தீராச் சிக்கலாகிவிட்டது. மேலும் வல்லரசுகளின் சுயநல நோக்கங்களும் உதுமானியப் பேரரசின் ராஜதந்திர சூன்யமும் அதை சர்வதேசச் சிக்கலாகிவிட்டது.

**ரஷ்யாவின் புதிய கோரிக்கை** :

மேற்கூறிய புனித இடங்கள் சம்பந்தப்பட்ட சர்ச்சைகளுடன் இன்னொரு முக்கிய பிரச்சனையும் ரஷ்யா எழுப்பியது. தனது அரசியல் வல்லுநர் மென்ஷிகாவ் என்பாரை இஸ்தான்பூலுக்கு அனுப்பி (1774–ஆம் ஆண்டு குட்செக் கைனார்ட்ஜி உடன்படிக்கைப்படி) ரஷிய ஸாரை துருக்கியில் வாழும் வைதீகத் திருச்சபையினரின் காவலராக அங்கீகரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டது. இச்சமயத்தில் அங்கு அனுப்பப்பட்ட பிரிட்டிஷ் தூதர் ஸ்ட்ராப்போர்டு கானிங் சுல்தானுக்கு ஆலோசனை கூறினார். அதன்பின் ரஷ்ய வேண்டுகோள் இரண்டு அம்சங்களாகப் பிரிக்கப்பட்டது.

ஒன்று, சமயம் சம்பந்தமானது.  அதாவது, புனித இடங்களின் பாதுகாவல் பற்றியது. இதில் ரஷ்யாவிற்கு மனநிறைவு அளிக்கும் வண்ணம் உண்மையான தீர்வு காண சுல்தான் முன் வந்தார்.  இருப்பினும் துருக்கியில் உள்ள வைதீகத் திருச்சபையினரின் காவலராக ரஷ்ய ஸாரை அங்கீகரிக்க மறுத்துவிட்டார்.  ஏனெனில் ரஷியாவின் இந்த புதிய கோரிக்கைக்கு இணங்கினால் 1) உதுமானியப் பேரரசின் அன்றாட நடவடிக்கையில் தலையிட ரஷ்யாவிற்கு அனுமதி அளித்தது போலாகிவிடும், 2) அத்துடன் துருக்கியில் வாழும் இலட்சக்கணக்கான கிறிஸ்தவர்கள் ரஷ்யஸார் மீதே பற்றுறுதி கொள்ள வாய்ப்பளித்துவிடும்.  இந்த இரண்டு நிலைகளும் சுதந்திர இறைமையுள்ள எந்த அரசும் ஏற்க முடியாத விஷயங்கள் ஆகும்.

**போரைத் துரிதப்படுத்திய நடவடிக்கைகள்** :

**1. டான்யூபிய சிற்றரசுகள் ஆக்கிரமிக்கப்படல்** : சுல்தானின் நிராகரிப்பு கண்டு ஆத்திரமடைந்த மெனஷிகாவ் இதன் விளைவுகள் பயங்கரமானதாயிருக்கும் என எச்சரித்து விட்டு நாடு திரும்பினார்.  உடனே ரஷ்யப் படைகள் மோல்டாவியா வலாச்சியா நாடுகளை ஆக்கிரமித்துக் கொண்டன.

**2. வியன்னா குறிப்பு நிராகரிக்கப்படல்** : ஆஸ்திரியாவில் கூடிய நாக்கு வல்லரசுகள் (பிரிட்டன், பிரான்ஸ், ஆஸ்திரியா, பிரஷியா) சிக்கலைத் தீர்ப்பதற்கான அம்சங்கள் அடங்கிய வியன்னா குறிப்பை வெளியிட்டன.  அதனை ரஷ்யா ஏற்றுக் கொண்ட போது, துருக்கி நிராகரித்தது.

**3. பிரிட்டிஷ், பிரெஞ்சு கப்பற்படை நடமாட்டம்** : இதற்கிடையில் பிரிட்டிஷ் பிரஞ்சுக் கப்பற்படை டார்டனல்சில் நுழைந்துவிட்டன.  இதை ரஷியா தனக்கு எதிரான நடவடிக்கையாகக் கருதியது.

**4. உதுமானியரின் போர்வெறி** : இஸ்தாம்பூலில் உள்ள உலேமாக்களும் சமய இயல் மாணவர்களும் ரஷ்யா மீது புனிதப்போர் தொடுக்குமாறு ஆர்ப்பாட்டங்கள் நடத்தினர்.  எனவே 1853—ல் சுல்தான் ரஷ்யா மீது போர் பிரகடனம் செய்தார்.

**5. பிரிட்டன், பிரான்ஸ் போரிலிறங்குதல்** : இதற்கிடையில் ரஷ்ய கப்பற்படை கருங்கடலில் உள்ள சினோப் என்ற துறைமுகத்தல் உள்ள துருக்கிய கப்பற்படையைத் தாக்கி அழித்தது.  இதனால் அதிர்ச்சியடைந்த பிரிட்டன், பிரான்ஸ் அரசுகள் ரஷ்யாவை

டான்யூபிய சிற்றரசுகளிலிருந்து வெளியேறுமாறு கோரின. இதற்கு எந்தவித பதிலும் வரவில்லை. எனவே அவை ரஷ்யா மீது போர் தொடுத்தன.

**போர் நிகழ்ச்சிகள்** :

ரஷ்ய படைகள் டான்யூபைக் கடந்து சிலிஸ்டிரியா கோட்டையை முற்றுகையிட்டன. ஆனால் துருக்கியப் படைகள் உறுதியாய் எதிர்த்து நின்றதால் ரஷ்யப்படைகள் முற்றுகையைக் கைவிட்டன. பின்னர் மால்டோவியா, வாலாச்சியாவிலிருந்த ரஷ்யப் படைகள் விரட்டப்பட்டன. ஆனால் போரின் முக்கியமான கட்டம் கருங்கடலின் வடபகுதியில் உள்ள கிரிமியத் தீபகற்பகத்தில் ரஷ்யா அமைந்திருந்த கடற்படைத்தளமான செபஸ்டபோல் என்ற இடத்தைக் கைப்பற்றியதாகும்.

**போர் நிறுத்தம்** :

இதற்கிடையில் நிகழ்ந்த மூன்று நிகழ்ச்சிகள் ரஷ்யாவை அமைதயை நாடுமாறு கட்டாயப்படுத்தின.

1. துருக்கியின் சார்பாக ஐரோப்பிய நாடான சார்டினியா தன் தேசிய நோக்கத்தை நிறைவேற்ற போரில் இறங்கியது.
2. போருக்கு மூல காரணமான ரஷ்யா ஜார் முதலாம் நிக்கொலஸ் மரணமடைந்தார்.
3. நடுநிலை வகிப்பதாகக் கூறிக்கொண்டிருந்த ஆஸ்திரியா, ரஷ்யா, மீது பகை நடவடிக்கைகளை மேற்கொள்ள முயன்றது.

**பாரீஸ் உடன்படிக்கை (1856)** :

கிரிமியப் போரை முடிவிற்கு கொண்டு வருவதற்கும், கீழைச் சிக்கலுக்கு தீர்வு காண்பதற்கும் பாரீசில் ஒரு ஐரோப்பிய மாநாடு கூட்டப்பட்டது. மூன்றாம் நெப்போலியன் அதற்குத் தலைமை தாங்கி தம் பெருமையை நிலைநாட்ட முயன்றார். உதுமானியப் பேரரசின் சார்பில் பிரதம வஸிர் அலிபாஷா அதில் கலந்து கொண்டார்.

**உடன்படிக்கை ஷரத்துக்கள்** :

1. கருங்கடல் வர்த்தகத்திற்காக அனைத்து நாடுகளுக்கும் திறந்து விடப்பட்டது. ரஷ்யா உட்பட எந்நாடும் அங்கு கடற்படைத்தளம் நிறுவவோ, கப்பற்படைகளை

அனுப்பவோ கூடாது. நீர்ச்சந்திகள் வழியாக கப்பற்படை செல்வதும் தடுக்கப்பட்டது.

2. டான்யூப் ஆறு பன்னாடுகளின் போக்குவரத்தற்குத் திறந்து விடப்பட்டது.

3. மால்டோவியா, வாலாச்சியா சிற்றரசுகள் சுல்தானின் கட்டுப்பாட்டின் கீழ் தன்னாட்சி பெற்ற நாடுகளாக அறிவிக்கப்பட்டன. அவற்றின் மீது ரஷ்யப் பாதுகாப்பு அகற்றப்பட்டது. ஐரோப்பிய வல்லரசுகளின் கூட்டுப் பாதுகாப்பில் அவ்வரசகள் வைக்கப்பட்டது. இரு சிற்றரசுகளும் ஒரே நாடாக இணையக்வடாது என தடுக்கப்பட்டன.

4. எந்த ஒரு நாட்டிற்கும் எந்த பகுதிகளும் அளிக்கப்படவில்லை. போரின் போது கைப்பற்றப்ட்ட பகுதிகள் உரிய அரசுகளுக்குத் திருப்பி அளிக்கப்பட்டன. கிரிமியாப் பகுதிகள் மீண்டும் ரணியாவிற்கு அளிக்கப்பட்டன. கிழக்கு அனடோலியாவில் ரஷ்யா கைப்பற்றிய கார்ஸ் பகுதியை உதுமானியரிடம் அளித்தது. தெற்கு பெஸராபியாவை மால்டோவியாவிற்ற் கொடுக்குமாறு ரஷ்யா வற்புறுத்தப்பட்டது. இதன் மூலம் ரஷ்யா உதுமானியப் பேரரசோடு நேரடித் தொடர்பு கொள்ள முடியாதவாறு தடுக்கப்பட்டது.

5. செர்பியாவின் சுதந்திரம் அங்கீகரிக்கப்பட்டது ; அந்நாடும் வல்லரசுகளின் கூட்டுப்பாதுகாப்பின் கீழ் வைக்கப்பட்டது.

6. உதுமானியப் பேரரசின் சுதந்திரத்திற்கும் பிரதேச ஒருமைப்பாட்டிற்கும் ஐரோப்பிய வல்லரசுகள் உத்திரவாதமளித்தன. இதுமானிய பேரரசிற்கும் பிற அரசுகளுக்கும் இடையில் எழும் தகராறுகளைக் கூட்டாகத் தீர்த்து வைக்க முன்வருவதாகவும் கூறின. மற்றொரு உடன்படிக்கைப்படி, பிரிட்டன், பிரான்ஸ், ஆஸ்திரியா அரசுகள் உதுமானியப் பேரரசின் சுதந்திரத்திற்கு உறுதியளித்தன. இது ரஷ்யாவின் ஆக்கிரமிப்புகளுக்கு எதிராக செய்யப்பட்டது ஆகும்.

7. பேரரசில் உள்ள கிறிஸ்தவக் குடிகளுக்கு வழிபாட்டு உரிமையும் சமவாய்ப்பும் அளிப்பதாகக் துருக்கிய சுல்தான் ஒப்புக்கொண்டார். ஆனால் இந்த பிரகடனம் ஒழுங்காக செயயலபடுத்தப்படுவதை கண்காணிக்கும் உரிமை வல்லரசுகளுக்கு மறுக்கப்பட்டது.

**திறனாய்வு** :

கிரிமியப் போர் மற்றும் பாரிஸ் உடன்படிக்கையினால் அதக ஆதாயம் பெற்ற நாடு துருக்கியாகும். அதன் பிரதேச ஒருமைப்பாட்டிற்கு வல்லரசுகள் உறுதி அளித்தன. ஐரோப்பிய வல்லரசுப் பேரவையின் உறுப்பினராக சுல்தான் ஏற்றுக் கொள்ளப்பட்டார். ரஷ்யாவிற்கும் உதுமானியப் பேரரசிற்கும் பால்கனில் பொது எல்லை என்பது இல்லை. இரு அரசுகளுக்குமிடையில் சுய ஆதிக்கம் பெற்ற மால்டோவியா, வாலாச்சிய அரசுகள் உருவாக்கப்பட்டன. அவை ரஷ்யாவின் திடீர்ப் படையெடுப்பிலிருந்து துருக்கியயைப் பாதுகாக்கும் அரணாக விளங்கின. வைதீகச் திருச்சபைப் பாதுகாவலன் என்ற உரிமையை ரஷ்யா கைவிட நேநாந்தது. அதற்கு கருங்கடலில் கப்பற்தளம் கட்ட அனுமதிக்கப்படவில்லை. அது நடுநிலைப் பகுதியாக அறிவிக்கப்பட்டது. கிறிஸ்தவக் குடிகளுக்கு உரிமைகளையும், சம வாய்ப்புகளையும் துருக்கி தானாக முன்வந்து வழங்கி ஐரோப்பிய அரசுகளின் தலையீடுகளுக்கு வழியில்லாது செய்யப்பட்டது. இறுதியாக, கிரிமியப் போர் கீழைச்சிக்கல் பிரச்சனையை முழுமையாக தீர்த்துவைக்கவில்லை. பாரிஸ் அமைதி மாநாட்டில் தான் அவமானப்படுத்தப்பட்டதாக ரஷ்யா கருதியது. மீண்டும் தன்னை வலுப்படுத்திக் கொண்டு வாய்ப்பு கிட்டிய போது மீண்டும் இந்நாடகத்தை தொடர உறுதி பூண்டது.

ஐரோப்பிய வரலாற்றில் கிரிமியப் போர், அவசியமற்ற ஒரு போர் என்றே கருதப்படுகிறது. இப்போருக்கு பின்னர் எழுதப்பட்ட பாரிஸ் உடன்படிக்கை, காற்றில் கட்டிய கோட்டையாகிவிட்டது.

## பெர்லின் காங்கிரஸ் – 1878

கீழைக்சிக்கல் தொடர் நாடகத்தில், பெர்லின் காங்கிரஸ் நான்காவது கட்டம் எனலாம். பால்கன் பிரச்சனையைத் தீர்ப்பதற்காக **1878–**ல் பெர்லினில் ஐரோப்பிய வல்லரசுகளின் மாநாடு கூடியது. நேர்மைத் தரகர் என்று தம்மைக் கூறிக் கொண்ட ஜெர்மானியச் சான்ஸலர் பிஸ்மார்க்கின் தலைமையில் நடைபெற்றது. அம்மாநாட்டில் பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி, ஆஸ்திரியா, ரஷ்யா, துருக்கி ஆகிய நாடுகள் கலந்து கொண்டன. பால்கன் பகுதியில் ரஷ்யாவின் செல்வாக்கும் ஆதிக்கமும் பரவுவதை எப்படியாவது தடுத்து நிறுத்த வேண்டும் – என்ற பிரிட்டனின் பிடிவாதமே இம்மாநாடு கூடுவதற்கு முதற்காரணமாக அமைந்தது. உதுமானியப் பேரரசின் ஐரோப்பியப் பகுதிகளின் தலைவிதியை நிர்ணயிப்பது இம்மாநாட்டின் முக்கிய நோக்கமாயிருந்தது.

**காரணங்களும், சூழ்நிலைகளும்** :

**1. ஸ்லாவ் இன மக்கள் தேசிய எழுச்சி** : பால்கன் பகுதியில் வாழும் அனைத்து ஸ்லாவ் இன மக்களையும் இணைத்து, ஸ்லாவ் தேசிய அரசை உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இதை ரஷ்யா மறைமுகமாக ஊக்குவித்தது. ஆஸ்திரியா கடுமையாக எதிர்த்தது. இதனால் பால்கனில் குழப்பமும் வல்லரசுகளின் தலையீடுகளும் நிநிழ்ந்தன.

**பாஸ்னியா ஹெர்ஸிகோவினா கலவரங்கள் (1875)** :

2. 1874-ல் பால்கனில் உதுமானியர் ஆட்சிக்குட்பட்டு இருந்த பாஸ்னியய, ஹெர்ஸிகோவினா பகுதிகளில் பஞ்சம் ஏற்பட்டது. கிறிஸ்துவக் குடியானவர்கள் முஸ்லீம் நிலக்கிழார்களுக்கு எதிராக கிளர்ந்தெழுந்தனர். இந்த இரு மாநிலங்களின் கிளர்ச்சியை அடக்குவதற்கு பல சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டுமென ஆஸ்திரிய சான்ஸ்லர் ஆன்டிரஸ்ஸி சுல்தானுக்கு ஒரு குறிப்பு அனுப்பினார். பிற சீர்திருத்த முயற்சிகள் போலவே இதுவும் செயல்படுத்தப்படவில்லை.

**பல்கேரியப் படுகொலைகள் (1876)** :

குடியானவர் கிளர்ச்சி பல்கோயப் பகுதிகளுக்கும் பரவியது. அங்கு ஸ்லாவ் நெப்போலியன் என்பவரின் தலைமையின் கீழ் குடியானவர்கள் கிளர்ந்தெழுந்தனர். முஸ்லீம் நிலப்பிரபுக்கள் படுகொலை செய்யப்பட்டனர். இதனால் ஆத்திரமடைந்த

சுல்தானின் படையினர் பல்கேரியர்களைப் பழிவாங்க முனைந்தனர். கொலை, கொள்ளை, கற்பழிப்பு, போன்ற காடுமைகள் தலைவிரித்தாடின. படக் என்ற கிராமத்தில் கோவிலினுள் நுழைந்து தப்பி.க் எண்ணிய 1,200 பல்கேரியர்கள் உயிருடன் எரிக்கப்பட்டனர். அட்டில்லா, செங்கிஸ்கான், தைமூர் இழைத்த கொடுமைகளை மிஞ்ஞ்சய இந்த காட்டுமிராண்டித்தனங்கள் பற்றிய செய்திகள் டெய்லி நியூஸ் என்ற இலண்டன் செய்தித் தாளில் வெளிவந்த போது ஐரோப்பிய கிறிஸ்துவ உலகம் கொதித்தெழுந்தது.

**செர்பியா – மான்டிநீக்ரோ போர்கள்** :

தங்கள் சகோதரர்கள் பல்கேரியாவில் படுகொலை செய்யப்பட்டது கண்டு வெகுண்டெழுந்த செர்பியா, மான்டிநிக்ரோ அரசுகள் துருக்கி மீது போர் தொடுத்தன. இதற்கிடையில் கிறிஸ்தவர்களுக்கு எதிராக பேரரசின் சில பகுதிகளில் முஸ்லீம்கள் கிளர்ந்தெழுந்தனர். அச்சமயம் சமயவெறி பிடித்த முஸ்லீம்கள் சலோனிக்காவில் பிரஞ்சு ஜெர்மன் தூதர்களை கொலை செய்தனர்.

**பெர்லின் குறிப்புகள் (1876)** :

செர்பியா, மான்டிநீக்ரோ ஆகிய நாடுகள் போரை நிறுத்தவும், கிளர்ச்சியை ஒடுக்கவும், சீர்திருத்தங்களை புகுத்தவும், வல்லரசுகள் பெர்லின் குறிப்பு ஒன்றைத் தயாரித்து அனுப்பின. இதை சுல்தான் நிராகரித்து விட்டார்.

**இஸ்தாம்பூல் அரசியல் மாற்றங்கள் (1876)** :

உதுமானியப் பேரரசில் நிலவிய குழப்பங்களைச் சமாளிக்க திறமையற்ற சுல்தான் அப்துல் அஜிஸிற்கு எதிராக ஆயிரக்கணக்கான இறையியல் மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர். அதன் காரணமாக சுல்தான் பதவியிலிருந்து நீக்கப்பட்டார். பின்னர் ஐந்தாம் முராத் சுல்தானாக்கப்பட்டார். உறுதியற்ற அவரது மனநிலை கொந்தளித்துக் கொண்டிருந்த அரசியல் நிகழ்ச்சிகளால் பாதிக்கப்பட்டது. எனவே சில வாரங்களில் அவரும் பதவி நீக்கம் செய்யப்பட்டு, இரண்டாம் அப்துல் ஹமீது சுல்தான் ஆக்கப்பட்டார்.

**இஸ்தாம்பூல் மாநாடு (1876)** :

பால்கன் கிறிஸ்துவக் குடியானவர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்கு என்னென்ன சீர்திருத்தங்களைப் புகுத்தலாம் என்பது பற்றி முடிவு செய்ய வல்லரசுப் பிரதிநிதிகள் இஸ்தாம்பூலில் கூடினர். மாநாடு நடந்து கொண்டிருக்கும் போது சுல்தான் புதியதொரு அரசியலமைப்புச் சீர்திருத்தத்தை அமல் நடத்தப்போவதாக அறிக்கை வெளியிட்டார். பிரதம வஸிர் மிதத் என்பவரால் உருவாக்கப்பட்ட அவ்வமைப்பில், சமய வேறுபாடற்று, சகலருக்கும் சம உரிமை வாய்ப்பு அளிக்கும் பிரதிநிதித்துவ அரசுக்கான திட்டங்கள் இருந்தது. வல்லரசுப் பிரதிநிதிகள் தங்கள் பணி எளிதாகிவிட்டது என எண்ணி அவர்களும் சீர்திருத்தத்திற்கான சில திட்டங்களைச் சுல்தானிடம் சமர்பித்தனர். ஆனால் சுல்தான் தம் இறைமைக்கு ஊறு விளைவிப்பவை எனக்கூறி அத்திட்டங்களை ஏற்க மறுத்துவிட்டார்.

**8, ரஷ்ய – துருக்கிப் போர் (1877)** :

இஸ்தாம்பூல் மாநாட்டிற்குப் பின் சுல்தான் அப்துல் ஹமீது தமது எதேச்சதிகார திட்டங்களை நிறைவேற்றினார். மிதத் பிரதம வஸிர் பதவியிலிருந்து அநியாயமாக நீக்கப்பட்டார். அவரால் உருவாக்கப்பட்ட அரசியலமைப்பு நிறுத்தி வைக்கப்பட்டது. பின்னர் பிரதிநிதிகள் சபை கலைக்கப்பட்டது. சுல்தானின் நடவடிக்கைகளைக் கண்ட ரஷ்யா, மீண்டும் பிற வல்லரசுகளுடன் சேர்ந்து, சீர்ததிருத்தங்களுக்கான புதிய திட்டமொன்றை சுல்தானிடம் கொடுத்தது. அதனையும் சுல்தான் ஏற்றுக்கொள்ள மறுத்தார். எனவே ரஷியா துருக்கியின் மீது போர் தொடுத்தது.

போர் தொடங்கும் முன் ஆஸ்திரியாவின் நடுநிலைக்கு உத்திரவாதம் பெற்றது ரஷ்யா. பின் ருமேனிய அரசின் அனுமதியுடன் அந்நாடு வழியாக படையை நடத்திச் சென்றது. செர்பியாவும் மாண்டி நிக்ரோவும் உறுதுணையாய் நின்றன. பல்கேரிய மக்கள் ரஷ்யப் படையை தங்களை விடுவிக்க வந்த வீரர்கள் என்றெண்ணி வரவேற்றனர். பிளவ்னா கோட்டையில் துருக்கிப் படையினர் ரஷ்யர்கள் முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்த முயன்றனர். அக்கோட்டையின் வீழ்ச்சிக்குப் பின் துருக்கியின் எதிர்ப்பு முறியடிக்கப்பட்டது. ஏட்ரியா நோப்பிளை ரஷ்யா கைப்பற்றி, இஸ்தாம்பூலை நோக்கி

முன்னேறியது. வேறு வழியின்றி, சுல்தான் அமைதியை நாடினார். அதன்படி 1878–ல் சான்ஸ்டிபானோ உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது.

**சான்ஸ்டிபானோ உடன்படிக்கை (1878)** :

1. செர்பியா முழு சுதந்திர நாடாக அங்கீகரிக்கப்பட்டது. சுல்தானின் பெயரளவிற்கான மேலாதிக்கமும் அகற்றப்பட்டது. நிஷ், மிட்ரோவிட்ஸா மாவட்டங்கள் அதனுடன் இணைக்கப்பட்டன.
2. மான்டிநிக்ரோவும் முழு சுதந்திர நாடாக அங்கீகரிக்கப்பட்டது. அதன் பரப்பு மூன்று மடங்கும் மக்கள் தொகை இரு மடங்கும் அதிகரிக்கப்பட்டது.
3. இரஷ்யப் படைகள் தன் நாட்டின் வழியாக செல்ல அனுமதியளித்த ருமேனியாவிற்கு உரிய வெகுமதி வழங்கப்படவில்லை. பெஸராபியாவை ரஷ்யாவிற்குக் கொடுத்துவிட்டு டோப்ருட்சா பகுதியை அதற்கீடாக பெற்றுக் கொள்ளுமாறு கட்டாயப்படுத்தப்பட்டது.
4. டான்யூபிய கோட்டைகள் இடிக்கப்பட்டன.
5. இஸ்தாம்பூல் மாநாட்டில் பரிந்துரை செய்யப்பட்ட சீர்திருத்தங்களை பாஸ்னியாவிலும் ஹெர்ஸிகோவினாவிலும் அமல் படுத்த வேண்டும், அச்சிற்றரசுகள் ஆஸ்திரிய ரஷ்யப் பாதுகாப்பின் கீழ் வைக்கப்பட்டன.
6. எல்லாவற்றையும் விட மிகச் சிறப்பான அம்சம் பெரிய பல்கேரிய அரசு ஒன்று உருவாக்கப்பட்டது. டான்யூபிற்குத் தெற்கில், கருங்கடலுக்கும் ஈஜியன் கடலுக்கும் மேற்கில் அல்பேனியா வரை திரேஸ் மாசிடோனியப் பகுதிகள் உள்ளடங்கிய பல்கேரியப் பேரரசு உருவாக்கப்பட்டது. சுல்தானின் மேலாதிக்கத்திற்குட்பட்ட சுய ஆட்சிப் பகுதியாக அந்நாடு அங்கீகரிக்கப்பட்டது. ரஷ்யர்களால் தேர்ந்தெடுக்கப்படும் இளவரசர் ஒருவரால் அது ஆளப்பட வேண்டும் – என முடிவு செய்யப்பட்டது.
7. இழப்பீட்டுத் தொகைக்குப் பதிலாக பாடும், கார்ஸ் பகுதிகளை துருக்கி ரஷ்யாவிற்கு கொடுக்க வேண்டும்.

**சான்ஸ்டபானோ உடன்படிக்கைக்கு எதிர்ப்பு** :

சான்ஸ்டிபானோ உடன்படிக்கை ரஷ்யர்களுக்கு மகத்தானதொரு ராஜதந்திர வெற்றி. 1856 பாரிஸ் உடன்படிக்கையின் கட்டுப்பாடுகளை உடைத்தெறிந்து மீண்டும்

பால்கனில் தன் செல்வாக்கை நிலைநாட்டியது. பல்கோரியாவிலிருந்து இஸ்தாம்பூலைக் கண்காணிப்பது அதற்கு எளிது. ஐரோப்பியத் துருக்கி இரண்டாகப் பிளவுபட்டது. அல்பேனியாவுக்கும் கிழக்குத் திரேஸிற்கும் இடையில் பல்கேரியப் பகுதிகள் உருவாயின.

இந்த உடன்படிக்கை ரஷ்யா மற்றும் பல்கேரியாவைத் தவிர பிற நாடுகளுக்கு மாற்றத்தையும் அதிருப்தியையும் அளித்தது. அதன் அரசியல் ஏற்பாடு இனவழி கோட்பாடுகளுக்கு எதிராகவும் வரலாற்று ரீதியான உரிமைகளுக்கு முரணாகவும், ஸ்லாவ் அல்லாத இன மக்களின் தேசிய உணர்வுகளைப் புறக்கணிப்பதாகவும் இருந்தது. ருமேனியா ஆற்றிய சேவைக்கு வெகுமதி அளிக்காத ரஷ்யாவின் செய்கை செய்நநனறி கொன்ற செயலாகக் கருதப்பட்டது. பால்கனில் தன் ஆதிக்க நலன்கள் பாதிக்கப்படும் என ஆஸ்திரியா குமுறியது. வரலாற்றுப் பூர்வமாக தனக்குரிய இடங்களை பல்கேரிய கவர்ந்துவிட்டதாக கிரீஸ் ஆத்திரமடைந்தது. எல்லாவற்றிற்கும் மேலாக பிரிட்டன், ரஷ்யாவின் வெற்றியை கண்டு அச்சமும் பொறாமையும் அடைந்தது. பெரிய பல்கேரியா ரஷ்யா சார்பு நாடாகவே இயங்கும். அதன் மூலம் ரஷ்யாவின் ஆதிக்கம் கருங்கடலிலும், தொடர்ந்து மத்திய தரைக்கடலிலும் விஸ்தரிக்கப்படும் அபாயமிருப்பதாகக் கருதியது. எனவே சான்ஸ்டிபானோ உடன்படிக்கை அம்சங்கள் **1856**–ஆம் ஆண்டு பாரிஸ் உடன்படிக்கைக்கு விரோதமாக இருப்பதால் – அதனை ஒரு ஐரோப்பிய மாநாட்டின் முன் பரிசீலனைக்கு வைக்க வேண்டுமென பிரிட்டன் கோரியது. தன் கோரிக்கையை வலியுறுத்த மால்டாவிற்கு படையனுப்பியது. ஜெர்மனியில் சான்ஸ்லர் பிஸ்மார்க்கும் ஐரோப்பிய மாநாடு ஒன்றைக் கூட்டும் கோரிக்கையை ஆதரித்ததால் ரஷ்யா அதற்கு இணங்க வேண்டியதாயிற்று. எனவே **1878**–ல் பெர்லினில் ஐரோப்பிய அரசியல் மாநாடு, தம்மை நேர்மைத் தரகராகக் காட்டிக் கொண்ட பிஸ்மார்க் தலைமையில் நடைபெற்றது.

**பெர்லின் காங்கிரஸின் முடிவுகள்** :

1. சான்ஸ்டிபானோ உடன்படிக்கைப்படி உருவான பெரிய பல்கேரியா, மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. டான்யூபிலிருந்து பால்கன் மலை வரையிலான

முதல் பிரிவு துருக்கியின் மேலாதிக்கத்திற்குட்பட்ட சுய ஆட்சிப் பகுதியாக அறிவிக்கப்பட்டது.

2. ருமேனியா, செர்பியா, மான்டிநிக்ரோ ஆகியவை மேலும் சில பிரதேசங்களைப் பெற்று முழு சுதந்திர நாடுகளாக அங்கீகரிக்கப்பட்டன.
3. பெஸராபியா, ரஷ்யாவிற்கு அளிக்கப்பட்டதால் அதற்கீடாக ருமேனியாவிற்கு டோப்ருட்ஜாவும், பல்கோரியாவின் சில லகுதிகளும் அளிக்கப்பட்டன.
4. ஆசியப் பகுதிகளில் ரஷ்யாவிற்கு அர்டகான், பாடும், கார்ஸ் பகுதிகள் கொடுக்கப்பட்டன.
5. பாஸ்னியா, ஹெர்ஸிகோவினா மாநிலங்கள் ஆஸ்திரிய மேலாதிக்கத்தின் கீழ் வைக்கப்பட்டது. ஆனால், அவற்றை தன் பேரரசுடன் இணைத்துக் கொள்ளக்கூடாது எனக் கூறப்பட்டது. நொவிபஸார் பகுதியில் படைகளை வைத்துக் கொள்ளவும் அனுமதிக்கப்பட்டது.
6. தனியாக பிரிட்டனுடன் செய்து கொண்ட ஒப்பந்தப்படி துருக்கி, சைப்ரஸ் தீவை பிரிட்டனுக்குக் கொடுத்தது.
7. கிழக்கு கருங்கடலில் உள்ள பாடும் துறைமுகத்தை வரி மற்றும் கட்டுப்பாடுகளற்ற துறைமுகமாக ஆக்குவதாக ரஷ்யா வாக்களித்தது. அதில் போர்ப் பாதுகாப்புக் கோட்டைகள் கட்டப் போவதில்லை என்றும் ரஷ்யா கூறியது.
8. கருங்கடலை ஒட்டிய நீர்ச்சந்திகளை 1856, 1871–ஆம் ஆண்டுகளில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களின்படி பாதுகாத்துக் கொள்ள துருக்கி அனுமதிக்கப்பட்டது.
9. துருக்கி, ரஷ்யாவிற்கு 802.5 மில்லியன் பிராங்குகள் இழப்பீட்டுத் தொகை தர வேண்டுமென நிர்ணயிக்கப்பட்டது.
10. ஆர்மீனியப் பகுதிகளில் உரிய சீர்திருத்தங்களைப் புகுத்தி பேரரசிற்குட்பட்ட முழு சமய சமூக உரிமைகள் அளிப்பதாக துருக்கி வாக்குறுதி அளித்தது.

**திறனாய்வு** :

பெர்லின் காங்கிரஸ் ஐரோப்பிய ராஜதந்திர மாநாடுகளில் மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது. வல்லரசுகளின் ஆதிக்க நோக்கங்கள் அதில் தெளிவாக வெளிப்பட்டன. 'கௌரவத்துடன் கூடிய சமாதானத்தை நிலைநாட்டியதாகப்' பிரிட்டிஷ்

பிரதமர் டிஸ்ரேலி பெருமைப்பட்டுக் கொண்டார். ஆனால் சான்ஸ்டிபானோ உடன்படிக்கைச் சலுகைகள் மறுக்கப்பட்ட நிலையில், பல்கேரியாவும் ரஷ்யாவும் பொருமிக் கொண்டிருந்தன. ரஷ்ய, துருக்கியப் போரரசுகளுக்கு நடுவில், சின்னஞ்சிறு சிறு சுதந்திர நாடுகளை உருவாக்கி, ரஷ்யாவின் பால்கன் ஆதிக்க விஸ்தரிப்புகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. பாஸ்னியா, ஹெர்ஸி கோவினாவை ஆஸ்திரிய மேலாதிக்கத்தின் கீழ் வைத்தன் மூலம் பால்கனில் ரஷ்யாவிற்கு எதிராக ஆஸ்திரியா நுழைக்கப்பட்டது போலாயிற்று. சைப்ரஸ் தீவை பிரிட்டன் பெற்றதன் மூலம் கிழக்கு அன்டோலியாவில் ரஷ்யப்படை நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த முடியும் என எதிர்பார்க்கப்பட்டது. பெர்லின் மாநாட்டின் மூலம் எந்தவித பிரதேசங்களையும் பெறாததால் ஏமாற்றமடைந்த பிரான்சும் இத்தாலியும் உதுமானியப் பேரரசின் ஆப்பிரிக்க மாநிலங்களான டுனிஸியாவையும் டிரிப்போலியையும் கைப்பற்றிக் கொள்ள அனுமதிக்கப்பட்டது.

உதுமானியப் பேரரசைப் பொறுத்தமட்டில், பெர்லின் காங்கிரஸ் அதன் சிதைவை மேலும் விரைவுபடுத்தியது. தன் பேரரசுப் பகுதிகளில் ஐந்திலொரு பகுதிகளை இழந்து ஐந்திலொரு பங்கு மக்களைப் பிரிந்து, பிஸ்மார்க் கூறியது போல், 'மீண்டும் ஐரோப்பாவில் துருக்கி இருக்கிறது', என்ற பெயரளவிற்கான நிலையிலே அது நீடித்தது.

இறுதியாக, பாலகன் பகுதிகளில் ரஷ்யாவின் ஆதிக்கம் தடுக்கப்பட்டது ; அங்கு ரஷ்யா தன்னிச்சையாக எதுவும் செய்ய முடியாது என்பது உணர்த்தப்பட்டது. ஐரோப்பாவிலிருந்து மூட்டை முடிச்சுகளுடன் துருக்கி வெளியேற்றப்பட்டுவிட்டது. இம் மாநாட்டின் மூலம் ஆஸ்திரியாவும் ரஷ்யாவும் எதிரிகளாக்கப்பட்டன. ஐரோப்பிய வல்லரசுகளுக்கிடையே போட்டியும், பொறாமையும் ஆதிக்க வெறியும் வலுவடைந்தன. 'முதல் உலகப் போர் ஏற்படுவதற்கான சூழ்நிலையை இம்மாநாடு உருவாக்கிவிட்டது', என்ற கூற்று மிகச் சரியானது.

## பால்கன் போர்கள்

## (1912 – 1913)

விடுதலைப் போராகத் தொடங்கப்பட்ட பால்கன் போர், நாடுகளைக் கவரும் போராக மாறி, அஅழவுப் போராக முடிவுற்றது' எனலாம். மாசிடோனியாவை துருக்கிய ஆதிக்கத்திலிருந்து விடுவிப்பதற்காக அப்போர் தொடங்கப்பட்டது. விடுவிக்கப்பட்ட மாசிடோனியாவை எவ்வாறு பங்கு வைத்து இணைத்துக் கொள்வது என்பதில் இழுபறி ஏற்பட்டு பால்கன் நாடுகளிடையே போர் தொடர்ந்தது. இறுதியில் உதுமானியப் பேரரசின் அழிவுப் போராக முடிவுற்றது. அது மட்டுமன்று, இன்னொரு பேரழிவுப் போரான முதல் உலகப் போருக்கும் காரணமாயிருந்தது.

**அடிப்படைக் காரணங்கள்** :

**1. மாசிடோனியச் சிக்கல்** : உதுமானியப் பேரரசின் ஐரோப்பியப் பகுதிகளுள் **மாசிடோனியா** மட்டுமே எஞ்சி நின்றது. சுற்றிலும் கிறிஸ்தவ அரசுகளால் சூழப்பட்ட அப்பகுதி சான்ஸ்டிபானோ உடன்படிக்கையின்படி, பல்கேரியாவிற்கு கொடுக்கப்பட்டது. பின்னர் பெர்லின் காங்கிரஸ் தீர்மானப்படி அது மீண்டும் துருக்கியர் ஆதிக்கத்தின் கீழ் வைக்கப்பட்டது. அங்கு வாழ்ந்த மக்களில் பெரும்பாலோர் கிறிஸ்தவர்கள். பல்கேரிய கிரேக்க, ஸ்லாவ் தேசிய இனத்தைச் சேர்ந்தவர்கள், ஐநூறு ஆண்டுகளாக உதுமானியப் பேரரசின் ஆட்சிக்குட்பட்டிருந்த அப்பகுதி பிற்போக்கு நிலையிலே இருந்தது. அம்மாநில ஆளுநரும் அதிகாரிகளும் கைக்கூலி பெறுவதிலே, கண்ணும் கருத்துமாயிருந்தனர். பாதுகாப்பிற்கென அனுப்பப்பட்ட படை வீரர்கள் கிராமங்களை கொள்ளையடித்தனர். வல்லரசுகள் வற்புறுத்திய சீர்திருத்தங்கள் எதுவும் நிறைவேற்றப்படவில்லை. அண்மையில் துருக்கியர் ஆதிக்கத்தினின்றும் விடுதலை பெற்ற கிரீஸ், செர்பிய பல்கேரிய அரசுகள் முன்னேற்றம் பெற்று வளமும் நலமும் பெற்று வாழ்ந்ததைக் கண்ட மாசிடோனியர்கள் தங்கள் முன்னேற்றத்தற்கும் ஒரே வழி துருக்கிய ஆதிக்கத்தை உடைத்தெறிவது தான் என்ற முடிவிற்கு வந்தனர்.

**2. அல்பேனியக் கலகம்** : ஏட்ரியாட்டிக் கரையிலுள்ள துருக்கிய மாநிலத்திலும் துருக்கிக்கெதிராக மக்கள் கிளர்ச்சி செய்தனர். அவர்கள் பெற்ற வெற்றியும், அடைந்த சலுகைகளும் அருகில் உள்ள மாசிடோனியர்களையும் கிளர்ச்சியிலிறங்கத்

தூண்டியதில் வியப்பில்லை. மேலும் அல்பேனியர் மாசிடோனியப் பகுதிகள் சிலவற்றைக் கைப்பற்றிக் கொள்ளும் அபாயமுமிருந்தது. எனவே பிற பால்கன் நாடுகள் தமக்குரிய மமசிடோனியப் பகுதிகளை பங்கிட்டுக் கொள்ள துடித்துக் கொண்டிருந்தன.

**3. இளந்துருக்கியர் ஆட்சி** : இளந்துருக்கிய இயக்கத்தனர் தொடக்கத்தல் பிற சமயத்தினருக்கும் தேசிய யனத்தவருக்கும் சம உரிமை வாய்ப்புகள் அளிப்பதாகக் கூறினர். ஆனால், ஆட்சியைக் கைப்பற்றிய பின்னர், துருக்கியமயக் கொள்கையைக் கடைபிடித்து பிற தேசிய இனத்தவர் மீது துருக்கியப் பண்புகளைத் திணித்தனர். இதனால் அதிருப்தியுற்ற மாசிடோனிய கிறிஸ்தவ மக்கள், சுய ஆட்சி பெற்று தங்கள் சமய சமூகப் பண்பாடுகளைக் காப்பாற்றிக் கொள்ள விரும்பினர்.

**4. வல்லரசுகளின் கூட்டணிகள்** : அண்மைக்காலம் வரை ஐரோப்பிய கிறிஸ்துவ அரசுகள், குறிப்பாக ரஷ்யா–பால்கனில் வாழும் கிறிஸ்துவக் குடிகளுக்கு நல்லாட்சி வழங்குமாறு துருக்கிய சுல்தானைத் தூண்டியது. அதன் உள்நாட்டு பிரச்சனைகளில் தலையிட்டது. அதற்காகப் பல போர்கள் கூட நடைபெற்றன. இப்போது வல்லரசுகளின் போட்டி பொறாமை காரணமாக மூவர் கூட்டுறவு, மூவர் நட்புறவு – என இரு இராணுவக் கூட்டுகளாகப் பிரிந்து ஒருவரை ஒருவர் அழிக்க போர் முயற்சிகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்ததால், பால்கன் சிக்கல்களில் தலையிட அவர்களுக்கு நேரமும் வாய்ப்பும் இல்லை. ஆனால், பால்கனில் புதிதாக விடுதலை பெற்ற செர்பியா, பல்கோயா போன்ற அரசுகள் தங்களின் எல்லைப் புறத்தில் வாழும் சகோதரர்கள் மீது அநீதி இழைக்கப்படுவதைக் கண்டு வாளாயிருக்க இயலவில்லை. எனவே, அந்நாடுகள் தங்களிடையே நிலவிய கருத்து வேறுபாடுகளை மறந்து ஒன்றுபட்டன.

**பால்கன் கூட்டு உருவாதல்** :

கிரேக்க அரசியல் வல்லுநர் வெனிஸ்லாஸ் என்பார் பால்கன் அரசுகளின் கூட்டணி ஒன்றை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டார். முதலில் பல்கேரியாவுடன், பின்னர் செர்பியாவுடனும் பேச்சுவார்த்தை நட.தினார். அதன் பயனாக பால்கன் கிறிஸ்துவச் சிற்றரசுகளான கிரீஸ், செர்பியா, பல்கேரியா, ஆகிய நாடுகள் தங்கள் பொது எதிரியான துருக்கிக்கெதிரான இராணுவக் கூட்டை உருவாக்கின. அதன்

உள்நோக்கம் துருக்கியைத் தோற்கடித்து, அதன் பிடியில் உள் மாசிடோனியாவை விடுவித்து, அதனை தங்களுக்குள் பங்கிட்டுக் கொள்ள வேண்டும் என்பதேயாகும். அதன்படி பங்கீட்டு ஏற்பாடுகளும் செய்து கொள்ளப்பட்டது. தங்கள் நாட்டெல்லைகளை ஒட்டிய, தங்கள் இன மக்கள் பெரும்பான்மையினராக வாழும் நிலப்பகுதிகளை எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும், மத்தியில் உள்ள மொனாஸ்டிர் பகுதியை ரஷ்யாவின் கருத்திற்கேற்ப பகிர்ந்து கொள்ள வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. இக்கூட்டணியுடன் மாண்டிநிக்ரோ சிற்றரசும் சேர்ந்து கொண்டது. அக்கூட்டணியினர் போர் தொடங்குவதற்கு முன்னர் மாசிடோனியாவில் தாங்கள் கூறும் அரசியல் சீர்திருத்தங்களை செயல்படுத்தினர். இறுதி எச்சரிக்கை போன்ற இந்த வேண்டுகோளைத் துருக்கி புறக்கணித்தது. உடனே மாண்டி நிக்ரோ துருக்கி மீது தாக்குதல் தொடுத்தது.

**முதல் பால்கன் போர் (1912 – 13)** :

துருக்கியப்படை நான்கு இலட்சமாயிருந்த போது கூட்டணிப்படை ஏழு இலட்சத்திற்கும் அதிகமாயிருந்தது. நவீன முறையில் பயிற்சி பெற்றிருந்த கூட்டணிப் படையினர் தங்களை ஐநூறு ஆண்டுகளாக அடிமைப்படுத்தி வைத்திருந்த துருக்கியின் மீது அடக்கி வைத்திருந்த ஆத்திரமெல்லாம் வெளிப்பட போர் தொடுத்தனர். மூன்று திசைகளிலிருந்தும் முன்னேறிய மூன்று நாட்டுப் படைகளால் துருக்கியர் தோல்வியுற்றனர்.

தெற்கிலிருந்து கிரேக்கப் பட்டத்து இளவரசர் பெர்டினான்டு தலைமையில் இயங்கிய கிரேக்கப்படை சான்டோபோரஸ் என்ற இடத்தில் வெற்றி பெற்று சலோனிக்காவைக் கைப்பற்றியது.

வடமேற்கிலிருந்து முன்னேறிய செர்பியர்கள், குமானோவா என்ற இடத்தில் துருக்கியர்களைத் தோற்கடித்து, தங்கள் பழைய தலைநகரான உஸ்குப் நகரை மீட்டனர்.

வட கிழக்கிலிருந்து பாய்ந்து வந்த பல்கேரியப் படையினர் திர்க்கிலிஸ்லி என்ற இடத்தில் பெரும் வெற்றி பெற்றனர்.

இவ்வெற்றியின் விளைவாக திரேஸ், எபிரஸ், மாசிடோனியா மாநிலங்களைக் கைப்பற்றிய கூட்டணிப் படையினர் எட்ரியா நோப்பிள் நகரை அடுத்த குறி இலக்காகக் கொண்டன. தோல்வி மேல் தோல்வியுற்ற துருக்கி 1912 டிசம்பரில் அமைதி ஒப்பந்தம் செய்து கொள்ள விரும்பியது. வல்லரசுகள் தலையீடு காரணமாக 1913, மே மாதம் இலண்டனில் பேச்சுவார்த்தைகள் தொடங்கியது. போர் நிறுத்ததிற்கான முக்கிய முன் நிபந்தனையாக எட்ரியா நோபிள் நகரை பல்கேரியரிடம் ஒப்படைக்க வேண்டுமெனக் கோரினர்.

**உதுமானியர் புரட்சி** :

இப்போரில் துருக்கியின் படுதோல்விகள் இளந்துருக்கியரின் இளரத்தத்தை கொதிப்படையச் செய்தது. போர் நிறுத்ததிற்கு கேவலமான நிபந்தனைகளுக்கு இணங்கி விடுவார்களோ என்றஞ்சி அமைச்சரவை கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த அறையினுள் நுழைந்து போர் அமைச்சரைச் சுட்டுக் கொன்று துப்பாக்கி முனையில் பிரதம வஸிர் கமில் பாஷாவின் ராஜினாமாவைப் பெற்று ஷெவ்கத் பாஷாவை அப்பதவியில் அமர்த்தினர். பின்னர் அமைதிப் பேச்சுவார்த்தையை முறித்து விட்டு தொடர்ந்து போர் புரியத் தயாராயினர்.

**இலண்டன் ஒப்பந்தம் (1913)** :

எனினும் போர் துருக்கியருக்குப் பாதகமாகவே நடைபெற்றது. ஜனினா ஸ்குடாரி, இறுதியில் ஏட்ரியா நோப்பிள் ஆசிய நகரங்கள் வீழ்ச்சியுற்றதைத் தொடர்ந்து இலண்டனில் அமைதி ஒப்பந்தம் கையெழுத்தானது. அதன்படி துருக்கியருக்கு ஐரோப்பாவில் கான்ஸ்டாண்டிநோபிள் நகரும் அதையொட்டிய குறுகிய நிலப்பகுதி மட்டும் தான் எஞ்சியது. அல்பேனியா சுதந்திர நாடாக அங்கீகரிக்கப்பட்டது. கிரீட் தீவு, தெற்கு மாசிடோனியா, சலோனிக்கா பகுதிகளை கிரீஸ் எடுத்துக் கொண்டது. திரேஸ் மற்றும் ஈஜியன் கடற்கரைப் பகுதிகளை பல்கேரியா எடுத்துக் கொண்டது. செர்பியா, மேற்கு மாசிடோனியப் பகுதிகளைப் பெற்றது. மொனாஸ்டிர் பகுதியை பங்கு வைப்பது பற்றிய முடிவு ஒத்திப் போடப்பட்டது.

வென்ற பகுதிகளைப் பங்கிடுவதில் பாலகன் நாடுகளிடையே எழுந்த முரண்பாடும் போட்டியும் மனக் கசப்பும் இரண்டாம் பால்கன் போருக்கு காரணமாயிற்று.

**இரண்டாம் பால்கன் போர் (1913)** :

போரின் கொள்ளை பொருளைப் பங்கீடு செய்வதில் பால்கன் கூட்டணி நாடுகளிடையே சச்சரவு மூண்டது. 1) மாசிடோனியாவின் மத்தியப் பகுதியான மொனாஸ்டிரை பங்கு வைப்பதில் ரஷ்யாவின் பரிந்துரையை ஏற்றுக் கொள்ள வேண்டும் என ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டிருந்தது. இப்போது அது புறக்கணிக்கப்பட்டது. 2) பல்கேரிய இனத்தவர் அதிகமாக வாழும் மொனாஸ்டிரை பல்கேரியா தனக்கே கொடுக்க வேண்டுமெனக் கோரியது. சான்ஸ்டிபானோ உடன்படிக்கைப்படி (1878) உருவாக்கப்பட்ட பெரிய பல்கேரியாவில் அப்பகுதி உள்ளடங்கியிருந்தது. பெர்லின் காங்கிரஸ் முடிவின் படி அது மீண்டும் துருக்கிக்கு அளிக்கப்பட்டது. பால்கன் போரின் போது செர்பியா அதனைக் கைப்பற்றி வைத்திருந்தது. எவ்வாறாயினும் மொனாஸ்டிரைப் பெற்றே தீர்வது என்ற உறுதி கொண்ட பல்கேரியா, திடீரென மாசிடோனியாவில் உள்ள செர்பிய கிரேக்கப்படைகளை முன்னறிவிப்பின்றி தாக்கி இரண்டாம் பால்கன் போரைத் தொடங்கியது.

இப்போரில் பல்கேரியா தனியாக செர்பியா கிரேக்க நாடுகளை எதிர்த்துப் போரிட்டது. அத்துடன் ருமேனியாவும், டொப்ருட்சா பகுத தனக்கு வேண்டுமெனக்கோரி பல்கேரிரியாவைத் தாக்கியது. தான் இழந்த பகுதிகளை மீட்பதற்குத் தக்க தருணம் என்று எண்ணிய துருக்கியும், லண்டன் ஒப்பந்தத்தைக் கிழித்தெறிந்து விட்டு, பல்கேரியா மீது போர் தொடுத்தது. துருக்கி (இலண்டன் ஒப்பந்தப்படி) தான் இழந்த எட்ரியாநோப்பிள், டெமோடிக்கா, சர்க்கிவிஸ்லி நகரங்களைக் கைப்பற்றிக் கொண்டது. எப்பக்கத்திலும் எதிரிகளால் தாக்கப்பட்டு தோற்கடிக்கப்பட்ட பல்கேரியா அமைதியை நாடியது.

**புகாரெஸ்ட் ஒப்பந்தம் (1913)** : புகாரெஸ்ட் ஒப்பந்தம் இரண்டாம் பாலகன் போரை ஒரு முடிவிற்குக் கொண்டு வந்தது. 1) அதன்படி முந்திய போரில் பல்கேரியா அடைந்த ஆதாயத்தில் ஸ்ட்ருமிட்ஸா பள்ளத்தாக்கும் திரேஸ் கடற்கரைப் பகுதியும் நீங்கலாக பிறவற்றை இழந்தது. 2) மாசிடோனியா முழுவதையும் செர்பிய கிரேக்க அரசுகள் பங்கிட்டுக் கொண்டன. 3) ருமேனியா, டோப்ருட்சா பகுதிகளைப் பெற்றது. 4) துரக்கி தனியொரு ஒப்பந்தப்படி எட்ரியா நோப்பிள், டெமோடிகா உட்பட கிழக்கு திரேஸ்

பகுதகளைப் பெற்றது. 5) பால்கன் நாடுகளில் உள்ள துருக்கியக் குடிமக்கள் தாங்கள் கிறிஸ்துவ நாடுகளிலேயே தொடர்ந்து தங்கிவிடவா அல்லது துருக்கிப் பகுதிக்கு குடிபுகவா என்பதை நாலாண்டு காலத்திற்குள் தீர்மானித்துக் கொள்ள அவகாசம் அளிக்கப்பட்டனர். அங்கிருந்து வெளியேறுவதற்குத் தீர்மானித்து விட்டால தங்கள் சொத்துக்களை விற்று, பிற உடமைகளை கொண்டு வர அனுமதிக்கப்பட்டனர். 6) அங்கே தங்கியிருப்போருக்கு பிற கிறிஸ்தவக் குடிகளைப் போல் சம உரிமை அளிக்க வேண்டும்; சமயத்துறையில் முழு உரிமை வழங்கப்பட வேண்டும் என ஒப்புக் கொள்ளப்பட்டது.

**பால்கன் போரின் விளைவுகள்** :

1. பால்கன் போர்கள் துருக்கியின் ஐரோப்பிய நிலப்பகுதிகளை முற்றிலும் பறிமுதல் செய்துவிட்டது. மாசிடோனியாவை செர்பியா கிரேக்க நாடுகள் பங்கிட்டுக் கொண்டன. அல்பேனியா சுதந்திர நாடாகிவிட்டது. கிழக்கு திரெஸின் பெரும் பகுதியை பல்கேரியா அபகரித்துக் கொண்டது. ஐரோப்பிய நிலப்பரப்பில் 83 சதவிகிதத்தையும் மக்கள் தொகையில் 69 சதவிகிதத்தையும் வருவாயில் பெரும் பகுதியையும் இழந்து நின்றது.

2. இந்த இழப்புகள் இரு வகையில் துருக்கியருக்கு நன்மையில் முடிந்தது. முதலாவதாக, துருக்கியரல்லாத மக்கள் (குறிப்பாக கிறிஸ்துவர்கள்) வாழ்ந்த மாநிலங்கள் எல்லாம் பறிபோய்விட்டபடியால் கிறிஸ்தவச் சிறுபான்மையினர் தொல்லைகளில் இருந்து விடுதலை கிடைத்தது. அதனை ஒரு காரணமாகக் காட்டி துருக்கியின் உள்நாட்டுப் பிரச்சனையில் தலையிடும் வாய்ப்பு ஐரோப்பிய வல்லரசுகளுக்கு இல்லாது போயிற்று.

இரண்டாவதாக, துருக்கியர்கள் வாழும் நிலப்பகுதி மட்டுமே எஞ்சி நின்றதால், துருக்கிய தேசிய உணர்ச்சிகள் வளர்வதற்கு வழி பிறந்தது. தங்கள் முழு ஆற்றலையும் செல்வத்தையும் துருக்கியின் வளர்ச்சிக்கே செலவிடும் வாய்ப்பும் கிடைத்தது.

3. உதுமானிய அரசியலில் இளந்துருக்கியர் ஆதிக்கம் வலுப்பட ஏதுவாயிற்று. முதல் பால்கன் போரில் ஏற்பட்ட தோல்வி காரணமாக தாராளக் கட்சியினர்

செல்வாக்கிழந்தனர். அதன் காரணமாக இளந்துருக்கியர் வல்லாட்சி ஏற்பட்டது. தலத், அன்வா, ஜமால் ஆகிய மூன்று இளந்துருக்கியத் தேசியவாதிகளின் ஆட்சி மலர்ந்தது.

4. ‘எந்தவொரு நிகழ்ச்சியையும் விட 1912 – 13–ஆம் ஆண்டு பால்கன் போர்களே 1914–ல் உலகப்போர் மூள்வதற்குக் காரணமாயிருந்தன’ என ஆசிரியர்கள் கிரான்ட் – டெம்பர்லி கூறியது உண்மையாயிற்று. பாலகன் போர்களில் ஆதாயம் பெற அரசுகள் இன்னொரு போரை விரும்பின. மேலும் பால்கன் போரினால் வலிமையும் செல்வாக்கும் பெருகி நின்ற செர்பியா அகில ஸ்லாவ் கோட்பாட்டை நிலைநாட்ட ஆஸ்திரியாவுடன் மோதுவதற்கு தயாரானது. அதன் விளைவே முதல் உலகப் போர்.

## முதல் உலகப் போர்

## (FIRST WORLD WAR – 1914-1918)

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் உலகம் ஒரு மாபெரும் போரில் சிக்குண்டு பல இன்னல்கட்கு ஆளானது. ஐரோப்பிய நாடுகளுக்கிடையே ஏற்பட்ட பகைமையும் வெறுப்புணர்வும் பெரிய உலகப்போரை ஏற்படுத்திவிட்டன. ஐரோப்பாவில் பல ஆண்டுகளாக ஏற்பட்ட பல்வேறு நிகழ்ச்சிகளின் கூட்டு விளைவாகவே ஏற்பட்டதே முதல் உலகப்போர் எனலாம். இந்தப் போருக்கான காரணங்கள் 19–ஆம் நூற்றாண்டின் இறுதியிலேயே நிகழ்ந்திருக்கின்றன. உலக வரலாற்றில் நாடுகளுக்கிடையே போர் ஏற்படுவது புதுமை அல்ல என்றாலும், வரலாற்றில் முதல் உலகப்போர் மனிதனுக்கும் மனித நாகரிகத்திற்கும் பேரழிவை உண்டு பண்ணியது.

முதல் உலகப்போரில் 6 கோடியே 50 இலட்சம் மனிதர்கள் பங்கு கொண்டார்கள். இவர்களில் ஐந்து பேரில் ஒருவர் போரில் கொல்லப்பட்டார்கள். மூன்று பேரில் ஒருவர் காயம் அடைந்தார். சுமார் 70 இலட்சம் பேர் நிரந்தர ஊனம் அடைந்தார்கள். உலகத்தில் முக்கால் பங்கிற்கு மேல் நிலப்பரப்பு இப்போரில் ஈடுபட்டிருந்தது. ஜெர்மனியின் தலைமையிலான நாடுகள் ஐரோப்பாவிலும் உலகத்திலும் தங்கள் ஏகாதிபத்தியத்தை ஏற்படுத்தவும், இங்கிலாந்து, பிரான்ஸ், தலைமையிலான நாடுகள் உலகத்தில் ஜனநாயகம் மற்றும் தேசிய சுய நிர்ணய உரிமையைப் பாதுகாப்பதற்காகவும் போரிட்டன.

**போருக்கான காரணங்கள் :**

**1. ஐரோப்பிய நாடுகளுக்கிடையே ஏற்பட்ட இரகசிய உடன்படிக்கைகள் :**

முதலாம் உலகப் போருக்கு முன்பாக ஐரோப்பிய நாடுகள் தங்கள் நாட்டு மக்களுக்குத் தெரியாமல் இரகசிய உடன்படிக்கைகள் செய்துகொண்டன. 1871–ஆம் வருடம் முடிவடைந்த பிராங்கோ பிரஷ்யப் போருக்குப் பின்பு இவ்வித இரகசிய உடன்படிக்கைகள் செய்து கொள்ளும் முறை வளர்ச்சியடைந்தது. இதுவே முதல் உலகப் போருக்கான முக்கிய காரணம் ஆகும். ஜெர்மனி, இத்தாலி, ஆஸ்திரியா, ஆகிய நாடுகள் ஒன்றுசேர்ந்து தங்களுக்குள் முக்கூட்டு உடன்படிக்கையை 1882–ல் ஏற்படுத்திக் கொண்டன. இந்த உடன்படிக்கைக்கு எதிராக, பிரான்ஸ், இங்கிலாந்து, இரஷ்யா, ஆகிய நாடுகள் சேர்ந்து ‘மூவர் நேச ஒப்பந்தம்’ ஒன்றை 1907–ல்

ஏற்படுத்திக்கொண்டன. இவ்விதம் ஐரோப்பாவானது இரண்டு இராணுவப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. இவைகளுக்கிடையே ஏற்பட்ட விரோதமே முதல் உலகப்போருக்கு முக்கியக் காரணமாக விளங்கியது.

**2. ஏகாதிபத்திய உணர்வு :**

ஏகாதிபத்திய உணர்வு ஐரோப்பிய நாடுகளுக்கிடையே அளவுக்கு அதிகமாகக் காணப்பட்டது. ஒவ்வொரு ஐரோப்பிய நாடும் தன்னைத்தானே செழிப்புடையதாக்கவும், வலிமை மிக்கதாக்கவும், தனது ஆதிக்கத்தைப் பிற நாடுகளில் பரப்பவும் முயற்சித்தது. இதனாலேயே உலகப்போர் மூண்டது என்று கூறலாம். ‘‘ஜெர்மானியப் பண்பாடு உலகமெங்கும் பரவ நாகரிகக் காப்புப் போராட்டம் (Kultur Campf) நடத்துவதே தங்கள் கடமை’ என்றும் ஜெர்மனியர்கள் கூறினார்கள். அதே போன்று பிற்போக்கான நாடுகளில் நாகரிகத்தைப் பரப்புவது வெள்ளையர் பொறுப்பு’’ என்று ஐரோப்பிய நாடுகள் கருதின. இப்படி ஏகாதிபத்திய ஆதிக்கத்தைப் பரப்ப ஒவ்வொரு நாடும் நினைத்தது. இதில் போட்டி ஏற்பட்டு இறுதியில் அது போராக முடிந்தது.

**3. ஐரோப்பிய நாடுகளிடையே காணப்பட்ட படைபெருக்கம் :**

1870–ஆம் ஆண்டிற்குப் பிறகு, போர்க்கருவிகளைச் சேகரிப்பதிலும் படை பலத்தைப் பெருக்குவதிலும் ஐரோப்பிய நாடுகளு.கிடையே கடும் போட்டி ஏற்பட்டது. ஐரோப்பிய நாடுகள் செய்து கொண்ட இரகசிய உடன்படிக்கைகள் இப்போட்டியை மேலும் அதிகரித்தன. ஒவ்வொரு நாடும் தனது வரவு–செலவுத் திட்டத்தில் இராணுவச் செலவிற்கு அதிக அளவு பணம் ஒதுக்கியது. கெய்சர் வில்லியம் பல போர்க் கப்பல்களைத் தயார் செய்தார். கப்பற்படையை வலிமையாக்கினார். இவரது நோக்கத்தைப் புரிந்து கொண்ட இங்கிலாந்தின் பிரதமர் வின்ஸ்டன் சர்ச்சில் பெருமளவில் இராணுவ உபயோகத்திற்காக இரஷ்யாவுடன் சேர்ந்து பல புதிய இரயில் பாதைகளை அமைத்தார். துப்பாக்கிகளை தயாரிப்பதிலும் எரி பொருட்களைச் சேமித்து வைப்பதிலும் ஐரோப்பிய நாடுகளுக்கிடையே போட்டி ஏற்பட்டது. இவ்வித ஆயுத உற்பத்திப் போட்டி முதல் உலகப் போருக்கு முக்கியக் காரணமானது.

## 4. குறுகிய தேசிய உணர்வு :

ஒரு நாட்டின் மீதுள்ள பற்றானது பிற நாட்டின் மீது பகைமையை ஏற்படுத்தியது. ஜெர்மனி மீதுள்ள அன்பானது ஜெர்மானிய மக்கள் பிரான்சை வெறுக்கவும், இதே போன்று பிரான்ஸ் ஜெர்மனியை வெறுக்கவும் காரணமானது. குறுகிய தேசப்பற்றின் விளைவாக மக்கள் தங்கள் நாடுகளின் மீது அளவு கடந்த பக்தி வைத்தார்கள். 'உலகத்தின் மையமாக விளங்குவதே இங்கிலாந்துதான்' என்று பிரெஞ்சு மக்களும், ''கடவுளின் உலகப்படத்தின்மையமே ஜெர்மனிதான்'' என்று ஜெர்மனியர்களும் கருத்துக் கொண்டிருந்தார்கள். இது நாடுகளுக்கிடையே பகைமையை வளர்த்தது.

## 5. இரண்டாம் கெய்சர் வில்லியத்தின் ஏகாதிபத்திய வெறி :

ஜெர்மானியப் பேரரசர் இரண்டாம் வில்லியம் ஆணவம் மிக்க ஏகாதிபத்திய வெறி கொண்டவர். ஜெர்மனியை உலக வல்லரசாக்கத் திட்டம் தீட்டினார். ''ஜெர்மானிய இனமே உலகை ஆளப்பிறந்தது'' என்றும் ''உலகை ஆள்வது அல்லது வீழ்வது'' என்றும் கொக்கரித்தார். ஆங்கிலேயரின் வலிமையைத் தப்புக்கணக்கிட்டு இங்கிலாந்தை வீழ்த்தக் கனவு கண்டார். உலக விவகாரங்களில் அதிகமாகத் தலையிட்டு புதிய ஜெர்மனியின் புகழைப் பரப்ப நினைத்தார். இதற்காக ஜெர்மனியின் இராணுவ வலிமையை அதிகப்படுத்தினார். இவரது ஏகாதிபத்திய வெறியே முதல் உலகப்போருக்கு வழி நடத்தியது.

## 6. மக்களின் எண்ணத்தை மாற்றிய செய்தித்தாள்கள் :

செய்தித்தாள்கள் மக்களின் உணர்ச்சிகளைத் தூண்டி, பிற நாட்டின் மீது வெறுப்பை வளர்த்தன. அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள பத்திரிக்கைகள் உலகச் செய்திகளைத் திரித்துக் கூறி மக்களைத் தவறாக வழிநடத்தின. சுதந்திரமாகச் செயல்பட்ட பிரெஞ்சுப் பத்திரிக்கைகளோ, ஜெர்மனியின் மீதான வெறுப்பை அள்ளித் தெளித்தன. காலையில் வெளிவந்த செய்தித்தாள்கள் வெளியிட்ட செய்திகளை மையமாக வைத்துதான் உலகமே சுழல்வது போன்ற நிலை ஏற்பட்டது. திரித்துக் கூறப்பட்ட செய்திகள், அடிப்படையற்ற வதந்திகள், முழுப் பொய்கள் ஆகியவற்றின் மூலம் நாட்டு மக்களிடையே பகைமை உணர்ச்சியை வளர்த்தன செய்தித்தாள்கள்.

## 7. அமைதியை ஏற்படுத்த சமாதான ஸ்தாபனம் இல்லாமை :

போரிடுவதற்காக ஐரோப்பாவில் பல அமைப்புகள் இருந்தன. ஆனால், பகைமையைக்கட்டுப்படுத்தவும், நாடுகளுக்கிடையே ஏற்படும் சிறுசிறு பிரச்சனைகளைத் தீர்த்து வைக்கவும் மனநிறைவு ஏற்படுத்தும் நிலையில் ஒரு அகில உலகச் சமாதான ஸ்தாபனம் இல்லாதது முதல் உலகப் போருக்குக் காரணமானது. 1898–ல் இரஷ்ய மன்னர் சமாதானத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடன் ஐரோப்பிய வல்லரசுகளைப் படைப்குறைப்பு பற்றி விவாதிக்க ஹேகுவில் கூட்டப்படும் மாநாட்டில் கலந்து கொள்ள அழைத்தார். அந்த மாநாடு தோல்வியடைந்தது. 1907–ல் மாநாடு மீண்டும் கூடினாலும் பயனேதும் ஏற்படவில்லை. ஒரு அகில உலக சமாதான ஸ்தாபனத்தை ஏற்படுத்தும் மனநிலை ஐரோப்பிய அரசுகளிடம் காணப்படவில்லை. இது போருக்குக் காரணமானது.

## 8. அல்சேஸ், லொரைன் பிரச்சனை :

1871–ல் முடிவடைந்த பிராங்கோ–பிரஷ்யப் போரின் இறுதியில் ஏற்பட்ட பிராங்பர்ட் ஒப்பந்தத்தின்படி பிரான்ஸ் நாட்டின் வளமிக்க அல்சேஸ், லொரைன் பகுதிகளை ஜெர்மனி பெற்றது. இப்பகுதிகளை மீண்டும் பெற பிரான்ஸ் தக்கத் தருணத்தை எதிர்நோக்கிக் கொண்டிருந்தது. காரணம் லொரைன் பகுதி அதிகமாக இரும்புத் தாது வளங்களைக் கொண்டது. 1871–க்குப் பிறகு ஜெர்மனியின் தொழில் வளர்ச்சிக்கு லொரைனின் இரும்புச் சுரங்கங்களே காரணம் என பிரான்ஸ் நம்பியது. எனவே அல்சேஸ்–லொரைனை மீண்டும் பெற பிரான்ஸ் துடித்தது. இப்பிரச்சனை ஜெர்மனிக்கும் பிரான்சுக்குமிடையே பகைமையை வளர்த்தது. இதுவே உலகப் போருக்கு காரணமானது.

## 9. குடியேற்றங்களை அமைப்பதில் போட்டி :

ஐரோப்பாவின் மேற்குப் பகுதியில் ஆதிக்கத்தை நிறுவவும், கடல் கடந்த வாணிகத்திலும், குடியேற்றங்களை நிறுவுவதிலும் உயர்ந்த இடத்தைப் பெறவும், ஜெர்மனிக்கும் பிரெஞ்சு–பிரிட்டிஷ் கூட்டுக்குமிடையே ஏற்பட்ட போட்டியே போராக வடிவெடுத்தது. குடியேற்ற நாடுகள் தங்கள் தாய்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு வேண்டிய மூலப் பொருட்களை அனுப்புவதோடு மட்டுமல்லாமல், தாய் நாட்டின்

உற்பத்திப் பொருட்களின் விற்பனைத் தளங்களாகவும் மக்கள் தொகைப் பெருக்கத்தைச் சமாளிக்கும் இடங்களாகவும் இருந்ததால் குடியேற்ற நாடுகளைப் பெறுவதற்கு ஐரோப்பிய நாடுகள் ஒன்றோடு ஒன்று போட்டியிட்டன.

**1871–**ல் முடிவடைந்த ஜெர்மானிய ஐக்கியத்திற்குப் பிறகு ஜெர்மனி தொழில் உற்பத்தியில் அதிக வளர்ச்சியடைந்தது. நாட்டின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தவும், உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை விற்பதற்கும் பெருகி வரும் மக்கள் தொகை மற்றும் பொருளாதாரச் சிக்கல்களைக் குறைப்பதற்கும் தனக்கு குடியேற்ற நாடுகள் அவசியம் தேவை என்பதை ஜெர்மனி உணர்ந்தது. அதனால், இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகளுடன், புதிய உலகு ஆப்பிரிக்கா மற்றும் ஆசிய நாடுகளில், குடியேற்றங்களை நிறுவுவதில் ஜெர்மனி போட்டியிட்டது. ஆனால், இங்கிலாந்து தனது குடியேற்றங்களை விட்டுக் கொடுக்கவோ, புதிய குடியேற்றங்களை ஜெர்மனி பெற்றுக் கொள்ளவோ விரும்பவில்லை. இந்தக் குடியேற்றப் போட்டியே முதல் உலகப் போருக்கு காரணமாக அமைந்தது.

**10. மொராக்கோ பிரச்சனை : (அகாடிர் பிரச்சனை)**

மொராக்கோ வடமேற்கு ஆப்பிரிக்காவிலுள்ள ஓர் சுதந்திரமான நாடு. அதன் அருகில் இருந்த அல்ஜுரியா பிரெஞ்சுப் பகுதி ஆகும். எனவே, மொராக்கோ உள்நாட்டு விவகாரத்தில் பிரான்ஸ் அடிக்கடி தலையிட்டு வந்தது. இதைக்கண்ட கெய்சர் வில்லியம், ‘‘மொராக்கோ ஓர் சுதந்திர நாடென்றும், மற்ற நாடுகளைப் போலவே ஜெர்மனிக்கும் மொராக்கோவில் சலுகைகள் பெற உரிமை உண்டு’’ என்றும் வாதாடினார்.

மொராக்கோவிலிருந்த பிரெஞ்சு பொருளாதார நலன்களைப் பேணும் பொருட்டு மொராக்கோ சுல்தானிடம் பிரான்ஸ் அதிக சலுகைகளைக் கேட்டது. இதற்கு இங்கிலாந்து ஆதரவு அளித்தது. ஆனால், ஜெர்மனி எதிர்ப்புத் தெரிவித்து மொராக்கோவின் சுதந்திரத்தை நிலைநாட்டப் போவதாகக் கூறியது. பிரச்சனையைத் தீர்க்க **1906–**ல் ஸ்பெயினிலுள்ள அல்ஜிசரஸில் சர்வதேச மாநாடு ஒன்று கூட்டப்பட்டது. மாநாட்டு முடிவின்படி, மொராக்கோ ஓர் சுதந்திர நாடு என்று மீண்டும் அங்கீகரிக்கப்பட்டது. எல்லா வல்லரசு நாடுகளிலிருந்தும் வியாபாரிகள்

முதலீட்டாளர்கள் இங்கு வந்து போகலாம். ஆனால், மொராக்கோவின் துறைமுகப் பட்டிணங்கள் பிரெஞ்சு கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டன.

**1911–**ல் மொராக்கோவில் மீண்டும் நெருக்கடி ஏற்பட்டது. அங்கு ஏற்பட்ட உள்நாட்டுக் கலவரத்தை அடக்க பிரான்ஸ் தனது கப்பற்படையை அனுப்பியது. இதனை வன்மையாகக் கண்டித்த ஜெர்மனி, தனது எதிர்ப்பைத் தெரிவிக்கும் பொருட்டும் மொராக்கோவில் ஜெர்மானிய நலன்களைப் பாதுகாக்கவும் 'பேன்தார்' என்ற யுத்தக்கப்பலை மொராக்கோவிலுள்ள அகாடிர் துறைமுகத்திற்கு அனுப்பியது. இதனால் பதட்ட நிலை ஏற்பட்டது. ஐரோப்பாவை போர் அபாயம் சூழ்ந்தது. இந்தப் பிரச்சனையில் பிரான்சுக்கு ஆதரவாகச் செயல்பட்டது இங்கிலாந்து. எனவே போரைத் தவிர்ப்பதில் நாட்டம் கொண்டது ஜெர்மனி. பிரெஞ்சுக்காரர்களின் கொள்கைகளை தான் எதிர்க்கவில்லை என்று ஜெர்மனி கூறிது. பிரான்சும், ஜெர்மானிய வியாபாரிகளை முன்பு போல் மீண்டும் அனுமதிக்க ஒத்துக் கொண்டது.

இந்த அகாடிர் பதட்ட நிலை மூன்று முக்கிய விளைவுகளை ஏற்படுத்தியது. அவை பின்வருமாறு :

1. இந்த நிகழ்ச்சி ஜெர்மானியர்கட்கு எதிரான உணர்வை பிரான்சில் தோற்றுவித்தது.
2. பிரான்சுக்கும் இங்கிலாந்துக்குமிடையே உறவு வலுவடைந்தது.
3. மொராக்கோவில் தனக்குள்ள ஆர்வத்தை இங்கிலாந்து பங்கப்படுத்திவிட்டதாகக் கருதி அதன் மீது பகைமை கொண்டது ஜெர்மனி. இவை உலகப் போரை நோக்கி இரண்டு நாடுகளையும் நேராக வழிநடத்திச் சென்றது.

### 11. பால்கன் பகுதியில் ஏகாதிபத்தியப் போட்டி :

ஐரோப்பாவின் கிழக்குப் பகுதியான பால்கன் பகுதியில் ஆதிக்கத்தை நிறுவ ஸ்லாவிய மக்களுக்கும், டியூட்டானிக் இன மக்களுக்குமிடையில் ஏற்பட்ட போட்டியே உலகப் போராக மாறியது எனலாம். **1878–**ஆம் வருட பெர்லின் உடன்படிக்கைப்படி பால்கன் பகுதியிலிருந்த போஸ்னியா, ஹெர்சிகோவினா ஆகிய நாடுகளின் பாதுகாப்பாளராக மட்டுமே இருக்குமாறு ஆஸ்திரியா கேட்டுக்கொள்ளப்பட்டது.

ஆனால், 1908–ல் ஜெர்மனியின் ஆதரவுடன் அந்த இரண்டு நாடுகளையும் தனது நாட்டுடன் இணைத்துக் கொண்டது ஆஸ்திரியா.

இந்த ஆக்கிரமிப்பு பால்கன் பகுதியிலிருந்த செர்பியாவுக்கு பேரதிர்ச்சியைக் கொடுத்தது. ஏனெனில் போஸ்னியா ஹெர்சிஹோவினாவிலுள்ள மக்கள் செர்பியாவிலுள்ள ஸ்லாவ் இனத்தைச் சார்ந்தவர்கள். இந்த இரண்டு பகுதிகளை இணைத்துக் கொள்ள எண்ணம் கொண்டிருந்தது செர்பியா. எனவேதான் ஆஸ்திரியாவின் வளர்ச்சியைக் கண்டு அதிர்ச்சியடைந்தது. பால்கன் பகுதியில் தனது செல்வாக்கை நிலைநாட்ட முயற்சி செய்த ரஷ்யா செர்பியாவுக்கு ஆதரவளித்தது. ஆனால், அண்மையில் நடந்த ரஷ்ய–ஜப்பானியப் போரில் ரஷ்யா தோல்வியடைந்து பலவீனமடைந்ததால் செர்பியாவுக்கு படையுதவி செய்யும் நிலையிலில்லை ரஷ்யா. ரஷ்யாவின் ஆதரவில்லாமல் ஆஸ்திரியாவை ஜெயிக்க முடியாது என்று உணர்ந்த செர்பியா எந்த நடவடிக்கையிலும் ஈடுபடாததால் நெருக்கடி தணிந்தது. ஆனால், செர்பியாவும் ரஷ்யாவும், ஆஸ்திரியா, ஜெர்மனி ஆகிய நாடுகளின் மீது வெறுப்புற்று பழி தீர்த்துக் கொள்ள வழி தேடியது. இத்தகைய பழிவாங்கும் உணர்வும், பதட்ட நிலையும் முதல் உலகப் போர் ஏற்படுவதற்கு ஏற்றதாக இருந்தது. மேற்கண்ட பதினொரு காரணங்களை ஆராயும்போது ‘முதல் உலகப் போர் வல்லரசுகளின் சமநிலைப் போர்’ என்று நாம் கருத்தில் கொள்ளலாம்.

**உடனடிக் காரணம் :**

**12. சராஜிவோ படுகொலை :**

1908–ல் ஆஸ்திரியா போஸ்னியாவை இணைத்துக் கொண்டதிலிருந்து, அங்கிருந்து ஸ்லாவ் இனத்தைச் சேர்ந்த மக்கள் ஆஸ்திரியாவின் ஆட்சியை அகற்றவும், சகோதர நாடான செர்பியாவுடன் ஒன்றுபடவும் கிளர்ந்தெழுந்தனர். இந்த தேசிய உணர்வினை அடக்க ஆஸ்திரியா–ஹங்கேரி எதிர் நடவடிக்கைகளை எடுத்து வந்தது.

இச்சூழ்நிலையில்தான் ஆஸ்திரியாவின் பட்டத்து இளவரசரும், பேரரசர் பிரான்சிஸ் ஜோசப்பின் மருமகனுமான ஆர்ச்டியூக் பிரான்சிஸ் பெர்டினாண்டு தனது மனைவியுடன் போஸ்னியாவிலுள்ள சராஜிவோ என்ற நகருக்கு 1914 ஜுன் 28–ஆம் தேதி விஜயம் செய்தார். அப்போது கவ்ரில்லோ பிரின்ஸீப் (Cavrilo Princip) என்ற 24

வது செர்பிய இளைஞனால் ஆர்ச்டியூக் பெர்டினாண்டும் அவர் மனைவியும் காலை 10:15 மணி அளவில் சுட்டுக் கொல்லப்பட்டனர். இந்தப் படுகொலைதான் ஐரோப்பாவை உடனடியாகப் போரில் தள்ளிய நிகழ்ச்சியாகும்.

ஜுலை 23–ஆம் தேதி செர்பியாவுக்கு இறுதி எச்சரிக்கை ஒன்றை விடுத்தது ஆஸ்திரியா. அதன்படி, 'செர்பியாவில், ஆஸ்திரியாவுக்கு எதிரான பிரச்சாரத்தை நிறுத்த வேண்டும். செர்பியாவிலுள்ள ஆஸ்திரியா விரோத அதிகாரிகளைப் பதவி நீக்கம் செய்ய வேண்டும். செர்பியப் பள்ளிக்கூடங்களில் உள்ள ஆஸ்திரிய விரோதப் பாடப் புத்தகங்களை ஒழிக்க வேண்டும். இந்தப் படுகொலையைப் பற்றி விசாரிக்க ஆஸ்திரிய அதிகாரகளை செர்பியாவினுள் நுழைய அனுமதிக்க வேண்டும். செர்பியாவில் செயல்படும் ஆஸ்திரிய விரோத இயக்கங்களை நசுக்க ஆஸ்திரியாவுக்கு செர்பியா ஒத்துழைப்பு தர வேண்டும்' போன்ற நிபந்தனைகளை வைத்து 48 மணி நேரத்திற்குள் இந்தக் கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்று கெடு வைத்தது ஆஸ்திரியா.

ஜுலை 25–ஆம் தேதி செர்பிய அரசு பதிலளித்தது. செர்பிய ஒற்றுமைக்கும், சுதந்திரத்திற்கும், ஆளுமைக்கும் பாதகமில்லாத நிபந்தனைகளை ஏற்றுக்கொள்வதாகவும், பிரச்சனைக்குரிய நிபந்தனைகளை ஹேகுவிலுள்ள பன்னாட்டு நீதிமன்றத்திற்கு விட்டுத் தீர்த்துக் கொள்ளலாம் என்றும் தனது பதிலில் செர்பியா கூறியது. அதே நேரம் படைத் திரட்டுவதற்கான உத்திரவையும் செர்பிய அரசாங்க. பிறப்பித்தது. 'செர்பியாவின் பதில்கள் ஏற்றுக்கொள்ள முடியாதது, ஏமாற்றமளிக்கிறது' என்று ஆஸ்திரியா கூறி செர்பியாவுடனான உறறவத் துண்டித்தது. அத்துடன் படை திரட்டுவதற்கான ஏற்பாடுகளையும் ஆரம்பித்தது.

நிலைமை மோசமாகவே 1914 ஜுலை 26–ல் இங்கிலாந்தின் வெளியுறவு மந்திரி சர். எட்வர்ட் கிரே (Sir.Edward Grey)இப்பிரச்சினையைப் பற்றி விவாதிக்க மாநாடு ஒன்றைக் கூட்டுமாறு இத்தாலி, பிரான்ஸ், ஜெர்மனி, ரஷ்யா, ஆகிய நாடுகளிடம் கேட்டுக்கொண்டார். இந்த யோசனையை ஜெர்மனி உறுதியாக மறுத்தது. ஜெர்மனியின் உறுதியைக் கண்ட ஆஸ்திரியா ஜுலை 28–ல் செர்பியா மீது போர் தொடுத்தது. இவ்வாறு முதல் உலகப் போர் மூண்டது.

## போரின் போக்கு

ஏற்கனவே செர்பியாவின் அத்துமீறிய செயல்களால் ஆத்திரம் கொண்டிருந்த ஆஸ்திரியர்கள் தங்கள் இளவரசர் படுகொலை செய்யப்பட்டதைக் கேட்டு அதிர்ந்து போயினர். உடனே செர்பியாவிற்கு பத்து நிபந்தனைகள் அடங்கிய இறுதி எச்சரிக்கையை விடுத்து, அதற்கு விளக்கமும் கோரினர். செர்பியா அவற்றில் எட்டு நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டு மீதி இரண்டினை சர்வதேச நடுவர் தீர்ப்பிற்கு விடத்தயார் என்று கூறியது. இந்த விளக்கத்தினால் திருப்திதடையாத ஆஸ்திரியா ஜுலை 28–ஆம் தேதி செர்பியா மீது போர் தொடுத்தது.

ஏற்கனவே செர்பியாவிற்கு ரஷ்யாவும், ஆஸ்திரியாவிற்கு ஜெர்மனியும் வெற்றுக் காகிதத்தில் கையெழுத்திட்ட ஆதரவை அளித்திருந்தனர். செர்பியாவிற்கு எதிராக ஆஸ்திரியாவின் ஆக்கிரமிப்பை ரஷ்யா ஒரு போதும் அனுமதியாது என்று அறிவித்தது. ரஷ்யா உடனே படை திரட்டும் ஆணையைப் பிறப்பித்தது. அது கண்ட ஜெர்மனி, ரஷ்யா மீது போர் பிரகடனம் செய்தது. ரஷ்யாவுடன் நட்புறவு உடன்படிக்கையில் பிணைக்கப்பட்டிருந்த பிரான்ஸ், ஜெர்மனி மீது போர் தொடுத்தது. பிரான்சின் மீது பாய்வதற்கு ஏற்கனவே வகுத்திருந்த திட்டப்படி பெல்ஜியத்தின் வழியாக ஜெர்மனி தன் படைகளை அனுப்பியது.

போரில் கலந்து கொண்ட இருதரப்பு நாடுகள்

| மூவர் கூட்டுறவு நாடுகள் | மூவர் நட்புறவு நாடுகள் |
|---|---|
| ஜெர்மனி,<br>ஆஸ்திரியா,<br>ஹங்கேரி,<br>பல்கேரியா,<br>துருக்கி | பிரான்ஸ்<br>ரஷியா (1917–ல் போரில் இருந்து விலகியது)<br>பிரிட்டன், செர்பியா<br>இத்தாலி (1915–ல் போரில் இறங்கியது)<br>ஜப்பான், அமெரிக்கா, சீனா,<br>பெர்ஜியம், ருமேனியா,<br>பிரிட்டிஷ் பேரரசு நாடுகள் |

1. பெல்ஜியத்தின் வழியாகப் பிரான்சினுள் நுழைந்த ஜெர்மன் படைகள் பாரிசை நோக்கி முன்னேறின. ஆனால், மார்ன் நதிக்கரையில் அவை தடுத்து நிறுத்தப்பட்டன. வெர்டுன் கோட்டையைப் பிடிப்பதற்கு ஜெர்மன் செய்த பகீரத முயற்சிகள் பலிக்கவில்லை. அதன்பின் இரு தரப்பாரும் பதுங்கு குழியில் பதுங்கியிருந்து ஒருவரை ஒருவர் தாக்கிக் கொண்டனர்.
2. கிழக்கில் ரஷியப் படைகள் ஜெர்மனி மீதும் ஆஸ்திரியா மீதும் படையெடுத்து வந்தன. ஆனால், அப்படைகள் படுதோல்வியுற்று பின்வாங்கியது.
3. இதற்கிடையில் பால்கன் பகுதியில், துருக்கியும் பல்கேரியாவும் ஜெர்மன் ஆஸ்திரிய நாடுகளுக்கு ஆதரவாகப் போரில் இறங்கின. உடனே நேச நாட்டு கப்பற்படைடள் டார்டனல்ஸ் நீர்ச்சந்தி வழியாக ஊடுருவி கருங்கடலினுள் செல்ல முயன்றன. ஆனால், அந்த முயற்சி தோற்கடிக்கப்பட்டது. கலிபோலியில் படைகளை இறக்கச் செய்த முயற்சியும் தோல்வியில் முடிந்தது. ஆனால், பின்னர் மெசபடோமியா, பாலஸ்தீனம், ஆகிய துருக்கிய மாநிலங்களில் பிரிட்டிஷ் படைகள் ஊடுருவி வெற்றி பெற்றன.
4. இது பெல்ஜியத்தின் நடுநிலைக்கு வல்லரசுகள் அளித்த உறுதிமொழிக்கு எதிரானது என்று கருதிய பிரிட்டன் ஜெர்மனி மீது போர் தொடுத்தது. இவ்வாறு செராஜிவோவில் தெறித்த சிறு பொறி பெரு நெருப்பாக மாறியது.

**ஜப்பான் போரிலிறங்குதல்** : தூரக்கிழக்கில் பிரிட்டனின் நட்பு நாடான ஜப்பான் நேச நாடுகளுக்கு ஆதரவாகப் போரில் இறங்கியது. சீனாவில் ஜெர்மனிக்குச் சொந்தமான இடங்களையும், பசிபிக் கடலில் ஜெர்மனிக்குச் சொந்தமான தீவுகளையும் கைப்பற்றியது.

**இத்தாலி கட்சி மாறுதல்** : போர் தொடங்கியதும் இத்தாலி போரில் இறங்கவில்லை. இத்தாலியின் மனோநிலையை உணர்ந்த நேச நாடுகள் இரகசியமாகத் தொடர்பு கொண்டன. அதன் பயனாக 1915–ல் இலண்டனில் இரகசிய உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டது. அதன்படி நேச நாடுகள் இத்தாலிக்கு தெற்கு டைராய், டிராண்டினேரி, டிரிஸ்டி டால்மேஷியா பகுதிகளை அளிப்பதாக ஆசை காட்டின. எனவே நேச நாடுகள் சார்பில் போரிலிறங்கியது.

**கடற்போர்**: போர் தொடங்கியதும் பிரிட்டனின் கடலாதிக்க வலிமை காரணமாக ஜெர்மன் கடல் முற்றுகையிடப்பட்டது. அதன்படி குடியேற்றங்கள் கைப்பற்றப்பட்டன. ஜட்லாந்து என்ற இடத்தில் நடைபெற்ற கடற்போரில் இரு தரப்பிலும் கடும் சேதம் உண்டானது. அதன்பின், ஜெர்மனி நீர்மூழ்கிக் கப்பல் மூலம் நேச நாட்டு கப்பல்களைத் தாக்கத் தொடங்கியது.

**அமெரிக்கா போரிலிறங்குதல் :** ஜெர்மெனியின் நீர்மூழ்கிக் கப்பல் தாக்குதல் அமெரிக்காவைப் பாதித்தது. 1915–ல் லூஸிடானியா என்ற கப்பலை ஜெர்மன் படகுகள் மூழ்கடித்தன. அதில் பயணம் செய்த 128 அமெரிக்கர்கள் உயிரிழந்தனர். தொடர்ந்து ஜெர்மனி தடையற்ற நீர்மூழ்கிக் கப்பல் போரைத் தொடங்கியது. அதனை எதிர்த்து அமெரிக்கா போரில் இறங்கியது.

**இரஷியா போரிலிருந்து விலகுதல் :** போரில் ரஷ்யா பெற்ற படுதோல்விகள் உள்நாட்டில் குழப்பங்களை உண்டுபண்ணியது. மக்கள், உணவு, அமைதி, நிலம் கேட்டு புரட்சியிலிறங்கினர். போர் வீரர்களும் மக்களுடன் சேர்ந்துகொண்டனர். புரட்சி காரணமாக ஜார் மன்னரது ஆட்சி ஒழிக்கப்பட்டு, லெனின் தலைமையில் போல்ஷ்விக் ஆட்சி ஏற்பட்டது. அவ்வரசு ஜெர்மனியுடன் பிரஸ்ட்லிட்டோவ்ஸ்க் உடன்படிக்கை (1918) செய்து கொண்டு போரில் இருந்து விலகியது.

**போரின் முடிவு :** 1918 ஏப்ரலில் ஜெர்மன் கடும் தாக்குதல் ஒன்றை மேற்கொண்டது. நேச நாட்டுப் படைகள் அனைத்திற்கும் ஃபோஷ் என்பவர் தலைமைத் தளபதியாக நியமிக்கப்பட்டார். அவரது தலைமையில் நேச நாட்டுப் படைகள் ஜெர்மன் தாக்குதல்களை முறியடித்தன. போரில் நேச நாடுகள் வெற்றி பெற்றன. தொடர்ந்து பிரான்சில் ஜெர்மனி ஆக்கிரமித்த பகுதிகளை மீட்டு ஜெர்மன் எல்லையை நெருங்கினர். ஜெர்மன் கடற்படை, அரசு ஆணைக்குப் பணிய மறுத்தன. கெய்சர் பதவி துறந்து ஹாலந்திற்குத் தப்பியோடினார். ஜெர்மன் படைகள் போர் நிறுத்தத்திற்கு இணங்கினர்.

**போரின் விளைவுகள் :** போரில் ஒரு கோடிக்கு மேற்பட்ட வீரர்கள் கொல்லப்பட்டனர். இரண்டு கோடிப் பேர் காயமடைந்தனர். ஐரோப்பிய நாடுகளின்

பொருளாதார அமைப்பு சீர்குலைந்தது. ரஷ்யா, ஜெர்மனி, ஆஸ்திரியா, துருக்கி, ஆகிய நான்கு ஐரோப்பியப் பேரரசுகள் அழிந்தன. உலகில் இத்தகைய கொடிய போரை தடுக்கவும், உலக அமைதியைப் பேணவும் ஒரு நிறுவனம் தேவை என உணர்ந்தன. எனவே, சர்வதேச சங்கம் தோற்றுவிக்கப்பட்டது. போருக்குப் பின் ஐரோப்பாவில் ஏற்பட்ட பொருளாதார அரசியல் நெருக்கடிகள் பல்வேறு நாடுகளில் சர்வாதிகார அரசுகள் தோன்ற வழி ஏற்படுத்தின. **(உ.ம்.)** ஜெர்மனியில் நாஸிஸம், இத்தாலியில் பாஸிஸம். இப்போர் ரஷ்யாவில் பெரும் புரட்சி ஏற்படக் காரணமாகி பொதுவுடைமை ஆட்சி ஏற்படவும் வழி வகுத்தது. செக்கோஸ்லோவாகியா, யூகோஸ்லோவியா, போலந்து, முதலிய அரசுகள் தோன்றின.

## வெர்செய்ல்ஸ் உடன்படிக்கை

## (TREATY OF VERSAILIES, 1919)

முதல் உலகப்போர் முடிவடைந்த பின்னர் ஜெர்மனியுடனும், அதன் கூட்டு நாடுகளுடனும் உடன்படிக்கை செய்து கொள்வதற்காக பிரான்ஸ் நாட்டின் தலைநகரான பாரிசுக்கு அருகிலுள்ள 14–ஆம் லூயி கட்டிய புகழ்பெற்ற வெல்செய்ல்ஸ் மாளிகையில் உள்ள புகழ்ப்பெற்ற ‘கண்ணாடி மாளிகையில்’ மாநாடு ஒன்று 1919 ஜனவரி 18–ம் தேதி கூட்டப்பட்டது. பிரான்ஸ் நாட்டின் கிளமன்சோ தலைமை வகித்தார். அதில் 32 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள். 1871–ஆம் ஆண்டு இதே நாளான ஜனவரி 18–ல் வெர்செய்ல்ஸிலுள்ள இதே கண்ணாடி மாளிகையில்தான் பிராங்கோ பிரஷ்யப் போரில் பிரான்சைத் தோற்கடித்தபின் அரசர் முதலாம் வில்லியம் ஜெர்மானியப் பேரரசராக முடிசூட்டப்பட்டார். பிரான்சுக்கு எதிராக பிஸ்மார்க் அப்போது பல முடிவுகளை எடுத்தார். 48 வருடங்களுக்குப் பிறகு அதே நாளில், அதே கண்ணாடி மாளிகையில் பிஸ்மார்க் எடுத்த முடிவுகளையெல்லாம் மாற்றியமைக்கவும் தோற்கடிக்கப்பட்ட ஜெர்மனிக்கு எதிராக பல முடிவுகளை எடுக்கவும் மாநாடு ஆரம்பமானது. அந்த வெர்செய்ல்ஸ் மாநாட்டில் கலந்துகொண்ட முக்கிய நாடுகளின் பிரதிநிதிகள் வருமாறு :-

பிரான்ஸ் – ஜார்ஜ் கிளாமன்ஸோ, ஸ்டீபன்பிகோன்,

இங்கிலாந்து – டேவிட் லாயிட் ஜார்ஜ், ஆர்தர் பெல்போர்,

அமெரிக்கா –உட்ரோவில்சன், ராபர்ட் லேன்சிங்,

இத்தாலி –விட்டோரியா ஆர்லண்டோ, சிட்னி சோனிகோ,

ஜப்பான் –நொபுகி மஹினோ, இமோசி சயோஞ்சி

போரில் தோற்கடிக்கப்பட்ட நாடுகளான ஜெர்மனி, ஆஸ்திரியா, ஹங்கேரி, பல்கேரியா, துருக்கி, ஆகிய நாடுகள் அமைதி மாநாட்டில் கலந்து கொள்ள அழைக்கப்படவில்லை. ரஷ்யப் புரட்சிக்குப் பின் ஜெர்மனியுடன் உடன்படிக்கை செய்து கொண்ட ரஷ்யா மாநாட்டிற்கு வரவில்லை. மாநாட்டில் 32 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டாலும் கிளமன்ஸோ, லாயிட் ஜார்ஜ், உட்ரோ வில்சன் ஆகியோரே முக்கிய முடிவுகளை எடுத்தார்கள். சுமார் ஆறு மாதங்கள் விவாதித்து

உடன்படிக்கையின் நகலைத் தயாரித்தனர். 1919 மே மாதம் 7–ஆம் தேதி உடன்படிக்கையின் நகலை ஜெர்மனியில் புதிதாக அமைக்கப்பட்டிருந்த வெய்மார் குடியரசின் பிரதிநிதிகளிடம் காண்பித்தனர்.

உடன்படிக்கை நகலைப் படித்துப் பார்த்த பிரநிதிகள் அதிர்ச்சியடைந்தனர். வில்சனின் பதினான்கு அம்சத்திட்டத்தின் அடிப்படையிலேயே அமைதி உடன்படிக்கை அமைந்திருக்கும் என்று நினைத்திருந்த அவர்கள், மிகக் கடுமையான ஷரத்துக்களை எதிர்பார்க்கவே இல்லை. கடுமையான ஷரத்துக்களை சிறிது மாற்றியமைக்குகுமபடி கேட்டனர். ஆனால், நேச நாடுகள் அதை ஏற்றுக் கொள்ளாதது மட்டுமல்ல, கையெழுத்திட மறுத்தால் மீண்டும் போரை ஆரம்பித்து பெர்லினை முற்றுகையிடுவோம் என்று பயமுறுத்தினர். வேறு வழியில்லாமல் ஜெர்மானியப் பிரதிநிதிகள் 1919 ஜூன் 28–ஆம் தேதி உடன்படிக்கையில் கையெழுத்திட்டனர். இவ்வாறு ஆர்ச்ட்யூக் பெர்டினாண்டு கொல்லப்பட்ட சரிகா ஐந்தாவது வருட தினத்தில் முதல உலகப் போர் முடிவடைந்தது. வெர்செய்ல்ஸ் உடன்படிக்கை 400 ஷரத்துக்களைக் கொண்டது. 80,000 வார்த்தைகளைக் கொண்டது. வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் ஷரத்துக்கள் பின் வருமாறு :

**வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் ஷரத்துக்கள்**

**1. நிலப்பகுதிகள் சம்பந்தப்பட்ட ஷரத்துக்கள் :**

- 1871–ஆம் ஆண்டு இழந்த அல்சேஸ் லொரைன் பகுதிகளைப் பிரான்ஸ் பெற்றுக் கொண்டது. யூபென், மால்மடி, ஆகிய பகுதிகளைப் பெல்ஜியம் பெற்றது. போஸனில் பெரும் பகுதியும், மேற்கு பிரஷ்யாவும், கேஷ்யூப்ஸ் மாவட்டமும் போலந்துக்குக் கொடுக்கப்பட்டது.
- பால்டிக்கடல் பகுதியிலுள்ள டான்சிக் துறைமுகம் ஜெர்மனியிடமிருந்து பிடுங்கப்பட்டு சுதந்திர நகரமாக்கப்பட்டு சர்வதேச சங்கத்தின் பாதுகாப்பில் வைக்கப்பட்டது.
- ஜெர்மனியின் வளமிக்க சார் சமவெளி (Saar Valley) பிரான்சிற்குக் கொடுக்கப்பட்டது. பிரான்ஸ் போரில் தான் இழந்த சுரங்கங்களுக்கு ஈடாக சார் பகுதியிலுள்ள நிலக்கரிச் சுரங்கங்களை பதினைந்து ஆண்டுகளுக்கு உபயோகப்படுத்திக் கொள்ளலாம். பதினைந்தாவது ஆண்டு முடிவில் அங்கு

வாக்கெடுப்பு நடத்தப்பட்டு சார்பகுதி சர்வதேச சங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் தொடர்வதா அல்லது ஜெர்மனியுடன் இணைக்கப்பட வேண்டுமா அல்லது பிரான்சுடன் இணைக்கப்பட வேண்டுமா என்பது முடிவு செய்யப்படவேண்டும்.

- மேமல் பகுதியை முதலில் நேச நாடுகள் பெற்றுக் கொண்டன. ஆனால், **1921**–ல் மேமல் லிதுவேனியாவிற்குக் கொடுக்கப்பட்டது.
- பெல்ஜியம் ஒரு நடுநிலை நாடாக அறிவிக்கப்பட்டது. போலந்து, செக்கோஸ்லோவேகியா, ஆகிய நாடுகளின் சுதந்திரம் அங்கீகரிக்கப்பட்டது.
- ஜெர்மனியின் குடியேற்றப் பகுதிகள் அனைத்தும் பறித்துக் கொள்ளப்பட்டது. சர்வதேச சங்கம் அந்தப் பகுதிகளை இங்கிலாந்து, பிரான்ஸ், பெல்ஜியம், நியுசிலாந்து, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளிடம் விருப்பம் போல் பிரித்த் ஒப்படைத்தது. அப்படிக் கொடுக்கப்பட்ட அந்த பகுதிகட்கு ‘‘மாண்டேட்டுகள்’’ என்று பெயர். காமரூன் டோகோலாந்துது டங்ஙனியா ஆகியவை இங்கிலாந்திடமும், ஜெர்மனியின் தென் மேற்கு ஆப்பரிக்கப் பகுதிகள் தென் ஆப்பிரிக்காவிடமும், சாமோவன் தீவுகள் நியுசிலலந்திடமும், மார்ஷல் தீவுகள் ஜப்பானிடமும், நியுகினியாத் தீவுகள் ஆஸ்திரேலியாவிடமும் ஒப்படைக்கப்பட்டன.
- கீல் (Kiel) கால்வாய் எல்லா நாடுகளுக்கும் பொதுவாக்கப்பட்டது.

மேற்கண்ட மாற்றங்களின் விளைவாக, ஜெர்மனி **60** இலட்சம் மக்கள் தொகையையும், இருபத்தைந்தாயிரம் சதுர மைல் பரப்பளவு உள்ள நிலப்பகுதிகளையும் இழந்தது. **10,27,000** சதுர மைல் பரப்பளவு குடியேற்றப் பகுதிகளையும் ஜெர்மனி இழந்தது.

**II பொருளாதார சம்பந்தப்பட்ட ஷரத்துக்கள்:**

1. வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் முக்கிய நோக்கமே பொருளாதார ரீதியாக ஜெர்மனியைப் பலவீனப்படுத்துவதே ஆகும். உடன்படிக்கையின் **231**–வது பிரிவின் படி ஜெர்மனி மீது **5000,000,000** கோடி டாலர் நஷ்டஈடு விதிக்கப்பட்டது. இது ஜெர்மனியால் தாங்க முடியாத தொகையாகும்.

2. எஞ்சியிருந்த ஜெர்மனியின் பெரிய கப்பல்கள் இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும் கொடுக்கப்பட்டது. மேலும், நஷ்ட ஈடாக தனது சொந்த செலவில் புதிய கப்பல்களை அடுத்த ஐந்து வருடங்களுக்குள் கட்டிக் கொடுக்கவேண்டும்.

3. அடுத்த பத்து ஆண்டு காலத்திற்கு 70 இலட்சம் டன் நிலக்கரியை பிரான்சிற்கும், 80 இலட்சம் டன் பெல்ஜியத்திற்கும், 77 இலட்சம் டன் இத்தாலிக்கும் ஜெர்மனி கொடுக்க வேண்டும்.

4. அடுத்த ஆண்டு காலம் வரை ஜெர்மனியின் ஏற்றுமதி இறக்குமதி வாணிபத்தின் நேச நாடுகள் அதிக உரிமையையும், சலுகைகளையும் பெற்றுக் கொள்வார்கள். வெளிநாட்டிலுள்ள ஜெர்மன் சொத்துக்கள் அனைத்தும் பறிமுதல் செய்யப்படும்.

5. ஜெர்மனியின் எல்ப், ஓடர், நீமென், டான்யூப் நதிகள் பன்னனட்டுக் கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டது. கீல் கால்வாயில் எல்லா நாடுகளின் வியாபார மற்றும் போர்க்கப்பல்கள் சென்று வர உரிமையளிக்கப்பட்டது.

**III இராணுவ சம்பந்தப்பட்ட ஷரத்துக்கள் :**

1. ஜெர்மனியின் இராணுவபலம் வெகுவாகக் குறைக்கப்பட்டது. ரைன் நதியின் இரு புறங்களிலும் 50 கிலோ மீட்டர் வரையில் ஜெர்மனி இராணுவத்தை வைத்துக் கொள்ளக்கூடாது. நதியின் மேற்குப் பகுதியை நேச நாடுகள் 15 ஆண்டுகள் தங்கள் வசம் வைத்திருக்கும்.
2. ஜெர்மனியின் படை வீரர்களின் எண்ணிக்கை ஒரு இலட்சமாகக் குறைக்கப்பட்டது. உள்நாட்டுச் சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்க மட்டுமே இராணுவத்தைப் பயன்படுத்த வேண்டும் என்று ஜெர்மனி கேட்டுக் கொள்ளப்பட்டது.
3. ஜெர்மனி, நச்சுவாயு, டாங்கிகள், இராணுவ ஊர்திகள் ஆகியவைகளைத் தயாரிக்கக்கூடாது. போர்த் தளவாடங்களை ஏற்றுமதி செய்யவோ இறக்குமதி செய்யவோ கூடாது.

4. ஜெர்மனியின் எல்லா நீர்மூழ்கிக் கப்பல்களும் பறிமுதல் செய்யப்பட்டன. ஜெர்மானியக் கப்பற்படை 15 ஆயிரம் வீரர்களையும் சில போர்க்கப்பல்களையும் மட்டுமே கொண்டதாகக் குறைக்கப்பட்டது.

**IV. சட்ட சம்பந்தப்பட்ட ஷரத்துக்கள் :**

உடன்படிக்கையில் 231–வது பிரிவுப்படி பன்னாட்டுச் சட்ட திட்டங்களையும், உடன்பாடுகளையும் மீறியதற்காகவும், போரை ஆரம்பித்து பேரழிவை ஏற்படுத்தியதற்காகவும், ஜெர்மனி குற்றவாளி என்று கூறப்பட்டது. ஜெர்மானியப் பேரரசர் இரண்டாம் கெய்சர் வில்லியம் போர்க் குற்றவாளி என்று அறிவிக்கப்பட்டார். Hang the Kaiser, make Germany to pay Shilling for Shilling and ton for ton' என்று லாயிட் ஜார்ஜ் முழங்கினார். ஆனால், பேரரசர் நெதர்லாந்தில் தஞ்சம் அடைந்துவிட்டதால் அந்த நாடு அவரை விசாரணைக்கு அனுப்ப மறுத்துவிட்டது. சுமார் நூறு குற்றவாளிகள் மட்டும் லீப்சிக் நகரில் விசாரிக்கப்பட்டு தண்டிக்கப்பட்டார்கள்.

**V. உடன்படிக்கையின் பிற ஷரத்துக்கள் :**

போலந்து, யூகோஸ்லேவியா, செக்கோஸ்லோவோக்கியா, ஆகிய நாடுகளின் சுதந்திரம் அங்கீகரிக்கப்பட்டது. 1871–ஆம் வருடம் பிராங்கோ பிரஷ்யப் போரின்போது, பிரான்சிலிருந்து ஜெர்மனி எடுத்துச் சென்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க பொருட்கள், வெற்றிக் கேடயங்கள், கலைப்பொருட்கள், அரசியல் ஆவணங்கள், ஆகியவற்ற்ற ஆறு மாதத்திற்குள் பிரான்சிடம் கொடுத்து விட வேண்டும். இந்த உடன்படிக்கையை செயல்படுத்தவும், பன்னாடு அமைதியை நிலை நாட்டவும் சர்வதேச சங்கத்திற்கு அதிகாரம் அளிக்கப்பட்டது.

**வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையைப் பற்றிய மதிப்பீடு :**

வெர்செய்ல்ஸ் உடன்படிக்கை ஜெர்மனி மீது மிகக் கடுமையான நிபந்தனைகளை விதித்தது. அவைகள் மிகக்கொடூரமானதாகவும் ஜெர்மனியை அவமானப்படுத்துவதாகவும் அமைந்தன. ஜெர்மனியின் மதிப்பு, பெருமை, புகழ், ஆகியவை அழிந்தது. அதன் இறைமை கட்டுப்படுத்தப்பட்டது. எனவேதான் இந்த உடன்படிக்கையில் கையெழுத்திட்ட ஜெர்மானியப் பிரதிநிதி லகிட்மான் "இந்த உடன்படிக்கையில் கையெழுழுததிடு. எனது கை அழியட்டும்'' என்று கூறினார்.

உடன்படிக்கையின் ஷரத்துக்களைப் பின்னர் ஒவ்வொன்றாக ஹிட்லர் மீறியபோதுதான் இரண்டாம் உலகப் போர் ஆரம்பித்தது. எனவே, இரண்டாம் உலகப் போருக்கு வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையே அடிப்படைக் காரணம் என்று கூறலாம்.

வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின்படி ஜெர்மனி பலமற்ற நாடாக ஆக்கப்பட்டது. மேற்கிலும் வடக்கிலும் தனது எல்லைகளை ஜெர்மனி இழந்தது. 25 ஆயிரம் சதுர மைல் நிலப்பரப்பையும் 70 இலட்சம் மக்களையும் இழந்தது. ஐந்தில் இரண்டு பங்கு நிலக்கரி வளத்தையும் மூன்றில் இரண்டு பங்கு இரும்புத்தாது வளத்தையும் இழந்தது. இது ஜெர்மனியின் தொழில் வளர்ச்சி, வியாபாரம் ஆகியவற்றை வெகுவாகப் பாதித்தது. மேலும், குடியேற்ற நாடுகள் அனைத்தையும் இழந்தது. ஜெர்மனியின் இராணுவ வலிமை ஒடுக்கப்பட்டது. கடற்படை அழிக்கப்பட்டது. அதன் விமானங்களும் கப்பல்களும் பறித்துக்கொள்ளப்பட்டன. இவ்வாறு ஜெர்மனி படைவலிமையில் முடக்கப்பட்டு பொருளாதாரத்தில் நசுக்கப்பட்டு, அரசியலில் அவமானப்படுத்தப்பட்டு ரத்தமில்லாத மனிதனைப் போல பாரிசு மாநாட்டிலிருந்து வெளியேறியது.

வெர்செயல்ஸ் உடன்படிக்கை ஒரு ‘‘திணிக்கப்பட்ட உடன்படிக்கை’’ என்றும், ‘‘முரண்பட்ட உடன்படிக்கை’’ என்றும், ‘‘பெரும் திருட்டு’’ என்றும் ஜெர்மானிய மக்களால் குற்றம் சாட்டப்பட்டது. உடன்படிக்கையில் ஜெர்மனி கையெழுத்துப் போடுவதற்குக் காலக் கெடு விதிக்கப்பட்டது. இந்த உடன்படிக்கையை ஜெர்மனி ஏற்றுக் கொண்டிருந்ததால் அது ஐரோப்பிய வரைபடத்திலிருந்தே மறைந்து போயிருக்கும். எனவேதான் ஜெர்மனி தனது வருங்கால முன்னேற்றத்தைச் சர்வாதிகாரத்தில் கண்டது. மக்களின் மனநிலையை உணர்ந்து ஹிட்லர் மக்களின் ஆதரவுடனே உடன்படிக்கையின் ஷரத்துக்களை ஒவ்வொன்றாக மீறினார். உலக வரலாற்றில் வேறு எந்த உடன்படிக்கையும் இதைப் போல மீறப்பட்டது கிடையாது. உட்ரோவில்சனின் கற்பனைத்திறனும், பிரெஞ்சு அதிபர் கிளமன்சோவின் தேசியமும், இங்கிலாந்துப் பிரதமர் லாயிட் ஜார்ஜின் சந்தர்ப்பவாதமும் இந்த உடன்படிக்கையில் காணப்பட்டன. ஜெர்மனி தன் மீது விதிக்கப்பட்ட தாங்கமுடியாத போர் இழப்பீட்டுத் தொகையைத் திரும்பச் செலுத்த முடியாமல் தத்தளித்தது. 1933–ல் ஹிட்லர் அதிபர்

ஆனதும் போர் இழப்பீட்டுத் தொகையைச் செலுத்த முடியாது என்று அறிவித்தார். அப்போதுதான் இரண்டாம் உலகப் போருக்கான போர் மேகங்கள் தென்பட்டன.

இவ்வாறு வெர்செய்ல்ஸ் உடன்படிக்கை ஒரு நிரந்தர அமைதியை ஏற்படுத்தத் தவறிவிட்டது. அமைதி ஒரு குறுகிய காலமே நீடித்தது. நேச நாடுகளின் கொள்கைகளும், ஜெர்மனியின் மீறுதல் நடவடிக்கைகளும் இரண்டாம் உலகப்போருக்கு இழுத்துச் சென்றது. எனவேதான், ''இரண்டாம் உலகப்போருக்கான மூல காரணங்கள் வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையிலேயே விதையாகத் தூவப்பட்டது'' என்று கூறலாம்.

**பிற உடன்படிக்கைகள் :**

**1. செயின்ட் ஜெர்மைன் உடன்படிக்கை :**

**(Treaty of St.Germain)** செப்.10, 1919

நேச நாடுகள் தோற்கடிக்கப்பட்ட ஆஸ்திரியாவுடன் செயின்ட் ஜெர்மைன் என்ற இடத்தில் 1919 செப்டம்பர் 10–ஆம் தேதி உடன்படிக்கை செய்துகொண்டன. இதன்படி ஆஸ்திரியாவும் ஹங்கேரியும் தனித்தனி நாடுகளாகப் பிரிக்கப்பட்டன. உடன்படிக்கையின் 88–வது பிரிவின்படி அவை திரும்ப இணைவது தடுக்கப்பட்டது. மேலும் நேச நாடுகளுக்கு ஏற்படுத்திய இழப்புகளுக்கு ஆஸ்திரியா பொறுப்பேற்க வேண்டும். மூன்று இயந்திரப் படகுகள் தவிர ஆஸ்திரியாவின் கப்பற்படை முழுவதும் பறித்துக்கொள்ளப்பட்டது. ஆஸ்திரிய படைகளின் எண்ணிக்கை முப்பது ஆயிரமாகக் குறைக்கப்பட்டது. புதிதாகப் படையில் வீரர்கள் சேர்த்துக் கொள்ளப்படக்கூடாது. ஆஸ்திரியாவின் குடியேற்ற நாடுகள் அனைத்தும் அதனிடமிருந்து எடுக்கப்பட்டது. ஆஸ்திரியா நேச நாடுகட்குப் பூர்த்தி செய்யப்படாத காசோலையை போர் இழப்பீடாக அளித்தது. மேலும் ஆஸ்திரியப் போர்க் கைதிகளை விசாரணை செய்யவும் அனுமதியளித்தது. செயின்ட் ஜெர்மைன் உடடன்படிக்கையின் விளைவாக ஆஸ்திரியாவுக்கு பெரும் பொருளாதாரச் சிக்கல் ஏற்பட்டது. தனது வளமான பகுதிகளை இழந்து பிற நாடுகளிடம் கடன் வாங்கும் அவல நிலைக்குத் தள்ளப்பட்டது. தனது பழைய பேரரசின் பாதிப்பகுதிகளை ஆஸ்திரியா இழந்தது.

**2. டிராயனான் உடன்படிக்கை : (Treaty of Trianon)** ஜுன் 4, 1920

நேச நாடுகள் ஹங்கேரியுடன் வெர்செய்ல்ஸிலுள்ள டிரயனான் மாளிகையில் உடன்படிக்கை ஒன்று 1920, ஜுன் 4–ஆம் தேதி செய்துகொண்டன. ஆஸ்திரியாவைப் போன்றே ஹங்கேரியும் கடுமையாகத் தண்டிக்கப்பட்டது. ஹங்கேரி ஆஸ்திரியாவிடமிருந்து பிரிக்கப்பட்டது. 1,25,000 சதுர மைலும், 22 மில்லியன் மக்கள் தொகையும் கொண்ட ஹெங்கேரி 30,000 சதுர மைல் கொண்டதாகவும் எட்டு மில்லியன் மக்கள் தொகை கொண்டதாகவும் குறைக்கப்பட்டது. அதன் பிரான்ஸில் வேனியாப் பகுதி ருமேனியாவிற்கும், குரேஷியா யுகோஸ்லேவியாவிற்கும், ஸ்லோவேக்கியா, செக்கோஸ்லேவியாவிற்கும் கொடுக்கப்பட்டது. ஹங்கேரியப் படை வீரர்களின் எண்ணிக்கை 35 ஆயிரமாகக் குறைக்கப்பட்டது. அதன் போர்க் கப்பல்களின் எண்ணிக்கையும் குறைக்கப்பட்டது. இவை தவிர ஹங்கேரி போர் இழப்பீட்டுத் தொகையும் நேச நாடுகளுக்குக் கொடுக்க வேண்டும்.

**3. நியுலி உடன்படிக்கை : (Treaty of Neuilly)** ஜுன் 27, 1919

பாரிசு அமைதி மாநாட்டில் பல்கேரியா ஒரு வேண்டுகோள் விடுத்தது. போரில் பல்கோயா இறங்குவதற்கு முடிதுறந்து ஓடிய மாஜி அரசர் பெர்டினாண்டுதான் காரணம் என்றும், எனவே பல்கேரியா தண்ண்க்கப்படக்கூடாது என்றும் கேட்டுக்கொண்டது. அதை நேச நாடுகள் ஏற்றுக்கொள்ளவில்லை. 1919 நவம்பர் 27–ஆம் தேதி பல்கேரியாவுடன் நியுலி உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது. இதன்படி பல்கேரியா பெரும் நிலப்பரப்பை இழந்தது. பல்கேரியர்கள் அதிகமாக வாழ்ந்த மேற்குப் பகுதி யூகோஸ்லேவியாவிற்கும், மேற்கு திரேஸ், ஈஜியன் கடற்கரைப் பகுதிகள் கிரீஸுக்கும் கொடுக்கப்பட்டது. பல்கேரியப் படைகளின் எண்ணிக்கை இருபது ஆயிரமாகக் குறைக்கப்பட்டது. அதன் கடற்படை ஒழிக்கப்பட்டது. பல்கேரியா மீது பெருமளவில் போர் இழப்பீட்டுத் தொகை விதிக்கப்பட்டது. இவ்வாறு நியுலி உடன்படிக்கை பல்கேரியாவை பால்கன் பகுதியில் ஒரு வலிமையற்ற நாடாக்கியது.

**4. செவ்ரஸ் உடன்படிக்கை (Treaty of Sevres)** ஆகஸ்ட் 20, 1920

தோற்கடிக்கப்பட்ட துருக்கியுடன் உடன்படிக்கை செய்துகொள்வதில் நேச நாடுகளுக்குப் பல பிரச்சனைகள் ஏற்பட்டது. எனவே பேச்சுவார்த்தை நீடித்து இறுதியாக

1920 ஆகஸ்ட் 20–ஆம் தேதி துருக்கியுடன் செவ்ரஸ் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது. இதன்படி சிரியா பாலஸ்தீனம், மெசபடோமியா ஆகிய நாடுகளையும், எகிப்தின் மீது கொண்டிருந்த ஆதிக்கத்தையும் துருக்கி இழந்துவிட்டது. ஆசியாமைனர், திரேஸ், அட்ரியநோபிள், கலிபோலி ஆகியவை கிரீஸ் நாட்டிற்குக் கொடுக்கப்பட்டன. துருக்கியப் படைகளின் எண்ணிக்கை ஐம்பது ஆயிரமாகக் குறைக்கப்பட்டது. அதன் விமானப்படை முழுவதையும் நேச நாடுகள் எடுத்துக் கொண்டன. கான்ஸ்டாண்டி நோபிள், அலெக்ஸாண்டிரியா ஆகிய நகரங்கள் பன்னாட்டுக் கட்டுப்பாட்டின் கீழ் வைக்கப்பட்டன.

**5. சிறுபான்மையோர் பற்ற்றய உடன்படிக்கைகள் (Minority treaties)**

முதல் உலகப்போரின் விளைவாக போலந்து, செக்கோஸ்லேவேகியா, ருமேனியா, கிரீஸ், போன்ற பல புதிய சுதந்திர நாடுகள் தோன்றின. அந்த நாடுகள் தங்கள் ஆட்சியின் கீழ் வாழ்ந்து வந்த சிறுபான்மை மக்களின் இன, சமய, மொழி, அரசியல் சுதந்திரங்களைக் காக்கும் பொருட்டு, நேச நாடுகளுடன் உடன்படிக்கை செய்து கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்பட்டன. வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையிலும் சிறுபான்மையினரின் உரிமை பாதுகாக்கப்படவேண்டும் என்று கூறப்பட்டது. ஆனாலும், போலந்து, செக்கோஸ்லோவேகியா, யுகோஸ்லேவியா, ஆகிய நாடுகளில் வாழ்ந்து வந்த சிறுபான்மை ஜெர்மானியர்கட்குப் பாதுகாப்பு அளிக்கப்படவில்லை. இது இரண்டாம் உலகப்போர் ஏற்படும் சமயம் பெரும் பிரச்சனையை ஏற்படுத்தியது.

## ரஷ்யப் புரட்சி

## (THE RUSSIAN REVOLUTION, 1917)

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற வரலாற்று நிகழ்ச்சிகளில் முதன்மையானது 1917–ஆம் ஆண்டில் நடைபெற்ற ரஷ்யப் புரட்சியாகும். இங்கிலாந்தில் ஏற்பட்ட தொழிற் புரட்சியைக் காட்டிலும், பிரான்சு நாட்டில் ஏற்பட்ட பிரெஞ்சுப் புரட்சியைக் காட்டிலும், அவைகளின் தன்மையிலும் தாக்கத்திலும் மிகுந்த அளவு மாறுதல்களை ஏற்படுத்தியது ரஷ்யப் புரட்சியாகும். இது மனக்குறைவுற்ற ஏழை மக்களின் புரட்சி. பண்பாடற்ற சார் மன்னர்களின் அரசியல் போலித்தனத்திற்கும், பழமைவாதிகளின் குருட்டு நம்பிக்கைகளுக்கும் சமாதி கட்டிய புரட்சிதான் ரஷ்யப் புரட்சி. இது பொதுவுடைமைக் கோட்பாட்டிற்குக் கிடைத்த முதலாவது வெற்றி. இது ரஷ்யாவில் பழைய நாகரிகத்தை ஒழித்து புதிய சமுதாயத்தை ஏற்படுத்தியது. ரஷ்யாவில் மட்டுமல்லாது உலக அரசியலில், பெரும் மாறுதல்களை ஏற்படுத்தியது.

**புரட்சி ஏற்படக் காரணங்கள் :**

**1. சார் மன்னர்களின் எதேச்சதிகாரம் :**

ரஷ்ய நாட்டுப் சார் மன்னர்கள் ஆட்சி வல்லாட்சியாகவேயிருந்தது. இரண்டாம் அலக்ஸாந்தர் (1855 – 1881) முதல் இரண்டாம் நிக்கோலஸ் (1894 – 1917) வரை அனைவரது ஆட்சியும் எதேச்சதிகாரத்துக்கும், கொடுங்கோன்மைக்கும் பெயர் பெற்றது. மன்னர்களே அரசியல் தலைவராகவும், சமயத் தலைவராகவும் விளங்கினர். ஏழ்மையினாலும், நோயினாலும் வாடும் மக்களைப் பற்றிக் கவலை கொள்ளவில்லை. உதட்டளவில் வெளியிடப்பட்டு, பெயரளவில் செயல்படுத்தப்பட்ட சீர்திருத்தங்கள் மக்களுக்கு எவ்வகையிலும் பலனளிக்கவில்லை. புரட்சிக் கருத்துக்களையும், புதுமை இயக்கங்களையும் இரும்புக்கரம் கொண்டு நசுக்கினார்கள் இந்த சார் மன்னர்கள். அடிக்கடி போர்களில் ஈடுபட்டு அதில் தோல்வியும் அடைந்து நாட்டிற்கு அவமானத்தை ஏற்படுத்தினார்கள். எனவே, சார் மன்னர்களின் எதேச்சதிகார ஆட்சிதான் ரஷ்யப் புரட்சிக்கு அடிப்படைக் காரணமாகும்.

## 2. பிரதிநிதி சபைகள் மீது மக்களுக்கு ஏற்பட்ட பற்றுதல் :

ரஷ்யப் பாராளுமன்றமான டூமாவின் (Duma) அதிகாரத்தை சார் மன்னர்கள் பறித்துக் கொண்டார்கள். தங்களுடைய கருத்துக்களை ஏற்காத டூமாவைக் கலைத்தார்கள். சார் இரண்டாம் நிக்கோலஸ் அதிக சீர்திருத்தங்களைக் கேட்ட முதலாவது டூமாவை 1906 ஜூலை 22–ல் கலைத்தார். பின்னர் ஏற்பட்ட டூமாக்கள் அரசர்களுக்கு ஆதரவாகவே செயல்பட்டது. ஐரோப்பிய நாடுகளில் காணப்பட்ட மக்களாட்சி முறை போன்று தாங்களும் ஆட்சியில் பங்கு கொள்ள விரும்பினார்கள் ரஷ்ய மக்கள். எனவே மக்களாட்சி முறைக் கோட்பாடுகளின் அடிப்படையில் பிரதிநிதி சபைகள் அமைக்கப்படவேண்டும் என்று முற்போக்கு சிந்தனை கொண்ட ரஷ்ய மக்கள் கேட்டபோது சார் மன்னர்கள் அவற்றை வெறுத்தார்கள். மக்களின் அதிருப்தி புரட்சியாக வெடித்தது.

## 3. குடியானவர்களின் தாழ்ந்த பொருளாதார நிலை :

ரஷ்ய சமுதாயத்தில் பெரும்பான்மை மக்கள் கல்வியறிவு அற்ற விவசாயிகளாக இருந்தார்கள். சமூக பொருளாதார வளர்ச்சியில் மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்தார்கள். அவர்களுக்கு நிலமில்லாத காரணத்தினால் குலக்குகள் என்றழைக்கப்பட்ட விவசாய முதலாளிகளிடம் அடிமைகளாக வாழ்ந்தார்கள். நிலமில்லாத பண்ணை அடிமைகளின் அவல நிலை நாட்டின் பொருளாதார நிலையைப் பெரிதும் பாதித்தது. பசியும், பட்டினியும் தலை விரித்தாடியது. பருவ மழை பெய்யாதபோது பட்டினியால் ஆயிரக்கணக்கில் இறந்தார்கள். ஆனால், நில பிரபுக்களும் செல்வந்தர்களும் மேலும் செல்வந்தர்களானார்கள். இரண்டாம் அலெக்ஸாந்தரின் விடுதலைச் சட்டங்கள் வெறும் காகித விடுதலையை அளித்ததே தவிர வறுமையிலிருந்து விடுதலை பெற நிலம் அளிக்கவில்லை. சமுதாயத்தில் மோசமாகப் பாதிக்கப்பட்ட குடியானவர்கள் இதனால் புரட்சியில் இறங்கினார்.

## 4. தொழிலாளர்களின் துன்பங்கள் :

தொழிற் புரட்சியின் விளைவாக ரஷ்யாவில் பல மாற்றங்கள் ஏற்பட்டது. புதிய தொழிற்சாலைகள் நவீன இயந்திரங்கள் ஆகியவற்றால் தொழில் வளர்ச்சியடைந்தது. இந்த வளர்ச்சியினால் தொழிலாளர் வர்க்கம் என்ற புதிய பிரிவு ஏற்பட்டது. வேலை தேடி

நகரம் வந்த ஏழைத் தொழிலாளர்களை, முதலாளிகள் குறைந்த கூலிக்கு அமர்த்தினர். சுகாதாரமற்ற நிலையில் அதிக வேலை வாங்கினார்கள். தங்களது நலன்களைப் பாதுகாக்க தொழிலாளர்கள் சங்கம் அமைத்தபோது முதலாளிகள் அவற்றை ஒழித்தனர். இதனால் தொழிலாளி – முதலாளி என்ற புதிய அமைப்பு உருவானது. உழைப்புக்குத் தகுந்த ஊதியம், தொழில் பாதுகாப்பு, வேலை உயர்வு ஆகியவை கிடைக்காத காரணத்தினால் தொழிலாளர்கள் ஏழ்மையில் வாடினார்கள். பிரச்சனைகட்குத் தீர்வு புரட்சிதான் என தொழிலாளர்கள் முடிவு செய்தார்கள்.

**5. கார்ல் மார்க்ஸின் தாஸ் காபிடல் :**

அறியாமை இருட்டில் அமைதி கிட்டாது அல்லலுற்ற மக்களை தட்டியெழுப்பி உயர் கருத்தை அவர்கள் உள்ளத்தில் பதித்து புரட்சிப் பாதையை நோக்கி அவர்களை இட்டுச் செல்ல, கார்ல் மார்க்ஸ், டால்ஸ்டாய், மாக்சிம் கார்க்கி, பிரடரிக் எங்கல்ஸ், போன்ற எழுத்தாளர்கள் புரட்சிக் கருத்துக்களை மக்களிடையே பரப்பினார்கள். பிரெஞ்சு எழுத்தாளர்களான வால்டர், ரூசோ, போன்று புகழ் பெற்றவர் கார்ல் மார்க்ஸ் (Karl Marx) ஆவார்.

கார்ல் மார்க்சின் ‘தாஸ் காபிடல்’ (மூலதனம்) என்ற நூல் முதலாளித்துவத்தின் தீமையையும், ரஷ்யாவில் தொழிலாளர்களின் அவல நிலைமையும் சுட்டிக் காட்டியது. அவர், ‘‘மூலதனத்தை மட்டும் வைத்துக் கொண்டு எவ்வித வேலையும் செய்யாமல் முதலாளிகள் லாபம் பெறுவதையும், ஏழை மேலும் ஏழையாக மாறுவதையும் செல்வந்தர்கள் மேலும் பணக்காரர்கள் ஆவதையும்’’ பற்றிக் குறிப்பிட்டார். முக்கியமாகத் தொழிலாளர்களின் உழைப்பை முதலாளிகள் எவ்வாறு சுரண்டுகிறார்கள் என்பதைத் தெளிவாக விளக்கினார்.

தாஸ் காபிடலில் புரட்சிக்குப் பின்னர் செல்வந்தர்களின் சொத்துக்களை என்ன செய்வது என்று கார்ல் மார்க்ஸ் எடுத்துக் கூறினார். முதல், நிலம், வீடு, சுரங்கங்கள், தொழில்சாலைகள் அனைத்தும் அரசாங்கத்திற்கே சொந்தமாக்கப்படவேண்டும் என்றார். மூலதனம் எல்லோராலும் சொந்தமாக்கப்படுகின்ற ஆங்கில வார்த்தையான “Common” என்ற சொல்லிலிருந்த பிறந்த (Communism) ‘‘கம்யூனிசம்’’ என்ற கருத்தை

வெளியிட்டார். கம்யூனிச அரசாங்கம் ஒன்றைப் புரட்சியின் மூலமே அமைக்க முடியுமென்றார்.

கார்ல் மார்க்ஸின் தாஸ் காபிடல் ரஷ்யப் புரட்சியின் வேதநூல் என்று அழைக்கப்படுகிறது. இது தவிர தன்னுடைய கருத்துக்களைக் கட்டுரையாகவும் புத்தகங்களாகவும் வெளியிட்டார். இவரது 'பொதுவுடைமைக் கொள்கை அறிக்கை' (Communist manifesto) சோசலிச அறிக்கைகளில் அனைத்திலும் தலைசிறந்ததாகக் கருதப்படுகிறது. ''உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள். நீங்கள் இழக்கவிருப்பது உங்கள் அடிமைத்தளங்களை மட்டுமே. நீங்கள் வெல்லவோ இப்பாருலகமே காத்து நிற்கிறது'' என்ற மார்க்ஸின் முழக்கம் தொழிலார்களின் தாரக மந்திரமாயிற்று. இதனை ஏற்றுக்கொண்ட மக்கள் புரட்சிக்குத் தயாராயினர்.

**6. சார் இரண்டாம் நிக்கோலஸின் எதேச்சதிகாரம் : 1894 – 1917**

முதல் உலகப் போர் ஆரம்பித்த போது ரஷ்யாவின் மன்னராக இருந்தவர் இரண்டாம் நிக்கோலஸ் ஆவார். இவர் திறமையற்றவர். மக்களின் நிலையை உணராமல் தன்னிச்சைப்படிச் செயல்பட்டார். இவரது அழகிய மனைவி அலக்ஸாந்திரா பியோதரவ்னா (Alexandra Fyodoroyna) நாட்டின் அரசியலில் ஆதிக்கம் கொண்டிருந்தார். ஆனால் இருவரும் கிரிகோரி ரஸ்புதின் என்ற செர்பியத் துறவியின் ஆலோசனைப்படியே ஆட்சி புரிந்தனர். ரஸ்புதின் ஹிப்னாடிச முறையில் நோய்களைக் குணப்படுத்தும் வல்லமை கொண்டவர். இவர் நிக்கோலஸின் மகனை நோயிலிருந்து குணப்படுத்தியதால் அரச குடும்பத்தின் மதிப்புமிக்க நண்பரானார்.

ரஸ்புதின் பொறுப்பும் திறமையும் வாய்ந்த அதிகாரிகளையும் தளபதிகளையும் பதவி நீக்கம் செய்து தனக்குச் சாதகமானவர்களை அப்பதவியில் அமர்த்தினர். தனக்கு எதிராக எழுந்த எதிர்ப்புகள் அனைத்தையும் ஈவு இரக்கமின்றி நசுக்கினர். ரஷ்ய முடியாட்சியின் சீர்கேட்டிற்கு இந்த 'கிறுக்குத்துறவியே' காரணம் என்று உயர்குடியினர் நம்பினர். எனவே ரஸ்புதினை ஒழித்துக்கட்டத் திட்டம் தீட்டினர். பல கொலை முயற்சிகட்குத் தப்பிய ரஸ்புதீன், 1916 டிசம்பர் 17–ல் படுகொலை செய்யப்பட்டார். இதனால் கோபமடைந்த நிக்கோலஸ் மக்களைக் கொடுமைப்படுத்தினார். எனவே மக்கள் அரசுக்கெதிராகப் புரட்சியில் ஈடுபட்டனர்.

## 7. முதல் உலகப் போரில் ரஷ்யாவின் பங்கு :

முதல் உலகப் போரில் ரஷ்யா நேச நாடுகளின் ஆதரவில் ஜெர்மனியை எதிர்த்துப் போரிட்டது. ஆனால் போரில் ரஷ்யா ஈடுபட்டதின் விளைவுகளை மக்கள் நேரடியாக அனுபவிக்க வேண்டியதாயிற்று. சண்டையிட்ட ரஷ்யப்படைகள் பல இடங்களில் தோல்வியடைந்தது. இது சார் ஆட்சியின் பலவீனத்தை வெளிப்படுத்தியது. அத்தியாவசியப் பொருட்களின் விலை ஏறியது. பயிரிடுவோரே போர்க்களமும் செல்லவேண்டியதிருந்ததால் உணவுப் பொருட்களின் உற்பத்தி குறைந்தது. தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்ததால் தொழில்துறை உற்பத்தியும் சரிந்தது. படையில் பணி புரிய பலர் மறுத்தனர். படை வீரர்களின் மன வலிமையும், உடல் வலிமையும் குன்றியது. எனவே அவர்கள் புரட்சியாளர்களோடு சேர்ந்து கொண்டு மன்னரை எதிர்த்தார்கள். புரட்சி ஆரம்பமானது.

## 8. லெனினின் பிரச்சாரம் :

கார்ல் மார்க்ஸின் கொள்கைகளைப் பின்பற்றிய ரஷ்ய புரட்சியாளர் லெனின் ஆவார். இளமையிலேயே அறிவுக் கூர்மையும் நல்லொழுக்கமும் நிரம்பப் பெற்றவர். மார்க்சிய சிந்தனைகளை ஆழ்ந்து படித்த லெனின் ‘‘சார் மன்னர்களின் கொடுங்கோன்மையிலிருந்து ரஷ்ய நாட்டை விடுவிக்க வேண்டுமானால் பாட்டாளி மக்களை ஒன்று திரட்டி ஒரு சோசலிசப் புரட்சியை நடத்துவதின் மூலமே முடியும்’’ என்ற முடிவிற்கு வந்தார். தூங்கிக் கிடந்த ரஷ்ய சமுதாயத்தை தனது புரட்சிக் கருத்துக்கள் மூலம் தட்டி எழுப்பினார். பொதுவுடமை சமுதாயத்தை ரஸ்யாவில் ஏற்படுத்த அயராது உழைத்தார். இவரது புரட்சிக் கருத்துக்களை விரும்பாத அரசாங்கம் லெனினை நாடு கடத்தயது. வெளிநாடுகளில் இருந்துகொண்டே ரஷ்ய மக்களைப் புரட்சிக்கு ஆயத்தப்படுத்தினார். முதல் உலகப் போர் நடந்து கொண்டிருந்த சமயத்தில், நாட்டில் அதிருப்தி மேலோங்கி இருந்த சமயம் பார்த்து சிங்கம் போல ரஷ்யாவினுள் நுழைந்து புரட்சியை ஏற்படுத்தினார். போர் வீரர்கள் போர் செய்ய மறுத்தனர். தொழிலாளர் வேலை செய்ய மறுத்தார்கள். புரட்சி வெடித்தது.

**பிப்ரவரிப் புரட்சியின் போக்கு :**

ரஷ்யப் புரட்சி இரண்டு கட்டங்களாக நடைபெற்றது. முதல் புரட்சி 1917 பிப்ரவரி மாதம் 23–ஆம் தேதி தொடங்கியது. அப்போது 6,70,000 தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டார்கள். கலகங்கள், தெருக் கிளர்ச்சிகள், விவசாயிகளின் போராட்டங்கள், ஊர்வலங்கள் என சங்கிலித் தொடராக நடைபெற்றன. பெட்ரோகிரேட் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். பிப்ரவரி 27–ஆம் தேதி பெட்ரோகிரேட் தொழிலாளர்களுடன் மன்னரின் படைகள் சேர்ந்துகொண்டன. புரட்சிப் படையினர் தங்கள் துப்பாக்கிகளை மன்னராட்சி மீது திருப்பினர். பிப்ரவரி 28–ல் பெட்ரோகிரேட் நகர் முழுவதும் புரட்சியாளர் கட்டுப்பாட்டில் வந்தது. ஒரு தற்காலிக சட்டமன்ற ஆட்சிக்குழு அமைக்கப்பட்டது. அதில் மென்சிவிக்குகளும், சமதர்மப் புரட்சியாளர்களும் பெரும்பான்மையினராக இருந்தனர்.

சட்டமன்றப் பிரதிநிதிகள் இரண்டு பேர் நிக்கோலஸைச் சந்தித்து பதவி துறக்குமாறு வற்புறுத்தினர். 1917 மார்ச் 2–ஆம் தேதி மாலை தனது சகோதரர் மைக்கேலை அரசராக நியமித்துவிட்டு முடிதுறப்புப் பத்திரத்தில் கையெழுத்திட்டார். அப்பத்திரத்தைக் கொண்டு வந்த பிரதிநிதி தலைநகர் திரும்பியபோது 'மன்னர் மைக்கேல் நீடூழி வாழ்க' என்றார். இதைப் பற்றி ட்ராட்ஸ்கி குறிப்பிட்டபோது, ''முடியாட்சியை வெகுவேகமாக நாடுவாந்தி எடுத்துவிட்டது. அது மீண்டும் மக்கள் தொண்டைக்குள் ஒரு போதும் இறங்காது'' என்றார். மைக்கேல், மன்னர் பதவியை ஏற்க மறுத்து விட்டார். இவ்வாறு முதல் புரட்சியில் ரஷ்யாவில் மன்னர்களின் பரம்பரை ஆட்சி முடிவுற்றது. மார்க்ஸிய கருத்துக்களும் ஜனநாயகக் கருத்துகட்குமிடையிலான ஒரு மிதவாத கருத்துக் கொண்ட அரசு ஏற்படுத்தப்பட்டது.

**புதிய அரசு :**

1917, மார்ச் 3–ஆம் தேதி ஜார்ஜ் லிவாவ் (George Lvov) தலைமையில் தற்காலிக அரசு ஒன்று பதவி ஏற்றது. மில்யுகோவ் வெளிநாட்டு அமைச்சராகவும், குக்கோவ் போர்த்துறை அமைச்சராகவும் தரஸ்செங்கோ நிதியமைச்சராகவும், நெக்ரசோவ் செய்தித்துறை அமைச்சராகவும், பெட்ரோகிரேட் சோவியத்தின் துணைத் தலைவரான

கெரன்ஸ்கி நீதித்துறை அமைச்சராகவும் பதவி ஏற்றனர். அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், இத்தாலி, போன்ற நட்பு நாடுகள் இந்த அரசாங்கத்தை அங்கீகரித்தன.

ஆனால் இந்த அரசு ‘பெட்ரோகிரேட் சோவியத்துடன் இணைந்தே செயல்பட வேண்டும் என்று கூறப்பட்டது. நாடெங்கிலும் ‘சோவியத்’ என்ற அமைப்புகள் உருவாயின. அரசின் ஆணைகளை நடைமுறையில் செயல்படுத்தும் அதிகாரம் இந்த சோவியத்களிடமே இருந்தது. ஆட்சி பீடத்தில் அமர்ந்த தாராளத் தன்மைக் கொண்ட புதிய அரசு எதையும் செயலாற்றிடும் வகையின்றி இருந்தது. சமுதாயத்தைக் கட்டுப்பாட்டில் வைக்கத் தவறியது. படையினரின் ஒழுங்கும் கட்டுப்பாடும் சீர்குலைந்து போயிற்று. இச்சூழ்நிலையில் மில்யுகோவ், குக்கோவ் ஆகியோர் ராஜினாமா செய்துவிட்டனர். அமைச்சரவை மாற்றியமைக்கப்பட்டபோது ஆறு பேர் இடம் பெற்றனர். அதில் கெரன்ஸ்கி, தரஸ்செங்கோ, நெக்ரசோவ் ஆகியோரே வலிமை பெற்றிருந்தனர்.

புதிய போர்த்துறை அமைச்சரான கெரன்ஸ்கி சிறந்த சொற்பொழிவாளர். நல்ல வழக்கறிஞர். தனது மின் காந்தச் சொற்பொழிவுகள் மூலம் மக்களைக் கவர்வதில் வல்லவர். ஆட்சியில் அமர்ந்தவர்களிடையே வேற்றுமையும், குழப்பமும் காணப்பட்ட போது கெரன்ஸ்கி பிரபலமானார். பிரதமர் ஜார்ஜ் லிவாவ் பதவி விலகிய பின் கெரன்ஸ்கி புதிய பிரதமரானார். அக்டோபர் புரட்சியின் போது ரஷ்ய பிரதமராக இருந்தவர் கெரன்ஸ்கி ஆவார்.

**அக்டோபர் புரட்சி :**

ரஷ்யாவில் இரண்டாவது புரட்சி 1917 அக்டோபரில் ஏற்பட்டது. இதுதான் அக்டோபர் புரட்சி என்றும், கம்யூனிசப் புரட்சி என்றும் அழைக்கப்படுகிறது. ஆட்சி பீடத்தில் அமர்ந்த தாராளத் தன்மை கொண்ட புதிய மிதவாத அரசு எளிதில செயலாற்றிடும் வகையின்றி இருந்தது. சுவிட்சர்லாந்திலிருந்த லெனின், 1917, மார்ச் 27–ல் புறப்பட்டு ஏப்ரல் 3–ஆம் தேதி பெட்ரோகிரேட் வந்து சேர்ந்தார். ‘சமதர்மப்புரட்சி வாழ்க’ என்ற முழக்கத்துடன் உரை நிகழ்த்தினார்.

புதிய அரசாங்கத்தில் மக்கள் அதிக நம்பிக்கை வைக்கவில்லை. முதல் உலகப் போரைத் தொடர்ந்து நடத்தியது புதிய அரசு. போர் வீரர்கள் சலிப்படைந்தனர். போர்

நீடித்ததின் காரணமாக மீண்டும் உணவுப் பஞ்சமும் உற்பத்தித் தடையும் ஏற்பட்டன. அரசாங்கத்தின் மிகுந்த வெறுப்பை லெனின் தலைமையிலான இடது சாரி அமைப்பான போல்சிவிக்குகள் பயன்படுத்திக் கொண்டனர். மக்களுக்கு சமாதானம், உணவு, நிலம் (Peace, Bread and Land) ஆகியவற்றை வழங்குவதாக வாக்குறுதி அளித்தனர். தொழிலாளர்களின் அரசை அமைப்பதாகக் கூறினார் லெனின். ‘‘மிதவாதிகளின் ஜனநாயகமும், பாராளுமன்றமும், குடியரசும் நமக்குத் தேவையில்லை. நமக்கு வேண்டிய அரசாங்கம் விவசாயிகளாலும் தொழிலாளர்களாலும் தான் அமைக்கப்படவேண்டும்’’ என்றார்.

ட்ராட்ஸ்கி என்பவர் பெட்ரோகி ரேட் சோவியத்தின் தலைவர். இவர் லெனின் கொள்கைகளின் தீவிர ஆதரவாளராக மாறினார். கெரன்ஸ்கியின் ஆட்சியைக் கடுமையாக சாடினார். பெட்ரோகிரேடில் அமைக்கப்பட்ட இராணுவப்புரட்சிக் குழுவுக்கு அவர் தலைவரானார். புதிய புரட்சிக்கான ஏற்பாடுகளை ட்ராடஸ்கியே விரைந்து செயலாற்றினார். அக்டோபர் **2–**ஆம் தேதி பெட்ரோகிரேட் வந்த லெனின் புரட்சியை உடனடியாகத் துவக்கினார். அக்டோபர் **24–**ஆம் தேதி ஆயுதம் தாங்கிய **25,000** போல்சிவிக் கட்சியினர் புரட்சியில் கலந்து கொண்டனர். புரட்சியின் மையமான குளிர்கால மாளிகை தாக்கப்பட்டது. அரசாங்க படைகள் புரட்சியாளர்களுடன் சேர்ந்து கொண்டன. கெரன்ஸ்கி தப்பி ஓடினார். மாளிகை வீழ்ந்தது. இதுவே அக்டோபர் புரட்சியாகும். ‘தொழிலாளர்களின் சர்வாதிகார அரசு’ (government of the Proletariate) ஒன்று லெனின் தலைமையில் அமைக்கப்பட்டது. இவ்வாறு உலகத்தின் முதல கம்யூனிச அரசாங்கம் தோன்றியது.

**ரஷ்யப் புரட்சியின் விளைவுகள் :**

1. ரஷ்யாவில் பரம்பரை மன்னராட்சி ஒழிக்கப்பட்டது. **1918** ஜூலை **16–**ம் தேதி கடைசி மன்னரான இரண்டாம் நிக்கோலசும் அவரது குடும்பத்தினரும் கொலை செய்யப்பட்டனர்.
2. இதுவரை கொள்கையளவிலேயே இருந்து வந்த ‘பொது உடமைத் தத்துவம்’ முதல் முதலாக நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. கார்ல் மார்க்ஸின்

தத்துவங்களின் அடிப்படையில் ரஷ்யாவில் அரசியல் பொருளாதார மாற்றங்கள் கொண்டு வரப்பட்டன.

3. ரஷ்யாவில் தொழிலாளர்களின் நிலை உயர்ந்தது. அவர்கள் உழைப்பிற்கேற்ற ஊதியம் பெற்றார்கள். கூட்டுப் பண்ணை விவசாயம் மூலம் உணவு உற்பத்தி அதிகரிக்கப்பட்டது.
4. எல்லாத் துறைகளிலும் வளர்ச்சி பெற்று உலக அளவில் ரஷ்யா மாபெரும் வல்லரசாக விளங்குவதற்கு ரஷ்யப் புரட்சி வழி வகுத்தது.
5. கம்யூனிசக் கருத்துக்களை உலகம் முழுவதும் பரப்புவதற்கு ரஷ்யா பல வழிகளைக் கையாண்டது. அதன் விளைவாக உலக நாடுகள் கம்யூனிச நாடுகள் என்றும் முதலாளித்துவ நாடுகள் என்றும் இரு அணியாகப் பிரிந்தது.
6. பொதுவுடைமை இயக்கத்திற்கு எதிராக பல இயக்கங்கள் தோன்றின. இத்தாலியில் பாசிசமும், ஜெர்மனியில் நாநிசமும் கம்யூனிசத்தை எதிர்த்துத் தோன்றின.
7. இறுதியாக ரஷ்யப் புரட்சியின் விளைவாக ரஷ்யாவில் அறியாமை ஒழிக்கப்பட்டு புதிய சமுதாயம் அமைக்கப்பட்டது. விஞ்ஞானம் மற்றும் கலைத்துறைகளில் முன்னேற்றம் ஏற்பட்டது.

**Prepared By**

**Dr. M. SEKAR**
Head & Associate Professor of History
P.M.T. College
Melaneelithanallur – 627 953, Sankarankovil, Tirunelveli.